கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
சேனைக்குடியிருப்பு
கல்முனை

# தேனருவி

வருடாந்த சஞ்சிகை / 2018



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIBRARY
Kit/Kit/ Ganesha Maha Vidyalayam
Chenaikudiyiruppu. Kalmunai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIBRARY
Km/Km/ Ganesha Maha Vidyalayam
Chenaikudiyiruppu. Kalmunai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமு/கமு/ கணேச மகா வித்தியாலயத்தின்
நூலக சங்கத்தினால் வெளியிடப்படும்
2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த சஞ்சிகை

A place to learn A chance to grow

Library
Km/Km/Ganesha Maha Vidyalayam Chenaikudiyiruppu

# தேனருவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவ ஸ்ரீ முருகு நல்லதம்பி குருக்கள் அவர்களின் ஆசிச் செய்தி

ஓம் அசதோமா சத்கமய

தமசோமா ஜ்யோதிர்கமய

ம்ரித்யோமா அமிர்தம்கமய

ஓம் ஷாந்தி ஷாந்தி ஷாந்தி

கமு/கமு/கணேச மகா வித்தியாலயத்தின் வருடாந்த சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன். இருளில் இருந்து ஒளிக்கும் அறியாமையில் இருந்து அறிவுக்கும் இளம் சந்ததியை வழிநடத்துகின்ற பணியைப் புரியும் கல்விக் கூடங்கள் தமது இலக்கை அடைய பல்வேறு உபாயங்களைக் கையாள்கின்றன. அந்த வகையில் மாணவர்களின் அறிவு, தேடல், எழுத்தாற்றல் ஆளுமை விருத்தி போன்றவற்றை செளுமையாக்கும் பணியில் பாடசாலைச் சஞ்சிகைகள் காத்திரமான பங்களிப்பைச் செய்கின்றன. கமு/கமு/கணேச மகா வித்தியாலய அதிபரும் ஆசிரியர்களும் இந்த சஞ்சிகை மூலமாக மாணவர்களுக்கு தமது ஆற்றலை வெளிபடுத்த ஒரு சிறந்த களத்தை அமைத்துக் கொடுத்துள்ளமை மிகவும் பாராட்டப்பட வேண்டிய விடயம் ஆகும். இந்த முயற்சி தொடர்ந்தும் எதிர் காலத்தில் தொடர இறைவன் அருள் பாலிக்க வேண்டும். இந்த சஞ்சிகை கல்விப் புலத்தில் உள்ள சிறந்த மேதைகளின் பேசுபொருளாகவும் அமைய வேண்டும் என்று மனதார வாழ்த்துகின்றேன்.

சிவ ஸ்ரீ முருகு நல்லதம்பி குருக்கள்
சமாதான நீதவான், சோதிட ஆய்வாளர்
ஆலய பிரதம குரு - திருநீலகண்ட தேவஸ்தானம்
சேனைக்குடியிருப்பு
கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் பிரதிநிதி அவர்களின் வாழ்த்துச்செய்தி

கமு/கமு/கணேச மகா வித்தியாலயத்தின் வருடாந்த சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவது எனக்கு மிகுந்த மன மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்தக் கிராமத்தின் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் இக் கிராம மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி, பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் மற்றும் கட்டுக்கோப்பும் ஒழுக்கமும் நிறைந்த சமுதாயக் கட்டமைப்பைத் தோற்றுவித்தல் போன்ற பெரும் பணிகள் என் மீது பொறுப்பாக்கப்பட்டுள்ளன. இந்த இலக்குகளை அடைவதில் எனக்கு பெரும் துணையாக அமையக்கூடியவை பாடசாலைகள் என்பதில் நான் அதீத நம்பிக்கை கொண்டுள்ளேன். கல்வியினால் மட்டுமே பெரும் சமுக மாற்றங்களைக் கண்டுகொள்ளமுடியும். கல்வி என்பது வெறுமனே பரீட்சைப் பெறுபேறுகளில் மட்டும் ஏற்படும் அதிகரிப்பு அல்ல. ஒரு பிள்ளையின் முழுமையான ஆளுமை விருத்திக்கு வேண்டிய அத்தனை அம்சங்களையும் உள்வாங்கியதாக கல்வி அமைய வேண்டும். அந்த வகையில் பாடசாலைச் சஞ்சிகை வெளியீடு பிள்ளைகளின் உள்ளார்ந்த திறன்களை வெளிச்சம் போட்டுக்காட்டும் ஒரு சிறந்த உபாய முறையாகும். இத்தகு சீர்மை மிக்க முயற்சியொன்றை முன்னெடுத்துள்ள இவ் வித்தியாலயத்தின் அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு எனது வாழ்த்துக்கள். இன்றைய கல்விப் புலத்தில், மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டு ஆய்வுகள் (Action Research) பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களால் முன்னெடுக்கப்படல் வேண்டும் எனும் விடயம் வலியுறுத்தப்படுகின்றது. அவ்வகையான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு அவையும் இவ்வாறான சஞ்சிகைகள் மூலமாக வெளிக்கொணரப்படுவது காலத்தின் தேவையென நான் கருதுகின்றேன். இந்த சஞ்சிகையில் உள்ள ஆக்கங்களை நான் பாராட்டுவதுடன் இம் முறை தவற விடப்பட்ட பாடத்துறை சார் ஆக்கங்களும் உள்வாங்கப்பட்டு மேலும் சிறப்பான முறையில் இந்த சஞ்சிகை எதிர்காலத்தில் வெளிவர வேண்டும் என்பது என் வேண்டுகோளாகும். பாடசாலைக் கல்வியுடன் தொடர்புடைய அனைவரும் ஓரணியாக செயற்பட்டு சிறந்த சேவையை எமது இளம் சந்ததிக்கு வழங்கி இந்தக் கிராமத்தின் எழுச்சிக்கு வித்திடவேண்டும். அடுத்த ஐந்தாண்டுகளில் கல்வித் துறையில் கிழக்கு மாகாணத்தில் பெயர்குறிப்பிட்டுப் பேசப்படுகின்ற ஒரு பிரதேசமாக எமது கிராமம் மாற்றமுற அனைவரும் திடசங்கற்பம் பூணவேண்டும் என்று தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு K. செல்வராஜா

கல்முனை மாநகர சபை உறுப்பினர்

சேனைக்குடியிருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

கல்வியானது ஒரு பிள்ளையின் உள்ளார்ந்த திறன்களை வெளிக் கொண்டு வந்து ஒரு வெற்றிகரமான வாழ்வை நடாத்தக் கூடிய பிரஜையை உருவாக்குவதாக அமைய வேண்டும். இந்த இலக்கை அடைவதற்காக பாடசாலை முறைமையில் பாடவிதான மற்றும் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றன. துரதிஸ்டவசமாக, அநேக பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் மிகவும் உயர்வாக அமைவது மட்டுமே போதுமானது என்ற மனநிலையில் உள்ளனர். இணைப் பாட விதான செயற்பாடுகளில் ஈடுபடுவது காலத்தை விரயமாக்கும் செயல் என அவர்கள் கருதுகின்றனர். இதனால் உயர்ந்த பெறுபேறுகளைப் பெறுகின்ற மாணவர்களில் கருதக் கூடிய எண்ணிக்கை யானோர் தேவையான தொடர்பாடல் திறன்கள், சமூக இடையூடாட்டத் திறன்கள், பிரச்சனை தீர்க்கும் ஆற்றல்கள், போன்றவற்றைக் கொண்டிருப்பதில்லை. இந் நிலமை வேலையுலகில் பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றது. இதன் காரணமாகவே இணைப்பாட விதானச் செயற்பாடுகளுக்கும் அதிக முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும் என்ற வகையில் கல்வி அமைச்சின் சுற்று நிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்த வகையில் இணைப்பாட விதானச்செயற்பாடுகளுள் மிகச் சிறப்பான ஒரு முன்னெடுப்பே பாடசாலைச் சஞ்சிகை வெளியீடு ஆகும். இதன் மூலமாக மாணவர்களின் வாசிப்புத் திறன்கள், தகவல் சேகரிப்பு ஆற்றல், அறிந்ததை வெளிப்படுத்தும் இயலுமை போன்றன விருத்தி அடைவதற்கான வாய்ப்புகள் உருவாகின்றன. கமு/கமு/கணேச மகா வித்தியாலயம் ஒரு சஞ்சிகையை வெளியீடு செய்வதையிட்டு நான் மிகவும் மன மகிழ்ச்சி கொள்கின்றேன். காத்திரமான பல படைப்புகளையும் தொகுப்புகளையும் தாங்கி வரும் இச் சஞ்சிகை மிகவும் பெறுமதி வாய்ந்தது. பாடசாலை சஞ்சிகைகளுக்கான உள்ளடக்கம் மற்றும் ஒழுங்கமைப்பு போன்ற விடயங்களில் சமகால முன்னேற்றங்களை மேலும் உள்வாங்கி எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் சிறந்த வெளியீடுகளை இப் பாடசாலை மேற்கொள்ளும் என்ற எதிர்பார்ப்புடன் இச் சஞ்சிகையின் வரவுக்காக உழைத்த அனைவரைம் மனதாரப் பாராட்டுகின்றேன்.

**எம்.எஸ்.அப்துல் ஜலீல்**

வலயக் கல்விப் பணிப்பாளர்

வலயக் கல்வி அலுவலகம்

கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதிக் கல்விப் பணிப்பாளர்
## (பதில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் – கல்முனை தமிழ் பிரிவு)
## அவர்களின் வாழ்த்துச் செய்தி

கமு/கமு/கணேச மகா வித்தியாலயத்தின் வருடாந்த சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மிகுந்த மன மகிழ்ச்சி அடைகின்றேன். தரமான ஆக்கங்களையும் தொகுப்புகளையும் உள்ளடக்கி ஒரு பாடசாலைச் சஞ்சிகையை வெற்றிகரமாக வெளிக் கொண்டு வருவது என்பது ஒரு பிரசவ வேதனைக்கு ஒப்பானது. ஒரு மிகக் கடினமான அதே வேளை ஒரு மிகச் சிறந்த பணியை முன்னெடுத்துள்ள இப் பாடசாலையின் இம் முயற்சியை அனைவரும் பாராட்ட வேண்டிய தேவையுள்ளது.

மாணவர்கள் ஆக்கங்களை உருவாக்கும் போது தேடல், அறிதல், கிரகித்தல், பகுத்தல், தொகுத்தல், பிரயோகித்தல் போன்ற பல்வேறு உயர் உளத் தொழிற்பாடுகள் நிகழ்கின்றன. சஞ்சிகை ஆக்கத்தின் போது ஆக்கங்களை சேகரித்தல், எழுத்துச்செயலாக்கம், (word processing) செய்தல். தேவையான நிதியை பெற்றுக் கொள்ளல், வெளியீடு செய்தல், போன்ற பல்வேறு படிநிலைகளிலும் மிகச் சிக்கல் வாய்ந்த பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியேற்படும். அவற்றை வெற்றிகரமாகத் தீர்த்து முன்னோக்கி நகர்கின்ற போது மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஆளுமைக் கூறுகள் சிறந்த முறையில் விருத்தியடைகின்றன. உண்மையில் ஒரு சஞ்சிகையை வெளியிடுவதற்கு அதனுடன் தொடர்புடையவர்களுக்கு பன்முக நுண்ணறிவு (multiple intelligence) அவசியமாகின்றது. எனவே இவ்வாறான முயற்சிகள் கல்விப் புலத்துக்கு செய்யப்படும் பெரும் பங்களிப்பாகவே கருதப்படல் வேண்டும்.

ஒரு சிறந்த முயற்சியை முன்னெடுத்துள்ள இநதப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் பாராட்டும் இவ்வேளை எதிர் காலத்தில் இந்த உன்னத முயற்சி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றேன். மேலும் இச் சஞ்சிகையில் இம் முறை தவற விடப்பட்ட துறைசார் ஆக்கங்கள் (உதாரணமாக: கணிணியும் தகவல் தொழிநுட்பமும்) அடுத்த இதழ்களில் உள்வாங்கப்படல் வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

**S. புவனேந்திரன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்
கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவிக் கல்விப் பணிப்பாளர் (கணிதம்) அவர்களின் வாழ்த்துச்செய்தி

பாடசாலைச் சஞ்சிகைகள் அவற்றின் ஆக்கங்களின் ஊடாக பாடசாலையின் தனித்துவத்தையும் அடையாளத்தையும் பிரதிபலித்துக் காட்டுகின்றன. ஒவ்வொரு பிள்ளையும் தன்னகத்தே மகத்தான சக்தியைக் கொண்டுள்ளது. ஆசிரியர்கள் பிள்ளைகளைச் சரியாக இனங்கண்டு பொருத்தமாக வழிப்படுத்திச் செல்கின்ற போது பிள்ளைகளுள் இருக்கின்ற உள்ளார்ந்த ஆற்றல்கள் பீறிட்டுக் கிளம்புகின்றன.

பாடசாலைச் சஞ்சிகை ஒன்றை வெளியிட்டு அதில் பிள்ளைகளின் ஆக்கங்களை வெளிக் கொணர விளைகின்ற போது பிள்ளைகளின் வாசிப்பு, எழுத்து, சிந்தனை, கருத்துக்கள் வெளிப்படுத்தும் ஆற்றல், போன்றன நன்கு கட்டியெழுப்பப்படுகின்றன. அவ்வாறே ஆசிரியர்களும் தமது ஆக்கங்களை வழங்குகின்ற போது அவர்களிடம் உள்ள பெறுமதியான கருத்துக்கள் அனைவரையும் சென்றடைய வாய்ப்பு ஏற்படுகின்றது. பல்வேறு விடயங்கள் சார்ந்த அவர்களின் ஆய்வுக் கண்ணோட்டத்திலான கட்டுரைகள் பெரும் கல்விசார் பெறுமதியைக் கொண்டவை.

அந்த வகையில் கணேச மகா வித்தியாலயத்தில் இருந்து ஒரு சஞ்சிகை வெளிவருகின்றது என்ற செய்தி 2019 ஆம் ஆண்டுக்கான இப் பாடசாலையின் மேம்பாட்டுத் திட்ட இணைப்பாளர் என்ற வகையில் என்னை மிகவும் மகிழ்ச்சி கொள்ளச் செய்கின்றது. பெறுமதியான ஆக்கங்களை வழங்கியுள்ள மாணவர்களையும் ஆசிரியர்களையும் நான் மனதாரப் பாராட்டுகின்றேன். இந்தச் சிறந்த பணியை முன்னெடுத்துள்ள பாடசாலையின் நூலகப் பொறுப்பாளர் அருட் சகோ. அ. தேவராஜா அவர்களையும் அவருடன் இணைந்து பணியாற்றுகின்ற சஞ்சிகை ஆக்கக் குழு உறுப்பினர்களையும் அவர்களை வழி நடத்துகின்ற அதிபரையும் பிரதி அதிபரையும் நான் வாழ்த்துகின்றேன். இந்தப் பணி எதிர்வரும் வருடங்களில் தொடர என் ஆசிகள்.

S. இலங்கநாதன்
உதவிக் கல்விப் பணிப்பாளர் (கணிதம்)
வலயக் கல்வி அலுவலகம்
கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய ஆலோசகர்(சைவசமயம்) அவர்களின் வாழ்த்துச்செய்தி

மாணவர்களின் கல்வி அடைவை அதிகரிப்பதற்கான இணைப் பாட விதானச் செயற்பாடுகளில் வாசிப்பு மற்றும் எழுத்தாக்கம் தொடர்பான செயற்பாடுகள் மிகவும் அவசியமானவை. அந்த வகையில் பாடசாலை நூலகத்தின் பயன்பாடு வினைத்திறன் மிக்கதாக அமைவது இன்றியமையாதது. கமு/கமு/கணேச மகா வித்தியாலய மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொண்டு வருவதற்கு பாடசாலை நிர்வாகம் பல வழிகளிலும் முனைப்போடு செயற்படுவது பாராட்டப்பட வேண்டிய விடயம்.

இந்தப் பாடசாலையின் நூலகச் செயற்பாடுகளை மிகவும் சிறப்பான முறையில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு அயராது உழைத்துக்கொண்டிருக்கும் நூலகப் பொறுப்பாளர் அருட் சகோதரர் அ. தேவராஜா அவர்கள் என்றுமே மதிக்கப்பட வேண்டியவர். அவரின் சிறப்பான செயற்பாடு காரணமாக 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதப் போட்டியில் கமு/கமு/கணேச மகா வித்தியாலயம் தேசிய ரீதியில் சிறந்த நூலகச் செயற்பாடு கொண்ட பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது எமது கல்வி வலயத்துக்கு பெருமை சேர்க்கின்ற விடயம் ஆகும். அவ்வாறே 2018 ஆம் ஆண்டிலும் கல்முனை கல்வி வலயத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை திறம்பட நிறைவேற்றிய பாடசாலையாக இது விளங்குகின்றது. இந்த நிலையில் 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதத்திற்கான தேசிய விருதையும் இப் பாடசாலை பெறவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

இனிவரும் காலங்களிலும் இந்தப் பாடசாலையின் நூலக செயற்பாடுகள் மாணவர்களின் ஆக்கத் திறனை வளர்க்கும் விதத்திலும் வாசிப்புத் திறனை விருத்தி செய்வதிலும் பெரும் பங்காற்ற வேண்டுமென எதிர்பார்க்கின்றேன். இப் பாடசாலையின் வளர்ச்சியில் இந்தக் கிராம மக்களும் அக்கறையோடு ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திரு M. லக்குணம்
ஆசிரிய ஆலோசகர் - சைவசமயம்
கமு/கமு/கணேச மகா வித்தியாலயத்துக்கான பாடசாலை மேம்பாட்டு இணைப்பாளர் (2018 ஆம் ஆண்டு)
வலயக் கல்வி அலுவலகம்
கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது பாடசாலையின் நூலக சங்கத்தினரால் வெளியீடு செய்யப்படும் இந்த சஞ்சிகைக்கு எனது வாழ்த்துச்செய்தியைத் தருவதில் நான் மிகுந்த மன மகிழ்ச்சி அடைகின்றேன். பாடசாலைச் சஞ்சிகைகள் பல வழிகளில் முக்கியத்துவம் வாய்ந்தவை. அவை பெரும் கல்விப் பெறுமதியைக் கொண்டுள்ளன. அவை மாணவர்களை சிந்திக்கவும் எழுதவும் ஊக்குவிக்கின்றன. இதன் மூலம் அவர்கள் தமது வாசிப்பு, எழுத்து மற்றும் சிந்தனைத் திறன்களை வளர்த்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. சிறந்த நூலாசிரியர்களின் புத்தகங்களை வாசிக்கின்றபோது மாணவர்கள் உயர்ந்த அறிவைப் பெற்றுக்கொள்கின்றனர் என்பது உண்மையாக உள்ளபோதும் வெறும் வாசிப்பு மட்டுமே அவர்களின் பூரணமான கல்விக்கு போதுமானது அல்ல. தாம் வாசித்த மற்றும் அறிந்து கொண்ட விடயங்களை தமது சொந்த மொழி நடையில் வெளிப்படுத்த அவர்கள் கற்றுக் கொள்ளும் போதே அவர்களின் கல்வி முழுமை பெறும். இந்த நோக்குடனேயே பாடசாலைச் சஞ்சிகைகள வெளியிடப்படுகின்றன. அவை கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள் மற்றும் பல பயனுள்ள தகவல்கள் மற்றும் துணுக்குகளைத் தாங்கி வெளிவருகின்றன.

அந்த வகையில் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் எமது பாடசாலையில் இருந்து மீண்டும் ஒரு வருடாந்த சஞ்சிகை வெளிவருவதையிட்டு நான் மிகுந்த மன மகிழ்வு அடைகின்றேன். இந்த விடயத்துடன் சம்பந்தப்பட்ட அனைவரினதும் போதுமான ஒத்துழைப்புக் கிடைக்காத போதும் இந்த சஞ்சிகையை வெளிக்கொண்டு வந்தேயாக வேண்டும் என்பதில் முழு மூச்சுடன் செயற்பட்ட சஞ்சிகை ஆக்கக் குழுவினையும் அதற்கு உந்து சக்தியாகத் திகழ்ந்த நூலக சங்கத்தினையும் நூல சங்கத்தை மிகச் சிறப்பான முறையில் வழி நடாத்தும் அருட் சகோதரர் A. தேவராஜா அவர்களையும் நான் மனதார வாழ்த்துகின்றேன். இந்த சஞ்சிகையில் மிகவும் சிறப்பான ஆக்கங்களைக் காணக்கூடியதாக உள்ளமை அதன் தரம் குறித்த மனத்திருப்தியைத் தருகின்றது. ஆக்கங்களை வழங்கிய அனைவரையும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றேன். எதிர் வரும் ஆண்டுகளில் அனைத்து ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் சமூகத்தில் உள்ள புத்திஜீவிகளின் பங்களிப்பினைப் பெற்று மேலும் சிறந்த தரத்துடன் இந்த சஞ்சிகை தொடர்ச்சியாக ஆண்டு தோறும் வெளிவர வேண்டும் என்பது என் ஆழ்ந்த அவா ஆகும்.

T. பூவேந்திரன்

அதிபர்

கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்

சேனைக்குடியிருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி

பாடசாலைச் சஞ்சிகைகள் பல வழிகளில் மாணவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. பல மாணவர்கள் தமது பாட நூல்களைத் தவிர ஏனைய நூல்களை வாசிப்பதில்லை. ஏனைய நூல்களையும் வாசிக்காவிட்டால் அவர்களின் அறிவு மேம்பாடு அடையாது. ஒரு மாணவன் ஒரு ஆக்கத்தை எழுத முனைகின்ற போது தேவையான தகவல்களைப்பெற தொடர்புடைய வேறு நூல்களையும் இணைய தளங்களில் கிடைக்கக்கூடிய தகவல்களையும் வாசிக்க வேண்டிய கட்டாயநிலை தோன்றுகின்றது. அதனால் பல புதிய நூல்களை வாசித்து தனது அறிவை விசாலப்படுத்திக்கொள்ள வழியேற்படுகின்றது. ஒரு மாணவனின் அல்லது மாணவியின் ஆக்கம் அச்சில் வெளிவருகின்ற போது அந்த மாணவன் அல்லது மாணவியின் உள்ளம் பேருவகை கொள்கின்றது. அது மேலும் அவனை அல்லது அவளை எழுதத் தூண்டுகின்றது. தமது சக மாணவன் அல்லது மாணவி எழுதுகின்றபோது ஏனைய மாணவர்களும் அவ்வாறு முயற்சிப்பதற்கு தூண்டப்படுகின்றனர். அவர்கள் இவ்வாறு செய்யும்போது அவர்களின் எழுத்தாற்றல் விருத்தி அடைகின்றது. அந்த வழிமுறையில் அவர்களில் பலர் எதிர் காலத்தில் பிரபல எழுத்தாளர்களாக வரவும் வாய்ப்புண்டு. மேலும் இது மாணவர்களின் சிந்தனை ஆற்றலையும் விருத்தி செய்கின்றது. எனவே ஒவ்வொரு பாடசாலையும் சொந்தமாக ஒரு சஞ்சிகையை வருடத்துக்கு ஒரு தடவையோ இரு தடவைகளோ வெளியிடுவது மிகச் சிறந்த ஒரு நடைமுறையாகும். அந்த வகையில் எமது பாடசாலையில் இருந்து நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் ஒரு சஞ்சிகை வெளிவருவது அதுவும் காத்திரமான பல படைப்புகளைத் தாங்கி வெளிவருவது மிகுந்த மன மகிழ்வைத் தருகின்ற ஒரு விடயம் ஆகும். ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஆக்கங்கள் இடம்பெற்றிருப்பது எமது மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் சிறந்த மொழியாற்றலையும் அவர்கள் கொண்டிருக்கும் தகவல்களின் கனதியையும் வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றது. எதிர் வரும் காலங்களில் வெளிவரும் சஞ்சிகைகளில் சிங்கள மொழி மூலமான ஆக்கங்களும் இடம்பெற வேண்டும் என்பது எனது அவா. மிகவும் கடினமான அதே வேளை மிக உன்னதமான இந்தப் பணியை வெற்றிகரமாக செயற்படுத்த உந்து சக்தியாய் திகழ்ந்த அருட் சகோதரர் A தேவராஜா, அவருடன் இணைந்து பணியாற்றிய திருமதி J. சொல்வேந்தன் மற்றும் ஆக்கங்களை வழங்கிய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். இந்தப் பணி மேலும் தொடர வேண்டும் என்று இறைவனை மன்றாடுகின்றேன்.

K. ஞானசேகரம்

பிரதி அதிபர்

கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்

சேனைக்குடியிருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *The Message from the Assistant Principal*

*It is with great pleasure that I send a message to the annual magazine of our school. At schools, along with academic studies, students are encouraged in games and athletics, art and craft, various clubs, dramatics and other co-curricular activities. These make the years in school interesting and worth remembering. But intellectual activities like publishing books and magazines at schools are rarely found in our area.*

*The school magazine is a historical document and the window to the activities of the school. It brings the creative talents of students and teachers to light. It also shows the traditions and the achievements of the school. Writing does not come from experience alone. It also requires a lot of reading. Young students have a lot of potential within them which needs a proper channelization and outlet. School magazines provide a wonderful platform for these young potential ones to showcase their talent. School magazines also give the young and talented writers an opportunity to feel intently, observe keenly, think deeply and thereby express themselves in a distinct way.*

*After a long time, our school library association has come forward to publish a magazine. This valuable initiative provides our students and teachers with the opportunity to show their creative talents. Many useful articles and information are found in this magazine. I really appreciate the great job done by the magazine committee. Proper attention by all the teachers can help in improving the standard of the magazine in future. I kindly request all the teachers and students to continue this noble task in the years to come.*

***Balasingham Sajindren***

*Assistant Principal,*

*KM/KM/Ganesha Maha Vidyalaya,*

*Chenaikudiyiruppu,*

*Kalmunai.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாக்கக் குழுவின் உரை

தொழினுட்பத்தின் வளர்ச்சியால் துரித முன்னேற்றங்களைக் கண்டு வியந்து நிற்கும் இளம் சமூகத்தினரிடம் வாசிப்பு எட்டாக் கனியாக சென்று கொண்டிருக்கும் இக்காலத்தில் வாசிப்பை நேசிக்கின்ற உள்ளங்களின் தேவையை உணர்ந்து அவ்வப்போது சில சஞ்சிகைகள் வெளிவரத்தான் செய்கின்றன. அந்த வகையில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு எங்கள் பாடசாலையில் இருந்து தேனருவி என்ற சஞ்சிகை வெளிவருகின்றது.

இந்தச் சஞ்சிகையானது மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்றது. கவிதை, கட்டுரை, அறிஞர் வாக்குகள், சிந்தனைத் துளிகள், பொது அறிவு சார் விடயங்கள் போன்ற பல்வேறு விடயங்களைத் தாங்கி வரும் அருவியாக இது ஊற்றெடுக்கின்றது. ஆங்கில மொழியில் வாசிப்பவர்களுக்கும் ஏற்ற வகையில் விடயங்கள் அடங்கியுள்ளன.

தேனருவி வற்றாது பாய்ந்து தொடர்ந்தும் வெளிவருவதன் மூலம் வாசகர்களுக்கு சிறந்த அறிவுப் பொக்கிசங்களை வாரி வழங்க வேண்டும் என்று வாழ்த்துகின்றோம். இந்த சஞ்சிகைக்கான ஆக்கங்களைத் தந்துதவிய ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் இச் சஞ்சிகை வெளிவர வேண்டும் என்பதில் உறுதியுடன் செயற்பட்டு எமக்கு வழிகாட்டிய அதிபர் அவர்களையும் வாழ்த்துகின்றோம். சஞ்சிகையில் வருகின்ற ஒவ்வொரு ஆக்கத்துக்கும் அதை ஆக்கியவரே பொறுப்பு என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்திக் கொள்கின்றோம்.

தேனருவி சஞ்சிகை ஆக்கக் குழு

கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சிகை ஆக்கக் குழு

## வழிகாட்டல்

திரு T. பூவேந்திரன் (அதிபர்)

திரு K. ஞானசேகரம் (பிரதி அதிபர்)

திரு பாலசிங்கம் சஜிந்ரன்(உப அதிபர்)

## செயற்பாட்டுக் குழு

அருட் சகோதரர் அ. தேவராஜா (நூலகப் பொறுப்பாளர்)

திருமதி ஜெ சொல்வேந்தன் (ஆசிரியை)

திருமதி பவிதரன் சிவஸ்ரீதா (சேனைக்குடியிருப்பு)

செல்வன் சு. பனோஜன் (தரம் 13)

செல்வி க. குணாழினி (தரம் 13)

செல்வி த. கேமசாலினி (தரம் 12)

செல்வி சி. டேவேதா (தரம் 12)

செல்வி ஜெ. டிலக்ஷிகா (தரம் 13)

## கணினி வடிவமைப்பு

திருமதி J. சுஜர்மன்(ஆசிரியை - இராம கிருஷ்ணா மிஷன் பாடசாலை, திருக்கோவில்)

திரு C. ஜோதிராஜா (ஆசிரியர்)

திரு பாலசிங்கம் சஜிந்ரன் (உப அதிபர்)

## ஒளிப் படங்கள்

திரு V. டிலோஜன் (வன்னியார் வீதி, கல்முனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இச் சஞ்சிகை வெளிவரத் தேவையான நிதியுதவிகள் செய்த இப் பாடசாலைச் சமூகத்தின் நன்றிக்குரியவர்கள்

1. திரு K. செல்வராஜா, கல்முனை மாநகர சபை உறுப்பினர், சேனைக்குடியிருப்பு
2. திரு N. இராஜேஸ்வரன் G.K சினிமா உரிமையாளர், சேனைக்குடியிருப்பு
3. திரு R. ராகவன், Elephant House கல்முனைப் பிரதேச விநியோகஸ்தர், கல்முனை
4. திரு J. டொனால்ட், கிளை முகாமையாளர், NDB வங்கி, கல்முனை
5. திரு A. நிர்மல், கிளை முகாமையாளர், HNB வங்கி, மட்டக்களப்பு
6. அருட் சகோதரர் அ. தேவராஜா, பணிப்பாளர், St. Mary's Boys' Home, கல்முனை
7. திருமதி T. சந்திரகுமார், சேனைக்குடியிருப்பு
8. திருமதி J. சந்திரதேவன், சேனைக்குடியிருப்பு
9. செல்வி V. அனுஜா, சேனைக்குடியிருப்பு
10. திரு T பூவேந்திரன், அதிபர், கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
11. திரு B. சஜிந்ரன், உப அதிபர், கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
12. திருமதி J சொல்வேந்தன், ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
13. திருமதி N சசீந்திரன், ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
14. திரு P. சோதீஸ்வரன், ஆசிரியர், கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
15. திருமதி P. சண்முகலிங்கம், ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
16. திருமதி T. மணிவண்ணன், ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
17. திருமதி V. பிரபுராஜ், ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
18. திருமதி K. இராசரெத்தினம், ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
19. திரு S. பூவேந்திரன், ஆசிரியர், கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
20. திருமதி R. ஜெயதரன், ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
21. திருமதி S. கமலநாதன், ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
22. திருமதி Y. செல்வராசா, ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
23. திருமதி T. கலையரசன், ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
24. திருமதி I. அருந்தவராசா, ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
25. திரு R. ஜெய்சங்கர், அலுவலக உதவியாளர், கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
26. திரு R. சுபராஜன், ஆசிரியர், கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
27. திரு S. இராசேந்திரன், ஆசிரியர், கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
28. திருமதி S. இராசேந்திரன், ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
29. திரு T. விஸ்வலிங்கம், ஆசிரியர், கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
30. திருமதி M. இளஞ்சேரலாதன், ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
31. திரு K. அரசரெட்ணம், ஆசிரியர், கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
32. திருமதி J. பாலக்கிறிஷ்னா, ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
33. திருமதி T. இலட்சுமணகாந்தன், ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
34. திரு S. இந்திரன், ஆசிரியர், கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
35. திருமதி S. ஜெயக்குமார், ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்
36. செல்வி A. ஆர்த்திகா, ஆசிரியை, கமு/கமு/கணேச மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Our Principal



## Principal, Deputy Principal, Assistant Principal and Sectional Heads



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Staff



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே


| இல | விடயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | தேசிய கீதம் | |
| 2. | தமிழ்த்தாய் வாழ்த்து | |
| 3. | பாடசாலைக் கீதம் | |
| 4. | மகுட வாக்கியம், தூரநோக்கு, பணிக்கூற்று | |
| 5. | பாடசாலை பற்றிய அடிப்படைத் தகவல்கள் | |
| 6. | மாணவர் விபரம் | |
| 7. | பணியணியினர் விபரம் | |
| 8. | பாடசாலையின் அவசர தேவைகள் | |
| 9. | General School Rules | |
| 10. | எமது பாடசாலை வரலாறு - ஒரு நோக்கு | 01 – 05 |
| 11. | வாசிப்பின் முக்கியத்துவம் | 06 – 07 |
| 12. | சூழல் மாசடைதல் | 08 - 12 |
| 13. | பாடசாலைகளில் தீர்மானங்களை எடுத்தல் | 13 - 19 |
| 14. | நூலகம் | 21 - 21 |
| 15. | நூல் நிலையம் | 22 25 |
| 16. | மகான்களும் வாசிப்பின் மகத்துவமும் | 26 – 27 |
| 17. | Present State of English Language Education in Sri Lanka | 28 – 36 |
| 18. | கல்வி | 37 – 38 |
| 19. | திருக்குறள் பற்றி அறிவோம் | 41 - 43 |
| 20. | பாடசாலைகளில் பெறுகைச்செயற்பாடுகள் | 44 – 51 |
| 21. | அவளுக்கு ஏற்பட்ட மாற்றம் | 52 53 |
| 22. | மரபுத்தொடர்கள் | 56 – 66 |
| 23. | முயற்சி திருவினையாக்கும் | 68 – 71 |
| 24. | சமூக ஊடகங்களின் நன்மையும் தீமையும் | 74 – 77 |
| 25. | இனங்களுக்கிடையில் புரிந்துணர்வினை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு | 81 – 82 |
| 26. | நல்லிணக்கம் | 83 – 86 |
| 27. | கடந்த நூற்றாண்டு கண்ட மிகப்பெரும் யுத்தங்கள் | 87 – 97 |
| 28. | கோபம் கொடியது | 98 – 101 |
| 29. | The Effects of Television on Children | 102 – 103 |
| 30. | எப்படிப்பட்ட அன்பு உண்மையான சந்தோஷத்தைக் கொடுக்கும்? | 104 – 106 |
| 31. | குரு | 108 – 109 |
| 32. | பெண்களின் உரிமைகளும் கடமைகளும் | 110 – 113 |
| 33. | சீதனமே | 114 – 114 |
| 34. | மனிதன் மனிதனாக வாழ வேண்டும் | 115 – 115 |
| 35. | அம்மா | 116 – 116 |
| 36. | தாயே | 117 - 117 |
| 37. | நூல்களும் ஆசிரியர்களும் | 118 – 118 |
| 38. | நேர முகாமைத்துவம் | 119 – 121 |
| 39. | ஜனநாயகம் | 122 – 123 |
| 40. | மன அழுத்தம் | 124 – 128 |
| 41. | மின்னல் | 130 – 132 |
| 42. | தமிழ் மக்கள் மத்தியில் ஆங்கில மொழிப்பாவனை | 134 – 139 |
| 43. | Our Sincere Thanks | 140 – 143 |
| 44. | Some Photographs on Important Occasions in the Year 2018 | 144 – 151 |
| 45. | நன்றி | 152 - 152 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே-நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே-நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே
நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக் கீதம்

போற்றுவோம் வாரீர்; போற்றுவோம் வாரீர்;
புகழ் எங்கும் பரவிட போற்றுவோம் வாரீர்;
கலை அருள் கணேச மகா வித்தியாலயம்
காசினியில் மீதுயர்ந்து பல்கலை பரப்ப
போற்றுவோம் வாரீர் !
மட்டுநகர் வாவி வளம்பெறும் கரையினில்
கிட்டங்கிப் புகழ்பதி சேனைக்குடியிருப்பில்
மத்தியில் ஒளிரும் மகா வித்தியாலயம்
மட்டில்லா புகழ் பெற வாழ்த்திடுவோமே !
போற்றுவோம் வாரீர் !
சைவமும் தமிழும் தழைத்திடும் கூடம்
சத்தியம் அறிவில் அனைவரும் ஓங்க
நல்லருள் நல்கி நாமெல்லாம் உயர
நலம் பல பொழிவாள் நல்கலை மாதா
போற்றுவோம் வாரீர் !
கல்வியில் உயர்ந்து கலை பல தெளிந்து
நல்லுடல் உறுதி உள நல மேன்மை
பாரினில் நாங்கள் பண்புடையோராய்
வான் புகழ்பரப்ப ஒளிரும் நம் கூடம்
போற்றுவோம் வாரீர் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாக்கியம்

# கல்வியே கருந்தனம்

## தூர நோக்கு

எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுத்து வாழக்கூடிய மாணவர் சமுதாயம்

## பணிக்கூற்று

தேசிய கல்வி நோக்கங்களோடு கூடிய தரமான கல்வியை வழங்குவதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் மனித மேம்பாட்டிற்குமான தேர்ச்சிமிக்க விளைதிறனும் வினைத்திறனும் உடைய இளைய சமுதாயம் உருவாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை பற்றிய அடிப்படைத் தகவல்கள்

1. பாடசாலையின் பெயர்: கமு/கமு கணேச மகா வித்தியாலயம்
2. விலாசம்: சேனைக்குடியிருப்பு, கல்முனை
3. பாடசாலை அடையாள இலக்கம்: 1608016
4. பாடசாலை தொகைமதிப்பு இலக்கம்: 15215
5. பாடசாலை வகை: 1C
6. மொழிமூலம்: தமிழ்
7. பால்: கலப்பு
8. அதிபர்: திரு த பூவேந்திரன்
9. பாடசாலை மேம்பாட்டு அதிகாரி: திரு த லக்குணம்
10. மாணவர் தொகை: 551
11. கல்வி சார் ஆளணித் தொகை: 41 + தற்காலிக ஆசிரியர் 1
12. கல்வி சாரா ஆளணித் தொகை: 03
13. கோட்டம்: கல்முனை தமிழ் பிரிவு
14. வலயம்: கல்முனை
15. பிரதேச செயலாளர் பிரிவு: கல்முனை தமிழ்
16. தொலைபேசி: 0672220105, 0714247377
17. இலத்திரனியல் அஞ்சல்: ganesha15215@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் விபரம்

| வகுப்பு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 A | 12 | 17 | 29 |
| 1 B | 15 | 13 | 28 |
| 2 | 14 | 11 | 25 |
| 3 A | 11 | 11 | 22 |
| 3 B | 11 | 10 | 21 |
| 4 A | 12 | 11 | 23 |
| 4 B | 13 | 10 | 23 |
| 5 A | 15 | 11 | 26 |
| 5 B | 14 | 10 | 24 |
| ஆரம்பப் பிரிவு: மொத்தம் | 117 | 104 | 221 |
| 6 A | 12 | 10 | 22 |
| 6 B | 11 | 12 | 23 |
| 7 | 14 | 14 | 28 |
| 8 A | 13 | 17 | 30 |
| 8 B | 14 | 16 | 30 |
| 9 A | 13 | 09 | 22 |
| 9 B | 11 | 11 | 22 |
| 10 A | 12 | 11 | 23 |
| 10 B | 11 | 12 | 23 |
| 11 A | 10 | 13 | 23 |
| 11 B | 15 | 12 | 27 |
| 11 R | 10 | 15 | 25 |
| இடைநிலைப் பிரிவு மொத்தம் | 146 | 152 | 298 |
| 12 | 9 | 13 | 22 |
| 13 | 11 | 17 | 28 |
| 13 R | 2 | 16 | 18 |
| உயர்தரப் பிரிவு: மொத்தம் | 22 | 46 | 68 |
| மொத்த மாணவர் தொகை | 285 | 302 | 587 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியணியினர் விபரம்

| இல | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | திரு T பூவேந்திரன் | அதிபர் |
| 2. | திரு K. ஞானசேகரம் | பிரதி அதிபர் |
| 3. | திரு B. சஜிந்ரன் | உதவி அதிபர் |
| 4. | திருமதி P. சண்முகலிங்கம் | ஆசிரியை |
| 5. | திருமதி N. சசீந்திரன் | ஆசிரியை |
| 6. | திருமதி T. மணிவண்ணன் | ஆசிரியை |
| 7. | திருமதி S. ஜெயக்குமார் | ஆசிரியை |
| 8. | திரு S. பூவேந்திரன் | ஆசிரியர் |
| 9. | திரு K. அரசரெட்ணம் | ஆசிரியர் |
| 10. | திருமதி S. கமலநாதன் | ஆசிரியை |
| 11. | திருமதி T. கலையரசன் | ஆசிரியை |
| 12. | திருமதி I. அருந்தவராசா | ஆசிரியை |
| 13. | திருமதி K. இராசரெத்தினம் | ஆசிரியை |
| 14. | திருமதி J. சொல்வேந்தன் | ஆசிரியை |
| 15. | திருமதி T. இலட்சுமணகாந்தன் | ஆசிரியை |
| 16. | திருமதி V. விவேகானந்தன் | ஆசிரியை |
| 17. | திரு M.I.S. நௌசத் | ஆசிரியர் |
| 18. | திருமதி J. பாலக்கிறிஷ்னா | ஆசிரியை |
| 19. | திருமதி N. கோகிலராசா | ஆசிரியை |
| 20. | திரு S. இந்திரன் | ஆசிரியர் |
| 21. | திருமதி Y. செல்வராசா | ஆசிரியை |
| 22. | திரு A.H. அபூதாஹிர் | ஆசிரியர் |
| 23. | திருமதி G. ஜோன்சன் | ஆசிரியை |
| 24. | திருமதி S. இராசேந்திரன் | ஆசிரியை |
| 25. | திரு S. சதீஸ்கரன் | ஆசிரியர் |
| 26. | திரு S. இராசேந்திரன் | ஆசிரியர் |
| 27. | திரு S. புவனேஸ்வரன் | ஆசிரியர் |
| 28. | திருமதி R. ஜெயதரன் | ஆசிரியை |
| 29. | திரு M. ஜெயச்சந்திரன் | ஆசிரியை |
| 30. | திருமதி I. மோகன் | ஆசிரியை |
| 31. | திரு R. செந்தில் | ஆசிரியை |
| 32. | திருமதி V. பிரபுராசா | ஆசிரியை |
| 33. | திருமதி S. பஞ்சாட்சரம் | ஆசிரியை |
| 34. | திருமதி M.J.B. சகாயசாந்த் | ஆசிரியை |
| 35. | திருமதி M. இளஞ்சேரலாதன் | ஆசிரியை |
| 36. | செல்வி A. ஆர்த்திகா | ஆசிரியை |
| 37. | திரு T. விஸ்வலிங்கம் | ஆசிரியர் |
| 38. | திரு R. சுபராஜன் | ஆசிரியர் |
| 39. | திரு P. சோதீஸ்வரன் | ஆசிரியர் |
| 40. | திரு T. கொலின்ஸ் | ஆசிரியர் |
| 41. | வண சகோ A. தேவராஜா | நூலக உதவியாளர் |
| 42. | திரு R. ஜெய்சங்கர் | அலுவலக உதவியாளர் |
| 43. | திரு S. இரத்தினவேல் | இரவுக் காவலாளி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பாடசாலைக்கு உடனடியாகத்தேவையான ஆளணி வளம், உபகரணங்கள் தளபாடங்கள் கட்டிட வசதிகள்

1. ஆங்கில பாட ஆசிரியர் – 01
2. தகவல் தொழிநுட்ப பாட ஆசிரியர் – 01
3. மாணவர் மேசை Type C – 35, கதிரைகள் Type C – 100
4. மாணவர் மேசை Type B - 120 கதிரைகள் Type B - 120
5. மாணவர் மேசை Type A - 60 கதிரைகள் Type A - 70
6. பிரயோகத் தொழிநுட்பத் திறன்களுக்கான தனி அலகு - 1
7. தேவையான உபகரணங்களுடன் கூடிய க பொ த சா /த விஞ்ஞான ஆய்வு கூடம் – 1
8. இலத்திரனியல் நூலக வசதி
9. பொருத்தமான வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானம்
10. விவசாய அலகு - 1
11. அழகியல் பிரிவு அலகு - 1
12. மனையியல் அலகு - 1
13. ஆங்கில வள நிலையம் – 1
14. உருக்கு அலுமாரிகள் – 18
15. ஆசிரியர் மேசைகள் - 40
16. ஆசிரியர் கதிரைகள் – 40
17. கணினிகள் – 20
18. பல்லூடக எறியி - 02
19. நூலக மேசைகள் - 15
20. ஒன்றுகூடல் மண்டபக் கதிரைகள் – 700
21. ஒலிபெருக்கித் தொகுதி – 1

எமது மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை விரும்புகின்ற தனவந்தர்கள் மேலே காட்டப்பட்டுள்ள வளங்களை எமது பாடசாலை பெற்றுக்கொள்ள தங்களால் இயன்ற பங்களிப்புகளை நல்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

பாடசாலைச் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# General School Rules

**Mr. A.H. Aboothahir**

**Teacher in- charge for Students' Etiquette**

1. School starts at 7.30 a.m. and closes at 1.45 p.m. and all students are expected to be punctual.
2. If a child is absent from school for any reason, a letter from the parent stating clearly the reason for the absence should be sent to the Class Teacher on the first day the child comes back to school.
3. If a child is absent for more than two days, which is only allowed due to illness, this must be substantiated with a medical certificate.
4. Medical appointments and family functions as far as possible should be arranged outside school hours. If such appointments are made due to exceptional reasons, prior permission should be obtained from the Sectional Head.
5. If leave of absence during the term for longer periods, that is for more than 3 days due to unavoidable reasons is needed, it must be approved by the Vice Principal.
6. Any child who is absent from school will not be permitted to represent the school in any activity, except with prior permission of the Principal. This also applies to practices which takes place before or after school.
7. No child will be permitted to leave the school premises during school hours unless permission has been obtained in writing from the Principal or the Vice Principal.
8. Leave for travel abroad must be obtained from the Principal in writing at least two weeks prior to the date of departure from the Principal. Such travel during term time is discouraged.
9. As poor attendance in class is a matter of concern, a minimum attendance of 80% will be required for each term. Children who fail to maintain the required attendance other than for reasons of genuine illness or exceptional reasons, and who have not obtained prior permission from the Principal, will be subjected to special enquiry with the help of the GS of the area.
10. No person may visit the school for any purpose without permission. Any visitor wishing to meet a teacher or student must see the Deputy/Assistant Principal of the school.
11. Parents are urged to ensure that children spend adequate time at home to complete homework or fulfil home study programme.
12. A child in the Primary School should spend a minimum of one hour, a child in the middle school a minimum of two hours and a child in the upper school a minimum of three hours daily as home study programme and parents are expected to ensure the above.
13. School Uniform

    A. For the boys of Grade 10 to Grade 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

White trousers and short sleeved shirt with school tie

B. For the boys of Grade 1 to Grade 9

Blue shorts and short sleeved shirt with school tie

C. For the girls of all grades

White frock up to knee cap level with school tie

D. Tight dresses will not be permitted for boys and girls.

E. Shoes for the boys

black leather or artificial leather shoes, plain white socks free of any markings

F. Shoes for the girls

White leather or artificial leather shoes, plain white socks free of any markings

G. Canvas shoes, trainer shoes or any type of fancy shoes are not permitted.

H. It is forbidden for students in the college to enter school premises dressed in any attire other than the college uniforms unless otherwise permission has been granted.

14. Electronic equipment such as mobile phones, I pads are forbidden to be brought to school and will be confiscated if detected and returned to the parents only at the end of the school career of the student or otherwise as determined by the Principal.
15. Any students detected with pornographic material or narcotic drugs will be immediately expelled from the school.
16. Parents who accompany their children when brought to school should drop the child at the gate and ensure that the child enters the school premises.
17. Parents will not be allowed into the school premises unless with prior appointment or permission.
18. Visits by friends of students are not permitted during school hours.
19. If parents need to contact the child for any urgent or exceptional reasons, such visits should be arranged through the Principal, or Vice Principal, or Sectional Heads. Such visits are allowed only to the parents or the guardian and not to any others.
20. Parents who wish to meet the teachers should officially do so on Parents Day or through an appointment made through the Principal.
21. Parents should refrain from speaking to teachers on the phone or interviewing for meeting teachers at their homes or any place outside the school.
22. Parents who wish to meet the Vice Principal may do so on Tuesday or Thursday, when he is free from his teaching obligations.
23. Parents who wish to meet the Principal, can only do so by obtaining a prior appointment.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. If there is an emergency, the Principal or Vice Principal could be contacted through the main office.
25. All correspondence with the Principal, regarding any student in school should state the student's name with his initials, class and admission number, and should be signed by the parent or guardian.
26. Parents are advised that our teachers are not permitted to give private tuition to any students of this school without the prior written approval of the Principal/Vice Principal.
27. Complaints must always be addressed, preferably in writing to the Principal or the Vice Principal. They should not be addressed directly to the person about whom the complaint is being made, whether it be a member of staff, a prefect or student of this school.
28. The person receiving the complaint will report it to the necessary school authorities, and the person making the complaint should expect to receive an acknowledgement within five working days.
29. Parents may not under any circumstances approach or write to either a teacher or a prefect directly with the complaint.
30. Depending on the nature of the complaint appropriate investigation will be done and, in some cases, it may take some time.
31. In some instances, the person making the complaint will receive an explanation of the action the school has taken, but in many cases, this is not possible for reasons of confidentiality. In those cases, the complainant will simply be told that the matter has been dealt with and the reason for the complaint should then stop.
32. It is compulsory for students to sit for end-of-term examinations. Leave during examinations will be granted only in very exceptional circumstances.
33. All students are issued termly reports following the term examinations. Parents should ensure that they collect reports on the days assigned and ensure that the reports are duly signed and returned to their children's class teacher during the first week of the following term.
34. Students will not be permitted to move here and there during the class time. Only monitors can go out for necessary needs.
35. Students must protect the assets of the school.
36. Students must clean their classrooms before the morning assembly.
37. Students must always use tender words in their conversations.
38. Students must follow socially accepted norms.
39. Students must not damage the properties of school in any way.
40. Students must respect their teachers, school culture and values.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது பாடசாலை வரலாறு - ஒரு நோக்கு

திருமதி ஜெ. சொல்வேந்தன், ஆசிரியை

மாணவர்களுக்கு கல்வியை வழங்கும் பல்வேறு நிறுவனங்களுள் பாடசாலைகள் மட்டுமே கல்வியுடன் நல்லொழுக்கப் பண்புகளையும் வழங்கி மாணவர்களை நல்வழிப்படுத்துகின்றன. அந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் கல்முனை நகரின் மேற்கே இரண்டு மைல் தொலைவில் அமைந்த சேனைக்குடியிருப்பு கணேச மகா வித்தியாலயமும் தன் பங்களிப்பை வழங்கி வருகின்றது.

இலங்கை பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்ட காலத்தில் அதாவது 1860 காலப் பகுதியில் இலங்கையருக்கு கல்வி போதிக்கப்பட வேண்டும் என்ற இலங்கை மக்களின் கோரிக்கைக்கு அமைய ஆங்கில மொழிக் கல்வியில் இருந்து சுய பாசை மொழிக் கல்விக்கான அத்திவாரம் இடப்பட்ட வகையில் கிராமங்கள் தோறும் பாடசாலைகளை அமைப்பதில் ஏற்பட்ட மறுமலர்சியின் விளைவால், 1880ம் ஆண்டளவில் சேனைக்குடியிருப்பு கிராமத்தில் சிறிய ஒரு ஓலைக் கொட்டிலில் ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அப் பாடசாலையில் வயது அடிப்படையில் முதலில் ஐந்து மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அப் பாடசாலைக்கு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட்டார் அவரும் அவரது குடும்பமும் குடியிருக்கத் தேவையான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. அப் பாடசாலை படிப்படியாக வளர்ச்சியடைந்தது. அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எனப் பெயர் சூட்டப்பட்டது. பின்னர் 1905ம் ஆண்டளவில் அரச உதவியோடு செங்கல், நீறு மணல், சேரத்து கட்டக் கூடிய ஒரு கட்டிடம் அமைக்கப்பட்டது. இவை அனைத்துக்கும் ஒரு ஆசிரியரே போதனை செய்தார்.

1928-05-01 ம் திகதி திரு W. S செல்லையா அவர்களைத் தலைமையாசிரியராகக் கொண்டு ஓலையால் வேயப்பட்ட ஒரு கொட்டிலில் 19 மாணவர்களுடனும் 2 ஆசிரியர்களுடனும் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயருடன் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இப் பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்த ஆசிரியர்கள், அதிபர்களை நன்றியுடன் நினைவு கூர்வோமாக. திரு E.K. சீனித்தம்பி, திரு.R. சின்னையா, திரு.R. மாரிமுத்து, திரு. K. வீரசிங்கம், திரு A. அழகையா, திரு. T. நடராசசிங்கம், திரு. K. சந்திரலிங்கம், திரு. T. பூவேந்திரன் ஆகிய அதிபர்களின் சேவைக் காலம் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியதாகும். 1984ல் அதிபராக நியமனம் பெற்ற திரு A. அழகையா, அவர்களின் சேவைக் காலம் பாடசாலை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதே. ஆரம்பப் பாடசாலையாக இருந்த இப் பாடசாலையை வருடாந்தம் வகுப்புகளை உயர்த்தி 1993ல் 1 C மகா வித்தியாலயம் ஆக்கிய பெருமை இவரையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரும். அக் காலங்களில் இயங்கிய பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு. எம். நல்லதம்பி குருக்கள் அவர்களின் பங்களிப்பும் பாராட்ட வேண்டியதே

திரு. A. அழகையா அதிபர் அவர்களின் சேவையில் பாடசாலை பின்வரும் வளர்ச்சிகளைக் கண்டது.

- 1991ல் முதன்முதல் க. பொ. த (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் ஆறு மாணவர்கள் உயர்தர வகுப்புக்குத் தகுதி பெற்றனர்.
- 1993ல் உயர்தர கலைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 1 C மகா வித்தியாலயமானது.
- 1995ல் முதன்முறையாக க. பொ. த (உ/த) பரீட்சைக்கு (கலைப்பிரிவு) 7 மாணவர்கள் தோற்றிச் சகலரும் சித்தியடைந்ததுடன் 3 மாணவர்கள் பல்கலைகழகம் சென்றனர்.
- மிக நீண்ட நாட்களுக்கு பின்னர் 1991 இல் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 4 மாணவர்கள் சித்தியடைந்தனர்.
- 1994ல் இப் பாடசாலை எஸ். ஈ. டீ. பி திட்டத்தில் சேர்க்கப்பட்டு பல மாடிக்கட்டிடங்களும் தளபாட வசதிகளும் கிடைக்க வித்திடப்பட்டது.

1994ல் பிரதியதிபராக திரு. T. நடராசசிங்கம் அவர்கள் இங்கு நியமனம் பெற்றது அதிபரின் சேவைக்குப் பேருதவியாக அமைந்ததைக் குறிப்பிடலாம். அதிபர் திரு. A. அழகையா அவர்களுடன் பிரதியதிபரும் இணைந்து இப் பாடசாலை எஸ்.ஈ.டீ. பி திட்டத்தில் இணைந்ததன் பேரில் நாம் இன்று காணும் மாடிக் கட்டிடங்கள், விஞ்ஞான மனையியல் கூடங்கள், ஒன்றுகூடல் மண்டபம் ஆகியவற்றைப் பெற வழி சமைத்தனர். இவற்றிற்கெல்லாம் பேருதவி புரிந்த முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் திரு. க. தியாகராசா அவர்கள் எமது நன்றிக்குரியவர்.

1995-09-28 ல் திரு. A. அழகையா அதிபர் அவர்கள் தனது 60 வயதில் ஓய்வு பெற்றதன் பின்பு பிரதியதிபரான திரு. T. நடராசசிங்கம் அவர்கள் அதிபராக நியமனம் பெற்று சேவையாற்றினார். இவரின் சேவை ஈடு இணையில்லை. நல்ல முகாமைத்துவ திறனாலும், சிறந்த வழிகாட்டலாலும் ஆசிரியர்களின் அயரா உழைப்பினாலும் பாடசாலை கல்வி, பௌதீக துறையில் வளர்ச்சி கண்டது.

- 1995ல் இருந்து திரு. T. நடராசசிங்கம் அதிபர் அவர்களின் சேவைக் காலத்தில்
- 1996ல் ஒரு மாணவனும் 1997 ல் மூன்று மாணவர்களும் பல்கலைக்கழகம் சென்றனர்.
- 1997ல் தரம் 05 ஸ்கொலசிப் பரீட்சையில் 5 மாணவர்களும்
- 1998ல் 7 மாணவர்களும் சித்தி பெற்றனர்.
- அவரின் காலத்தில் ஒன்றுகூடல் மண்டபம், தொலைபேசி வசதி ஆகியனவும் காரியாலயத் தளபாடங்களும் கிடைக்கப் பெற்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பாடசாலையின் வரலாற்றில் குறிப்பிட்டுக் கூறத்தக்க அதிபர் வரிசையில் திரு. காளிக்குட்டி சந்திரலிங்கம் அதிபரைக் கூறாமல் இருக்க முடியாது. இவர் கொழும்பில் வசதியான பாடசாலையில் அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்த போது தனது சொந்த மண்ணில் தனது கிராமத்தில் சேவையாற்ற வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு தனது வசதி வாய்ப்புகளை எல்லாம் விட்டு 2006 இல் இப் பாடசாலையில் அதிபராகப் பொறுப்பேற்றார்.

இவரது சேவைக்காலத்தில் இவரது சிறந்த வழிகாட்டலினால் பாடசாலை பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டது. அந்த வகையில் எமது பாடசாலையில் நீண்ட காலமாக சிறுவர் பூங்கா இல்லாத நிலை காணப்பட்டது. இக் குறையினை நீக்கி ஆசிரியர்களின் உதவியுடன் அழகான சிறுவர பூங்கா ஒன்றை அமைத்த பெருமை இவரையே சாரும். அடுத்து இவரது முயற்சியினால் இரண்டு மாடிகளைக் கொண்ட வகுப்பறை கட்டிடங்கள் இரண்டு கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் கணினி ஒன்று கூட இல்லாத நிலையில் இருந்த பாடசாலைக்கு தனது முயற்சியினால் கணினி வள நிலையம் ஒன்றை கொண்டு வந்தார்.

இவ்வாறு பௌதிக தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு இவரது செயற்பாடுகள் நின்று விடாமல் கல்வி வளர்ச்சியிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் தொடர்ந்தன. பாடசாலையின் வரலாற்றில் முதன் முதலாக மாணவர்களது ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் முகமாக மாபெரும் கண்காட்சி ஒன்றை தனது தலைமையில் நடாத்தி வெற்றியும் கண்டார். இணைப்பாட விதான செயற்பாடுகளில் ஆங்கில் பேச்சு போட்டியிலும் விளையாட்டில் நீளம் பாய்தலிலும் மாணவர்கள் அகில இலங்கை மட்டம் வரை பங்கு பற்றி வெற்றி கண்டமை இவரது சேவைக் காலத்திலேயே தான். இதனை இப் பாடசாலை பெற்ற மிகப்பெரிய சாதனையெனலாம்.

கல்வி வளர்ச்சிக்காக மாலைநேர வகுப்புக்கள் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்ட இவரது அயராத முயற்சியினால் இவரது சேவைக் காலத்தில் உயர்தர பிரிவில் பல மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கும், கல்வியல் கல்லூரிகளுக்கும் சென்றமையும், க.பொ.த சாதாரண தரத்தில அடைவுமட்டம் அதிகரித்தமையும் இவரது சேவைக்கு கிடைத்த வெற்றியாகும். இவ்வாறு 2006 - 2011வரை சுமார் ஆறு வருடங்கள் மட்டுமே இக் கல்லூரியில் சேவை ஆற்றினாலும் இவரது சேவைக் காலம் என்றென்றும் மாணவர் மற்றும் கிராமத்து மக்களால் நினைவு கூரப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர்கள் - அன்று முதல் இன்று வரை

| இல | பெயர் | தொடக்கம் | வரை | காலப் பகுதி |
|---|---|---|---|---|
| 1. | திரு. W. S. செல்லையா | 1928 | 1929 | 02 வருடங்கள் |
| 2. | திரு. மு. வீரசிங்கம் | 1930 | 1932 | 03 வருடங்கள் |
| 3. | திருS. R. சிதம்பரப்பிள்ளை | 1933 | 1935 | 03 வருடங்கள் |
| 4. | திரு.O. R. கணபதிப்பிள்ளை | 1936 | 1938 | 03 வருடங்கள் |
| 5. | திரு. B. இராசப்பு | 1939 | 1939 | 01 வருடம் |
| 6. | திரு. D. N. நல்லதம்பி | 1940 | 1942 | 03 வருடங்கள் |
| 7. | திரு K.S. வைரமுத்து | 1943 | 1945 | 03 வருடங்கள் |
| 8. | திரு. T. சின்னத்தம்பி | 1946 | 1947 | 02 வருடங்கள் |
| 9. | திரு. E.K. சீனித்தம்பி | 1948 | 1955 | 08 வருடங்கள் |
| 10. | திரு.R. சின்னையா | 1956 | 1970 | 15 வருடங்கள் |
| 11. | திரு. R. மாரிமுத்து | 1971 | 1977 | 07 வருடங்கள் |
| 12. | திரு. K. வீரசிங்கம் | 1978 | 1982 | 05 வருடங்கள் |
| 13. | திரு. N. கனகசூரியம் | 1983 | 1984 | 02 வருடங்கள் |
| 14. | திரு. A. அழகையா | 1984 | 1995 | 11 வருடங்கள் |
| 15. | திரு. T. நடராசசிங்கம் | 1995 | 1999 | 05 வருடங்கள் |
| 16. | திரு. P. இலட்சுமணன் | 1999 | 2003 | 05 வருடங்கள் |
| 17. | திரு. P. சிவப்பிரகாசம் | 2004 | 2006 | 03 வருடங்கள் |
| 18. | திரு. K. சந்திரலிங்கம் | 2006 | 2011 | 06 வருடங்கள் |
| 19. | திரு. T. பூவேந்திரன் | 2012 | இன்று வரை | |

தற்போதைய அதிபர் அவர்களின் காலத்தில் எமது பாடசாலை மேலும் வளர்ச்சி கண்டுள்ளது. வருடா வருடம் குறிப்பிட்டுக் கூறக்கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக் கொள்கின்றனர். க.பொ. த சாதாரண தரப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் குறிப்பிடக்கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் அதி விஷேட சித்திகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இணைப் பாட விதானச் செயற்பாடுகளிலும் எமது மாணவர்கள் வலய, மாகாண மற்றும் தேசிய அளவில் சாதனை படைத்து வருகின்றனர். அண்மையில் இந்தப் பாடசாலையின் நூலகம் அதனது உன்னத சேவை வழங்கலுக்காக தேசிய ரீதியில் சிறந்த நூலகமாக தேசிய நூலக ஆவணவாக்கல் சபையினால் தெரிவு செய்யப் பட்டது. அதற்காக அரும்பாடு பட்ட நூலகப் பொறுப்பாளர் அருட் சகோதரர் அ. தேவராஜா அவர்களை இந்தக் கிராமம் என்றும் நினைவில் நிலை நிறுத்தும். அதிபரின் சேவைக்கு தோளோடு தோள் நின்று பணியாற்றும் பிரதி அதிபரின் பணியும் ஏனைய ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையும் எதிர் காலத்தில் இந்தப் பாடசாலை மேலும் பல சாதனைகளைப் படைக்க வாய்ப்புள்ளது என்பதைக் கட்டியம் கூறி நிற்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்போதைய அதிபர் திரு. T. பூவேந்திரன் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் அண்மைய சாதனைகள்

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு எமது பாடசாலையில் இருந்து தோற்றி பல்கலைக்கழகம் தெரிவானோர்

| 2016 | |
|---|---|
| மாணவர் பெயர் | பெறுபேறு |
| க. துட்சிக்கா | 3 A |
| கி. கோபிசாளினி | 2A 1C |
| பா. சர்மிளா | 2B 1C |
| த. வினோஜன் | 2B 1 C |
| ம. நிதுர்ஷன் | 1B 2C |
| க. தனுசிதா | 1B 2C |
| 2017 | |
| கு. சுதர்ஷன் | 1B 1C 1S |
| 2018 | |
| க. பதிவித்யா | 2A 1C |
| கா. சயந்தினி | 1 A 2B |
| இ. டனிகா | 1 A 2B |
| ச. யதுஷினி | 1 A 1B 1C |
| ஜெ. லிஷாந்திக்கா | 3 B |
| க. துஷ்ஜெயந்தன் | 2 A 1C |

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை

| 2016 | |
|---|---|
| மாணவர் பெயர் | பெறுபேறு |
| லி. யேதிகா | 6A 1B 1S |
| க. குணாழினி | 2A 3B 2C 2S |
| ஜெ. டிலக்ஷிகா | 2A 3B 1C 2S |
| சௌ. நிதுச்சா | 2A 1B 3C 2S |
| சு. டினோஜன் | 2A 1B 2C 4S |
| யோ. கிந்துஜன் | 2A 1B 2C 4S |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2017 | |
|---|---|
| தி. பவலக்ஸன் | 9A |
| பா. ஜஸ்வர்யா | 8A 1S |
| அ.அபர்ணா | 5A 3B 1C |
| வ. லோகனா | 5A 2B 2C |
| கு. யுவானுஜன் | 5A 3B 1C |

**வலயமட்ட கையெழுத்து சஞ்சிகைப் போட்டி முடிவுகள் - 2016**

பாலர் மேற்பிரிவு - கோட்ட மட்டம் 3 ஆம் இடம்

இடை நிலைப் பிரிவு **(II)** கோட்ட மட்டம் 1 ஆம் இடம்

இடை நிலைப் பிரிவு **(III)** கோட்ட மட்டம் **1** ஆம் இடம்

**தமிழ் மொழி தினம் – 2017**

1. செல்வி ஞா திலோத்திகா (கவிதை ஆக்கம்)
   வலய மட்டம் 1 ஆம் இடம்
   மாவட்ட மட்டம் 1 ஆம் இடம்
   மாகாண மட்டத்தில் பங்கு பற்றினார்.
2. செல்வி ச. யதுஷினி (பேச்சு)
   வலய மட்டம் 2 ஆம் இடம்

**தமிழ் மொழி தினம் – 2018**

1. செல்வி த லதுஷிகா (வாசிப்பு)
   வலய மட்டம் 1 ஆம் இடம்
2. செல்வி ஜீ டினுஜா (பேச்சு)
   மாவட்ட மட்டம் 2 ஆம் இடம்
3. செல்வி கா சயந்தினி (இலக்கிய விமர்சனம்)
   மாவட்ட மட்டம் 2 ஆம் இடம்

**மனைப் பொருளியல் வினா விடைப் போட்டி**

1. செல்வி. சு. தனுலக்சா – மாவட்ட மட்டம் - 1ம் இடம் – 2018
   மாகாண மட்டத்திலும் பங்கு பற்றினார்
2. செல்வி. துவாரகா - மாகாண மட்டம் - 2017- 4ம் இடம் –
   தேசிய மட்டத்திலும் பங்கு பற்றினார்

பாடசாலை நூலக சேவைப் போட்டி
தேசிய மட்ட விருதுக்காக தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்பின் முக்கியத்துவம்

திருமதி க. இராஜரெத்தினம், ஆசிரியை

மனிதன் மனிதனாகப் பிறந்து விட்டால் மட்டும் போதாது வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும். இதற்கு அடிப்படையாக அமைவதே கற்றல். கற்றலுக்கு வாசிப்பு அவசியமாக அமைகின்றது. வாசிப்பதன் மூலமே நாம் உலக விடயங்களை அறிந்து சமூகத்தோடு இணைந்து வாழ முடிவதோடு அறிவையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது. எனவே நாம் ஒவ்வொருவரும் வாசிப்பு பழக்கத்தை வளர்த்துக் கொள்வதன் மூலம் எமது வாழ்வை வளம்படுத்திக் கொள்ளலாம்.

"வாசிப்பு ஒருவனை பூரண மனிதனாக்குகின்றது" என்பது அறிஞர் வாக்கு. கல்வியில் உயர்ந்த பலர் தம் வாசிப்புப் பழக்கத்தினாலேயே வாழ்வில் உயர்வடைந்தனர். ஆறிவைப் பெற, மன அமைதி பெற, புதியனவற்றை காண்பதற்கும் வாசிப்பு உதவுகின்றது. மனிதன் வாழக் கற்க வேண்டும். கருவறை முதல் கல்லறை வரை கல்வி தொடர வேண்டும் என்பது வலுப் பெற்றுள்ளது. இதனை நன்கு உணர்வோர் வாசிப்பில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

இன்று வாசிப்புப் பழக்கம் பெரிதும் குன்றி வருகின்றது. தொலைக்காட்சி, வானொலி, இணையத்தளங்கள் போன்றவற்றை பயன்படுத்துவதிலேயே எல்லோரினதும் கவனம் செல்கின்றது. இதன் காரணமாக நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் வாசிக்கும் பழக்கம் குறைந்து வருகின்றது. அவ்வாறு இல்லாமல் "கண்டது கற்க பண்டிதன் ஆவான்" என்பதற்கிணங்க காணும் நூல்கள் எல்லாம் கற்பதன் மூலம் அறிவு பன்மடங்கு அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை. "நல்ல நல்ல நுhல்களே நமது நண்பர்கள்" என்பர். நல்ல நூல்களை நமது நண்பர்களாக்கிக் கொண்டால் நமது வாழ்வு உயர்வது திண்ணம். ஓய்வு நேரத்தை வாசிப்பதில் பயன்படுத்துவதால் நமது அறிவு பெருகுகின்றது. பொரிய பொரிய விடயங்களை அறிந்து கொள்ள முடிகின்றது "அறிவு, சுற்றம் காக்கும் கருவி" என்பர். எனவேதான் அறிவைப் பெருக்கிட நூல்களை நாம் துணையாக்கிக் கொள்ள வேண்டும்.

வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள பல உத்திகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். எடுத்துக் காட்டாக புத்தக கண்காட்சி நடாத்துதல், நூலக தினம் கொண்டாடுதல், வாசிப்பு மாத நிகழ்வுகளை நடாத்துதுல், போட்டி நிகழ்சிகளை நடாத்துதல் போன்றவற்றை குறிப்பிடலாம். நூலகங்கள் நம் அறிவை வளர்த்திடும் பொக்கிசங்கள். அங்கு தினம் தோறும் சென்று நூல்களை வாசிப்பதன் மூலம் பல்வேறு விடயங்களை இலக்கிய செல் நெறிகளை அறிந்து கொள்ள முடியும்.

புத்தகக் கண்காட்சிகள், நடத்துவதன் மூலம் அதனைப் பார்ப்பவர் களின் மனதில் நல்ல நூல்களை வாங்கி படிக்க வேண்டும் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பம் ஏற்படுவதுடன் காலத்துக்கு காலம் வெளிவரும் புதிய நூல்களைக காணும் சந்தர்ப்பமும் கிடைக்கின்றது. நூலக தினத்தில் நூலகத்தின் தேவை அதன் பயன்பாடு, அதனால் அடையும் நன்மைகள் வெளிப்படுகின்றது. மேலும் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் பேச்சு, கட்டுரை, பொதுஅறிவு, பொதுவான போட்டிகள் நடாத்தப்படுவதனால் மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை வளர்க்க முடியும்.

நாம் எவ்வளவு நூல்களை வாசிக்கின்றோமோ அந்தளவிற்கே நம் அறிவும் வளரும் இதுவே "நூலறிவு ஆகுமாம் நுண்ணறிவு" என்பது விளக்கி நிற்கின்றது. இதனை உணர்ந்தே யுனிசெப் நிறுவனம் ஒக்டோபர் மாதம் வாசிப்பு மாதம் என பிரகடனபடுத்தியுள்ளது. இதன் மூலம் உலகம் முழுவதும் வாசிப்புப் பழக்கத்தை வளர்த்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனலாம்.

எனவே "தொட்டணைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றணைந்து ஊறும் அறிவு" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க நாம் ஒவ்வொருவரும் நூல்களைத் தேடிக் கற்க வேண்டும். நூலகங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்தப் பழக வேண்டும். ஆளுமைமிக்க, அறிவு நிறைந்த இளம் சந்ததியினரை உருவாக்க வாசிப்பு பழக்கத்தை வளர்த்திட வேண்டும். ஒவ்வொருவரும் பூரண மனிதனாக வாழ்வதற்கு வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள முயல வேண்டும். "நூல் பல கற்போம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோம்"

*Reading is essential for those who seek to rise above the ordinary.*

*– Jim Rohn*

*Think before you speak. Read before you think.*

*– Fran Lebowitz*

*The reading of all good books is like conversation with the finest (people) of the past centuries.*

*– Descartes*

*Books are a uniquely portable magic.*

*– Stephen King*

*Today a reader, tomorrow a leader.*

*– Margaret Fuller*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சூழல் மாசடைதல்

சி. டெவேதா, தரம் - 12

இன்றைய காலத்தில் உலகளாவிய கரிசனைக்குரிய விடயமாக சூழல் மாசடைதல் மாறியுள்ளது. அது எமது பூமியின் அழகிய முகத்தை மாற்றியுள்ளது. அது மெதுவாக இந்தப் பூமியை அழித்துக்கொண்டிருப்பதுடன் நாம் தப்பி வாழ்வதற்கு கடினமான இடமாகவும் அதனை மாற்றிக்கொண்டிருக்கின்றது. பெரும் எண்ணிக்கையான தாவர விலங்கு இனங்கள் சூழல் மாசுபாட்டின் தீங்கான விளைவுகள் காரணமாக அழிவின் ஆபத்தை எதிர்நோக்கும் நிலையில் உள்ளன.

சூழல் மாசடைதலின் தன்மையைப்பொறுத்து அதனைப் பல வகுதிகளாக பாகுபடுத்தலாம். வெவ்வேறு சூழல் மாசுபாட்டு வழிமுறைகள் எமது பூமிக் கிரகத்துக்கு வெவ்வேறு விதமான முறைகளில் தீங்கை உண்டுபண்ணிக்கொண்டிருக்கின்றன. கீழே வெவ்வேறு சூழல் மாசுபட்டு முறைகள், அவற்றின் விளைவுகள் அவற்றைக் குறைக்க எடுக்கக்கூடிய வழிமுறைகள் பற்றி ஆராயப்படுகின்றது.

**வளி மாசடைதல்**

வளி மாசடைதல் சூழல் மாசுபாட்டின் ஒரு முக்கிய வடிவமாக நோக்கப்படுகிறது. இதற்கான பிரதான காரணங்கள் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் புகைகளும் வாகனங்களில் இருந்து வெளியேறும் புகைகளும் ஆகும். இந்த இடங்களில் இருந்து வெளியேறும் புகைககள் காற்றை மாசுபடுத்தி நாம் சுவாசிக்க கடுமையான நிலைமையை ஏற்படுத்துகின்றன. அதிகரித்த எண்ணிக்கையான வாகனங்களும் தொழிற்சாலைகளும் வளி மாசடைதலை அதிகரித்துள்ளன. இது பல்வேறு உடல் ஆரோக்கியம் சார்ந்த பிரச்சனைகளை ஏற்படுத்தியுள்ளது. சுவாசக் குழாய் அழற்சி மற்றும் நுரையீரல் சார்ந்த நோய்களை வளி மாசடைதல் ஏற்படுத்துகின்றது. வளி மாசடைதல் மனிதர்களுக்கு ஆரோக்கியம் தொடர்பான பிரச்சனைகளை ஏற்படுத்துவது மட்டுமல்லாது பூகோள வெப்பமடைதல் பிரச்சனையையும் ஏற்படுத்துகின்றது.

**நீர் மாசடைதல்**

வீட்டுக் கழிவுகளும் தொழிற்சாலைக் கழிவுகளும் ஆறுகள் மற்றும் நீர் நிலைகளை சென்றடைவதன் காரணமாக அவை மாசுபடுத்தப்படுகின்றன. முன்னைய காலங்களில் மிகவும் சுத்தமாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்ட ஆறுகளும் நீர் நிலைகளும் இப்போது பெருமளவான பிளாஸ்டிக், இரசாயனப் பொருட்கள் மற்றும் உக்க முடியாத கழிவுப் பொருட்களால் நிறைந்து காணப்படுகின்றன. இந்த மாசாக்கிகள் எமது ஆரோக்கியத்துக்கு தீங்கு பயக்கின்றன. நீர் மாசடைதல் நீர் வாழ் அங்கிகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இந்த மாசுபாட்டின் விளைவாக பெரும் எண்ணிக்கையில் நீர் வாழ் அங்கிகள் தினமும் அழிந்துகொண்டிருக்கின்றன.

**நிலம் மாசடைதல்**

நீர் நிலைகளில் கொட்டப்படாத வீட்டுக் கழிவுகளும் தொழிற்சாலைக் கழிவுகளும் நிலத்தில் போடப்படுகின்றன. அவற்றை மீள் சுழற்சிக்கு உட்படுத்த அல்லது அழிக்க முற்படுகின்றபோது அவற்றுள் பெருமளவான கழிவுகள் உக்குவதில்லை. இவை நில மாசுபாட்டை ஏற்படுத்துகின்றன அதன் விளைவாக நுளம்புகள், ஈக்கள் மற்றும் பூச்சிகள் பெருகி பல விதமான நோய்களை ஏற்படுத்துகின்றன. மண்ணில் சேர்க்கப்படும் சில கழிவுகள் நச்சுத்தன்மையானவையாக மாறுவதும் உண்டு. பயிர்ச் செய்கைகளின் போது பயன்படுத்தப்படுகின்ற இரசாயன வளமாக்கிகள், பீடை கொல்லிகள் மற்றும் களை கொல்லிகளும் மண்ணை மாசுபடுத்துகின்றன.

**ஒலியால் ஏற்படும் மாசுபாடு**

தொழிற்சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்கள் அதிக சத்தத்தை வெளிவிடுகின்றன. வீதிகளில் செல்லும் வாகனங்கள் எழுப்பும் ஒலி, வாண வேடிக்கைகளின் ஒலி மற்றும் ஒலி பெருக்கிகளின் பலத்த சத்தங்கள் கூட ஒலியால் சூழல் மாசுபாடு ஏற்படுவதற்கு காரணமாகின்றன. இது மனிதர்களுக்கு கேட்டல் குறைபாடுகளை ஏற்படுத்துவதுடன் மன அழுத்தம் மற்றும் மூளையின் இயக்கத்தில் மாற்றங்கள் ஏற்படுதல் போன்றவற்றுக்கும் காரணமாக அமைகின்றன.

**ஒளியால் ஏற்படும் மாசுபாடு**

ஒரு குறித்த பிரதேசத்தில் உண்டுபண்ணப்படுகின்ற மேலதிக, பொருத்தமற்ற, தேவையற்ற ஒளியினால் இந்நிலமை தோற்றுவிக்கப்படுகின்றது. இது பார்வைக் கோளாறுகளையும் மன அழுத்தம் போன்றவற்றையும் ஏற்படுத்தும்.

**கதிரியக்க மாசுபாடு**

சூழலுக்கு தேவையற்ற கதிரியக்க பொருட்கள் சேர்க்கப்படுவதன் காரணமாக இது ஏற்படுகின்றது. கதிரியக்க யுத்த ஆயுதங்களின் பரீட்சிப்பு, பாவனை, வெடிப்பு போன்றவற்றின் போதும் கதிரியக்க சக்தி ஆலைகளில் ஏற்படும் விபத்துகள் போன்றவற்றின் போதும் ஆபத்தான கதிர்ப்புகள் சூழலுக்கு வெளிப்படுத்தப்படலாம். இவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையான நீர் வளங்களை மாசுபடுத்துவதுடன் கடுமையான உடலியல் சார்ந்த விகாரங்கள் மற்றும் நோய் நிலைமைகளையும் ஏற்படுத்தும்.

**வெப்ப மாசுபாடு**

நீர் நிலைகளில் ஏற்படும் திடீர் வெப்ப மாற்றங்களை இது குறிக்கின்றது. அந்த மாற்றமானது சூழல் சமநிலையைக் குலைக்கின்றபோது அது பாரிய விளைவுகளை ஏற்படுகின்றது. பல்வேறு தொழிற்றுறைகளில் நீர் ஒரு குளிர்த்தியாகப் பயன்படுத்தப்படுவதன் காரணமாக இந்த நிலை ஏற்படுகின்றது. குளிர்த்தியாகப் பயன்படுத்தப்படும் நீர் நீர் நிலைகளினுள் விடுவிக்கப்படுகின்றபோது அந்த நீர் நிலைகளில் உள்ள ஒக்சிஜனின் அளவு குறைவடைவதாலும் வெப்பநிலை அதிகரிப்பாலும் நீர் வாழ் உயிரினங்கள் அழிவை எதிர்கொள்கின்றன.

**பார்க்கும் பொருட்களால் ஏற்படும் மாசுபாடு**

மனிதனால் உருவாக்கப்பட்ட மனிதனின் பார்வைப் புலனை கஷ்டத்துக்குள்ளாக்குகின்ற அனைத்தும் இந்த வகையான மாசுபாட்டுக்கு காரணமாகின்றன. பாரிய கோபுரங்கள் ஒளியை உமிழும் பெயர்ப்பலகைகள், குப்பைக் கூடைகள், வடங்கள், வாகனங்கள் மற்றும் கட்டடங்கள் போன்றவை இந்த வகையினுள் அடங்குகின்றன. திட்டமிடப்படாத மற்றும் ஒழுங்கு படுத்தப்படாத நிர்மாணிப்புகள் இந்த வகையில் உள்ளடங்கி கண் களைப்படைதல் மன அழுத்தம் போன்றவற்றை ஏற்படுத்தும்.

உலகில் சில நகரங்கள் சூழல் மாசுபாட்டின் அளவைக் கட்டுப்பாட்டினுள் பேணுகின்ற அதே வேளை மற்றும் சில நகரங்கள் சூழல் மாசுபாட்டின் ஆபத்தான விளைவுகளை அனுபவிக்கும் நிலையில் உள்ளன. புது டில்லி, வாரணாசி, செர்நோபில், பீஜிங், கராச்சி மொஸ்கோ போன்ற நகரங்கள் அதிக அளவில் மாசுபட்டவையாக உள்ளன. இந்த நகரங்களில் நிலம், நீர் மற்றும் வளி மிக அதிகமாக மாசுபடுத்தப்பட்டுள்ளன. இந்த நகரங்களில் மக்களின் வாழ்க்கை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மக்களினதும் அந்த நாட்டு அரசுகளினதும் அசமந்தப் போக்கே இதற்குப் பிரதான காரணம் ஆகும்.

**சூழல் மாசுபாட்டைக் குறைப்பதற்கான வழிமுறைகள்**

வாகனப் புகை வளி மாசடைதலுக்கான பிரதான காரணமாக உள்ளது. வீதிகளில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது சூழல் மாசுபடும் அளவும் அதிகரிக்கும். எனவே ஒரே வாகனத்தில் பலர் சேர்ந்து பயணித்தல், பொதுப் போக்குவரத்து வசதிகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தல், சிறிய தூரங்களுக்கு துவிச்சக்கர வண்டிப் பயன்பாடு மற்றும் நடத்தல் போன்றன பொருத்தமான விடயங்கள் ஆகும்.

புது வருடப் பிறப்பு, தீபாவளி, நத்தார் மற்றும் ஆலயத் திருவிழாக்களின் போது பட்டாசுகள் கொளுத்துவதால் அதிகளவில் வளி மாசடைவதுடன் ஒலி மூலமாகவும் சூழல் மாசுபடுத்தப்படுகின்றது. இது சிறு பிள்ளைகள் முதியோர் மற்றும் மிருகங்களை அதிமாக தொல்லைப்படுத்தும் விடயமாகவும் உள்ளது. தேவையற்ற சூழல் மாசுபாட்டைக் குறைக்க நாம் பொறுப்புள்ள பிரஜைகளாக செயற்படுவதற்கு பட்டாசுகள் கொளுத்துவதை நாம் நிறுத்த வேண்டும்.

பிளாஸ்டிக் கழிவுகளும் ஏனைய உக்காத பொருட்களும் நீர் மற்றும் நில மாசுபாட்டை ஏற்படுத்துகின்றன. அவற்றைத் தவிர்ப்பதன் மூலம் இந்தப் பிரச்சனையைக் குறைக்க முடியும். நாம் அவற்றைப் பயன்படுத்துகின்றபோது பாவனை முடிந்த பின் அவற்றை வீசிவிடக் கூடாது. அவற்றை அகற்ற முன்னர் பல தடவைகள் அவற்றைப் பயன்படுத்த வேண்டும். பின்னர் மீள் சுழற்சிக்காக அவற்றை அனுப்பவும் நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நீர் நிலைகளினுள்ளோ, நிலத்தில் அங்கும் இங்குமோ குப்பைகளை வீசி எறியாமல் அவற்றை பொருத்தமான குப்பைத் தொட்டிகளில் இடவேண்டும்.

பூச்சிகொல்லிகள், பீடை கொல்லிகள், இரசாயன வளமாக்கிகள் மற்றும் பலமான இரசாயனப் பொருட்களின் பயன்பாட்டை வரையறை செய்ய வேண்டும். பூச்சிகளை விரட்டவும் மண்ணை வளப்படுத்தவும் இயற்கை முறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

அதிக அளவில் மரங்களை நடுவதன் மூலம் அவை கார்பன் டை ஒக்சைடு, கார்பன் மொனோ ஒக்சைடு போன்ற வாயுக்களை உறிஞ்சி ஒக்சிஜனை அதிக அளவில் வெளிவிடும். மரங்கள் வளி மாசுபடுவதை குறைப்பதுடன் பூமியின் வெப்ப நிலை சடுதியாக அதிகரித்துச் செல்வதையும் குறைக்கின்றன.

கழிவு உணவுப்பொருட்கள் இலைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி செய்வது மிகவும் சிறந்த முறையாகும்.

வீடுகளிலும் நகரங்களிலும் அதிக தேவையற்ற ஒளியூட்டலைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். பொது இடங்களில் அதிக பிரகாசமான ஒளியூட்டலையும் தவிர்க்க வேண்டும்.

கதிர் தொழிற்பாட்டு பதார்த்தங்கள் பயன்படுத்தப்படுவது முழுமையாக தவிர்க்கப்படுத்தல் நன்று. அத்தியாவசிய தேவை கருதி அவை பயன்படுத்தப்பட்டால் அவை தொடர்பாக அதிக கவனம் எடுக்கப்படல் வேண்டும். அணுவாயுதங்கள் போன்றவற்றின் பயன்பாட்டை அரசுகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இயற்கை வளங்களைப் பயன்படுத்துகின்ற தொழிற்சாலைகள் சூழலுக்கு அவை ஏற்படுத்தும் அழிவு தொடர்பாக பொறுப்புக்கூறக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியவையாக இருக்க வேண்டும். நீரைக் குளிர்த்தியாகப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள் அவற்றை நீர் நிலைகளில் சேர்க்கும்போது நீரை சாதாரண வெப்பநிலைக்கு கொண்டு வந்த பின்னரே நீர் நிலைகளில் சேர்க்க வேண்டும்.

முன்னர் எப்போதும் இல்லாத வேகத்தில் நிர்மாண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. திட்டமிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத நிர்மாணிப்புகள் பார்வை தொடர்பான மாசுபாடுகளை ஏற்படுத்துவதுடன் நிலம், நீர் மற்றும் வாயு மாசுபாடுகளையும் ஏற்படுத்துகின்றன.

நாளுக்குநாள் எமது சூழல் அழிவடைந்து கொண்டிருக்கின்றது. வாழ்வதற்கு மேலும் சிறந்த இடமாக இந்த உலகை மாற்றுவதற்கு மேலே விபரிக்கப்பட்ட முறைகளைப் பின்பற்றி சூழல் மாசுபாட்டின் அளவைக் குறைப்பது நாம் ஒவ்வொருவரும் பொறுப்புடன் மேற்கொள்ள வேண்டிய விடயம் ஆகும்.

## Strategies for Building Positive Classrooms

1. Making learning relevant
2. Creating a classroom code of conduct
3. Teaching positive actions
4. Instilling intrinsic motivation
5. Reinforcing positive behaviours
6. Engaging positive role models
7. Always being positive

→ வாழ்க்கை என்பது குறைவான தகவல்களை வைத்துக்கொண்டு சரியான முடிவுக்கு வரும் ஒரு கலை.

→ முழுமையான மனிதர்கள் இருவர். ஒருவர் இன்னும் பிறக்கவில்லை. மற்றவர் இறந்துவிட்டார்.

→ எல்லோரையும் நேசிப்பது சிரமம். ஆனால் பழகிக்கொள்ளுங்கள்.

→ தோல்வி ஏற்படுவது அடுத்த செயலைக் கவனமாகச் செய் என்பதற்கான எச்சரிக்கை.

→ கடினமான செயலின் சரியான பெயர்தான் சாதனை. சாதனையின் தவறான விளக்கம் தான் கடினம்.

→ சாப்பிடுவதிலும், நடமாடுவதிலும், தூங்குவதிலும், விழித்திருப்பதிலும் அளவாக இருப்பவன் துன்பம் இல்லாமல் இருப்பான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைகளில் தீர்மானங்களை எடுத்தல்

திருமதி ர. ஜெயதரன், ஆசிரியை

பாடசாலை என்பது சேவைத்துறை வழங்கும் ஒரு முக்கிய நிறுவனம் ஆகும். அதை முகாமை செய்பவர் அதிபர் ஆவார். எனவே ஒரு அதிபரானவர் ஒரு முகாமையாளர் என்ற ரீதியில் பல பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

1. உற்பத்தித் திறனை விருத்தி செய்தல்: மனித நேயமும் சூழல் நேயமும் கொண்ட சிறந்த ஆளுமையுடன் கூடிய நற்பிரஜைகளை உருவாக்குவதும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளச் செய்வதும் பாடசாலையின் உற்பத்தியாக கருதப்படுகின்றது. இதை விருத்தி செய்து கொண்டு போவது அதிபரின் பொறுப்பாகின்றது.
2. நுகர்வோர் திருப்தி: பெற்றோர், மாணவர்கள், சமூகத்தவர் போன்ற அனைவரும் பாடசாலை தனது சேவையை திறம்பட மேற்கொள்கின்றது என்ற நம்பிக்கையை அதிபர் ஏற்படுத்த வேண்டியுள்ளது.
3. புதிது புனைதல்: புதிய நுட்பங்களை புகுத்தி பாடசாலையின் இலக்கை நோக்கி மாணவர்கள், ஆசிரியர்களை அதிபர் நகர்த்த வேண்டியுள்ளது.
4. சமூகப் பொறுப்புகள்: சமூகத்திற்கு வழி காட்ட வேண்டிய பொறுப்பும் சமய, கலை, கலாசார நிகழ்வுகளில் பங்களிப்பு செய்ய வேண்டியதும் சூழல் பாதுகாப்பு, தொழில் வழிகாட்டல், சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகள், அனர்த்த முகாமைத்துவ நிலைமைகளில் பங்களிப்பு செய்ய வேண்டியதும் பாடசாலையின் சமூகப் பொறுப்புகள் என்ற வகையில் அதற்கேற்றவாறு பணியணியினரையும் மாணவர்களையும் வழி நடத்த வேண்டியது அதிபரின் பொறுப்பாகின்றது.

இவ்வாறான பொறுப்புகளை நிறைவேற்றி பாடசாலையின் இலக்கு நோக்கிய பயணத்தை மேற்கொள்ள வினைத்திறன் , விளைதிறன் வாய்ந்த வழியில் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமாயின் பல முக்கிய தீர்மானங்களை அதிபர் அடிக்கடி எடுக்க வேண்டியவராகின்றார். பொருத்தமான தீர்மானங்களை பொருத்தமான நேரத்தில் பொருத்தமான விதத்தில் மேற்கொள்வது வெற்றி நோக்கிய பயணத்தை இலகுவாக்கும். சிறந்த தீர்மானங்களை எடுத்து நடைமுறைப் படுத்தி வெற்றி இலக்குகளை அடைபவர்களே சிறந்த முகாமையாளர்கள் எனப்படுகின்றனர். சில ஆபத்தான வேளைகளில் மிக அவசர தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டியிருக்கும். ஆபத்தற்ற வேளைகளில் உடனடி தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியதில்லை. ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சனையைத் தீர்ப்பதற்கான பல மாற்று வழிகளில் இருந்து ஒரு மிகச்சிறந்த வழியைத் தெரிவு செய்வதே தீர்மானம் மேற்கொள்ளல் ஆகும். தீர்மானம் எடுத்தல் எதிர் காலத்துடன் தொடர்புடையது. அது பல மாற்று வழிகளுடன் தொடர்புடையது. தீர்மானம் எடுப்பதில் ஆபத்துகள் (risks) உண்டு. தீர்மானங்கள் எடுக்கும்போது தவறுகள் ஏற்படுவதற்கான சாத்தியங்களும் உண்டு. அத் தவறுகள் பாடசாலைக்கு பின்னடைவுகளையும் ஏற்படுத்தும். இவற்றைக் கருத்தில் கொண்டு தீர்மானம் எடுத்தல் மிகவும் கவனமாக மேற்கொள்ளப்படவேண்டிய செயன்முறையாக உள்ளது.

தீர்மானம் எடுத்தல் பல படிமுறைகளைக் கொண்டது.

1. விடயம் தொடர்பாக உண்மையான பிரச்சனையை அடையாளம் காணல்.
2. பிரச்சனைகளுக்கான காரணங்களை கண்டறிதல்.
3. பிரச்சனையை தீர்க்க பல்வேறு மாற்று வழிகளை உருவாக்குதலும் அந்த வழி முறைகளை கவனமாகப் பரிசீலித்து சாதக பாதகங்களைப் பட்டியலிடுதலும்.
4. சிறந்த மாற்று வழியைத் தேர்வு செய்தல்.
5. தெரிவு செய்யப்பட்ட மாற்று வழியைப் பின்பற்றுதல்.

**தீர்மான வகைகள்**

நிகழ்ச்சி தீர்மானமும் நிகழ்ச்சியற்ற தீர்மானமும்: ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட வழிமுறைகள் கொள்கைகளுக்கு ஏற்ப எடுக்கப்படும் தீர்மானம் நிகழ்ச்சி தீர்மானம் (programmed decision) ஆகும். அரசினால் வழங்கப்படும் சுற்றுநிருபங்கள் மற்றும் அறிவுறுத்தல் கையேடுகளுக்கு அமைய நிகழ்ச்சித் தீர்மானம் எடுக்கப்படும். உதாரணம்: பாடசாலைக்கு தரம் ஒன்றுக்கு மாணவர்களைச் சேர்த்தல். ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட வழிமுறைகள் கொள்கைகளுக்கு உட்படாது எடுக்கப்படும் தீர்மானம் நிகழ்ச்சியற்ற தீர்மானம் (non-programmed decision) ஆகும். உதாரணம்: பொதுப் பரீட்சைகளில் மாணவரின் அடைவு மட்டத்தை அதிகரிக்க மேற்கொள்ளப்படவுள்ள செயற்றிட்டம் ஒன்று தொடர்பான தீர்மானம். நிகழ்ச்சியற்ற தீர்மானங்களை மேற்கொள்ள பல மாற்று வழிமுறைகளைக் கண்டறிந்து அவற்றுள் சிறந்த ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டும்.

தனியாள் தீர்மானமும் தொகுதித் தீர்மானமும்: அதிபர் அல்லது விடயத்துடன் தொடர்புடையவர்களில் ஒருவர் மாத்திரம் ஒரு குறிப்பிட்ட நிலையில் தன்னிடம் உள்ள தகவல்களைக்கொண்டு தீர்மானம் எடுக்கும் செயன்முறை தனியாள் தீர்மானம் (individual


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

decision) ஆகும். இது விரைவாக மேற்கொள்ளப் படக் கூடியதாய் இருந்தாலும் அதிக மற்று வழிகளைத் தோற்றுவிக்க முடியாமல் போவதுடன் தனி நபரின் விருப்பு வெறுப்புகளுக்கும் இடமளிக்கப்படலாம். இந்த முறையில் தீர்மானம் எடுப்பவர் தவிர்ந்த ஏனைய பணியணியினரின் தன்னிச்சையான பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதும் கடினமானதாக அமையும். எனவே அதிபர் ஏனைய பணியணியினரையும் இணைத்து தீர்மானம் எடுத்தல் சிறந்தது. அது தொகுதி தீர்மானம் ஆகும் (group decision). நிகழ்ச்சியற்ற தீர்மானங்களை தொகுதித் தீர்மானங்கள் மூலம் எடுத்தல் சிறந்ததாய் அமைய வாய்ப்புள்ளது. தொகுதித் தீர்மானங்கள் எடுப்பதில் பல நன்மைகள் உள்ளன.

1. பல மாற்று வழிகள் தோற்றுவிக்கப் படலாம்.
2. தொகுதி தீர்மானம் எடுக்கும்போது பணியணியினர் அனைவரும் risk எடுப்பதற்கு தயாராய் இருப்பார்கள்.
3. பிரச்சனை சிக்கலாயும் பெரிதாயும் அமையும் சந்தர்ப்பங்களில் தனியாள் அதைக் கையாள்வதை விட ஒரு தொகுதியினர் அதனைக் கையாள்வது இலகு.
4. இதில் பலர் பங்கு கொள்வதால் பக்கச் சார்பிறகான சாத்தியம் குறைவாக காணப்படும்.
5. ஜனநாயக தத்துவங்களுக்கு இது மதிப்பளிப்பதால் பணியணியில் உள்ள ஒவ்வொருவரும் தனது கௌரவம் மதிக்கப்படுவதாக உணர்வதுடன் அதிக ஒத்துழைப்பு வழங்கி தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முன்வருவர்.

எனினும் சில குறைபாடுகளும் இதில் உண்டு.

1. காலதாமதம்
2. பொது உடன்பாட்டுக்கு வருவதில் கஷ்ட நிலைகள் உருவாகும்.
3. தீர்மானம் தவறாய் அமையும்போது யார் பொறுப்பு எனக் கண்டு கொள்ள இயலாது.

எனினும் தொகுதித் தீர்மானம் தனியாள் தீர்மானத்தை விடச் சிறந்தது எனற கருத்து பரவலாக உள்ளது. இதன் போது சில நுட்பங்களைப் பயன் படுத்துவதன் மூலம் தீர்மானத்தை சிறந்ததாக ஆக்கிக் கொள்ள முடியும். அவையாவன,

1. மூளையை உருட்டுதல் (brain storming): இதில் ஒரு தொகுதியினர் இணைந்து ஒரு பிரச்சனை தொடர்பாக பல மாற்று வழிகளைத் தோற்றுவிக்க வேண்டப்படுவர். அம் மாற்று வழிமுறைகள் உடனடியாக மதிப்பீடு செய்யப்படுவதில்லை. இதனால் பெருமளவு மாற்று வழிமுறைகள் தோற்றுவிக்கப்பட முடிகின்றது. தோற்றுவிக்கப்பட்ட சகல மாற்று வழிமுறைகளும் இறுதியாக மதிப்பீடு செய்யப்பட்டு இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. டெல்பி நுட்பம்: இதில் தொடர்ச்சியான வினாக் கொத்துகள் நிபுணர்களுக்கு வழங்கப்பட்டு அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களைக்கொண்டு முடிவு பெறப்படுகின்றது.

இதன் வழிமுறை

A. பிரச்சனை அடையாளம் காணப்படுதல்

B. குறித்த பிரச்சனைகள் தொடர்புடைய நிபுணத்துவம் கொண்டவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுடன் தொடர்பு மேற்கொள்ளப்படும்.

C. வினாக்கொத்து தயாரிக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்படும்.

D. பெற்றுக்கொள்ளப் படும் வினாக்கொத்து பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் இரண்டாவது வினாக்கொத்து தயாரித்து அனுப்பப்படும்.

E. இரண்டாவது வினாக்கொத்தில் பெறப்பட்ட தகவல்களைக்கொண்டு அவை தொகுக்கப்பட்டு மூன்றாவது வினாக்கொத்து வழங்கப்படும்.

F. மூன்றாவது வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தகவல்கள் தொகுக்கப்பட்டு இறுதி அறிக்கை தயாரிக்கப்படும்.

இதில் நேர விரயம், நிபுணர்களை அடையாளம் காணல் போன்றன பிரச்சனையான விடயங்கள் ஆகும்.

3. யதார்த்தமாக சிந்தித்தல் (Synoptics)

இதில் குழுவில் உள்ளவர்கள் வழக்கமான முறையில் மாற்று வழிமுறைகளைத் தோற்றுவிப்பதற்கு பதிலாக அவர்கள் பிரச்னையில் தம்மை ஈடுபடுத்தி பங்கேற்று அதனூடாக மாற்று வழிமுறையினை தோற்றுவிக்கும்படி வேண்டப்படுவர்.

## தீர்மானம் எடுத்தலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்

1. புலக்காட்சி (Perception)

ஒருவர் ஒரு குறிப்பிட்ட நிலைமையினை எவ்வாறு விளங்கிக் கொள்கின்றார் அதற்கு எத்தகைய அர்த்தத்தை வழங்குகின்றார் என்பதாகும்.

2. மாறா நிலைப் படுத்தல் (Stereo typing)

வரையறுக்கப்பட்ட சில தனிப்பட்டவர்களின் பண்புகளை முழுத் தொகுதிக்கும் பிரயோகிப்பதை இது குறிக்கும்.

3. அகவய தன்மை (Subjective rationality)

ஒருவர் ஒரு விடயம் தொடர்பில் கொண்டுள்ள தனிப்பட்ட கருத்துநிலை. உதாரணம்; ஓர் பாடசாலையில் கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பாக இருக்கின்ற ஒரு பிரதி அதிபர் இணைப் பாட விதான செயற்பாடுகளுக்கு (விளையாட்டு, கலை நிகழ்வுகள்) ஒதுக்கப்படும் நேரம் விரயமானது எனக் கருதுதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. போதிய தகவல் இன்மை (Lack of information)
தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை தொடர்பான தகவல்கள் தேவையான அளவில் இல்லாதிருத்தல்
5. மிக அதிகளவான தகவல்கள் (Too much information)
தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை தொடர்பாக தேவைக்கதிகமான தகவல்கள் இருத்தல் குழப்ப நிலையைத் தோற்றுவிக்கும்.

பிரச்சனை தொடர்பான சகல தகவல்களையும் பெற்று பகுத்தறிவான தீர்மானம் எடுக்கும் செயன்முறைக்கு உட்படுத்தி உத்தம தீர்மானத்தினை மேற்கொள்வது சிறந்தது. எனினும் நேர வரையறை, தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் உள்ள கடினத்தன்மை, வளங்களின் கிடைப்பனவு போன்றன உத்தம தீர்மானத்தினை எடுப்பதற்கு தடைகளாக அமையும். இந்த நிலையில் உத்தம தீர்மானத்துக்கு அடுத்ததாக அமைகின்ற திருப்தி தரும் தீர்மானத்தினை எடுக்க வேண்டி ஏற்படலாம். தீர்மானம் மேற்கொள்வதில் உள்ள அனைத்து நுட்பங்களையும் அதிபர் அறிந்து கொள்வதுடன் மாணவர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள், நிபுணர்கள், கல்வி அதிகாரிகள் என பல தரப்பினரையும் உள்வாங்கி தீர்மானங்களை எடுத்தல் பாடசாலை ஒன்றின் விருத்திக்கு துணையாய் அமைவதுடன் சில தருணங்களில் தனியாகவும் தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலைமைகளில் பொருத்தமான தீர்மானங்களை எடுத்து பாடசாலையின் வளர்ச்சியை மேம்படுத்த வேண்டியுள்ளது.

சில ஆசிரியர்கள் தந்திரோபாயத் திட்டமிடலில் வல்லவர்களாகவும் சிறந்த தீர்மானங்களை மேற்கொள்வதில் சிறந்தவர்களாகவும் கல்வியியல் துறையில் நிபுணத்துவம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். அவ்வாறானவர்கள் தாம் சிறந்த விடயங்களை பாடசாலையின் அபிவிருத்திக்காக முன் வைப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவில்லையே என்ற மன வேதனை கொண்டோராக இருப்பார்கள். அவர்கள் அதிபரின் தன்னிச்சையான தீர்மானங்களை அமுல் படுத்தும் போது தாமாக முன்வந்து உதவ விரும்பாதோராய் இருப்பார்கள். அவ்வாறான சிலர் அதிபரின் தீர்மானங்களில் எங்கெங்கே தவறுகள் உள்ளன எனக் கண்டுபிடித்து மற்றவர்களிடம் விமர்சனம் செய்யும் நிலையிலும் இருப்பார்கள்.

மாணவர்கள் பற்றிய கள நிலவரங்களை அதிபரை விட ஆசிரியர்களே நன்கு அறிந்தோராய் இருப்பார்கள். அவர்களிடம் எந்தக் கருத்துகளும் பெற்றுக்கொள்ளாமல் அதிபர் தீர்மானம் எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்த விளையும்போது ஆசிரியர்கள் பல வித சிக்கல்களுக்கு முகம் கொடுப்பதால் அதிபருடனான அவர்களின் உறவு செம்மையாக இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் தேவைகள் எவை என்பதையும் முன்னுரிமை அடிப்படையில் எவை பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதையும் பற்றிய தெளிவு அனைத்து ஆசிரியர்கள் மத்தியிலும் இருக்காது. இதனால் ஒவ்வொருவரும் தத்தமது துறை சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்ய மட்டுமே விளைவர். அந்த நிலையில் அவர்களுக்குத் தேவையான வளங்கள் கிடைக்காமல் போகும்போது அதிபரைக் குற்றங் காண்பதுடன் வளங்களைப் பெற்றுக்கொண்ட வேறு ஆசிரியர்களுடனும் முரண்பாடுகள் உருவாகும்.

கிடைக்கக்கூடிய வளங்களின் அளவு என்ன என்பது அனைத்து ஆசிரியர்களும் திட்டமிடலில் பங்கு கொள்ளும்போதே தெரிய வரும். இங்கு அவ்வாறு நடைபெறவில்லை என்பதால் அதிபர் பாடசாலைச் சொத்துகளை களவாடுவதாகக் கூட சில ஆசிரியர்கள் நினைக்கக்கூடும்.

தம்மால் உருவாக்கப்படாத தீர்மானங்களுக்கு தாம் பொறுப்பல்ல என்ற மனநிலை ஆசிரியர்களிடம் உருவாகும். அமுல் படுத்தும்போது ஏற்படும் தவறுகளுக்குக்கூட அதிபரையே அனைவரும் குற்றம் சுமத்தக்கூடிய சூழ்நிலை உருவாகும். திட்டமிட்டவரே தவறுகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும் என்ற மன நிலையும் சில ஆசிரியர்கள் மத்தியில் நிலவும்.

தம்மால் உருவாக்கப்படாத தீர்மானங்களை தாம் முழு மூச்சுடன் அமுல்படுத்த வேண்டிய தேவையில்லை என்று சில ஆசிரியர்கள் நினைப்பார்கள்.

பாடசாலை நிர்வாகத்தில் தாமும் உயிரோட்டமுள்ள பங்களிப்பாளர்களாக இல்லையே என்ற மனக்குறையும் மாணவர்களின் நலனுக்காக தம்மால் சேவை செய்யக்கூடிய சூழ்நிலை இல்லையே என்ற ஏக்கமும் சில ஆசிரியர்கள் மத்தியில் எழும். அந்த நிலை காலப்போக்கில் அவர்களின் செயற்படு திறனையும் குறைக்கும்.

நழுவல் போக்கு கொண்ட ஆசிரியர்களுக்கு அதிபரே திட்டமிடலை தனித்து மேற்கொள்வதால் நிம்மதி ஏற்படுவதுடன் அதிபரின் திட்டங்களை அப்படியே அமுல்படுத்தக் கூடிய சூழல் இல்லை என்பதற்கான காரணங்களை தேடுவதில் அவர்கள் காலத்தைச் செலவிடுவரே அன்றி திட்டத்தை அமுல்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படமாட்டார்கள்.

**பாடசாலை அதிபர் வளர்த்துக் கொள்ளக் கூடிய திறன்கள்**

பாடசாலையில் ஆசிரியர்களுக்கிடையேயும் ஆசிரியர்களுக்கும் அதிபருக்கிடையிலும் சிறந்த நல்லுறவைக் கட்டியெழுப்ப வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபரானவர் ஏனைய பணியாளர்களின் திறன்கள் அறிவு என்பவற்றிலும் நம்பிக்கை கொண்டவராக இருப்பதுடன் மற்றவர்களிடம் இருந்து வருகின்ற சிறந்த கருத்துகளைப் பரிசீலித்து அவற்றையும் திட்டமிடலின் போது உள்வாங்கிக்கொள்ள வேண்டும்.

அனைத்துப் பணியணியினருக்கும் கடமைகளைப் பொருத்தமானவாறு பிரித்துக் கொடுப்பதுடன் அவர்கள் தமது கடமைகளை செவ்வனே செய்ய அவர்களுக்கு உதவவும் வேண்டும்.

அதிகாரக் கையளிப்பை பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஊழியரிடலில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.ஒவ்வொரு பணிக்கும் மிகப் பொருத்தமானவரை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

வளங்களையும் வெவ்வேறு நபர்களையும் நன்கு ஒருங்கிணைத்து இலக்கு நோக்கி முன்னேற வேண்டும்.

கண்காணிப்பு நடைமுறைகளை நன்கு கட்டமைத்துக்கொள்ள வேண்டும்.

திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது ஏற்படும் பின்னடைவுகளை உடனுக்குடன் கண்டறிந்து அவற்றிற்கான காரணங்களை துல்லியமாக அறிந்து கொள்வதுடன் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான தந்திரோபாய நடைமுறைகளை கண்டுகொள்ள வேண்டும்.

சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பாடசாலையில் கட்டியெழுப்ப வேண்டும்.

ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடுகளை நன்கு திட்டமிட்டு அமுல்படுத்துபவராக இருக்கவேண்டும்.

### *Qualities of a good teacher*

*A great teacher is one a student remembers and cherishes forever. Teachers have long-lasting impacts on the lives of their students, and the greatest teachers inspire students toward greatness. To be successful, a great teacher must have:*

1. *An Engaging Personality and Teaching Style*

*A great teacher is very engaging and holds the attention of students in all discussions.*

2. *Clear Objectives for Lessons*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*A great teacher establishes clear objectives for each lesson and works to meet those specific objectives during each class.*

3. *Effective Discipline Skills*

*A great teacher has effective discipline skills and can promote positive behaviors and change in the classroom.*

4. *Good Classroom Management Skills*

*A great teacher has good classroom management skills and can ensure good student behavior, effective study and work habits, and an overall sense of respect in the classroom.*

5. *Good Communication with Parents*

*A great teacher maintains open communication with parents and keeps them informed of what is going on in the classroom as far as curriculum, discipline, and other issues. They make themselves available for phone calls, meetings, and email.*

6. *High Expectations*

*A great teacher has high expectations of their students and encourages everyone to always work at their best level.*

7. *Knowledge of Curriculum and Standards*

*A great teacher has thorough knowledge of the school's curriculum and other standards they must uphold in the classroom. They ensure their teaching meets those standards.*

8. *Knowledge of Subject Matter*

*This may seem obvious, but is sometimes overlooked. A great teacher has incredible knowledge of and enthusiasm for the subject matter they are teaching. They are prepared to answer questions and keep the material interesting for the students.*

9. *Passion for Children and Teaching*

*A great teacher is passionate about teaching and working with children. They are excited about influencing students' lives and understand the impact they have.*

10. *Strong Rapport with Students*

*A great teacher develops a strong rapport with students and establishes trusting relationships.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலகம்

திருமதி ஜெ. சொல்வேந்தன், ஆசிரியை

அகிலமதில் அனைவருக்கும்
அறியாமை இருளினை அகற்றியே
அறிவொளியினை வழங்கிடும் - வளாகம் நீ
ஆரம்பக் கல்வி முதல் பல்கலைகழகம் வரை
மாணவர்கள் ...........
பல் பாங்கான புத்தகங்களை-
உன்னிடம் கண்டனரே
அரசியல் வாதிகளுக்கும் -
அரடடை அடிப்போர்க்கும்.......
பத்திரிகைப் பெண்ணாய் - என்றும்
பயன் கொடுப்பாய் - நீ

சிறுகதை நாடுவோர்;
கவிதை வாசிப்போர்;
கட்டுரை தேடுவோர்;
எத்தரப்பினருக்கும் தேவையறிந்தே
வகைவகையாக புத்தகமாய்
நிறைந்துள்ளாய் வாசிகசாலை பூராகவும்
பேராசிரியர், கலாநிதி....
எழுது வினைஞர், எழுத்தாளர் - என
பல பதவிகளில் உயர்வு கண்டோர்
உன்னால் தானே

சாதி வேறுபாடு, உயர்வு தாழ்வு பாராய்
சமத்துவம் வளர்த்திடும் ஓர் - அரங்கம் நீ
உன்னை நாடுவோர்,
உலகில் ஏற்றம் கண்டிடுவார்
நீ வாழ்க....
நின் சேனை வளர்க.......

வயிறுமுட்ட சாப்பிடுகிறவனுக்கு யோகம் கிட்டாது. அதுபோல, எப்பொழுதும் உண்ணாமல் இருப்பவனுக்கும், காலநேரமின்றி தூங்குகிறவனுக்கும், விடிய, விடிய விழித்துக்கொண்டிருப்பவனுக்கும் யோகம் கிட்டுவதில்லை.

- சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூல் நிலையம்

யோ. சதுர்ஜா, தரம் - 7

கல்விக்கு அடித்தளம் பாடசாலை. அங்கு பெறும் அறிவை பல்வேறு துறைகளிலும் நாம் வளர்த்துக்கொள்ள பெரும் துணையாய் இருப்பது நூலகமாகும். நாம் கற்க விரும்பும் அனைத்து நூல்களையும் விலை கொடுத்து வாங்கிவிட இயலாது. பல்கலை அறிவு பெறச் சிறந்த இடம் நூலகமாகும். நூல்கள் பல திரட்டப்பட்டு, தொகுத்து வைக்கப்பட்டுள்ள ஓர் இடத்தை 'நூலகம்' என்று நாம் அழைக்கிறோம். எமது உள்ளமானது அன்பு உள்ளமாக, பரந்த உள்ளமாக, பக்குவப்பட்ட உள்ளமாக, பகுத்தறிவு பெற்ற உள்ளமாக, தன்னலம் சுருங்கிப் பொதுநலம் விழையும் உள்ளமாக, எல்லாரும் ஒரு குலம்; எல்லாரும் ஓரினம் என்று எண்ணும் சமத்துவ உள்ளமாக மலர வழிவகுப்பது நூலகம் ஆகும். கிணற்றுக்கு வெளியே உலகமே இல்லை என்று எண்ணும் கிணற்று தவளையாக உலா வராமல் மாணவர்களுக்கு, உலகைக் காட்டும் கண்ணாடியாக நிற்பது நூலகமேயாகும்.

நீரின்றி அமையாது உலகு. நல்நூல்கள் இன்றி அமையாது அறிவார்ந்த உலகு. இதை உருவாக்குவதில் நூலகங்களின் பங்கு மகத்தானது. ஆறு இல்லாத ஊர் மட்டுமல்ல நூலகம் இல்லாத ஊரும் பாழானதே. ஆலயம் இல்லாத ஊரில் மட்டுமல்ல நூலகம் இல்லாத ஊரிலும் குடியிருக்க கூடாது. நூலகங்கள் நம் அறிவின் மிகப் பெரிய தேடல் வெளி. நல்ல நிலத்தில் பயிர்கள் செழித்து வளர்வது போல நல்ல நல்ல நூல்களை நாம் தேடிப்படிக்கும் போது நம் மனம் வளம் பெறும். தனி மனம் வளம் பெறும் போது சமூகம் வளம் பெறும். தியானத்திற்கு ஈடானது நூல் வாசிப்பு.

பாடசாலை நூலகங்கள், கல்லூரி நூலகங்கள், பல்கலைக்கழக நூலகங்கள், ஆராய்ச்சி நூலகங்கள், சிறப்பு நூலகங்கள், தேசிய நூலகங்கள், ஆய்வு நூலகங்கள், சிறுவர் நூலகங்கள, பொது நூலகங்கள், நடமாடும் நூலகங்கள் எனப் பல வகை உண்டு. மாணவர்கள் ஓய்வு நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்தி தங்கள் அறிவை வளர்த்துக்கொள்வதற்காக பாடசாலைகளில் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பல துறைகளிலும் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு பயன்படும் வகையில் நூல்நிலையங்கள் பல்கலைக்கழகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. பெரிய நகரங்களில் சிறுவர்கள் பயன்படுத்தும் சிறுவர் நூலகங்கள் உள்ளன. நம் நாட்டில் கிராமம் முதல் நகர்ப்புறங்கள் வரை நூலகங்கள் இருக்கின்றன. பொது மக்கள் அனைவரும் தாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பும் நூல்கள், செய்தித்தாள்கள், வார ஏடுகள் போன்றவற்றை படிப்பதற்காக சிறிய கிராமங்கள், நகரங்கள் மாநகரங்கள் அனைத்திலும் பொது நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஊர்திகளை நூலகமாக்கி பெரும் நகரங்களில் வீதி வீதியாகச் சென்று விரும்பும் நூல்களைத் தந்துதவும் நடமாடும் நூல் நிலையங்களும் உள்ளன. இருப்பினும் அவற்றைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருகிறது. எமது நாட்டில் அநேக பாடசாலைகளில் மாணவர்களும் ஆசிரியர்களும் படித்துப் பயனடையும் வகையில் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நூலகங்கள் காற்றோட்ட வசதியுடன் பலரும் வந்து அமர்ந்து படிக்க வசதியாக அமைக்கப்பட்டிருக்கும். அங்கு நூல்கள் கதை, வரலாறு, கட்டுரை, கவிதை, இலக்கியம், கணிதம், பொருளாதாரம், அறிவியல், அரசியல் என்று பல்வேறு வகைகளாக தனித்தனியே பிரிக்கப்பட்டு எண் இடப்பட்டு, பட்டியற்படி வரிசையாக எழுதி இலகுவாக எடுக்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும்.

அமெரிக்காவில் உள்ள 'லைப்ரரி ஆப் காங்கிரஸ்' நூலகமே உலகின் மிகப் பெரிய நூலகமாகும். 1800-ல் தொடங்கப்பட்ட இந்நூலகத்தில் சுமார் 6 கோடி கையெழுத்துப் பிரதிகள், லட்சக்கணக்கான நூல்களும், ஒலி- ஒளி நாடாக்களும் உள்ளன. இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் உள்ள போட்லி நூலகமே உலகின் மிகப்பெரிய பல்கலைக்கழக நூலகமாகும்.

நூலகத்தில் அறிவை வளர்க்கக்கூடிய பலதரப்பட்ட விஷயங்களை நாம் அறிந்து கொள்ளலாம். நமது ஆராய்ச்சிக்குத் தேவைப்படும் விஷயங்களும் அங்கு கிடைக்கும். மேலும், நமது மொழி வளத்தைப் பெருக்குவதற்கும் வாசிப்பைச் சரளமாக்குவதற்கும் நூலகம் முக்கிய பங்கை வகிக்கிறது.

"நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என்று ஔவையார் கூறியுள்ளார். நாம் எவ்வளவு படிக்கிறோமோ அந்த அளவிற்கு நமது அறிவு வளர்ச்சியடையும். அதற்கு முதுகெலும்பாகத் திகழ்வது நூலகமே.

தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் நூலத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, மாணவர்களாகிய நாமும் நூலகம் தரும் பயன் அறிந்து அங்கு நூல் பல கற்று அறிவை வளர்த்துக் கொள்வோம்.

ஒரு மாணவன் நூலகம் சென்று பாட நூல்களோடு பிறநூல்கள், மாத இதழ்கள், நாளிதழ்கள் ஆகியவற்றை கற்று வந்தால் நிச்சயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பல்துறை அறிவுடைய சிறந்த மாணவனாக வருவான். வளர்ச்சி என்பது படிப்படியாக நிகழக்கூடிய ஒன்று. ஒரு பயிர் முறையாக பராமரிக்கப்பட்டு வந்தால் மட்டுமே அது நல்ல முறையில் வளர்ந்து பலன் கொடுக்கும். அதுபோல மாணவர்களின் வளர்ச்சியும் சீராக அமைந்து உரிய பலன் கிடைக்க நூல்களை படிப்பதை அன்றாடப் பணியாகக் கருத வேண்டும்.

நூலகத்தில் நாம் உறுப்பினர்களாக சேர்ந்தால் நாம் விரும்பிய நூல்களை எடுத்துச்சென்று படித்து விட்டு குறிப்பிட்ட நாளில் கொண்டு சென்று நூலகரிடம் ஒப்படைக்கலாம். நூலகம் பலரும் படிக்கும் இடமாகையால் அங்கு நாம் அமைதி காத்தல் வேண்டும். நூல்கள் கிழியாமல் அவற்றைக் கவனமாக பயன்படுத்த வேண்டும். நூலகங்களைப் பேணிப் பாதுகாப்பது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். நூலகப் புத்தங்களில் குறிப்புகள் எழுதுவதோ தாள்களை மடிப்பதோ, கிழிப்பதோ, எச்சில்தொட்டு புரட்டுவதோ கூடாது. ஒரு மலரைக் கையாள்வது போல் மென்மையாகக் கையாள வேண்டும்.

நூலகங்கள் அறிவுச் சுரங்கங்கள். அவை மென்மேலும் எமது அறிவை வளர்த்துக்கொள்ள உதவுகின்றன. பள்ளி மாணவர்கள், தாம் பாடநூலில் கற்றவை தொடர்பான,பிறசெய்திகளைஅறிந்துகொள்ளநூலகம் பயன்படுகிறது. மாணவர்களுக்கு விரிவாகச் சொல்ல வேண்டிய செய்திகளின் விளக்கம், திட்பம், நுட்பம், ஆகியவற்றைக் காண, ஆசிரியர் பள்ளி நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நூலகப் படிப்பால், மாணவர்கள் அறிவு, ஆற்றல், பண்பாடு சிறக்கும். கல்வி, பலவகைத் திறன்கள், கலை, இலக்கியம், பண்பாடு, அறிவியல், சமுதாயம், ஆன்மீகம், அரசியல், இயல், இசை, நாடகம், விளையாட்டு முதலானவை பற்றிய அன்றாட அறிவு வளர்ச்சிக்குப் பள்ளி நூலகம் பெரிதும் பயன்படும்.

'தகவல் மையம்' என்று பாராட்டப்படும் நூல்நிலையம் வாயிலாக, மாணவர்கள் பல்வேறு தகவல்களையும் ஒரே இடத்தில் அறிந்து, திரட்டிப் பன்முக அறிவுபெறப் பள்ளி நூலகம் பயன்படுகிறது. 'ஆபத்து இல்லாத ஒரு நல்ல நண்பன் நூல்' என்பதற்கு ஏற்ப, சிறந்த நண்பனாகத் திகழும் நூல்களோடு மாணவர்கள் தொடர்புகொண்டு, பயனுள்ள முறையில் பொழுதுபோக்கத் துணை செய்வது பாடசாலை நூலகம்.

'மாந்தர் மனக் கோட்டம் தீர்ப்பது நூல்' என்பதற்கு ஏற்ப கோணல் மாணலான உள்ளங்களைச் சீர்படுத்திச் செம்மைபெறச் செய்யும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களின் தொகுப்புக் களஞ்சியமான நூல்நிலையம் 'அறிவாலயமாகவும்' அன்பு மணம் கமழும் அறிவு மாலர்ச் சோலையாகவும் விளங்குகிறது. "நூல் பல கல்" என்ற முது மொழிக்கேற்றபடி அதிக நூல்களைக் வாசிக்க நமக்கு உதவுவன நூலகங்கள். இங்கு மக்கள் அதிகம் வரவர நாட்டில் அறிவு வளரும். அறியாமை ஒழியும். பொருளாதாரம் உயரும். எமது நாடு தலைசிறந்த நாடாக மேன்மை அடைய முடியும். "நல்ல நூல்களே நல்ல நண்பர்கள்" என்பதற்கமைய நாம் நூல்களை நட்பாக்கிக் கொள்ள நூலகங்கள் உதவுகின்றன.

நாட்டின் உயிர்நாடி போன்ற நூலகங்களை நாம் அனைவரும் தவறாது பயன்படுத்திக் கொள்ளுதல் அவசியம். நாம் நுண்ணறிவு பெற நூலகம் தேவை. நூலகங்கள் பெருகட்டும், அறியாமை விலகட்டும்.

ஆங்கிலத்தில் Today's reader is tomorrow's leader என்பார்கள். இன்று அதிகம் வாசிப்பவர்கள் நாளைய தலைவர் ஆவர். இசை கேட்டும், வாசித்தும் பழகாத சமூகம் வன்முறை எண்ணங்களையே வெளிப்படுத்தும். ஒரு நூலகம் திறக்கப்படும் போது பத்து சிறைச்சாலைகள் மூடப்படும் என்ற அறிஞர் பெர்னாட்ஷாவின் கருத்தை இறுகப்பற்றி நூலகம் செல்வது சாலவும் நன்று என்பதை உணர்வோம். நூலகங்களை உயர்த்துவோம்.

வாழ்க நூலகம்! வளர்க நூலகம்!

இந்த வாழ்வின் ஆகச் சிறந்த கேளிக்கை, கொண்டாட்டம் ஓசையின்றி நடக்கிறது. அதுதான் புத்தக வாசிப்பு.

- எமர்சன் -

நல்ல புத்தகங்களை வாசிக்காத ஒருவன் வாசிக்கவே தெரியாதவனைவிட உயர்ந்தவன் அல்ல.

- மார்க் டுவைன்-

உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனப் பயிற்சி புத்தக வாசிப்பு.

- சிக்மண்ட் பிராய்டு-

மனிதனின் ஆகப் பெரிய கண்டுபிடிப்பு புத்தகம்.

- ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகான்களும் வாசிப்பின் மகத்துவமும்

தி.நிவலக்ஜன், தரம் – 8B

"வாசிப்பினால் மனிதன் பூரணத்துவமடைகின்றான்" என்பது முதுமொழி. நாம் எமது சிந்தனை ஆற்றலை தூண்டி அறிவை ஊற்றெடுக்க வைக்க வேண்டுமென நினைத்தால் சளைக்காது வாசிப்பில் ஈடுபட வேண்டும். பல அறிவு சார் கருத்துக்கள் எமது மொழியாற்றலில், பேச்சாற்றலில் தாண்டவமாட வேண்டுமாயின் புத்தகங்களை நாம் தேடிப் படிக்க வேண்டும்.

கற்று கொண்டிருப்பதற்கு கரையில்லை என்பதனையே எம் முன் வாழ்ந்து காட்டிய மகான்களின் வாழ்க்கை எமக்கு புடமிட்டுக் காட்டுகின்றது. அவையும் எமது வாழ்க்கைக்கு படிப்பினை தரும் பாடங்களே.

படிப்பதன் மகத்துவத்தை அறிந்த படியால்தான் நஞ்சு கொடுக்கு நேரம் வரை கிரேக்க நாட்டுக் கவிதை நூல்களை படித்துக் கொண்டும் கேட்டுக் கொண்டுமிருந்தார் சோக்கிரட்டிஸ். தூக்கு மேடையில் தூக்குக் கயிறு முத்தமிடும் வரை படித்துக் கொண்டிருந்தார் உமர் முக்தார். தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லும் வரை நூல்களை படித்துக் கொண்டிருந்தார் பகவத்சிங். படுக்கின்ற இடம் கூட படிக்கின்ற இடத்துக்கு அருகாமையில் வேண்டுமெனக் கேட்டுக் கொண்டிருந்தார் அண்ணல் அம்பேத்கார். படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை முடித்து விட வேண்டுமென்பதற்காக தனது அறுவைச் சிகிச்சையை அடுத்த நாள் மாற்றி வைத்தார் பேரறிஞர் அண்ணா. பயணங்களின் போதெல்லாம் படிப்பதையே வழக்கமாக்கிக் கொண்டிருந்தார் பாரதப் பிரதமர் ஜவகர்லால் நேரு. படிப்பதால் மட்டுமே பாரதத்தை பாராள வைக்க முடியுமெனக் கூறியவர் நாம் இன்றும் என்றுமே மதித்துக்கொண்டிருக்கும் அப்துல் கலாம். முப்பத்து மூன்று ஆண்டுகள் நூலகத்தில் மூழ்கி மூலதனம் எனும் வேதத்தைக் கண்டுபிடித்தவர் கார்ள் மாக்ஸ்.

இவர்கள் எல்லாரும் இவ்வாறு நடந்து கொண்டதற்கு காரணம் என்ன என்று நாம் ஒரு கணம் சிந்திக்கவேண்டும். வாசிப்பதற்கு இணை எதுவுமில்லை. பிக்காசோவின் ஓவியத்தினை விட, பீத்தோவனின் இசையை விடக் கம்பனின் ஒரு செய்யுள், பாரதியின் ஒரு பாட்டு, ஏன் கண்ணதாசனின் ஒரு வரி எமது வாழ்கையைப் புரட்டி விடும்.

கற்றுக் கொள்வது மனிதப் பண்பு கற்றுக் கொடுப்பது மனித மாண்பு. கற்க துவங்குபவன் மாணவன். கற்றுக் கொண்டே இருப்பவன் ஆசிரியன்.

"நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" எனவே நான் படித்தவன் பட்டம் பெற்றவன் எனக் கூறி பட்டங்களால் தன்னை அலங்கரிப்பதனை விட பல புத்தகங்களைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்து எம் முன் வாழ்ந்து காட்டிய மகான்களின் வழியை நாமும் பின்பற்றி நல்ல நூல்களைத் தேடி எமது சிந்தனை, சொல், செயலில் மாற்றத்தை ஏற்படுத்துவோமாக.

## சிறந்த ஆசிரியரின் பண்புகள்

1. சூழ்நிலையை அறிந்திறன்
2. கற்பனைத்திறன்
3. ஆளுமைத்திறன்
4. சுயகட்டுப்பாடு
5. ஊக்கமுடைமை
6. சுய ஆய்வு
7. கூட்டுணர்வு மனப்பான்மை
8. தன்னொழுக்கம்
9. உடல்நலம்
10. சமுதாய உணர்வு
11. நேர்மை
12. குழந்தைகளிடம் அன்பு
13. தலைமைப் பண்பு
14. பணி மீது ஈடுபாடு
15. சிறந்த அறிவு
16. அறிவுத் தாகம்

- பணம், பதவி, குலம், பருமன், உயரம் இவை மனிதனை வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதில்லை, அறிவு தான் கொண்டு செல்கிறது.
- நீங்கள் உறங்கும்போது வருவது அல்ல கனவு. உங்களை உறங்க விடாமல் செய்வதே கனவு.
- வெற்றி பெற்றபின் தன்னை அடக்கி வைத்துக்கொள்பவன், இரண்டாம் முறையும் வென்ற மனிதனாவான்.
- யார் சொல்வது சரி என்பதல்ல, எது சரி என்பதே முக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Present State of English Language Education in Sri Lanka

*B. Sajindren, Assistant Principal*

*When the British took over Sri Lanka in 1815, they provided schooling entirely in English but only to the elite who were expected subsequently to become administrators in the lower rank of civil service. The vernacular schools continued to function in Sinhala and Tamil principally in rural areas. As time went on the number of such schools increased and institutions of higher learning were also established which taught through the medium of English. As the result of it an educated elite developed with an excellent knowledge of English. Traditional schools continued to operate mainly in the rural areas in which Sinhala and Tamil were the media of instruction. Pupils who received education from such schools and educational institutions had almost no hope of obtaining well-paid posts in the government sector since they knew no English. After independence in 1949 and the departure, of the British, there was a rise in nationalist feeling which resulted in an increase in the resentment against the use of English.*

*The national languages of Sri Lanka are Tamil and Sinhala. Sinhala became the official language of the country in 1959. In 1959, it was also decided that all education in Sri Lanka would be in Sinhala and Tamil at all levels of learning from primary schools to university level and English would be taught only as the second language. Inevitably the standard of English of both school leavers and university graduates declined and it soon became apparent that there was a growing shortage of personnel capable of using the English language as an essential tool for the acquisition of information on science and technology for commercial and industrial purposes and for the international communication. In short, it was realized that English was a vital instrument for social and economic development. At the*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*same time, as the realization of the international importance of English grew, young people in the rural areas began to feel that they had been discriminated in the past by being denied the opportunity to learn English, which had deprived them of access to better job opportunities and to the vast store of knowledge available from variety of foreign sources. In 1975, the Government of Sri Lanka requested UNESCO for the assistance in teaching English as the second language. In 1983, the Ministry of Education introduced English as a compulsory subject from grade three. Today, English is one of the main and compulsory subjects in the GCE O/L Examination and pupils of all streams have to sit for the General English in the GCE A/L Examination although it has not been made compulsory for the university entrance.*

***Why is the learning of English important?***

1. ***English is the language of international communication.***

*English may not be the most spoken language in the world, but it is the official language of 53 countries and spoken by around 400 million people across the globe. Learning English is important as it enables us to communicate easily with our fellow global citizens.*

2. ***English is the language of business.***

*English is the dominant business language and it has become almost a necessity for people to speak English if they are to enter a global workforce. Research from all over the world shows that cross-border business communication is most often conducted in English and many international companies expect employees to be fluent in English.*

*Global companies such as Airbus, Daimler-Chrysler, Fast Retailing, Nokia, Renault, Samsung, SAP, Technicolor, and Microsoft in Beijing, have mandated English as their official corporate language. The importance of learning English in the international marketplace cannot be understated - learning English really can change our life.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***3. Speaking English gives us access to a world of entertainment.***

*Many of the world's top films, books and music are published and produced in English. Therefore, by learning English we will have access to a great wealth of entertainment and will be able to have a greater cultural understanding.*

***4. Learning English gives us access to more of the Internet.***

*English is the language of the internet. An estimated 565 million people use the internet every day, and an estimated 52 percent of the world's most visited websites are displayed in the English language. Learning English is important as it gives us access to over half the content on the internet. Knowing how to read English will allow us access to billions of pages of information which may not be otherwise available!*

***5. English evolves and absorbs new words.***

*More than any other language, English continues to evolve and absorb new words that branch out – often untranslated – into other languages. Every year approximately more than 1.000 new and approved words are added to the Oxford Dictionary. This tremendous development is the result due to technology, Social Media and how people spontaneously coin new words during daily life.*


***Present state of English language education in Sri Lanka***


*English is fluently spoken by approximately 10% of the population, and widely used for official and commercial purposes. It is the native language of approximately 74,000 people. Only 10% of students achieve a targeted level of mastery in English language skills. 23 % of urban area students master the language while only 7% of rural students are capable of using the language. We can understand the state of English in Sri Lanka to some extent by analysing the results of English language in the GCE O/L Examination.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Year | No sat | A | | B | | C | | S | | W | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Number | % | Number | % | Number | % | Number | % | Number | % |
| 2013 | 264,157 | 21,139 | 8.00 | 13,952 | 5.28 | 33,917 | 12.84 | 57,425 | 21.74 | 137,724 | 52.14 |
| 2014 | 256,644 | 17,360 | 6.76 | 12,631 | 4.92 | 34,902 | 13.60 | 50,808 | 19.80 | 140,943 | 54.92 |
| 2015 | 272,576 | 19,984 | 7.33 | 14,962 | 5.49 | 30,889 | 11.33 | 57,907 | 21.24 | 148,834 | 54.60 |
| 2016 | 285,686 | 25,715 | 9.00 | 17,729 | 6.21 | 36,187 | 12.67 | 57,220 | 20.03 | 148,835 | 52.10 |
| 2017 | 296,157 | 31,619 | 10.68 | 19,822 | 6.69 | 39,717 | 13.41 | 60,235 | 20.34 | 144,764 | 48.88 |








| *Year* | *Number sat* | *Number failed* |
|---|---|---|
| *2013* | *264,157* | *137,724* |
| *2014* | *256,644* | *140,943* |
| *2015* | *272,576* | *148,834* |
| *2016* | *285,686* | *148,835* |
| *2017* | *296,157* | *144,764* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*Every year, about fifty percentage of students fail in English language. There is no steady decrease in the percentage of students who fail in this subject. The number of students who got distinction pass in English was the lowest in the year 2014. But this number increases gradually and in the year 2017 the largest number of students got A pass.*

*However, we cannot accept that the students who got normal pass have good command of English. So, if we added their number to the number of students who failed, we get a dreadful figure in each year. Sometimes, the students who get C pass also cannot be classified into the list of students who are clever at English. According to these criteria, every year from 2013 to 2017, the number of students left school without a good command of English after 11 years of school education is very shocking.*

| *Year* | *% of C* | *% of S* | *% of F* | *Total* |
|---|---|---|---|---|
| *2013* | *12.84* | *21.74* | *52.14* | *86.72* |
| *2014* | *13.60* | *19.80* | *54.92* | *88.32* |
| *2015* | *11.33* | *21.24* | *54.60* | *87.17* |
| *2016* | *12.67* | *20.03* | *52.10* | *84.8* |
| *2017* | *13.41* | *20.34* | *48.88* | *82.63* |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*District wise percentage of different grades in English in the GCE O/L Examination 2013*

| District | A | B | C | S | F |
|---|---|---|---|---|---|
| Colombo | 22.03 | 10.12 | 18.63 | 22.09 | 27.13 |
| Gampaha | 9.56 | 7 | 15.78 | 23.13 | 44.56 |
| Kalutara | 7.8 | 6.19 | 15.35 | 23.71 | 46.94 |
| Kandy | 10.36 | 6.28 | 13.97 | 22.72 | 46.67 |
| Matale | 6.18 | 5.3 | 11.62 | 20.4 | 56.51 |
| Nuwara Eliya | 2.34 | 2.79 | 8.73 | 19.04 | 67.09 |
| Galle | 8.75 | 4.96 | 12.5 | 21.14 | 52.59 |
| Matara | 7.87 | 5.09 | 12.07 | 21.92 | 53.04 |
| Hambantota | 3.77 | 3.47 | 11.28 | 23.45 | 58.03 |
| Jaffna | 3.7 | 3.78 | 9.87 | 19.53 | 63.12 |
| Kilinochchi | .45 | 1.47 | 3.64 | 12.69 | 81.76 |
| Mannar | 1.72 | 1.25 | 7.06 | 19.79 | 70.18 |
| Vavuniya | 3.59 | 3.19 | 8.16 | 20.54 | 64.55 |
| Mullaitivu | 1.07 | 0.99 | 4.04 | 11.74 | 82.16 |
| Batticaloa | 3.43 | 3.61 | 9.65 | 23.43 | 59.88 |
| Ampara | 3.01 | 3.12 | 11.26 | 26.12 | 56.5 |
| Trincomalee | 2.5 | 3.21 | 9.52 | 24.48 | 60.29 |
| Kurunegale | 6.73 | 4.78 | 13.73 | 23.17 | 51.59 |
| Puttalam | 5.48 | 4.51 | 12.21 | 21.69 | 56.12 |
| Anuradhapura | 4.12 | 3.46 | 10.14 | 20.63 | 61.66 |
| Polonnaruwa | 2.79 | 2.86 | 9.56 | 19.74 | 65.05 |
| Badulla | 4.98 | 4.05 | 11.24 | 19.38 | 60.34 |
| Monaragela | 2.61 | 2.28 | 7.47 | 17.81 | 69.82 |
| Ratnapura | 5.35 | 4.34 | 11.09 | 19.42 | 59.8 |
| Kegalle | 5.94 | 4.44 | 12.01 | 21.38 | 56.24 |

*The percentage of fail grade is the lowest in the Colombo district and highest in the Kilinochchi district. Districts belong to the north, eastern and Uva provinces are so backward in English. Most students are Tamils in these provinces. So, we can come to a conclusion that Tamils are so backward in this language.*

***Reasons for the backwardness in English in Sri Lanka***

1. *Decisions made by politicians*
2. *Past civil war*
3. *Insufficient number of teachers*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. *Improper teaching methodologies*
5. *Students and parents are unaware of the importance of English.*
6. *Unequal distribution of resources*
7. *Corruption, over politicization and mis governance*
8. *Inefficient educational administration*
9. *Dependency on old teaching methods*
10. *Improper selection of teachers*
11. *Improper training to teachers*
12. *Lack of incentives to teachers*

***Shortcomings at school level***

1. *There are no opportunities to use English at schools.*
2. *Teachers have a very weak vocabulary and they are not mastery over the language.*
3. *There are more than 40 students in a classroom.*
4. *The allocation of time for English is not enough.*
5. *Lessons are limited to textbooks.*
6. *Only bright students are appreciated.*
7. *Less speech activities are done in classroom lessons.*
8. *The work involved in the other core subjects is more demanding than English.*
9. *Students do not get opportunity to speak in English.*

***Suggestions to improve the English knowledge of students***

1. *Allocation of few more hours to teach English.*
2. *Allocation of separate hours for speech practice classes.*
3. *Starting quiz competitions in English.*
4. *Teaching other subjects in English*
5. *Limiting the number of students per class below 15.*
6. *Improving the relationship between the teacher and the students*
7. *Conducting oral tests for English language in addition to written examinations.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. *Grouping students according to their English language knowledge and engaging in proper remedial teaching*
9. *Recruiting teachers of English who can speak fluently*
10. *Paying attention to every individual student*
11. *Organizing English camps, workshops etc.*
12. *Students should be given a thorough knowledge about grammar.*
13. *Everyday student should be given a list of words in common use to memorize.*
14. *Creating an environment that needs to use English.*
15. *Starting a practical English course paying more attention to spoken English.*
16. *Arranging oral tests for continuous assessments.*
17. *Making necessary arrangements to start a weekend English course for school students.*
18. *Introducing more pair work/group work activities.*

***The ways to improve English language teaching at school level***

1. *Starting with the alphabet and numbers.*
2. *Teaching pronunciation, especially for difficult sounds.*
3. *Teaching students nouns.*
4. *starting with common objects in the classroom.*
5. *Explaining how adjectives modify nouns.*
6. *Instructing students on verbs.*
7. *Teaching that adverbs modify verbs, adjectives, or other adverbs*
8. *Explaining tenses and articles.*
9. *Practicing common phrases.*
10. *Teaching basic sentence construction.*
11. *Encouraging students to speak only English in the classroom.*
12. *Providing verbal and written instructions.*
13. *Monitoring students' progress constantly.*
14. *Promoting a diversity of modes of learning.*
15. *Breaking lessons into small pieces.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*16. Using games to reinforce the topic of the day.*
*17. Using visuals to teach language.*
*18. Promoting the use of targeted language apps on mobile devices.*
*19. Using social media.*

❖ கல்வி கற்பதும், கற்பிப்பதும் மிகவும் முக்கியம். அதே நேரத்தில் சிறந்த மனிதனை உருவாக்குவதாக அவை அமைய வேண்டும்!
-இந்திரா காந்தி-

❖ ஒவ்வொரு குடிமகனும் சிந்திக்கும் திறன் உள்ளவனாகவும் கல்வியறிவு உடையவனாகவும் திகழ வேண்டும். அதுவே ஜனநாயகம்.
-டாக்டர் அம்பேத்கர்

❖ சோம்பல் எல்லா விஷயங்களையும் கஷ்டமாக்கும். சுறுசுறுப்பு எல்லாவற்றையும் எளிதாக்கும்.
-ஃபிராங்க்ளின்

❖ வல்லமை முழுவதும் உன் உள்ளத்தில் அடங்கியுள்ளது. எதையும் உன்னால் செய்ய முடியும்.
- விவேகானந்தர்

❖ ஒரு முறை வந்தால் அது கனவு. இரு முறை வந்தால் அது ஆசை. பலமுறை வந்தால் அது இலட்சியம்.
- அப்துல் கலாம்

❖ நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம். ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.
- அப்துல் கலாம்

❖ நீங்கள் விரும்புவது ஒருவேளை உங்களுக்கு கிடைக்காமல் போகலாம். ஆனால் உங்களுக்கு தகுதியானது உங்களுக்கு கண்டிப்பாக கிடைத்தே தீரும்.
- அன்னை தெரேசா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்வி

தி.குகதீபா, தரம் - 13

அழகிய சொல்லாக உயர்ந்து நிற்பது - கல்வி
அது வாழ்வில் பெரும் செல்வம்
கடவுள் தந்த பெரும் கொடை
என்றும் நம்மை விட்டு விலகாத ஒரு கவசம்
சுவைக்கச் சுவைக்கத்தான்
இனிப்பின் தித்திப்பு தெரியும்.
படிக்கப் படிக்கத்தான்
கல்வியின் மகத்துவம் புரியும்.

இன்றைய உலகில் மனிதனுக்கு இன்றியமையாத விடயங்களுள் ஒன்றாக திகழ்வது கல்வி ஆகும். எந்தவொரு சமூகத்தினரும் கல்வியைக் கற்பதிலிருந்து விலகிச் செல்வது இன்றைய நவீன உலகில் மிகவும் அரிதாகக் காணப்படுகிறது. ஏனெனில் கல்வியின் சிறப்பை அனைத்து சமூகங்களும் புரிந்துள்ளன. இதனால் தான் இன்று கல்வியானது மனிதனின் அத்தியாவசிய தேவையாக இருக்கிறது.
கல்வி கற்றவன் எந்த இடத்திற்குச் சென்றாலும் அவன் பிற சமூகத்தால் மதிக்கப்படுகின்றான். கற்றவனுக்கு எந்த நாடும் ஊரும் தன்னுடைய ஊரேயாகும். இப்படி கல்வி கற்றவனின் சிறப்பு இருக்கும் போது, ஒருவன் தான் மரணிக்கும் வரை கல்வி கற்காமல் இருந்து தனது காலத்தைக் கழிப்பது மிகவும் சிரமமானதாகும். ஒருவன் தான் எவ்வளவு கல்வி கற்றாலும் அதனை செயல் வடிவில் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவன் கற்ற கல்வியின் பயன் அவனுக்குக் கிடைக்கும். இல்லாவிடில் அவன் கற்ற கல்வியின் பயன் ஒன்றும் இல்லாமல் போய்விடும்.

'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்து
இரண்டு புண்ணுடையர் கல்லாதவர்'.

என்று கற்றவரின் சிறப்புப் பற்றி வள்ளுவர் கூறுகின்றார். கற்றவனின் முகத்தில் இருப்பதே கண்கள் என்றும் கல்லாதவனின் முகத்தில் இருப்பவை கண்கள் அல்ல, அவை புண்கள் என்றும் இங்கு கூறப்படுகிறது. இதன் மூலம் கல்வியின் சிறப்பும் அதனைக் கற்றவனின் சிறப்பும் கூறப்படுகின்றது.
கல்வி உடையவர் எல்லா மக்களிடமும் நன்றாக பழகிக் கொள்வதோடு மட்டுமல்லாமல், அவர்களுடன் சந்தோசமாக சேர்ந்து வாழ்வதையே விரும்புவர். இவர்களை பிரிக்கின்ற போது இனி நாம் எப்போது மீண்டும் சேர்வோம் என்ற நினைவிலேயே பிரிகின்ற தன்மை கற்றவரிடம் இருக்கும் தன்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகின்றான். கல்வி என்பது ஆய்வு ஆகும். கல்வி மூலம் சூழலை, சமூகத்தை, பண்பாட்டு மரபை ஆராய்ந்து கொள்ளலாம்.

கல்விக்காக உயிர் கொடுத்தோர் என்றும் மரணிப்பதில்லை.

கல்வி கற்றவர் மரணித்து விடுவார். ஆனால் அவர் கற்ற, கற்பித்த கல்வி இந்த உலகம் அழியும் வரை இருந்தே ஆகும்.

விஞ்ஞானக் கல்வி, சமூக அறிவியற் கல்வி, அழகியல் கல்வி ஆகிய மூன்றும் இவ்வுலக வாழ்க்கைக்கு அவசியமானவையாகும். மறுவுலக வாழ்வுக்கு ஆன்மீகக் கல்வி அவசியம். ஒருவனுக்கு பெருமையையும் புகழையும் தரக்கூடிய செல்வம் கல்விச் செல்வமே அன்றி வேறில்லை.

கல்வி தொழிலுக்கும் வழி காட்டுகிறது. கல்வி என்பது வாழ்க்கை வாழ்வதற்காக உதவும் கருவியாகும். அறிவியலும் சமூகமும் வாழ்நாள் முழுவதும் தொடரும் கருவிகளாகும். வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதை இனங்கண்டு அதற்கேற்ப கற்க வேண்டும். வாழ்க்கையை நெறிப் படுத்தவும் மேம் படுத்தவும் கல்வியை பயன்படுத்த வேண்டும்.

கல்வி கற்றவரிடம் ஒழுக்கம், பண்பு, நேர்மை, நீதி இவைகள் அனைத்தும் ஒருங்கே அமைந்து காணப்படும். எனவே கல்வியானது ஒரு மனிதனின் முக்கிய தேவையாக இருக்கிறது. எந்த வொரு சமூகமும் கல்வி இல்லாமல் இருப்பது இக்காலத்தைப் பொறுத்த வரை மிகவும் தாழ்வாகவும் இழிவாகவும் கருதப்படும்.

## நற்பண்புகள்

1. தேசநலன், துணிச்சல்
2. கீழ்படிதல்
3. கடமையை உணர்ந்து நிறைவேற்றுதல்
4. வெளிப்படைத் தன்மை, ஒழுங்குமுறை
5. தவறை ஒத்துக் கொள்ளல்
6. ஆன்மிக நாட்டம்
7. கருணையும் இரக்கமும்
8. காரணம் அறிதல்
9. மற்றவர்களின் நலன்களில் அக்கறை
10. பெருந்தன்மை, பண்புடைமை
11. அஹிம்சை, சகிப்புத்தன்மை
12. மற்றவர்களுக்கு உதவுதல்
13. நற்செயலில் ஆர்வம்
14. நகைச்சுவை
15. படைப்பிக்கும் கலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பிறர் தேவைகளைப் புரிந்து கொள்ளுதல்
17. நன்மை செய்ய விரும்புதல், அறம்
18. தயாராக இருப்பது
19. ஞாபக சக்தி
20. தொண்டு செய்தல்
21. பிறர் செய்த உதவியை மறவாது இருத்தல்
22. பிறர் செய்த தீங்கை மறத்தல்
23. மன்னித்தல், வாக்குறுதி பேணல்
24. சமூகத்துடன் ஒத்துழைப்பு
25. சுதந்திரம்
26. பொறுப்பு ஏற்றலும் நிறைவேற்றலும்
27. ஒற்றுமை
28. தயாள குணம், இனிமை
29. உள்ளவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்
30. சுத்தமாயிருத்தல் மற்றும் தூய்மை
31. நேர்மையும் உண்மையும்
32. ஸ்திரத்தன்மை
33. நல்ஒழுக்கம், சமநிலை காத்தல்
34. பாரபட்சமின்மை
35. உள்ளத்தின் சமநிலை
36. நியாயம், நடுநிலை
37. நீதி, நன்னெறி, நேர்மை
38. கவனமாக இருத்தல், விழிப்புணர்வுடன் இருத்தல்
39. சீரிய யோசனை, பகுத்தறிதல்
40. அறிவுநுட்பம்
41. லட்சியம், திடமான நோக்கம்
42. உழைப்பை நேசிப்பது
43. நம்பிக்கை, விடாமுயற்சி
44. உறுதி, ஊக்கத்துடன் முயற்சி
45. கண்ணியம்
46. சாந்த குணம், அடக்கம், அமைதி
47. பொறுமை, செழுமை, திருப்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. புலனடக்கம்
49. தற்சார்பு, சுயமரியாதை
50. உருவாக்கும் கலை
51. முன்னறிவு
52. சந்தோஷம்
53. ஞானம்
54. முன்யோசனை
55. விருந்தோம்பல்

→பகைமையைப் பகைமையினால் தணிக்க முடியாது. அன்பின் மூலமாக மட்டுமே பகையை வெல்ல முடியும்.

→அநீதி செய்து மற்றவர்களுக்கு துன்பம் இழைப்பவர்கள் வென்றதாக சரித்திரம் இல்லை. அவர்கள் தோல்வியைத் தழுவுவது உறுதி.

→நல்வழியில் செம்மையாக நிருவகிக்கப்பட்ட மனமே நமக்கு என்றென்றும் உதவி செய்ய தகுதி உடையதாக இருக்கும்.

→ஒருவரின் சொல்லும் செயலும் ஒன்றாக இருக்குமானால் அவர் அழகும் சுகந்தமும் நிறைந்த வண்ண மலரைப் போல எல்லோருக்கும் பயனுடைய மனிதராக இருப்பார்.

→அன்பை வெறும் பேச்சாக இல்லாமல் செயலில் காட்டினால் இறைவனின் அருள் கிடைக்கும்.

→வாழ்வை எளிதாக்கிக் கொண்டால் அடிப்படை பொருள்களைக் கூட தேடி அலைய வேண்டிய அவசியமில்லை.

→இறைவனை நினைத்து செய்யும் எந்த செயலுக்கும் பயன் கிடைக்கும், அறியாமல் செய்தால்கூட பலன் உண்டு.

→பொருளை பெருக்கிக் கொள்வதால் வாழ்க்கைத் தரம் உயர்ந்து விடாது. தரமான வாழ்க்கை மனநிறைவில் தான் கிடைக்கிறது.

→வெறுமையான பை நேராக நிற்க முடியாது.

→ஒரு மனிதனை நீ மன்னிக்கும் ஒவ்வொரு நேரமும் நீ அவனை பலப்படுத்தி உன்னையும் பலப்படுத்திக் கொள்கிறாய்.

→இந்த வாழ்வில் நுழைவதற்கு ஒரு வழியைத்தவிர வேறு வழி இல்லை. ஆனால் மரணத்தின் வாயில்கள் எண்ணிலடங்காமல் இருக்கின்றன.

→தீயில் புகுந்தால் சுடாமலும், தண்ணீரில் குளித்தால் குளிராமலும், இரண்டிலும் ஒரே நிலை தோன்றுவதே சமநிலையாகும். இந்த சமநிலையில் தன்னைத்தானே ஈடுபடுத்தி அமைதியாக வாழ்பவன், ஜீவாத்மா வடிவில் உள்ள பரமாத்மாவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்குறள் பற்றி அறிவோம்

செ. யோதிகா, தரம் - 13

தமிழில் உள்ள நூல்களிலேயே சிறப்பிடம் பெற்ற நூல் திருக்குறள். இது அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூல். மனித வாழ்வின் முக்கிய அங்கங்களாகிய அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைப் பற்றி விளக்கும் நூல்.

இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர். இவருடைய இயற்பெயர் என்ன என்பதும் மேலதிக விபரங்களும் சரிவரத்தெரியவில்லை. இவரைப்பற்றிச் செவிவழிமரபாகச் சில செய்திகள் விளங்குகின்றன. ஆனால் அறுதியான வரலாறு கிடையாது. அந்தச் செய்திகளின் வாயிலாகப்பெறும் தகவல்களின்படி, இவர் வள்ளுவ மரபைச்சேர்ந்தவர் என்றும், மயிலாப்பூரில் வசித்தவர் என்றும் தெரிகிறது. இவருடைய மனைவியார் வாசுகி அம்மையார் கற்பியலுக்கு மிகச்சிறந்த இலக்கணமாக விளங்கியவர். வள்ளுவர் தாம் எழுதிய முப்பால் நூலைத் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றம் செய்ய மிகவும் சிரமப்பட்டதாகவும், முடிவில் ஔவையாரின் துணையோடு அரங்கேற்றியதாகவும் அச்செய்திகள் வாயிலாக அறிகிறோம்.

திருவள்ளுவரை நாயனார், தேவர், தெய்வப்புலவர், பெருநாவலர், பொய்யில் புலவர் என்றும் சில சிறப்புப்பெயர்களால் அழைப்பர்.

பிற்காலத்தில் திருவள்ளுவர் பெயரால் வேறு சில நூல்களை வேறு சிலர் இயற்றியுள்ளனர். அவை சித்தர் இலக்கியத்தைச் சேர்ந்தவை.

திருக்குறள் இயற்றப்பட்ட காலம் இன்னும் சரியாக வரையறுக்கப்படவில்லை. கிறிஸ்தவ சகாப்தத்தின் முன் பகுதியைச் சேர்ந்ததாகப் பலர் கருதுவர்.

பழந்தமிழ் நூல்களில் நான்கு பெரும் பகுப்புக்கள் உள்ளன.

1. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவை அடங்கிய பதினெண் மேல்கணக்கு
2. பதினென்கீழ்க்கணக்கு
3. ஐம்பெருங்காப்பியங்கள்
4. ஐஞ்சிறு காப்பியங்கள்

அவற்றில் பதினென்கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் வரிசையில் "முப்பால்" என்னும் பெயரோடு இந்நூல் விளங்குகின்றது.

"அறம், பொருள், இன்பம்", ஆகிய மூன்று பால்களும் கொண்டமையால் "முப்பால்" எனப் பெயர் பெற்றது. முப்பால்களாகிய இவை ஒவ்வொன்றும் "இயல்" என்னும் பகுதிகளாக மேலும் வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இயலும் சில குறிப்பிட்ட அதிகாரங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. ஒவ்வொரு அதிகாரமும் பத்துபாடல்களைத் தன்னுள் அடக்கியது.

இப்பாடல்கள் அனைத்துமே குறள் வெண்பா என்னும் வெண்பா வகையைச் சேர்ந்தவை. இவ்வகை வெண்பாக்களால் ஆகிய அக்காலத்து முதல் நூலும் ஒரே நூலும் இதுதான்.

குறள் வெண்பாக்களால் ஆனவையால் "குறள்' என்றும் "திருக்குறள்" என்றும் இது பெயர் பெற்றது.

"பாயிரம்" என்னும் பகுதியுடன் முதலில் "அறத்துப்பால்" வருகிறது. அதிலும் முதலில் காணப்படுவது, "கடவுள் வாழ்த்து" என்னும் அதிகாரம். தொடர்ந்து,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வான் சிறப்பு", "நீத்தார் பெருமை", "அறன் வலியுறுத்தல்", ஆகிய அதிகாரங்கள் வருகின்றன.

அடுத்துவரும் இல்லறவியல் என்னும் இயலில் 25 அதிகாரங்கள்; அடுத்துள்ள துறவறவியலில் 13 அதிகாரங்களுடன் முதற்பாலாகிய அறத்துப்பால் பகுதி முடிவுறுகிறது.

அடுத்து வரும் பொருட்பாலில் அரசு இயல், அமைச்சு இயல், ஒழிபு இயல் ஆகிய இயல்கள் இருக்கின்றன. அரசு இயலில் 25 அதிகாரங்கள் உள்ளன. அமைச்சு இயலில் 32 அதிகாரங்களும், ஒழிபு இயலில் 13 அதிகாரங்களும் உள்ளன.

கடைசிப்பாலாகிய இன்பத்துப்பால் அல்லது காமத்துப்பாலில் இரண்டு இயல்கள்; களவியலில் 7 அதிகாரங்களும், கற்பியலில் 18 அதிகாரங்களும் உள்ளன. ஆகமொத்தம் 7 இயல்கள்; 133 அதிகாரங்கள்; 1330 பாடல்கள்.

திருக்குறளை மொத்தம் 12000 சொற்களில் வள்ளுவர் பாடியுள்ளார். ஆனால் இவற்றில் ஐம்பதுக்கும் குறைவான வடசொற்களே உள்ளன.

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு...."

என்று தமிழ் நெடுங்கணக்கின் முதல் எழுத்தாகிய "அ" வில் ஆரம்பித்து, 1330 ஆம் குறளாகிய,

"ஊடுதல் காமத்திற்கின்பம்; அதற்கின்பம்,
கூடி முயங்கப்பெறின்"

என்று தமிழ் மொழியின் கடைசி எழுத்தாகிய "ன்" னுடன் முடித்திருக்கிறார்.

வாழ்வியலின் எல்லா அங்கங்களையும் திருக்குறள் கூறுவதால், அதைச் சிறப்பித்துப் பல பெயர்களால் அழைப்பர்: திருக்குறள், முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, திருவள்ளுவம் எனப் பல பெயர்கள் அதற்குண்டு.

பழங்காலத்தில் இதற்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அவற்றில் புகழ் வாய்ந்ததாக விளங்குவதும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதும் பரிமேலழகர் உரைதான். தற்காலத்திலும் பலர் உரை எழுதியுள்ளனர். அவற்றில் தற்சமயம் சிறப்பாகக் கருதப்படுவது திருக்குறள் முனுசாமியின் உரை.

தனிமனிதனுக்கு உரிமையானது இன்பவாழ்வு; அதற்குத் துணையாக உள்ளது பொருளியல் வாழ்வு; அவற்றிற்கெல்லாம் அடிப்படையாக விளங்குவது அறவாழ்வு. மனதே எல்லாவற்றிற்கும் ஆதார நிலைக்களன்; மனத்துக்கண் மாசிலன் ஆதலே அனைத்து அறம்; அறத்தால் வருவதே இன்பம். அறவழியில் நின்று பொருள் ஈட்டி, அதனைக்கொண்டு இன்பவாழ்வு வாழ வேண்டும். அவ்வாறு உலகமாந்தரும் இன்பமுறச் செய்யவேண்டும். பொருளியலாகிய பொதுவாழ்வுக்கும் இன்ப இயலாகிய தனிவாழ்வுக்கும் அடிப்படை அறம்தான் என்பது திருக்குறளின் மொத்தமான நோக்கு.

உலகிலேயே அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல்களில் மூன்றாம் இடத்தைத் திருக்குறள் வகிக்கிறது. இதுவரை எண்பது மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை.
மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்.
மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திருக்குறளில் ஐம்பதுக்கும் குறைவான வட சொற்கள் உள்ளன.
- திருக்குறள் முதன் முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1812.
- திருக்குறளின் முதற் பெயர் முப்பால்.
- திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் 133.
- திருக்குறளில் அகத்துப்பாலிலுள்ள குறட்பாக்கள் 380.
- திருக்குறளில் பொருட்பாலிலுள்ள குறட்பாக்கள் 700.
- திருக்குறளில் காமத்துப்பாலிலுள்ள குறட்பாக்கள் 250.
- திருக்குறளிலுள்ள மொத்த குறட்பாக்கள் 1330.
- திருக்குறள் 'அ' கரத்தில் தொடங்கி 'ன' கரத்தில் முடியும்.
- ஒவ்வொரு குறளும் இரண்டு அடியும் ஏழு சீர்களையும் கொண்டு காணப்படும்.
- திருக்குறளிலுள்ள மொத்த சொற்கள் 14000
- திருக்குறளிலுள்ள மொத்த எழுத்துக்கள் 42194.
- திருக்குறளில் இடம் பெறும் இரு மலர்கள் அனிச்சம், குவளை.
- திருக்குறளில் இடம் பெறும் ஒரே பழம் நெருஞ்சிப்பழம்.
- திருக்குறளில் இடம் பெறும் விதை குன்றிமணி.
- திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து - ஔ
- திருக்குறளில் அதிகம் பயன்பட்ட ஒரே எழுத்து - னி (1075).
- திருக்குறளில் இடம் பெற்ற இரண்டு மரங்கள் - பனை, மூங்கில்.
- திருக்குறளில் இடம் பெறாத இரு சொற்கள் - தமிழ், கடவுள்.
- திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர் - மலைக்குறவர்.
- திருக்குறள் மூலத்தை முதன் முதல் அச்சிட்டவர் - தஞ்சை ஞான பிரகாசர்.
- திருக்குறள் முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புச் செய்தவர் - ஜி.யு. போப்.
- திருக்குறளில் இடம் பெறாத ஒரேயொரு எண் - ஒன்பது.
- திருக்குறள் இதுவரை 80 மொழிகளில் வெளி வந்துள்ளது.

*உலகின் முக்கியமான சமயங்கள்*

*கிறிஸ்தவம்* - Christianity
*இஸ்லாம்* - Islam
*இந்து சமயம்* - Hinduism
*பௌத்த சமயம்* - Buddhism
*சமணம்* - Jainism
*யூதம்* - Judaism
*ஷிண்டோ* - Shinto
*டாவோயிசம்* - Taoism
*கன்பூசியம்* - Confucianism
*சீக்கிய சமயம்* - Sikhism



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகளில் பெறுகைச்செயற்பாடுகள்



இ. ஜெய்சங்கர், அலுவலக உதவியாளர்

பெறுகைச் செயற்பாடுகள் எனப்படுவது உரிய தரங்கள் மற்றும் வரையறைகளுக்கு அமைய உயர்ந்தபட்ச செயற்றிறனுடன் தூரநோக்குக் கொண்ட பணிகள் விநியோகம் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல். இப் பணிகள் பாடசாலைப் பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பாடசாலைப் பெறுகைக் குழுவின் உள்ளடக்கம்

1. அதிபர்
2. முதலாம் உறுப்பினர்: பிரதி அதிபர்/உதவி அதிபர்/ சிரேஷ்ட ஆசிரியர்
3. இரண்டாம் உறுப்பினர்: கொள்வனவு செய்ய வேண்டிய விடயத்துடன் தொடர்புடைய ஒரு ஆசிரியர்

### பாடசாலைப் பெறுகைக் குழுவின் செயற்பாடுகள்

மாணவர் தொகை 500 வரை எனில் 300000 வரையும் மாணவர் தொகை 501-1000 வரை எனில் 500000 வரையும் மாணவர் தொகை 1001- 2500 எனில் 800000 வரையும் மாணவர் தொகை 2500 க்கு மேல் எனில் 1000000 வரையும் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் நிர்மாண வேலைகளை பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்க முடியும். அதை விட மேற்பட்ட தொகைகள் தொடர்பாக வலய/மாகாண/அமைச்சு மட்டங்களில் செயற்பாடுகளை மேற்கொள்ள வலயக்கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் ஆண்டின் இறுதித் தவணையில் தயாரித்து வழங்கப்படும் தேவைப் பட்டியலைப் (நுகர்வுப்பொருள் மற்றும் மூலதனப் பொருள்) பரிசீலனை செய்து மதிப்பீட்டு ஆவணத்தின் முன்னுரிமைக்கு அமைய தயார்படுத்தி அமுலில் உள்ள நிதியாண்டின் தை மாதத்துக்குள் பரிசீலனை செய்து அங்கீகரிக்க வேண்டும்.

விவரக்குறிப்பு மற்றும் தரத்தை உறுதிப்படுத்த விஷேட அறிவு கொண்ட நபர்களிடம் உதவி பெற்றுக்கொள்ள அதிகாரம் உள்ளது.

களஞ்சிய மற்றும் நிதி வசதிகளுக்கு ஏற்ப ஆண்டுக்கு தேவையான பொருட்களை ஒரே தடவையில் கொள்வனவு செய்வதா அல்லது ஒவ்வொரு தவணையிலும் கொள்வனவு செய்வதா என்பதைத் தீர்மானித்துக்கொள்ளுதல் வேண்டும்.

500000 ரூபாய்க்கு குறைவான பெறுகைகளுக்கு மூன்று முத்திரையிடப் பட்ட விலை மனுக்களையும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கு ஐந்து முத்திரையிடப்பட்ட விலை மனுக்களையும் வலய/மாகாண கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகத்தில் பதிவு செய்துகொண்டுள்ள ஒப்பந்த காரர்கள் அல்லது வழங்குனர்களிடம் இருந்து அல்லது Rainbow Pages இல் பட்டியலிடப்பட்டுள்ள பிரபல வியாபாரிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

நேரடி ஒப்பந்த முறை மருந்து வகை, எரிபொருள், உதிரிப் பாகங்கள் நூல் வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்களிடம் இருந்து நூல்கள் கொள்வனவு செய்தல் போன்றவற்றுக்கு கைக்கொள்ளப்படலாம்.

பாடசாலை மூலம் மூலப்பொருள்களை மட்டும் வழங்கி பெற்றோர் மற்றும் பாடசாலைச் சமூகத்திடம் இருந்து ஊழியப் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல்.

விலை மனுக் கோரும் சந்தர்ப்பத்தில் விலை மனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி மற்றும் நேரம் விலை மனுக்கோரும் கடிதத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களினதும் முன்னிலையில் திறக்கப்படல் வேண்டும்.

பொருட்கள், பணிகள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக கோவை ஒன்று பேணப்பட வேண்டும். பெறுகைக்குழுவின் கூட்டங்களில் கொள்வனவு தொடர்பான தீர்மானங்கள் எழுதப்பட்டு அதில் பெறுகைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் ஒப்பமிட வேண்டும்.

கொள்வனவு தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் கட்டளைக் கடிதத்தின் மூலம் கட்டளை பிறப்பிக்க வேண்டும்.

**தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவை அமைத்தலும் அதன் கடமைகளும்**

தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உள்ளடக்கம்

1. பிரதி அதிபர் /பிரிவுப் பொறுப்பாளர் – தலைவர்
2. முதல் உறுப்பினர் – சிரேஷ்ட ஆசிரியர்
3. இரண்டாம் உறுப்பினர் – உரிய துறை அல்லது விடயத்தில் விளக்கம் கொண்ட ஆசிரியர்

ஒரு கொள்வனவு தொடர்பாக ஒருவர் பெறுகைக்குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு இரண்டிலும் ஏக காலத்தில் பணியாற்ற முடியாது.

பாடத்துக்குரிய ஆசிரியர் இல்லாது விடின் அண்மைய பாடசாலை ஒன்றின் ஆசிரியரை நியமித்துக்கொள்ள முடியும்.

ஒரு பாடசாலையில் ஐந்து பேர் அல்லது அதை விடக் குறைவான ஆசிரியர்கள் இருந்தால் பெறுகைக்குழுவை மாத்திரம் நியமிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். அந்தக் குழுவே தொழிநுட்ப மதிப்பீட்டு செயற்பாடுகளையும் மேற்கொள்ளும்.

ஒரு பாடசாலையில் மூன்று பேர் அல்லது அதை விடக் குறைவான ஆசிரியர்கள் இருந்தால் அனைத்து ஆசிரியர்களும் பெறுகைக்குழுவாகத் தொழிற்படுவதுடன் அந்தக் குழுவே தொழிநுட்ப மதிப்பீட்டு செயற்பாடுகளையும் மேற்கொள்ளும்.

பெறுகைக்கு அமைவான துறைகள் தொடர்பாக விடய நிபுணத்துவம் கொண்ட ஒருவரை நியமித்துக்கொள்ள வேண்டும்.

**தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் செயற்பாடுகள்**

கற்பித்தலுக்கு தேவையான நுகர்வுப்பொருள்களை கொள்வனவு செய்ய உரிய ஆசிரியர்களினால் தரப்படும் ஆவணங்கள் மூலம் முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து முன்னைய ஆண்டின் இறுதியில் பெறுகைக் குழுவுக்கு சமர்ப்பித்தல்.

சகல விலை மனுக்களையும் பரிசிலனை செய்ய வேண்டும். பரிந்துரை செய்யப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொருந்தாத விலை மனுக்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் உரிய இடங்களில் ஒப்பமிடாத விலை மனுக்கள் நிராகரிக்கப்படல் வேண்டும். அந்தந்த விலை மனுக்கள் மீது நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் தெளிவாக குறிப்பிடப்பட்டு அனைத்து உறுப்பினர்களும் ஒப்பமிட வேண்டும்.

ஏனைய காரணங்களால் நிராகரிக்கப்பட்ட விலை மனுக்கள் மீது காரணம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு அனைத்து உறுப்பினர்களும் ஒப்பமிட வேண்டும்.

விலை மனுக்களின் கணிப்பீடுகள் சரியாய் இருப்பதனை உறுதி செய்ய வேண்டும்.

விலை மனுவில் குறைந்த தொகை குறிப்பிடப்பட்டுள்ளதை முதல் இடத்திலும் மற்றவற்றை அதற்கு அடுத்த நிலையிலும் இட்டு ஏறுவரிசைப் படுத்த வேண்டும்.

குறைந்த பட்ச விலை சமர்ப்பிக்கப்பட்டுள்ள விநியோகஸ்தரிடம் இருந்து பொருட்களைப் பெற்றுக்கொள்ள பரிந்துரைத்தல். எனினும் அந்த விநியோகஸ்தரிடம் இருந்து பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடாது என்பதற்கான விஷேட காரணங்கள் இருப்பின் அவை தொடர்பாக பட்டியலிட்டு அதன் கீழ் அனைத்து உறுப்பினர்களும் ஒப்பமிடுவதுடன் அதற்கு அடுத்த நிலையில் உள்ள விநியோகஸ்தரைத் தெரிவு செய்ய வேண்டும்.

விநியோகஸ்தர் பொருட்களைப் பாடசாலைக்கு கொண்டுவந்து ஒப்படைக்க வேண்டும் என்பதால் போக்குவரத்து செலவையும் குறிப்பிடுமாறு ஆலோசனை வழங்க வேண்டும். பொருட்கள் வந்து சேர்ந்தவுடன் அவற்றின் தரம் அளவு என்பன உறுதி செய்யப்பட்டு பாடசாலையின் பொறுப்பில் எடுத்துக்கொள்ளப் படல்வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கப்படும் தரத்துக்கு உட்படாத பொருட்களாக இருந்தால் அவற்றைத் திருப்பி அனுப்பி தரத்துக்கு அமைவான பொருட்களை விநியோகிக்கும்படி வழங்குனருக்கு அறிவிக்க வேண்டும்.

**பெறுகை தொடர்பான நிதி வரையறையின்படி பெறுகை முறை**

| பாடசாலை வகை | செலவு எல்லை | அனுமதி அளிக்கும் அங்கீகாரம் | பெறுகை முறை | குறிப்பு |
|---|---|---|---|---|
| மாணவர் தொகை 500 வரை | தடவைக்கு ரூபா 10000 வரை உச்சமாக மாதம் ஒன்றுக்கு 30000 ரூபாவுக்கு அதிகமாகாத வகையில் | அதிபர் | அதிபரின் தீர்மானம் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் தழுவல் அனுமதி | விலை மனுக் கோரல் இல்லாமல் |
| மாணவர் தொகை 501-1000 வரை | தடவைக்கு ரூபா 10000 வரை உச்சமாக மாதம் ஒன்றுக்கு 40000 ரூபாவுக்கு அதிகமாகாத வகையில் | | | |
| மாணவர் தொகை 1001- 2500 | தடவைக்கு ரூபா 15000 வரை உச்சமாக மாதம் ஒன்றுக்கு 45000 ரூபாவுக்கு அதிகமாகாத வகையில் | | | |
| மாணவர் தொகை 2500 க்கு மேல் | தடவைக்கு ரூபா 15000 வரை உச்சமாக மாதம் ஒன்றுக்கு 60000 ரூபாவுக்கு அதிகமாகாத வகையில் | | | |
| மாணவர் தொகை 500 வரை | ரூபா 300000 வரை | பாடசாலைப் பெறுகைக் குழு | விலை மனுக் கோரலின் அடிப்படையில் | சந்தை விலையை ஒப்பிடும் முறை |
| மாணவர் தொகை 501-1000 வரை | ரூபா 500000 வரை | | | |
| மாணவர் தொகை 1001- 2500 | ரூபா 800000 வரை | | | |
| மாணவர் தொகை 2500 க்கு மேல் | ரூபா 1000000 வரை | | | |

## தேவைப் பட்டியல் /முன்னுரிமைப் பட்டியல் தயாரித்தல்

தேவைகள் தொடர்பாக ஆசிரியர்களிடம் இருந்து தேவைப் பட்டியல் கோரல்.

அவற்றில் அவசியமானவை எவை என்பதை இனம்காண பின்வரும் தாயத்தைப் பயன்படுத்தல்

| | |
|---|---|
| அவசரமானதும் முக்கியமானதும் | முக்கியமானது ஆனால் அவசரமானது அல்ல |
| அவசரமானது ஆனால் முக்கியமானது அல்ல | அவசரமானதும் அல்ல முக்கியமானதும் அல்ல |

அவசரமானதும் முக்கியமானதும் எனும் கூட்டினுள் வரும் விடயங்கள் இப்போதே செய்ய வேண்டியவை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருட்கள் சம்பந்தமான விபரக்குறிப்பை தயாரித்தல்**

அரசின் கொள்கைகளுக்கு ஏற்ப குறித்த பொருட்கள் பாடசாலை நிர்வாகத்தால் கொள்வனவு செய்யக்கூடியவையா எனத் தீர்மானித்தல்.

பாடசாலையின் தேவைகளை நன்கு வரையறை செய்தல்.

உதிரிப் பாகங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் சில பாவனைப் பொருட்களைப் பொறுத்தவரை சில விஷேட அளவுகள், தன்மைகள் வேண்டப்படலாம். அவை தொடர்பாக தெளிவான வரையறையை தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.

மாதிரிகளைப் பரிசீலித்து பொருட்களுக்கான விலை மனுக் கோரலை மேற்கொள்வதும் சிறந்தது.

ஒரே வகையான தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய எனினும் தரத்தில் வேறுபட்ட பொருட்கள் சந்தையில் காணப்படலாம். எனவே பொருட்களின் தரம், தயாரிப்பு, தயாரிப்பு நிறுவனம் தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் கிடைக்கக்கூடிய உத்தரவாதம் போன்றவையும் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும்.

கிடைக்கக் கூடிய பணத்துக்கு ஏற்ற வகையில் வாங்க வேண்டிய பொருளின் தன்மை, அளவு போன்றன தீர்மானிக்கப்படல் வேண்டும்.

மேற்கூறப் பட்ட விடயங்கள் தொடர்பாக நன்கு அறிந்தவர்களிடம் இருந்தும் தகவல் பெற்றுக்கொண்டதன் பின்னர் குறிப்பிட்ட பொருளல்லது சேவைகள் தொடர்பாக கொள்வனவுக்கான கேள்வி கோரலை மேற்கொள்ள முடியும்.

**கேள்வி கோரலுக்கான தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை**

கற்பித்தலுக்கு தேவையான நுகர்வுப்பொருள்களை கொள்வனவு செய்ய உரிய ஆசிரியர்களினால் தரப்படும் ஆவணங்கள் மூலம் முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து முன்னைய ஆண்டின் இறுதியில் பெறுகைக் குழுவுக்கு சமர்ப்பித்தல். அவ் ஆவணத்தில் பொருட்கள் தொடர்பான விபரக்குறிப்பை நன்கு தெளிவு படுத்தி இருத்தல் வேண்டும்.

**கேள்வி கோரலுக்கான பெறுகைக் குழுவின் அறிக்கை**

தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் ஆண்டின் இறுதித் தவணையில் தயாரித்து வழங்கப்படும் தேவைப் பட்டியலைப் (நுகர்வுப்பொருள் மற்றும் மூலதனப் பொருள்) பரிசீலனை செய்து மதிப்பீட்டு ஆவணத்தின் முன்னுரிமைக்கு அமைய தயார்படுத்தி அமுலில் உள்ள நிதியாண்டின் தை மாதத்துக்குள் பரிசீலனை செய்து அங்கீகரிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விலை மனுக்கோரல்**

500000 ரூபாய்க்கு குறைவான பெறுகைகளுக்கு மூன்று முத்திரையிடப் பட்ட விலை மனுக்களையும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கு ஐந்து முத்திரையிடப்பட்ட விலை மனுக்களையும் வலய/மாகாண கல்வி அலுவலகத்தில் பதிவு செய்துகொண்டுள்ள ஒப்பந்த காரர்கள் அல்லது வழங்குனர்களிடம் இருந்து அல்லது Rainbow Pages இல் பட்டியலிடப்பட்டுள்ள பிரபல வியாபாரிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

நேரடி ஒப்பந்த முறை மருந்து வகை, எரிபொருள், உதிரிப் பாகங்கள் நூல் வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்களிடம் இருந்து நூல்கள் கொள்வனவு செய்தல் போன்றவற்றுக்கு கைக்கொள்ளப்படலாம்.

விலை மனுக் கோரும் சந்தர்ப்பத்தில் விலை மனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி மற்றும் நேரம் விலை மனுக்கோரும் கடிதத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விலை மனுவைத் திறத்தல்**

முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களினதும் முன்னிலையில் திறக்கப்படல் வேண்டும். சகல விலை மனுக்களையும் பரிசீலனை செய்ய வேண்டும். பரிந்துரை செய்யப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொருந்தாத விலை மனுக்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் உரிய இடங்களில் ஒப்பமிடாத விலை மனுக்கள் நிராகரிக்கப்படல் வேண்டும். அந்தந்த விலை மனுக்கள் மீது நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் தெளிவாக குறிப்பிடப்பட்டு அனைத்து உறுப்பினர்களும் ஒப்பமிட வேண்டும்.

ஏனைய காரணங்களால் நிராகரிக்கப்பட்ட விலை மனுக்கள் மீது காரணம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு அனைத்து உறுப்பினர்களும் ஒப்பமிட வேண்டும்.

**விலைப் பட்டியல் தொடர்பான தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு, பெறுகைக் குழுவின் அறிக்கையைப் பெறுதல்**

விலை மனுக்களின் கணிப்பீடுகள் சரியாய் இருப்பதனை உறுதி செய்ய வேண்டும்.

விலை மனுவில் குறைந்த தொகை குறிப்பிடப்பட்டுள்ளதை முதல் இடத்திலும் மற்றவற்றை அதற்கு அடுத்த நிலையிலும் இட்டு ஏறுவரிசைப் படுத்த வேண்ட்டும்.

குறைந்த பட்ச விலை சமர்ப்பிக்கப்பட்டுள்ள விநியோகஸ்தரிடம் இருந்து பொருட்களைப் பெற்றுக்கொள்ள பரிந்துரைத்தல். எனினும் அந்த விநியோகஸ்தரிடம் இருந்து பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடாது என்பதற்கான விஷேட காரணங்கள் இருப்பின் அவை தொடர்பாக பட்டியலிட்டு அதன் கீழ் அனைத்து உறுப்பினர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பமிடுவதுடன் அதற்கு அடுத்த நிலையில் உள்ள விநியோகஸ்தரைத் தெரிவு செய்ய வேண்டும்.

கோரப்பட்ட பொருட்கள்/ சேவைகள் உரிய அளவில் உரிய தரத்தில் உரிய நேரத்தில் கிடைக்குமா என்பதை உறுதி செய்து கொள்வனவு செய்வதற்கான அறிக்கையை வழங்க வேண்டும்.

**பொருட்களைக் கொள்வனவு செய்தல்**

விநியோகஸ்தர் பொருட்களைப் பாடசாலைக்கு கொண்டுவந்து ஒப்படைக்க வேண்டும் என்பதால் போக்குவரத்து செலவையும் குறிப்பிடுமாறு ஆலோசனை வழங்க வேண்டும். பாடசாலை நேரத்தில் பொருட்கள் கொண்டு வந்து ஒப்படைக்கப் படல் வேண்டும்.

**பொருட்களைப் பெற்றுக் கொள்ளலும் அவற்றைப் பரிசீலித்தலும்**

பொருட்கள் வந்து சேர்ந்தவுடன் அவற்றின் தரம் அளவு என்பன உறுதி செய்யப்பட்டு பாடசாலையின் பொறுப்பில் எடுத்துக்கொள்ளப் படல்வேண்டும். எதிர்பார்க்கப்படும் தரத்துக்கு உட்படாத பொருட்களாக இருந்தால் அவற்றைத் திருப்பி அனுப்பி தரத்துக்கு அமைவான பொருட்களை விநியோகிக்கும்படி வழங்குனருக்கு அறிவிக்க வேண்டும்.

**கொள்வனவு தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளல்**

கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பொருத்தமானவை எனப் பரிந்துரைக்கப்பட்டதன் பின்னர் சகல நுகர்வுப் பொருட்களும் பிரதான இருப்புப் புத்தகத்தில் உரிய பக்கங்களில் கிடைப்பனவு நிரலில் அதிபரினால் பதியப்படல் வேண்டும். மூலதனப் பொருட்கள் ஆயின் பொது 44 ஆவணத்தில் உள்ளடக்க வேண்டும். தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் திருப்தி அற்றதன் காரணமாக நிராகரிக்கப்பட்ட பொருட்கள் இருப்பின் அவற்றைப் பொறுப்பேற்காது திருப்பியனுப்ப வேண்டும்.

**பொருள் கொள்வனவுக்கான கொடுப்பனவு செய்தல்**

விநியோக சேவைகளுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ள முன்னர் விநியோகஸ்தர்களின் கட்டளை, இருப்புச் சான்றிதழ், தரப் பரிசீலனைக் குழுவின் அறிக்கை போன்றன பெறப்படவேண்டும். பணிகளுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ள முன்னர் பற்றுச்சீட்டுகள், பணிகள் திருப்தியாய் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தொழிநுட்பச் சான்றிதழ் போன்றன பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது விளக்கமான காரணங்கள் கொண்ட பொது 35 மாதிரிப்படிவத்தை பூரணப்படுத்திய வவுச்சர் மூலமாகும்.

நிர்மாண வேலைகள் தொடர்பான கொடுப்பனவுகளுக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும்.

வவுச்சர் கொடுப்பனவு செய்ய பொருத்தமானது என்பதை பிரதி அதிபர் பரிந்துரை செய்ய வேண்டும். பின்னர் அதனை அதிபர் அங்கீகரிக்க வேண்டும். ஆசிரியர் எண்ணிக்கை போதியளவு இல்லாத பாடசாலைகளின் பெறுகைச் செயற்பாட்டின் அங்கீகாரம் மற்றும் கொடுப்பனவு வவுச்சருக்காக அங்கீகாரம் வழங்குவது வலயக் கல்விப் பணிப்பாளர் /கோட்டத்துக்கு பொறுப்பான பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகும். அத்துடன் கொடுப்பனவை உறுதிப்படுத்த வேண்டியது அதிபர் ஆகும். விநியோகப் பணிகள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள பெறுகை குழுவினால் வழங்கப்படும் அங்கீகாரத்தின் போட்டோப்பிரதி வவுச்சருடன் இணைக்கப்படல் வேண்டும்.

பிரதி அதிபரினால் வவுச்சர் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் செலவின நாளேட்டிலும் அந்த நிதியைக் குறிப்பிட்டு ஒப்பமிட வேண்டும்.

செலவின நாளேட்டில் குறிப்பிடப்பட்டதன் பின்னர் வவுச்சரை நிதிப் புத்தகத்தில் குறிப்பிட்டு அதற்காக காசோலை வழங்கப்பட வேண்டும்.

## தமிழில் எண்களின் பெயர்கள்

1 ஒன்று (ஏகம்)
10 பத்து (தசம்)
100 நூறு (சதம்)
1000 ஆயிரம் (சகசிரம்)
10,000 பத்து ஆயிரம் (ஆயுதம்)
1,00,000 நூறாயிரம்(லட்சம் - நியுதம்)
10,00,000 பத்து நூறாயிரம் (பிரயுதம்)
1,00,00,000 கோடி
10,00,00,000 அற்புதம்
1,00,00,00,000 நிகற்புதம்
10,00,00,00,000 கும்பம்
1,00,00,00,00,000 கணம்
10,00,00,00,00,000 கற்பம்
1,00,00,00,00,00,000 நிகற்பம்
10,00,00,00,00,00,000 பதுமம்
1,00,00,00,00,00,00,000 சங்கம்
10,00,00,00,00,00,00,000 வெள்ளம்(சமுத்திரம்)
1,00,00,00,00,00,00,00,000 அந்நியம்
10,00,00,00,00,00,00,00,000 மத்தியம்(அர்த்தம்)
1,00,00,00,00,00,00,00,00,000 பரார்த்தம்
10,00,00,00,00,00,00,00,00,000 பூரியம்
1,00,00,00,00,00,00,00,00,00,000 பிரமகற்பம் (கோடிக்கோடி-முக்கோடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவளுக்கு ஏற்பட்ட மாற்றம்

க. பதிவித்தியா , தரம் - 13

இன்று அவளுக்குப் பாராட்டு விழா, அவள் உயர்தரப்பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றமைக்காக இந்த விழா இடம்பெறுகின்றது. ஆனால் இந்த நிலையை அடைவதற்காக அவள் பட்ட பாடுகள் சொல்லில் அடங்காதவையாகும். அவள் தாங்க முடியாத பல கஸ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்தாள். அவள் மட்டுமல்லாமல் அவளடைய தாயும் அவளை இந்த நிலைமைக்கு கொண்டு வரப் பாடுபட்டாள். அவளது தந்தையோ மது போதைக்கு அடிமையாகி அவர்களை ஒவ்வொரு நாளும் சித்திரவதைப் படுத்துவார். அவளைப் படிக்க விடாமல் இரவில் சாராயம் அருந்தி விட்டு சத்தம் போட்டுக்கொண்டு படிக்கவே விடமாட்டார். அவளுக்கு மூன்ற தங்கைகள் இருந்தனர். அவர்களுக்குப் பாடங்களில் வரும் சந்தேகங்களை எல்லாம் அவளே தீர்த்து வைப்பாள்.

இவ்வாறு நடந்து கொண்டிருந்த வேளை அவளது தாய் இறந்து விட்டாள். இதனால் அவள் மன உளைச்சலுக்கு ஆளாகி சிறிது காலம் அவளுடைய படிப்பிற்கு இடர் ஏற்பட்டு விட்டது. அவளுடைய தந்தையோ பிள்ளைகளை கவனிக்காமல் மறு திருமணம் செய்து அவளுடைய வீட்டிலே குடும்பம் நடத்தி வந்தார். அவளுடைய சித்தியோ அவளை படிக்க விடாமல் துன்புறுத்தி வீட்டு வேலைகளை எல்லாம் அவளே செய்யுமாறு கட்டளையிடுவாள். அவளுக்கோ நன்றாக படிப்பதற்கு ஆசையிருந்தது. ஆனால் வீட்டுச்சூழல் அவளுக்கு படிப்பதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. அவள் தந்தையோ சித்தியானவள் தன்னுடைய பிள்ளைகளை துன்புறுத்துவதை அறிந்தும், அவளை தண்டிக்காமல் அவள் செய்வதுதான் சரியென அவருடைய மனைவியின் பேச்சை ஏற்றுக்கொண்டு அவர்களைத் துன்புறுத்தி பாடசாலைக்குச் செல்வதை நிறுத்தி விட்டார். அவளும் அவளுடைய தங்கைகளும் நேரத்திற்கு சாப்பிடுவதற்கும் தூங்குவதற்கும் முடியாமல் துன்பப்பட்டார்கள். தன் சிறிய தாயின் கொடுமையை தாங்க முடியாமல் அழுது கொண்டிருந்தவளின் மனதில் அந்த எண்ணம் உதித்தது. நான் மீண்டும் படிக்க வேண்டும், தன் தங்கைகளையும் நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் நாங்கள் ஒரு நல்ல நிலைமைக்கு வர வேண்டும் என்ற எண்ணம் மனதில் தோன்றியது. எழுந்தாள், தனது தந்தையையும் சிறிய தாயையும் எதிர்த்து வீட்டை விட்டு தங்கைகளை அழைத்துக்கொண்டு வெளியேறினாள்.

செய்வதறியாமல் வீதியில் சென்று கொண்டிருந்த வேளை நீண்ட நாட்களுக்குப் பிறகு தன் நண்பி ஒருத்தியை சந்திக்கின்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளிடம் தனக்கு ஏற்பட்ட கஸ்டங்களையும் கொடுமைகளையும் எடுத்துக்கூறினாள். அவளிடம் நடந்தவற்றை கூறியதால், மனதிலுள்ள பாரம் குறைந்து மனது இலேசானமாதிரி உணர்ந்தாள். அவளது தோழி அவளை அணைத்து ஆறுதல் கூறியதோடு மட்டுமல்லாது அவளது நிலைமையை அவள் தந்தையிடம் சொல்லி தன் நண்பி படிப்பதற்கும் தங்குவதற்கும் வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து விட்டுச்சென்றாள்.

இப்போது அவள் சிந்தனை முழுவதும் தான் படிக்க வேண்டும் விட்ட கல்வியைத் தொடர வேண்டும் என்பது மாத்திரமே. மீண்டும் பாடசாலை செல்கின்றாள். பாடசாலை விட்டு வந்ததும் பல வீடுகளுக்குச் சென்று வேலைகளை செய்து கொடுக்கின்றாள். அதுமட்டுமல்லாமல் ஓய்வு கிடைக்கும் நேரங்களில் தையல் வேலையும் செய்தாள்.

இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு அவள் மட்டுமல்லாமல் அவள் தங்கைகளையும் படிக்க வைத்தாள். வேலை நேரம் தவிர்ந்த நேரங்களை தான் படிப்பதிலே செலவிடுவாள். பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்லாமல் பாடசாலையில் கற்பிப்பதையே வீட்டில் படிப்பாள். தனித்திரு பசித்திரு விழித்திரு எனும் கூற்றுக்கு அமைய அல்லும் பகலும் அயராது படித்தாள்.

இவ்வாறு கஸ்டப்பட்டு படித்து கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி மாவட்ட மட்டத்தில் 11 ஆம் இடத்தைப் பெற்றாள். இன்று அவளுக்கு பாராட்டு விழா. அவள் தான் பட்ட கஸ்டங்களை எல்லாம் நினைத்துப் பார்க்கின்றாள். அதே சமயம் நான் முயற்சி செய்யாமல் இருந்திருந்தால் இவ்வாறான நிலையை அடைந்திருக்க முடியாது என்று நினைத்து மனம் மகிழ்கின்றாள். தாரகை நடுவே தண்மதி என வீற்றிருக்கும் அவளுக்கு என்னதான் பாராட்டினாலும் தன் கூட தாய் இல்லையே என்ற கவலை இருந்தது. அவளது நிலைமையை அறிந்த அவளது தந்தையும் சிறிய தாயும் அவளிடம் வந்து மன்னிப்புக்கேட்டு மீண்டும் வீட்டிற்கு அழைத்த போது அவள் அவர்களுடன் செல்ல மறுத்து தன் கையே தனக்குதவி என்ற கூற்றுக்கிணங்க முயற்சியுடன் வாழ்ந்து காட்டப்போகின்றாள்.

"முயற்சியுடையார்; இகழ்ச்சியடையார்;"

*******************************************************************************************

## டெங்கு

*டெங்கு நோய் என்பது வைரஸ் மூலம் பரவுகின்ற ஒரு நோய் என்பதுடன் நோய்த்தொற்றுள்ள ஒரு நுளம்பு காவியாக செயற்படுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெங்கு காய்ச்சல் — டெங்கு காய்ச்சலின் போது ஓரேயடியாக ஏற்படும் கடுமையான காய்ச்சல், கடுமையான தலைவலி மற்றும் பின்புறக் கண்களில் வலி, மூட்டுக்களிலும் தசைகளிலும் வலி என்பன பெரும்பாலும் ஏற்படுவதுடன் சில நோயாளர்களுக்கு சிவப்பு நிற பரந்துபட்ட தன்மையில் கொப்புளங்கள் மற்றும் சில வேளைகளில் முரசுகளிலிருந்து, மூக்கிலுருந்து குருதி கசியும் நிலைமைகள் ஏற்படும்.

நோய் அறிகுறிகள்

- தொடர்ச்சியாக வாந்தியெடுத்தல்
- வயிற்று வலி
- கடுமையான தாகம்
- கடுமையான தூக்கமும் மயக்க நிலைமையும்
- உணவு மீதுள்ள வெறுப்பு
- அசாதாரண குருதி வடியும் நிலைமை உதா: மாதவிடாய்ச் சுற்றின் போது அதிகமான குருதிப்பெருக்கு இடம்பெறல், குறித்த தினத்திற்கு முன்னர் மாதவிடாய்ச் சுற்று இடம்பெறல்.

நோயாளியிடம் பின்வரும் நோய் அறிகுறிகள் காணப்படுமிடத்து உடனடியாக வைத்திய அறிவுரை பெற்றுக்காள்ளப்படல் வேண்டும்.

- கைகால்களில் குருதியற்ற மற்றும் குளிரான தன்மை
- அமைதியின்மை மற்றும் குழப்ப நிலைமை
- தோலின் நிறம் மாற்றமடைதல்
- சிறுநீர் வெளியேறாமை அல்லது குறைவாக சிறுநீர் வெளியேறல்
- நடத்தையில் மாற்றம் — மயக்கம்/ இழிவான வார்த்தைப் பிரயோகம்

பூரணமான குருதிப் பரிசோதனை மேற்கொள்வதன் முக்கியத்துவம்

1. காய்ச்சல் ஏற்பட்டு மூன்றாவது தினத்தில் அனைத்து நோயாளர்களுக்கும் பூரணமான குருதிப் பரிசோதனை மேற்கொள்ளுதல் அத்தியாவசியமாகும்.
2. ஒருசில விசேட நோயாளர்களிக்கு முதலாவது தினத்தில் அல்லது முதல் தடவையாக சிகிச்சைக்காக வருகை தந்த சந்தர்ப்பத்திலேயே குருதிப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும்.(கர்ப்பிணிப் பெண்கள், ஒரு வயதுக்கு குறைந்த பிள்ளைகள், முதியவர்கள் மற்றும் ஏனைய காலங்கடந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ள நபர்கள்)
3. குருதிச் சிறுதட்டுக்களின் அளவு ≥150,000/ mm3 எனின் மூன்றாவது தினத்திலிருந்து நாளாந்தம் பூரண குருதிப் பரிசோதனை மேற்கொள்ளல் அத்தியவசியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. குருதிச் சிறுதட்டுக்களின் அளவு ≤150,000/ mm3 எனின் நாளொன்றுக்கு இரு தடவைகள் பூரண குருதிப் பரிசோதனை மேற்கொள்ளல் அத்தியவசியமாகும் (நோயாளியின் சிகிச்சை நிலைமை, அபாயமான நோய் அறிகுறிகளைக் காட்டுதல் மற்றும் ஏனைய சமூகக் காரணிகள் என்பவற்றின் காரணமாக நோயாளியை வைத்தியசாலையில் அனுமதிக்கும் தேவைப்பாடு தங்கியுள்ளது)

5. குருதிச் சிறுதட்டுக்களின் அளவு ≤100,000/ mm3 ஆகக் காணப்படும் வேளைகளில் நோயாளியை வைத்தியசாலையில் அனுமதிப்பது அத்தியவசியமாகும்

காய்ச்சல் தொற்றி 3 தினங்களில் அல்லது அதன் பின்னர் நோயாளியிடம் பின்வரும் நோய் அறிகுறிகள் காணப்படின் உடனடியாக வைத்திய ஆலோசனை பெற்றுக்கொள்ளுமாறு நோயாளிக்கு/ பெற்றோருக்கு அறிவூட்டுதல்.

- காய்ச்சல் குறைவடைந்த போதும் நோயாளியின் சிகிச்சைப் பண்புகளில் அதிருப்தி காணப்படல்
- வாயினால் திரவம் உட்கொள்ளல் கடினமாதல்
- வயிற்றில் ஏற்படும் கடுமையான வலி
- குளிரான மற்றும் உயிரற்ற கைகால்கள்
- உயிரற்ற தன்மை/ அமைதியின்மை/ வெறுப்பு
- ஒழுங்கற்ற விதமாக நிகழும் மாதவிடாய் குருதிப் பெருக்கு அல்லது மாதவிடாயுடன் நிகழும் அதிகரித்த குருதிப் பெருக்கு போன்ற குருதி வடிதலின் அதிகரித்த அபாய நிலைமைகள்
- 6 மணித்தியாலங்களுக்கு மேலான ஒரு காலத்திற்கு சிறுநீர் வெளியேறாமை

- வாழ்க்கையில் சந்திக்கும் ஒவ்வொரு இடர்பாட்டிலும், மிகப் பெரிய அநுகூலத்திற்கான விதை ஒளிந்திருக்கிறது.
- துன்பங்களுக்கு இடையில்தான் வாய்ப்புகள் ஒளிந்திருக்கின்றன.
- மனத்தளர்ச்சியுள்ளவர்களுக்கு ஊக்கமூட்டுங்கள்; வழுவற்றோருக்கு உதவுங்கள்; எல்லோருடனும் பொறுமையாயிருங்கள்.
- எல்லாப் பேய்களும் நம்முடைய மனத்திலே தான் இருக்கின்றன. மனம் கட்டுப்பட்டு அடங்கியிருந்தால் எந்த இடத்தில் நாம் இருந்தாலும் அது சொர்க்கமாக மாறிவிடும்.
- இன்பங்களை அநுபவிக்கும் ஆசையை முற்றிலும் மனத்திலிருந்து நீக்காமல் ஆன்மிக வாழ்வில் எதையுமே அடையமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரபுத்தொடர்கள்

தொகுப்பு: கா. சயந்தினி, தரம் - 13

1. ஆறவமர - மெதுவாக / நிதானமாக Slow and Steady
அவசரப்படாமல் ஆறவமர அந்தப் பிரச்சனைக்குத் தீர்வைத் தேடியதால் அந்த அதிபர் எல்லோராலும் பாராட்டப்பட்டார்.

2. உதட்டளவு - மனதார இல்லாமல் Not from the heart
அவன் உதட்டளவில் எனக்கு அனுதாபம் தெரிவித்ததை என்னால் உணர முடிந்தது.

3. ஏட்டிக்குப் போட்டி - எதிர்த்துப் பேசுதல் Talk back
எதற்கெடுத்தாலும் ஏட்டிக்குப் போட்டியாகப் பேசும் கலாவை அவளது தாயார் கண்டித்தார்.

4. ஒரு கை பார்த்தல் - சவால்/ திறமையைக் காட்டுதல் Challenge
அந்தப் போட்டியில் பங்கேற்குமாறு அவனின் நண்பர்கள் கூறியபோது குமரன் ஒரு கை பார்த்து விடுவது என்று தீர்மானித்தான்.

5. ஒளிவுமறைவு - மறைத்து Not frank
நண்பர்கள் ஒளிவுமறைவு இல்லாமல் பழகும்போது அவர்களிடையேயான உறவு பலப்படும்.

6. ஓட்டைக் கை - செலவாளி Spendthrift
நீ ஒரு ஓட்டைக் கையனாய் இருப்பதால் உன் தந்தை சேர்த்துவைத்த சொத்து முழுவதையும் விரைவில் செலவு செய்து ஏழையாகிவிடப் போகின்றாய்.

7. ஓட்டைவாய் - ரகசியத்தைக் காப்பாற்றாமை Unable to keep secrets
ஓட்டைவாயனான உன்னை நம்பி அந்த இரகசியங்களை எப்படி உனக்கு என்னால் சொல்ல முடியும்?

8. கண்மூடித்தனம் - அறியாமை/ சிந்திக்காமல் செயல்படுதல் Blindly
அரசியல் தலைவர்கள் சொல்வதையெல்லாம் மக்கள் கண்மூடித்தனமாக நம்பிய காலம் மலையேறிவிட்டது.

9. கம்பி நீட்டுதல் - யாருக்கும் தெரியாமல் தப்பித்தல் Deceive
நகைக்கடையில் திருட முயற்சித்த திருடன் காவலரைக் கண்டதும் கம்பி நீட்டினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கரைத்துக் குடித்தல் - அனைத்தையும் நன்றாக அறிதல் Know by heart

எமது பிரதம அதிதியின் பேச்சு அவர் பல தமிழ், ஆங்கில இலக்கிய நூல்களைக் கரைத்துக் குடித்தவர் என்பதை உணர்த்துகிறது.

11. குரங்குப்பிடி - பிடிவாதம் Stubborn

ஜனனி புது வருடப்பிறப்புக்கு தனக்கு விலையுயர்ந்த ஆடைகள் வேண்டுமென்று குரங்குப்பிடியாய் நின்றாள்.

12. கை கழுவுதல் - விட்டு விடுதல் / ஒதுக்கி விடுதல் Get rid of

மதுவுக்கு அடிமைப்பட்ட தவராஜனை அவனுடைய மனைவி கைகழுவினாள்.

13. கையுங்களவுமாக - தவறு செய்த இடத்திலேயே அகப்படுதல் Red-handed

எமது தோட்டத்தில் நேற்றிரவு தேங்காய்கள் திருட முயன்ற மனிதன் கையுங்களவுமாய்ப் பிடிபட்டான்.

14. சிட்டாய்ப் பறத்தல் - விரைவாகச் செல்லுதல் Quickly

பள்ளிக்கூடம் முடிந்ததும் அந்தக் குழந்தைகள் வீட்டிற்குச் சிட்டாய்ப் பறந்தனர்.

15. செவி சாய்த்தல் - கவனமாகக் கேட்டல் Heed

அந்த ஆசிரியரின் அறிவுரைக்குச் செவி சாய்த்த மாணவன் படிப்பில் சாதனை படைத்தான்.

16. தட்டிக் கேட்டல் - கண்டித்தல் Confront/ Question

தவறு செய்கின்ற அரசியல்வாதிகளை மக்கள் தட்டிக் கேட்கின்ற சூழ்நிலை இந்த நாட்டில் ஏன் இன்னமும் உருவாகிவிடவில்லை?

17. தட்டிக் கொடுத்தல் - பாராட்டுதல் Encourage

தனது பாட நூல்களைக் கவனமாகப் பேணிய அந்த மாணவனை அந்தப் பள்ளிக்கூடத்தின் முதல்வர் தட்டிக்கொடுத்து உற்சாகமூட்டினார்.

18. தட்டிப் பறித்தல் - அபகரித்தல் Snatching

அந்தக் குழந்தையிடம் இருந்த இனிப்புகளை உன் மகன் தந்திரமாகத் தட்டிப் பறித்துவிட்டான்.

19. பம்பரமாகச் சுழலுதல் - விரைவாகச் செய்தல் Fast

அந்தத் திருமண வீட்டில் மணப் பெண்ணின் பெற்றோர் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. புத்தகப்புழு - எப்போதும் படித்துக் கொண்டிருத்தல் Bookworm
மாணவர்கள் வெறும் புத்தகப்புழுக்களாக இல்லாமல் வெளி உலக அறிவோடு இருத்தல் அவசியம்.

21. அளவளாவுதல் - பேசுதல் Discuss
எமது பிரதேச அபிவிருத்தி பற்றி நான் பிரதம மந்திரியுடன் அளவளாவினேன்.

22. கட்டுக்கதை - பொய்க்கதை Lie
அந்த ஒப்படையைச் செய்யாததற்காக ஆயிஷா கூறிய கட்டுக்கதையை அவளின் ஆசிரியர் நம்பவில்லை.

23. காலில் விழுதல் - மன்னிப்புக் கேட்டல் / ஆசி பெறுதல்
தன் தவறுகளை உணர்ந்து திருந்திய முகுந்தன் தன் தாயாரின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான்.
அந்த மாணவர்கள் பெரியோர்களின் காலில் விழுந்து ஆசி பெற்றனர்.

24. பகற்கனவு - கற்பனை செய்தல் Daydream
பகற்கனவு கண்டு கொண்டிருந்த உஷா அவளின் ஆசிரியர் சொன்ன பாடங்களைச் சரியாகக் கிரகிக்கவில்லை.

25. பல்லைக் காட்டுதல் - தவறைச் சிரித்துச் சமாளித்தல் Adjusting
பாடப் புத்தகத்தை எடுத்து வர மறந்த பாமா தோழியிடம் பல்லைக் காட்டி சிரித்துச் சமாளித்தாள்.

26. பாட்டு வாங்குதல் - திட்டு வாங்குதல் Get Scolded
வருட இறுதித் தேர்வில் குறைந்த மதிப்பெண்கள் பெற்றுக்கொண்ட கலாயினி தன் தாயிடம் நன்றாகப் பாட்டு வாங்கினாள்.

27. பிடி கொடுத்தல் - சந்தர்ப்பம் அளித்தல் Giving a Chance
உதவி கேட்க வந்த மாறனிடம் சங்கர் பிடி கொடுக்காமல் பேசினான்.

28. வாலாட்டுதல் - குறும்புத்தனம் செய்தல் Naughty
உங்கள் தந்தை அலுவலகம் சென்றுவிட்டதால் நீங்கள் வாலாட்டத் தொடங்கிவிட்டீர்கள்.

29. ஆணித்தரம் - உறுதியாக Firmly
தன் மகன் கள்வன் அல்ல என்று அந்தப் பெண் ஆணித்தரமாகக் கூறினாள்.

30. ஆறப் போடுதல் - தள்ளிப்போடுதல் Delay
நீ இப்போது கோபத்தில் இருப்பதால் எந்த முடிவும் எடுக்காமல் சற்று ஆறப் போடுதல் நன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. இனிக்கப் பேசுதல் - இனிமையாகப் பேசுதல் Sweet talk
அந்தக் குழந்தை மழலை மொழியில் இனிக்கப் பேசியது.
அந்தப் பையன் இனிக்கப் பேசி அந்தப் பெண்பிள்ளையைத் தன் காதல் வலையில் வீழ்த்தினான்.

32. ஈடுகட்டுதல் - சரி செய்தல் Make up
நான் பாடசாலை நூலகத்தில் பெற்றுக்கொண்ட இரண்டு புத்தகங்களைத் தொலைத்ததால் அதனை ஈடுகட்ட இரண்டாயிரம் ரூபாய்கள் கொடுக்க வேண்டியுள்ளது.

33. உரித்து வைத்தல் - ஒரே மாதிரி இருத்தல் Similar
இரட்டைச் சகோதரர்களான கோபிராசனும் கோபிநாதனும் ஒருவரை ஒருவர் உரித்து வைத்தாற் போல் இருந்தார்கள்.

34. ஓட்டம் பிடித்தல் - தப்பித்தல் Escape
அந்தக் குழந்தையின் வளையல்களைத் திருட முயன்ற மனிதன் அங்கு திடீரென்று வந்த காவலரைப் பார்த்ததும் ஓட்டம் பிடித்தான்.

35. ஓய்வு ஒழிச்சலின்றி - ஓய்வின்றி / தொடர்ந்து வேலை செய்தல் Without Rest
எமது அதிபர் எமது கல்வி முன்னேற்றத்திற்காக ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்தார்.

36. கதை கட்டுதல் - இல்லாததைச் சொல்லுதல் Make up story
பொறாமை காரணமாக சுஜாத்தா தன் தோழியைப் பற்றி தன் பெற்றோரிடம் கதை கட்டினாள்.

37. காக்கை பிடித்தல் - காரியம் சாதிக்க இனிமையாகப் பேசுதல் Flatter
ரவி அரசியல் வாதிகளைக் காக்கை பிடித்து தன் நோக்கங்களை அடைந்து கொள்வதில் வல்லவன்.

38. காட்டிக் கொடுத்தல் - மற்றவரை மாட்டிவிடுதல் Betray
அந்தத் திருடன் தான் மாட்டிக் கொண்டவுடன் தன் கூட்டாளியையும் காட்டிக் கொடுத்தான்.

39. குருட்டுப் பாடம் - புரியாமல் மனனம் செய்தல் Studying blindly
நீங்கள் குருட்டுப் பாடம் படிக்காமல் புரிந்துக்கொண்டு படிக்க வேண்டும்.

40. கை கூடுதல் - நிறைவேறுதல் Fulfil
அவளின் தந்தை அதிகளவு சீதனம் கொடுக்க ஒப்புக்கொண்டதால் சசிகலாவின் திருமணப் பேச்சு கை கூடியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. கை கொடுத்தல் - உதவி செய்தல் Help
நான் ஆபத்தில் இருந்த போது நீ எனக்குக் கை கொடுத்ததை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்.

42. கொட்டமடித்தல் - (சந்தோஷமாக) அரட்டையடித்தல் Chatter
முஸ்தபாவின் திருமணத்திற்கு வந்த அவனது நண்பர்கள் கொட்டமடித்தனர்.

43. தட்டிக் கழித்தல் - பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமை Refuse
வேலை செய்ய விரும்பாத சில ஊழியர்கள் தமது பொறுப்பைத் தட்டிக் கழிக்கக்கூடும்.

44. தலையிடுதல் - காரியத்தில் குறுக்கிடுதல் Interfere
இந்திய அரசாங்கம் இலங்கையின் உள்நாட்டு அரசியலில் தலையிடப்போவதில்லை என்று அறிவித்துள்ளது.

45. தூக்கிவாரிப் போடுதல் - அதிர்ச்சியடைதல் Shock
தன் மகனை அடிபட்ட நிலையில் பார்த்த தயாளினிக்கு தூக்கிவாரிப் போட்டது.

46. நொடித்துப் போதல் - நஷ்டமடைதல் Loss
வியாபாரத்தில் போதிய கவனம் செலுத்தாததால், அமலாவின் கணவர் நொடித்துப் போனார்.

47. பின்வாங்குதல் - திரும்பப் பெறுதல் Withdraw
பயிற்சி செய்யாததால் அனுஷா அந்தப் போட்டியிலிருந்து பின்வாங்கினாள்.

48. மனக்கோட்டை கட்டுதல் - கற்பனை செய்தல் Dreaming / Building sand castles in the air
அபினேஷ் இங்கிலாந்துக்கு சென்று அதிக பணம் உழைக்க வேண்டும் என்று மனக்கோட்டை கட்டினான்.

49. இரட்டை வேடம் போடுதல் - நடித்து ஏமாற்றுதல் Cheating by acting
அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் பிரதமரிடமும் எதிர்க்கட்சித்தலைவரிடமும் இரட்டை வேடம் போட்டு ஏமாற்றினார்.

50. நோட்டம் பார்த்தல் - கவனித்தல் Observe
திருடப் போகும் வீட்டைத் திருடன் முன்பே நோட்டம் பார்ப்பது வழக்கம்.

51. பகற்கொள்ளை - அளவுக்கதிகமான விலை High price
அந்த வணிகர் சந்தை விலையை விட அதிகமான விலைக்கு அரிசி விற்றதால் மக்கள் அதை பகற்கொள்ளையாகக் கருதினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. பஞ்சாய்ப் பறத்தல் - அதிகமாக செலவழித்தல் Spending a lot
நான் சேர்த்து வைத்திருந்த பணம் எல்லாம் என் மகளின் திருமணத்தில் பஞ்சாய்ப் பறந்தது.

53. முதலைக் கண்ணீர் - அழுவது போல் நடிப்பது Crocodile tears
வீட்டுப்பாடம் செய்து முடிக்காததால், பள்ளிக்கூடம் செல்லாமல் தவிர்ப்பதற்கு, வயிற்று வலி என்று கூறி சம்சுதீன் முதலைக் கண்ணீர் வடித்தான்.

54. வயிற்றிலடித்தல் - பிழைப்பைக் கெடுத்தல் Destroying
கொடுக்க வேண்டிய ஊதியத்தைக் கொடுக்காமல் சங்கர் தொழிலாளர்கள் வயிற்றிலடித்தான்.

55. வாய் தவறுதல் - தவறுதலாக Tongue slip
மாலதி அந்த மாணவிகளின் பெயர்களை வாய் தவறுதலாய் மாற்றிக் கூப்பிடுவார்.

56. வெள்ளிடைமலை - யாவரும் அறியும்படி தெளிவாய் இருப்பது to be open
பொதுவாழ்க்கையில் இருக்கும் கலைஞர்கள் வெள்ளிடைமலையாக இருந்தால் வீண் வதந்திகளைத் தவிர்க்கலாம்.

57. அவசரக் குடுக்கை - அவசரமாக செயலைச் செய்தல் Hasty
அந்த ஆசிரியர் தான் சொல்லிக் கொடுக்கும் முன் கணக்கைச் செய்த மாணவர்களை அவசரக் குடுக்கைகள் என்று திட்டினார்.

58. அள்ளியிறைத்தல் - அதிகமாக செலவு செய்தல் Spending lavishly
மாலதியின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக அவளது அப்பா காசை அள்ளியிறைத்திருந்தார்.

59. இடங்கொடுத்தல் - செல்லம் கொடுத்தல் Pampering more
மீனா அதிக இடங்கொடுத்து மகனை வளர்த்ததால் அவன் ஒழுக்கமின்றி வளர்ந்தான்.

60. இரண்டுபடுதல் - அதிக சத்தமிடுதல் Too noisy
விடுமுறையில் இருந்த மாறனும் ரவியும் வீட்டை இரண்டு படுத்தினர்.

61. இழுத்தடித்தல் - நேரம் கடத்துதல் To drag
மாலதி தனக்கு கொடுக்கப்பட்ட வேலையை செய்யாமல் இழுத்தடித்தாள்.

62. எடுத்த எடுப்பில் - தொடக்கத்தில் Very first
வாசுதேவனின் பழ வியாபாரம் எடுத்த எடுப்பிலேயே சூடு பிடித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. ஒத்துப் பாடுதல் - ஏற்றுக் கொள்ளுதல் Conform
அதிபர் என்ன சொன்னாலும் அந்த வித்தியாலயத்தின் பிரதி அதிபர் ஒத்துப் பாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

64. ஒற்றைக் காலில் நிற்றல் - பிடிவாதமாக இருத்தல் Stubborn
அனித்தா துஸ்யந்தனைத் திருமணம் செய்ய வேண்டுமென்று ஒற்றைக் காலில் நின்றாள்.

65. ஓடியாடிப் பார்த்தல் - வேகமாக வேலை செய்தல் Briskly
தன் தாயின் உடல்நலம் மோசமாய் இருந்தபோது இந்திரன் ஓடியாடித் தன் தாயைப் பார்த்துக் கொண்டான்.

66. கக்க வைத்தல் - உண்மையை வரவழைத்தல் Confess the truth
காவலர்கள் திருடனிடமிருந்து உண்மையைக் கக்க வைக்க பல உத்திகளைக் கையாண்டனர்.

67. கழித்துக் கட்டுதல் - ஒதுக்குதல் Eliminate
வேண்டாத பொருட்களை கழித்துக் கட்டிவிட்டு சுமதி வீட்டைச் சுத்தப் படுத்தினாள்.

68. காது குத்துதல் - ஏமாற்றுதல் Cheat
அந்த உண்மையை மறைத்ததன் மூலம் அவனின் மனைவி அவனுக்குக் காது குத்தி விட்டதாக காதர் கூறினான்.

69. கை நனைத்தல் - சாப்பிடுதல் To eat
திருமண நிச்சயதார்த்தத்திற்கு முன்பு மணப் பெண் வீட்டில் கை நனைக்கக் கூடாது என்பது எங்கள் கிராமத்தில் உள்ள ஒரு பொதுவான வழக்கம்.

70. கையைக் கடித்தல் - நஷ்டமடைதல் Loss
மீனா தனது அக்காவின் பிள்ளைகளுக்கு புது வருடத்துக்காக ஆடைகள் வாங்க அதிகமாக செலவு செய்ததால், அந்த மாதம் செலவு கையைக் கடித்தது.

71. தலைமேற்கொள்ளுதல் - பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல் Take charge
தங்கையின் திருமணத்தை சிறப்பாகச் செய்ய வேண்டுமென்ற தந்தையின் கட்டளையை தலைமேற்கொண்டு அதற்கான ஏற்பாடுகளை இப்போது தவராஜன் செய்து கொண்டிருக்கின்றான்.

72. பழிவாங்குதல் - பழி தீர்த்தல் Revenge
தனக்கு ஏற்பட்ட இழப்பிற்காக அவன் என்னைப் பழி வாங்கத் துடித்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. பெயர் பொறித்தல் - பெயரைப் பதித்தல்/ புகழ் பெறுதல் Engrave / Make history

அந்தக் கல்லூரியில் புதிதாய் திறந்த கட்டடத்தில் முன்னாள் பிரதம மந்திரியின் பெயர் பொறிக்கப்பட்டது.

74. பேச்சுக் கொடுத்தல் - இடையூறு செய்தல் Interrupt

அவனின் மனைவி இடையிடையே பேச்சுக் கொடுத்ததால் முருகப்பனால் அந்த வேலையைச் சரிவரச் செய்ய முடியவில்லை.

75. விட்டுக்கொடுத்தல் - சகித்துப் போவது Compromise

கணவனும் மனைவியும் விட்டுக்கொடுத்து வாழ்ந்தால், திருமண வாழ்க்கை இனிமையாக இருக்கும்.

76. வெட்டிப்பேச்சு - வீண்பேச்சு Trash-talk

காந்தனின் வெட்டிப்பேச்சினால் அவன் வியாபாரம் நட்டமடைந்தது.

77. ஒருமுகமாக - கவனமாக Concentrate

ஒருமுகமாக ஒரு செயலை செய்தால் வெற்றி நிச்சயம்.

78. கன்னி முயற்சி - முதல் முயற்சி First try

கமலா கன்னி முயற்சியாக சமைத்த உணவு உருசியாக இருந்தது.

79. கிள்ளுக்கீரை - எளிமையாக கையாளக்கூடிய Easy to handle

அந்தக் கல்லூரிக்கு புதிதாகச் சேர்ந்த கிராமத்து மாணவனை அனைவரும் கிள்ளுக்கீரை என எண்ணினார்கள்.

80. தலை முழுகுதல் - உறவை வெட்டிவிடுதல் Cut off relationship

தவறு செய்த தன் மகனை செல்வநாயகம் தலை முழுகினார்.

81. நட்டாற்றில் விடுதல் - முழுமையான உதவி செய்யாமல் இருத்தல் Left in half way

தெரியாத தொழிலில் முதலீடு செய்ய வைத்து என்னை நட்டாற்றில் விட்ட தவறை நீ செய்துவிட்டாய்.

82. நாக்கு நீளுதல் - மரியாதை இல்லாமல் பேசுதல் Talking without respect

நளாயினி பெரியவர்களிடம் எதிர்த்துப் பேசிய போது, அவளுக்கு நாக்கு நீண்டு விட்டதாக அவளது தாயார் கண்டித்தார்.

83. முகம் கருகுதல் - வாடுதல் Fading out

தன்னைப் பார்க்க தன் தாய் வரவில்லை என்றறிந்த விடுதி மாணவி முகம் கருகினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. வயிற்றில் புளியைக் கரைத்தல் - பயப்படுதல் Fear

இறுதித் தேர்வு முடிவைத் தெரிந்து கொள்ள பள்ளிக்குச் சென்ற கலாவுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.

85. இட்டுக்கட்டுதல் - இல்லாததைக் கூறுதல் Spreading rumours / Make up stories

தேர்வில் தெரியாத வினாவிற்கு பானுமதி விடையை இட்டுக்கட்டினாள்.
மீனா தன் தவறை மறைப்பதற்காக தன் தோழியைப் பற்றி இட்டுக்கட்டினாள்.

86. இடித்துரைத்தல் - கண்டித்து அறிவுரை கூறுதல் Advise

தவறு செய்த மாணவனை அந்த ஆசிரியர் இடித்துரைத்தார்.

87. ஈடேறுதல் - நிறைவேறுதல் Fulfil

கனடாவுக்குப் போக வேண்டும் என்ற மயூரியின் நீண்ட நாள் ஆசை ஈடேறியது.

88. உச்சி குளிர்தல் - மகிழ்ச்சியடைதல் Delightful

வர்ஷனாவின் நற்செயலைப் பாராட்டி அவளின் பாடசாலை அதிபர் அவளுக்கு விருது வழங்கிய போது அவளது தாயார் உச்சி குளிர்ந்தார்.

89. உயிர் விடுதல் - பெரும் முயற்சி செய்தல் Sacrifice / Hardworking

கணவனை இழந்த ஆமினா தன் பிள்ளைகளை வளர்க்க உயிரை விட்டு உழைத்தாள்.

90. எடுத்தெறிந்து பேசுதல் - மதிக்காமல் பேசுதல் Disobedient / Talk back

ஹரிப்பிரியா கோபத்தில் தந்தையை எடுத்தெறிந்து பேசியதற்கு மன்னிப்புக் கேட்டாள்.

91. கரை கண்டவர் - நிபுணர், திறமைசாலி Expert

எமது அதிபர் பூவேந்திரன் கணிதத்தில் கரை கண்டவர் என்று எல்லா மாணவர்களும் ஆசிரியர்களும் கூறுகின்றனர்.

92. கரையேறுதல் - முன்னேற்றம் அடைதல் Development / Progress

கணிதத்தில் பிந்தங்கியிருந்த சேகர் தனது இடைவிடாத பயிற்சியினால் கரையேறினான்.

93. கழுத்திற் கட்டுதல் - பிறரிடம் சுமையை ஏற்றிவைத்தல் Pushing work to others

சோம்பேறியான தவசேகரம் தன் வேலையைப் பிறர் கழுத்தில் கட்டுவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94. சட்டை செய்தல் - பொருட்படுத்துதல் Abide
எதிரில் வேகமாக வந்த வாகனத்தை சட்டை செய்யாததால் சரத் விபத்தில் சிக்கி தன் ஒரு காலை இழந்தான்.

95. சூளுரைத்தல் - சபதம் செய்தல் Challenge
தன் கணவன் கோவலனைக் சந்தேகித்துக் கொன்ற பாண்டிய மன்னனை பழி வாங்குவேன் என்று சூளுரைத்தாள் கண்ணகி.

96. சூறையாடுதல் - கொள்ளையடித்தல் Looting
கடந்த வாரம் ஒரு இரவுப் பயணத்தின் போது மோகன் குடும்பத்தினரிடம் இருந்து ஒரு கொள்ளைக் கும்பல் பணத்தையும் நகைகளையும் சூறையாடியது.

97. தலையாட்டிப் பொம்மை - ஒத்துப்பாடுதல் Agree to everything
அவளின் அம்மா கூறியவற்றிக்கு அமுதா தலையாட்டிப்பொம்மையாய் பதிலளித்தாள்.

98. தலையெடுத்தல் - முன்னேற்றம் அடைதல் Progress / Development
மீண்டும் இலங்கையில் பயங்கரவாதம் தலையெடுக்க அரசு அனுமதிக்காது.

99. திக்குமுக்காடுதல் - திண்டாட்டம்/ செய்வதறியாது நிற்றல் Not knowing what to do
இரவு பன்னிரண்டு மணிக்கு பிறந்தநாள் வாழ்த்து சொல்ல வந்த தனது தாத்தாவைக் கண்டு வரதன் திக்குமுக்காடிப் போனான்.

100. பல்லவி பாடுதல் - திரும்பத் திரும்பச் சொல்லுதல் Repetition
நாம் ஏதாவது சிக்கலில் மாட்டிக்கொண்டால், நம் பிரச்சனைகளைப் பல்லவி பாடாமல் தீர்வு காண முயல வேண்டும்.

101. புளிப்புத் தட்டுதல் - பிடிக்காமல் போதல் Get tired of it / Loss of interest
விடுதியில் தங்கிப் படித்த சீதாவிற்கு விடுதி உணவு புளித்துப்போனதால், அவள் கடந்த வாரம் தன் தோழி வீட்டிற்குச் சென்றாள்.

102. மனந்திறந்து பேசுதல் - வெளிப்படையாகப் பேசுதல் Talking openly
எவ்வளவு பெரிய மனக்கசப்பாக இருந்தாலும் மனந்திறந்து பேசினால் தீர்வு காணலாம்.

103. விழி பிதுங்குதல் - அதிக சுமை Over burden
நான்கு நாட்கள் பள்ளி செல்லாததால், படிக்க வேண்டிய பாடங்களைப் பார்த்து முரளிக்கு விழி பிதுங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

104. வெள்ளை மனம் - திறந்த மனம் (வெளிப்படை) Innocent

குழந்தைகள் கள்ளம் கபடமற்ற வெள்ளை மனம் கொண்டவர்கள் எண்பது உண்மையா?

105. கரி பூசுதல் - அவமானம் ஏற்படுத்துதல் / மதிப்பைக் கெடுத்தல் Insult

ஒழுக்கமற்ற செயலைச் செய்து மோகன் தன் பெற்றோர் முகத்தில் கரியைப் பூசினான்.

106. கானல் நீர் - இல்லாத ஒன்று இருப்பது போல் தெரிவது Mirage

தன் கணவன் திருந்திவிடுவான் என்ற சுனிதாவின் நம்பிக்கை கானல் நீரானது.

107. சக்கைப் போடு போடுதல் - வெற்றிகரமாக victoriously

அண்மையில் வெளி வந்த கமலதாசனின் திரைப்படம் அனைத்து திரையரங்குகளிலும் சக்கைப் போடு போடுகிறது.

108. நெஞ்சைப் பிளத்தல் - மிகத் துயரமான Heart breaking

தன் அன்பு மனைவியின் மரணச்செய்தி சண்முகனின் நெஞ்சைப் பிளந்தது.

109. பட்டுத்தேறுதல் - அனுபவித்துத் தெரிந்துக் கொள்ளுதல் Realizing by experience

மனைவி பேச்சைக் கேட்காமல் இருந்த எழிலன் பெருந்துன்பத்திற்குப் பிறகு பட்டுத்தேறினான்.

110. முயற்கொம்பு - இல்லாத ஒன்று Non-existent

ஏழைகளான எமக்கு மூன்று வேளை உணவுகூட முயற்கொம்பு தான்.

111. வாய்ப்பந்தல் - ஆடம்பரப் பேச்சு Bombast

வினித்தா செயலில் ஒன்றும் இல்லாவிட்டாலும் வாய்ப்பந்தல் போடுவதில் தேர்ந்தவள்.

*****************************************************************************

இளைஞனே மதுவினால் ஏற்படும் தீமைகளைப் புரிந்து கொள்

→ சித்திரம் போல் இருக்கும் உடம்பு அழியத்தொடங்கும்.

→ குடிக்கும் வேளையில் நண்பர்களிடம் வீண் பகைகளைக் கொண்டு வந்து சேர்க்கும். சில சமயம் அதுவே நண்பர்களின் பிரிவிற்கு காரணமாகக் கூட அமையும்.

→ நீ என்ன சொன்னாலும் உலகம் உன்னை நம்பாது அதுவும் குடிப்போதையில் இருக்கும் போது.

→ நீ நிதானமாகப் பேசினாலும் கூட 'இது குடிகாரன் பேச்சு' என்று உலகம் உன்னை பின்னே தள்ளிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

→ நீ குடிக்கும் மது உன் குடும்பத்தின் வாழ்வைக் குடித்து விடும்.
→ நீ கஷ்டப்பட்டு உருவாக்கிய வருமானம் பாழாகும்.
→ மதுவினால் நீ நோயுற்றால் உனக்காக யாரும் வருத்தப்படமாட்டார்கள்.
→ குடும்பத்திலும் சமுதாயத்திலும் புறக்கணிக்கப்பட்ட ஒரு உயிரினமாக மாறி விடுவாய்.
→ நற்குணப் பெண்கள் அதிகம் உன்னை விரும்பமாட்டார்கள். ஏன்? அருகில் வரவே பயப்படுவார்கள்.

உங்கள் சிந்தனைக்கு

❖ மனிதன் கடந்த காலத்தில் நடந்ததற்கு பரிகாரம் தேடுவதைவிடப், புதிய சுமை சேராமலும், பாவம் செய்யாமலும் வாழ்வதற்கு ஆண்டவனைத் துணை கொள்வதே முக்கியமாகும்.
❖ எளியோரின் நலனில் அக்கறை கொள்பவர் பேறு பெற்றோர். துன்ப நாளில் ஆண்டவர் அவரை விடுவிப்பார்.
❖ தொலைவில் இருக்கும் உடன் பிறந்தாரை விட, அண்மையில் இருக்கும் நண்பரே மேல்.
❖ உன் சகோதரர்கள் ஏழ்மைப்பட்டு இளைத்துப் போனால், அவர்களுக்கு உதவு.
❖ வாழ்க்கை என்பது அவரவர் வாழ்வதற்கு என்று மட்டுமே எனக் கருதக்கூடாது. மற்றவர்கள் நலனுக்கும் நாம் முக்கியத்துவம் தர வேண்டும்.
❖ நற்பண்பு இல்லாதவனின் அறிவு ஆபத்தானது! அறிவில்லாதவனின் நற்பண்பு பயனற்றது!
❖ மனிதர்க்கு உதவுவது ஆண்டவனுக்கு உதவுவதாகும். எனவே எச்சமயத்தாரும் ஏழைகளுக்கு உதவத் தயங்கக்கூடாது.
❖ கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.
❖ அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது. அதிகம் செயல்படுபவனையே கைகூப்பித் தொழுகிறது.
❖ கற்ற அறிவையும், பெற்ற செல்வத்தையும் இறுதிக் காலம் வரை மற்றவர்களுக்காகச் செலவிடுங்கள்.
❖ நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.
❖ நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.
❖ சலித்துக் கொள்பவன் ஒவ்வொரு வாய்ப்பிலும் உள்ள ஆபத்தைப் பார்க்கிறான். சாதிப்பவன் ஒவ்வொரு ஆபத்திலும் உள்ள வாய்ப்பினைப் பார்க்கிறான்.
❖ அறிவு ஒன்றுதான் அச்சத்தை முறிக்கும் அரிய மருந்து. அறிவை வளர்த்துக் கொண்டால் எல்லாவிதமான பயங்களும் அகன்றுவிடும்.
❖ தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்த செயலையும் செய்யாமல் பின் வாங்குவது இழிவானது.
❖ எளியோரின் நலனில் அக்கறை கொள்பவர் பேறு பெற்றோர். துன்ப நாளில் ஆண்டவர் அவரை விடுவிப்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முயற்சி திருவினையாக்கும்

த. ஹேமசாலினி, தரம் -12

முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என்று சொல்வார்கள். நம்மால் இது நிச்சயம் முடியாது என்று எண்ணும் கடினமான காரியங்களைக்கூட திரும்பத் திரும்ப விடாமுயற்சியுடன் செய்தால் கட்டாயம் வெற்றி அடைய முடியும். அது நமக்கு மேலும் நம்பிக்கையை ஊட்டும்.

"தெய்வத்தால் ஆகாதது எனினும் முயற்சிதன் மெய் வருந்தக் கூலி தரும்" என்பது அனைவரும் அறிந்த ஒரு குறள் வாசகம். ஊழ் வினையால் ஒரு செயலைச் செய்ய முடியாமற் போனாலும் முயற்சியானது தன் உடல் வருந்திய அளவுக்காவது கூலியைக் கொடுக்கும் என்பதை இதன் வாயிலாக நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்கிறோம். விடா முயற்சியானது ஒருவனுக்கு பெறுவதற்கு அரிய செல்வத்தை ஈட்டித் தரவல்லது என்றும் சோம்பலானது அவனிடத்தில் வறுமையையே புகுத்தும் என்பதையும் வள்ளுவப் பெருந்தகை எமக்கு உணர்த்துகிறார்.

உலகிலே மனிதர்களாகப் பிறந்தவர்கள் மாத்திரமல்ல அனைத்து உயிரினங்களுமே தம் வாழ்வை நடத்துவதற்கு ஏதோ ஒரு வகையில் முயற்சிகளை மேற்கொண்டுதான் வருகின்றன. மிகவும் சிறிய பிராணிகளான எறும்பு, தேனீ போன்றவற்றின் சுறுசுறுப்பையும் முயற்சியையும் நாம் எல்லோரும் பின்பற்றல் அவசியம். முயல்தல் மூலமாகத்தான் எமது வாழ்க்கையின் ஒவ்வொரு படிகளுமே நகர்த்தப்படுகின்றன. சோம்பேறியின் உள்ளமானது பிசாசின் தொழிற்சாலை ஆகும் என்னும் ஒரு ஆங்கிலப் பழமொழியும் முயற்சியை வலியுறுத்த வந்ததேயாகும்.

முயலுக்கும் ஆமைக்கும் இடையே நடந்த ஓட்டப்போட்டி பற்றிய கதையொன்று நாம் எல்லோரும் அறிந்ததே. முயலின் ஆணவப் போக்கும் அலட்சியமும் காரணமாக முயலார் இறுதிப்போட்டியில் தோற்கிறார். ஆமை வெல்கிறது. ஆகவே நாம் முயற்சி செய்யும் போது நாம் எதையும் புத்திசாதுரியத்தோடு செயற்படுத்த வேண்டும். இவ்வாறே தோல்வியின் விழும்பில் வேதனையோடு படுத்திருந்த "றோபட் புரூஸ்" தன்விடா முயற்சியின் பயனாக அடைந்த இறுதி வெற்றியை ஒரு சிறிய கதை மூலம் அறிந்திருப்போம். தனக்காக கூடு அமைப்பதில் தளராது முயன்ற ஒரு சிலந்தி ஆறு தடவை தோல்வியை சந்தித்தது. கடைசியில் ஏழாவது முறையாக அது விடாது முயன்ற போது அதன் முயற்சியானது பலித்தது. தோல்வியைக் கண்டு தளராத நெஞ்சும் விடாமுயற்சியும் ஒருவனை நிச்சயம் வெற்றிப் பாதைக்கு இட்டுச்செல்ல வல்லது என்பதை உணர்வோம். முயற்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவினையாக்கும் என்ற உண்மையை மனதிலே கூர்ந்து முயற்சியுள்ளவர்களாக வாழ்வோம்.

உலகில் புகழ் பெற்று விளங்கும் சான்றோரின் வரலாறுகள் இதனையே எமக்குத் தெரிவிக்கின்றன. உலகின் பெரிய வல்லரசான அமெரிக்க நாட்டின் அன்றைய ஜனாதிபதியாயிருந்த ஆபிரகாம் லிங்கன் என்பவர் ஆரம்பத்திலே ஒரு ஏழையாக இருந்தவர். தன் ஒரு நேர உணவுக்கே கஸ்டப்பட்ட லிங்கன் தன் ஏழ்மையை நினைத்து வருந்தி முயற்சி செய்யாது வாழ்ந்திருப்பாரானால் அவர் பிற்காலத்தில் அந்த நாட்டின் தலைவராக வர முடிந்திருக்குமா? மாறாக தன் குடும்பத்தின் உணவுக்காக உழைத்தன் பின் தெரு வீதி விளக்கின் ஒளியிலே அவர் இரவிரவாக படித்தாராம். தன் இலட்சியங்களை எண்ணி எண்ணிப் படித்து பெரியவரானார்.

முயற்சி பயனளிக்காதவரில்லை. ஈற்றில் சாதாரண குடிமகனாகப் பிறந்த ஆபிரகாம் லிங்கன் உலகம் போற்றும் மக்கள் தலைவராக விளங்கி அமெரிக்க நாட்டின் ஜனாதிபதிப் பதவியைப் பெற்றார். எனவே நாமும் நமது வாழ்வில் ஒரு நிமிடத்தையேனும் வீணாக்காமல் முயற்சி செய்வோம் அதன் மூலம் எமக்கு வெற்றி கிடைப்பது நிச்சயம்.

ரால்ப் எமர்சன், "எந்தச் செயலைச் செய்வதற்கு விடாமுயற்சி எடுக்கிறோமோ அதனை சாதிக்க முடிகிறது; சாதிக்கிறபோது அந்தச் செயல் ஒன்றும் எளிமையாகி விடவில்லை; நமது முயற்சி அதனை செய்து முடிக்க எளிதாக்குகிறது" என்கிறார்.

எந்தக் காரியமுமே ஆரம்பிக்கும்போது மலைப்பாகத்தான் தோன்றும். குழந்தைகள்கூட நடக்க ஆரம்பிப்பதற்கு முன்னால் விழுந்து எழுந்துதான் நடை பயிலுகின்றன. கீழே விழுகிறோமே என்று அவர்கள் முயற்சிக்காமல் விடுவதில்லை. விடாமுயற்சி மட்டும் இல்லாவிட்டால் பல சாதனைகள் இந்த உலகில் நிகழ்ந்திருக்க மாட்டா.

தாமஸ் ஆல்வா எடிசன் சொல்கிறார், "ஒரு தோல்வி ஏற்பட்டால் மேலே முயற்சி செய்யாமல் இருப்பதுதான் நமது பலவீனமே. இன்னுமொருமுறை முயற்சி செய்து பார்ப்போமே எனும் எண்ணம்தான் வெற்றிக்கு அவசியமானது."

புத்தகங்களைத் தொடர்ந்து படித்து வந்தால் பல அறிஞர்களின் பொக்கிஷங்களை நம்மால் அறிய முடியும். நாம் எல்லாம் படித்து முடித்துவிட்டோம் என்று எண்ணுவது சுலபம். ஆனால் கற்றது கைம்மண்ணளவுதான் என்று புத்தகச் சுரங்கங்களைத் தோண்டத் தோண்டப் புரியும். ஒவ்வொரு சாதனையாளரும் ஆரம்பத்தில் எவ்வளவு சோதனைகளை சந்தித்திருக்கிறார்கள்! அரசியல், ஆராய்ச்சி, இலக்கியம், இசை என்று எந்தத் துறையிலும் சரித்திரப் புகழ் பெறுவதற்கு முன்னால் எத்தனை முறை தோல்வியைத் தழுவியிருக்கிறார்கள் என்பதும் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1936ல் தியோடர் சேயஸ் கீசல் எனும் நாவலாசிரியர் ஐரோப்பாவிற்குக் கப்பலில் பயணித்துக் கொண்டிருந்தார். அப்போது கப்பல் எஞ்சின் சத்தத்தின் தாளகதி அவரை ஒரு பாடலை எழுதத் தூண்டியது. அதை அடிப்படையாக வைத்து ஒரு நாவலை எழுதினார். அந்த நாவல் பதிப்பாளர்களால் 27 முறை ஏற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பப்பட்டது. பலர் இரண்டு மூன்று முறை தோல்வி கிடைத்தபின் இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது என்று விட்டு விடுவார்கள். ஆனால் 27 முறை தோல்விக்குப் பிறகு அவரது நண்பர் ஒருவர் அவருக்காக அந்த நாவலைப் புத்தகமாக வெளியிட்டார்; வெற்றியும் அடைந்தார். எழுதிய டாக்டர் சேயஸ் 1991ம் ஆண்டு இறந்தார். அதற்குள் அவரது புத்தகம் 200 மில்லியன் பிரதிகள் 15 மொழிகளில் விற்றிருந்தன. அவரது இறப்பிற்குப் பிறகு மேலும் 22 மில்லியன் பிரதிகள் விற்றன.

ஹாரிபாட்டரை உருவாக்கிய ஜே.கே.ரௌலிங்கைப் பற்றி தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. மணமுறிவானதால் நிலைகுலைந்திருந்த பெண்மணி. கீசலைப்போலவே இவருக்கும் குழந்தைகளுக்கான புத்தகம் எழுதவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அவருக்கு ஒரு பெண் குழந்தை இருந்தது. போதுமான பண வசதியில்லாததால் கிடைக்கும் நன்கொடைகள் மூலமே வாழ்க்கை நடத்தி வந்தார். ஆனாலும் தான் எழுதவேண்டும் என்ற முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்தார். கொஞ்சம் கொஞ்சமாக தனது ஹாரிபாட்டர் கதையைப் பல வருடங்கள் தொடர்ந்து எழுதினார். அவருக்குத் தான் எழுதும் கதை மற்றவர்களுக்குப் பிடிக்குமா என்று சந்தேகம்! யாராவது பிரசுரிக்க மாட்டார்களா? என்ற ஆர்வம் மட்டும் இருந்தது. அவர் சொல்கிறார், "நான் குழந்தையாக இருந்தபோது எனக்கு என்ன படிக்கப் பிடிக்குமோ அதைத்தான் நான் எழுதினேன்' என்று.

பல பதிப்பாளர்கள் அவரது புத்தகத்தைப் பிரசுரிக்க மறுத்துவிட்டார்கள் ஒருவரைத் தவிர. ஹாரிபாட்டர் புத்தகங்கள் இன்று எவ்வளவு பிரபலமானவை என்று நாம் அனைவரும் அறிவோம். 2004ம் ஆண்டுக்குள் நூற்றுக்கணக்கான கோடி டாலர்கள் அவருக்குக் கிடைத்தது. லட்சக்கணக்கானோர் அவரது புத்தகங்களை வரிசையில் காத்து நின்று வாங்கினார்கள். அவரது விடாத முயற்சி அவருக்கு அலாவுதீனின் அற்புத விளக்காக இருந்தது. அவரது விடாமுயற்சிக்கு முன்னால் ஹாரிபாட்டரின் மந்திர வித்தைகள் கூட ஒன்றுமே இல்லை எனலாம்!

வெற்றிக்குப் பிறகு அவர் சொன்னார், "எனது புத்தகம் பிரசுரமானதே ஓர் அற்புதமான நிகழ்வுதான். ஆனால் எனக்குக் கிடைத்த மிகப் பெரிய பரிசு வாசகர்கள் காட்டும் உற்சாகம்தான்". டி,வியின் முன்னால் கட்டுண்டு கிடந்த குழந்தைகளை தனது புத்தகங்களின் மூலம் மீட்டெடுத்ததே அவர்தான். பல லட்சக்கணக்கானோருக்குப் படிப்பதால் ஏற்படும் சந்தோஷத்தைத் தன் புத்தகங்கள் மூலம் காட்டினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்விகள் கதவை மூடும்போது தொடர்ந்து விடாமுயற்சியுடன் கதவுகளைத் தட்டித் திறப்பதுதான் வெற்றிக்கான சாவி. விவேகானந்தர் சொல்கிறார், "வெற்றி பெறுவதற்கு தேவையானது முடிவில்லா விடாமுயற்சியும், அதீதமான நம்பிக்கையும்தான்! விடாமுயற்சி கொண்டவன், 'நான் சமுத்திரத்தையும் உட்கொள்வேன்', 'என் சங்கல்ப சக்தியால் மலைகளும் நொறுங்கி விழுந்துவிடும்' என்று சொல்வான். அது போன்ற சக்தியை கொண்டிரு, அது போன்ற மன உறுதியைக் கொண்டிரு; நன்றாக உழைத்திரு, உனது குறிக்கோளை நிச்சயம் நீ அடைவாய்".

கடலை நோக்கி மலை சொல்லியது. "நான் உன்னைவிட பலசாலி. என்னை யாரும் அழிக்க முடியாது". ஆனால், பல ஆயிரம் ஆண்டுகளில் கடலின் அலைகளால் மலை மறைந்தது; கடல் அலைகள் தொடர்ந்தன.

ஓரிரு முறை தோல்வியை சந்தித்துவிட்டால் பின் துவண்டுவிடாதே! தோல்வி நிரந்தரம் அல்ல, தோல்வியுற்றால் அதில் உள்ள தவறை ஒத்துக்கொண்டு அதிலிருந்து மீண்டு முன்னேறு...! ஆனால் ஒருபோதும் முயற்சி செய்ய மறக்காதே...!" இதனை மறவாமல் இருந்தாலே வெற்றி நம் காலடியில் சரணடையும்.

இந்திய நாட்டின் நோபல் பரிசாளர் தாகூரின் ஆரம்ப காலத்துக் கவிதைகளை வங்கமொழி அறிஞர்கள் பிழைதிருத்தத்திற்கு எடுத்துக் கொடுப்பார்கள். அவ்வளவு அவமானப்பட்டவர்தான் தாகூர். அவரது மேதாவிலாசத்தை விடவும் அவரது விடாமுயற்சியே அவருக்கு நோபல் பரிசைக் கொண்டுவந்து கொடுத்தது.

பெர்னாட்ஷாவின் வாழ்க்கை கொடுமையான வறுமை நிறைந்த வாழ்க்கை. அவரது அறிவோடு தினம் ஐந்து பக்கம் எழுதும் விடாமுயற்சியை அவரை உலக அறிஞராக்கியது. விடாமுயற்சிக்கு உதாரணங்களாக, மேடம் கியூரி – மார்க்கபோலோ என்று அடுக்கிக் கொண்டே போகலாம். காந்திஜியின் விடாப்பிடியான அஹிம்சை கொள்கைதானே இந்தியாவுக்கு சுதந்திரத்தையே வாங்கித் தந்தது! உலகில் சாதனையாளர்கள் எல்லாரிடத்திலும் அவரவர் துறைசார் அறிவோடு விடாமுயற்சியும் இருந்து வருகிறது. அதனாலே அவர்கள் வெற்றி பெற்றார்கள்; சாதனை படைத்தார்கள்.

வெற்றிக்கான பாதையாக எடிசன் கூறுவது : " ஒரு சதவிகிதம் ஊக்கம் – 99 சதவிகிதம் விடாமுயற்சி"

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா சொல்கிறார், "இந்த உலகில் முயற்சியை விட வேறொன்றும் சிறந்த இடத்தைப் பெற்றுவிட முடியாது. திறமை, மேதைத்தனம், கல்வி இவ்வளவு இருந்தாலும் அதனுடன் விடாமுயற்சியும், எதை அடையவேண்டும் என்ற தெளிவான முடிவும் மட்டுமே வெற்றிக்கு வழிகாட்டும் சர்வ வல்லமை படைத்தது".

நமக்கு வெற்றிகள் வந்து சேர்வதற்கென்று தனியாக ஒரு நேரம் எதுவும் இல்லை. விடாமுயற்சியோடு செயல்படுகின்றவர்களிடத்தில் எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்திலும் வெற்றிகள் வந்து சேரும். சிகரங்கள் காத்திருக்கின்றன – சிகரங்களை எட்ட நாம் தயாராகுவோம்.

*Never play with the feelings of others, because you may win the game. But the risk is that you will surely loose the person for life time.*

*-David Horace-*

*When you are in the light, everything follows you, but when you enter into the dark, even your own shadow doesn't follow you.*

*-Samson-*

*The world suffers a lot. Not because of the violence of bad people, but because of the silence of good people!*

*-Napoleon-*

*I am thankful to all those who said NO to me. Because of them I did it myself.*

*-Robert Wallace-*

*Laughing faces do not mean that there is absence of sorrow. But it means that they have the ability to deal with it.*

*-Erickson-*

*Opportunities are like sunrises, if you wait too long you may miss them.*

*-Seneca-*

*Believe in yourself! Have faith in your abilities! Without a humble but reasonable confidence in your own powers you cannot be successful or happy. --Norman Vincent Peale*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Let us make our future now, and let us make our dreams tomorrow's reality.*

*- Malala Yousafzai*

*All you need is the plan, the road map, and the courage to press on to your destination.*

*- Earl Nightingale*

*The power of imagination makes us infinite.*

*- John Muir*

*Light tomorrow with today.*

*- Elizabeth Barrett Browning*

*Happiness is not something you postpone for the future; it is something you design for the present.*

*- Jim Rohn*

*The way get started is to quit talking and begin doing.*

*- Walt Disney*

*The pessimist sees difficulty in every opportunity. The optimist sees opportunity in every difficulty.*

*– Winston Churchill*

*You learn more from failure than from success. Don't let it stop you. Failure builds character.*

*- Abdul Kalam*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூக ஊடகங்களின் நன்மையும் தீமையும்

சு. பினோஜன், தரம் - 13

ஆதி மனிதன் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவும் தகவல்களை தெரிவிக்கவும் பயன்படுத்திய "பறை" ஒலியே இந்த உலகின் முதன் முதல் ஊடகமாகும். பின்பு புறாவில் தூது, ஒற்றர்கள் மூலம் செய்தி, அஞ்சல் மூலம் தகவல், தொலைபேசி வழி என கற்காலம் தொடங்கி கணினி காலமான இன்று வரை சமூக ஊடகத்தின் பரிணாமவளர்ச்சி பல கட்டங்களை கடந்து அசாத்திய முன்னேற்றம் பெற்றுள்ளது. ஊடக வளர்ச்சி: ஊடகத்துறை வேகம் பெற்று அறிவியலின் வளர்ச்சியால் இன்று பல்வேறு பரிமாணம் பெற்று உள்ளது. அச்சு ஊடகம், காட்சி ஊடகம் ஆகியன மனித வாழ்வில் இரண்டற கலந்து விட்டன. செய்தி தாள், நாளேடு, வார இதழ், மாத இதழ், மாதமிருமுறை இதழ் எனவும், தொலைதொடர்பு ஊடகங்கள் வானொலி, தொலைக்காட்சி, பண்பலை, வலைத்தளம், இணையம் எனவும் கிளை விட்டு வளர்ந்து உள்ளது.

இவ்வூடகங்கள் அன்றாட மனித வாழ்வில் தாக்கத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்தும் முதன்மை சாதனங்கள் ஆகி விட்டன. தனி மனித வாழ்வை தவிரவும் சமூக பொருளாதார, அரசியல் மற்றும் பண்பாட்டு தளங்களிலும் ஊடகம் முக்கிய காரணியாக திகழ்கிறது.

அன்றாட வாழ்வில் இருந்து பிரிக்க இயலாது வாழ்வின் அங்கமாகிவிட்டது. இந்த நிலையில் சமூக ஊடகங்களின் வளர்ச்சியும் தாக்கமும் வரமா ? சாபமா ? என்ற கேள்வி அனுதினமும் பேசுபொருளாகிவிட்டது. மக்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து இருக்கவும், உலகில் நடக்கும் நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளவும், நமது அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கும் அறிவுக் களஞ்சியமாகவும் திகழ்வது இந்த சமூக ஊடகங்கள். இன்று மக்களிடையே மிகப் பிரபலமான சமூக ஊடகங்களாக காணப்படுவது கூகுள், பேஸ் புக், ட்விட்டர், வாட்ஸ் அப், இன்ஸ்டாகிராம், ஸ்கைப், யூடியுப் போன்ற பல சமூக வலைத்தளங்கள் ஆகும். டொனல்ட் ட்ரம்ப், நரேந்திர மோடி போன்ற உலகின் பெரும் அரசியல் வாதிகள் தொடக்கம் நம் நாட்டில் உள்ள பிரதேச சபை உறுப்பினர்கள் வரை சமூக ஊடகங்களின் தாக்கத்தை நன்கு அறிந்தததனால் தங்கள் அரசியல் வியூகத்தில் இத்தகைய ஊடகங்களை தவறாமல் பயன்படுத்துகின்றனர். தங்கள் கொள்கைகளையும் கருத்துகளையும் இளைய சமூகத்திடம் புகுத்த இது போன்ற சமூக ஊடகங்களே ஆக சிறந்த வழி என்று கண்டறிந்துள்ளனர்.

இன்றைய உலகமானது ஒரு நவீன உலகமாக மாறிக் கொண்டே வருகின்றது.அதற்கு பல்வேறு காரணிகள் காரணமாக அமைந்தாலும் சமூக ஊடகங்கள் ஒரு முக்கிய பங்காற்றுகின்றன. இவ்வாறான இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்கள் சமூகத்தின் மத்தியில் நன்மைகளை செய்து கொண்டு வருகின்றன. அதேபோல் அதற்கு எதிரான தீமைகளையும் செய்து கொண்டே வருகின்றன. சீனியால் ஈர்க்கப்படும் எறும்பாக, இளைஞர்களை ஈர்க்கும் இந்த சமூக வலைத்தளங்கள் எத்தகைய தாக்கத்தை உருவாக்குகிறது என்பது நம் முன் மிகப் பெரிய கேள்வி.

சமூக ஊடகங்களினால் உருவாகும் பிரச்சனைகள் பல. அதிலும் தலையாயதாக கருதப்படுவது காலம் விரயம். இளைஞர்கள் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த வேண்டிய நேரத்தை வகை தொகையில்லாமல் வீணடிக்கின்றனர்.

அடுத்து இத்தகைய ஊடகங்களின் பாதுகாப்பு குறித்த அச்சம். படங்கள் பதிவுகள் எதை பதியும் பொழுதும், தனிப்பட்ட விபரங்களை பகிரும்போதும் குறிப்பாக பெண்கள் மிக கவனமாக இருக்க வேண்டியது அவசியம். இத்தகைய வலைதளங்களில் கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அம்சங்களை பயன்படுத்தும் போதிய அறிவு நமக்கு வேண்டும். எதைப் பகிர்வது என்பதை விட எதை பகிரக் கூடாது என்பதில் அதீத எச்சரிக்கை அவசியம்.

அடுத்து சமூக ஊடகங்களில் தரம் குறைந்த முதிர்ச்சியற்ற அவசர விமர்சனங்கள், கருத்துப் பதிவுகள். ஒபாமா தொடங்கி உள்ளூர் அரசியல் வாதி வரை ஈவு இரக்கம் இல்லாமல் விமர்சன கணைகள் வீசப்படுகின்றன. ஆரோக்கியமான விமர்சனங்கள், விவாதங்கள நிச்சயம் தேவை, ஆனால் வரம்பு மீறி ஒருவரைப் பொதுத் தளத்தில் விமர்சிப்பது அநாகரிகமானது.

சமூக ஊடகங்கள் மனிதரின் நேரத்தை களவாடியது ஒருபுறம் என்றால் அதைக்காட்டிலும் மக்களிடையே இருந்த உணர்வுபூர்வமான பிணைப்பை கொன்று வருகின்றன என்பது வருந்தத்தக்க உண்மை. "தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் அமெரிக்கா பக்கத்து வீடானது. பக்கத்து வீடு அமெரிக்காவானது. தேடித் தேடி வாழ்த்து அட்டைகள் வாங்கி, நேரில் சென்று, உளமார வாழ்த்தி அன்பை பகிர்ந்து கொண்ட தருணங்கள் மாறி, தன் சொந்த வீட்டில் இருப்பவர்களுக்கு கூட வாட்ஸ் அப்பிலும், பேஸ் புக்கிலும் இன்ன பிற சமூக ஊடகங்கள் வாயிலாகவும் வாழ்த்துகளை ஜீவனின்றி பகிர்கின்றோம். இறந்த நண்பனுக்கு இரங்கல் செய்தியைப் பதிந்து விட்டு அடுத்த வேலையை நோக்கிச் செல்லும் அவலம் அரங்கேறி வருகிறது. அந்த இறந்த நண்பரின் வீட்டிற்கு செல்லவோ, அவரின் தாய் தந்தைக்கு ஆறுதல் கூறி தேற்றவோ எண்ணம் எழாத அளவிற்கு சமூக ஊடகங்களின் தாக்கம் நீள்கிறது.

எது எப்படியோ சமூக ஊடகங்களினால் சில பல தீமைகள் இருந்தாலும் மறுக்க முடியாத பல நன்மைகளும் உண்டு. சமூக ஊடகங்கள் வலைத்தள அமைப்பில் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றன. இதன்படி எமது சமூகத்தின் மத்தியில் சிறியோர் முதல் பெரியோர் வரை பெரும்பாலானோர்கள் பயன்படுத்துகின்ற சமூக ஊடகமாக காணப்படுவது பேஸ்புக் ஆகும். இந்த சமூக ஊடகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் நாம் எமது நாட்டில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்தில் காணப்படுகின்ற தகவல்களை அறிந்து கொள்ளலாம். அத்தோடு அக்காலத்தில் எமது உறவுகள் வெளிநாடுகள் சென்றால் அவர்களது சுகபோகங்களை அவர்களது கையெழுத்திலே காணமுடியும் அதாவது கடிதத்திலே காணலாம். ஆனால் இந்த முகநூல் மூலம் அவர்களது புகைப்படங்களோடு அவர்கள் எவ்வாறு அங்கு காணப்படுகின்றனர் என்று காணமுடிகின்றது. அத்தோடு சர்வதேச மட்டத்தில் நடைபெறும் அரசியல், சமூக, பொருளாதார செய்திகளை உடனுக்குடன் அறிய முடிகின்றது. இதே போன்று இதனை ஒத்ததாகவே இன்ஸ்ராகிராம், ருவிட்டர் போன்ற ஊடகங்களும் காணப்படுகின்றன.

உலகின் அனைத்துத் துறைகளின் அறிவையும் ஒரு சேர வழங்குவது சமூக இணையத் தளங்கள் ஆகும். மாதா, பிதா, கூகுள், கடவுள் என்பதே இந்த நவீன யுகத்தில் விளைந்துள்ள மாற்றம். புத்தகம் கொண்டு தேடித் தேடி அறிந்த அறிவெல்லாம் இன்று கையடக்க கணினியிலும், செல்பேசியிலும் பெற்றுவிடுகின்றனர். சமூக ஊடகங்களில் பங்கேற்காவிட்டால் அறிவின் ஒரு வாசலை நாமே அடைப்பதாகும்.

எகிப்தில் ஆட்சியாளருக்கு எதிராக கிளர்ச்சி உண்டாக்கி அரசியல் மாற்றத்துக்கு வித்திட்ட புரட்சி நிகழ்ந்தது சமூக வலைத்தளத்தில் பதிந்த ஒரு பதிவு. கல்வி உதவியா, மருத்துவ உதவியா, அவசர அடிப்படைத் தேவைகள் பலவற்றிற்கும் கை கொடுக்கிறது சமூக ஊடகங்கள்.

இந்த சமூக ஊடகங்களில் காணப்படுகின்ற நன்மைகளில் ஒன்றாக தற்பொழுது பாடசாலை சென்று பாடப்புத்தகங்களை படிக்கும் வயதிற்கு முன்னரே இந்த சமூக ஊடகங்களை எமது சிறார்கள் பயன்படுத்த பழகிக்கொள்கின்றனர். இதனால் அந்த சிறார்களின் தொழில்நுட்ப அறிவானது விருத்தி அடைகிறது. அத்தோடு அவர்களின் பொது அறிவும் விருத்தி அடைகிறது. இந்த விளைவுகள் இந்த உலகையே நவீன உலகாக மாற்றிவிடுகின்றன.

அத்தோடு இந்த பாடங்களின் மூலம் நாம் சர்வதேச மட்டத்தில் செய்திகளை அறிந்து கொள்வதன் மூலம் எமது நடைமுறை வாழ்வை மிக சிறப்பாக அமைத்துக் கொள்ளலாம். அத்தோடு எமக்கு தேவையான பாடநூல்கள், இலக்கியங்கள், பாடல்கள், மருத்துவம் சம்பந்தமான விடயங்கள் போன்றவற்றையும் நாம் இலகுவாக இந்த சமூக ஊடகங்களின் மூலம் பெறக்கூடியதாக காணப்படுகின்றன.

100 வருட சினிமா வரலாற்றின் தலை எழுத்தையும் மாற்றி எழுதிக் கொண்டிருக்கிறது சமூக ஊடகங்களின் வளர்ச்சி. ஒரு சில பேரின் அங்கீகாரம் கிடைக்காமல் வாய்ப்பு தேடி அலைந்து தவித்த திறமையுள்ள கூட்டம் தங்கள் குறும்படப் படைப்புகளை யூ டியூபில் பதிவேற்றி நேரடியாக மக்கள் மன்றத்தில் பந்தி வைத்து மிகப் பெரிய வெற்றிகளையும், சாதனைகளையும், வாய்ப்புகளையும் தங்களை தேடி வரச் செய்கின்றனர் நம் முதல் தலைமுறை இளைஞர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்ட இருப்பினும் முகத்தோடு முகம் பார்த்து பேசும் அதிசயங்களையும், உலகத்தின் எந்த மூலையில் இருக்கும் நண்பர்கள், உறவுகளுடன் தொடர்பில் இருக்கவும், புத்தகம் கையில் எடுக்காத இளைஞர்களும் நொடிக்கு நொடி உலகின் அசைவுகளை விளங்கிக்கொள்ள செய்வது என இதன் பயன்கள் எல்லையற்றது. இத்தனை பயன்கள் இருக்கும் இத்தகைய சமூக ஊடகங்களில் நேர விரயம், பாதுகாப்பு இல்லை எனக் கூறி பயன்படுத்தாமல் இருப்பது அல்லது உங்கள் குழந்தைகளை அதில் இருந்து விலக்கி வைப்பது பாஸ்ட் வேர்ல்ட் என்ற அவசர யுகத்தில் நிகழும் ஓட்டப் பந்தயத்தில் நடந்து சென்று வெற்றி பெற்றுவிடலாம் என நினைப்பது போல் சாத்தியமற்றது.

சமூக ஊடகங்களின் தீமையை மட்டுமே கண்டு ஒதுங்கக் கூடாது. எந்த ஒரு புதுமையிலும் நாணயத்தின் இருபக்கம் போல நன்மை தீமை இரண்டும் சேர்ந்தே இருக்கும், பாலையும் நீரையும் பிரித்தறியும் அன்னமாக மாறுவோம். காலம் மாறுகிறது. மாறக்கூடிய உயிர்கள் மட்டுமே வாழக்கூடிய தகுதி பெறும் – இது இயற்கையின் விதி.

Famous scientists and their inventions – Compiled by: S. Sinoja, 9 B

1. *Alexander Graham Bell - telephone*
2. *Antonie van Leeuwenhoek – microscope*
3. *Archimedes - determining the volume of irregular objects.*
4. *Benjamin Franklin - lightning rod and bifocals*
5. *Brahmagupta - using zero as a number*
6. *Eli Whitney - cotton gin*
7. *Elias Howe - Sewing machine*
8. *Emile Berliner - Phonograph records*
9. *Felix Hoffmann – aspirin*
10. *Fritz Pfleumer - magnetic tape used in audio cassettes*
11. *Galileo Galilei – telescope*
12. *Garrett Augustus Morgan - traffic signal*
13. *Hans von Ohain - Jet engine*
14. *Heinrich Focke – helicopter*
15. *Jagadish Chandra Bose - crescograph, a device to measure growth in plants.*
16. *Johann Philipp Reis - early version of the telephone*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. John Logie Baird – television
18. Karl Benz - gasoline-powered automobile.
19. Karl Friedrich von Drais - early version of the bicycle
20. Karlheinz Brandenburg - MP3 Technology
21. Konrad Zuse - electromechanical computer.
22. Laszlo Jozsef Bíro - ballpoint pen
23. Levi Strauss - denim trousers
24. Melitta Bentz - coffee filter
25. Nikola Tesla - Tesla induction motor
26. Orville and Wilbur Wright - air flight
27. Otto Lilienthal - monoplanes, biplanes and gliders.
28. Percy Spencer- Microwave oven
29. Peter Henlein - pocket watch
30. Rudolf Diesel - compression combustion engine
31. Rudolf Hell - the scanner and the fax machine
32. Thomas Edison - the electric light and the phonograph.
33. William Henry Perkin - synthetic aniline dye
34. Albert Einstein - theory of general relativity
35. Alexander Fleming – penicillin
36. Andreas Vesalius - human skeletal system and muscular system
37. Aryabhata - discovering the daily rotation of the earth
38. Carl Linnaeus - system of binomial nomenclature
39. Carl Wilhelm Scheele – oxygen
40. Sir Chandrashekhar Venkata Raman - the Raman effect
41. Charles Darwin - the theory of evolution
42. Copernicus - the solar system as heliocentric
43. Dmitri Mendeleev - a comprehensive periodic table of elements
44. Edward Jenner - process of vaccination
45. Ernest Rutherford - phenomenon of radioactive half-life
46. Francis Crick - James Watson - double-helical structure of the DNA molecule


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. Georg Ohm - the proportionality between the voltage and the resultant current in a circuit

48. Heinrich Hertz - existence of electromagnetic waves

49. Henri Becquerel - radioactivity in uranium salts

50. Isaac Newton - the laws of gravity, the three laws of motion

51. James Chadwick - the electrically neutral particle in atoms, neutron

52. Johann Kepler - the laws of planetary motion

53. Marie Sklodowska-Curie - Pierre Curie - the radioactive elements Radium (Ra) and Polonium (Po)

54. Max Planck - the quantum theory

55. Michael Faraday - electromagnetic induction

56. Neils Bohr - the Bohr model of the atom

57. Otto Hahn - nuclear fission

58. Robert Koch - Bacillus anthracis

59. Wilhelm Conrad Rontgen - the X-ray

60. William Harvey - 'double cycle' nature of the human circulatory system

## Types of Scientists

*Scientists study the world around us using the scientific method. They perform experiments to find out how nature works. While we often talk about a person being a "scientist", there are actually many different types of scientists. This is because most scientists study and become experts in a specific field of science.*

*There are literally hundreds of scientific fields of study. We will just list a few of the types of scientists here:*

*Astronomer - studies the planets, stars, and galaxies.*

*Botanist - studies plant life.*

*Chemist - studies chemistry and the behavior, properties, and composition of matter.*

*Cytologist - studies cells.*

*Ecologist - studies the relationship between living organisms and the environment.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Entomologist - studies insects.*

*Geneticist - studies genes, DNA, and the hereditary characteristics of living organisms.*

*Geologist - studies the properties of matter that makes up Earth as well as the forces that shaped it.*

*Marine biologist - studies the living organisms that live in the ocean and other bodies of water.*

*Microbiologist - studies microscopic life forms such as bacteria and protists.*

*Meteorologist - studies the Earth's atmosphere including the weather.*

*Nuclear physicist - studies the interactions and make up of the atom.*

*Ornithologist - studies birds.*

*Paleontologist - studies prehistoric life and fossils including dinosaurs.*

*Pathologist - studies diseases caused by pathogens such as bacteria and viruses.*

*Seismologist - studies earthquakes and the movements of the Earth's crust.*

*Zoologist - studies animals.*

*Compiled by: S. Sinoja, 9B*

*The science of today is the technology of tomorrow.*

- *Edward Teller*

*Science is a beautiful gift to humanity; we should not distort it.*

- *A. P. J. Abdul Kalam*

*Science is organized knowledge. Wisdom is organized life.*

- *Immanuel Kant*

*Success is a science; if you have the conditions, you get the result.*

- *Oscar Wilde*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனங்களுக்கிடையில் புரிந்துணர்வினை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு

ஜீ.டினுஜா, தரம் – 8

வாசிப்பினை உலகம் நேசிக்கும் என்றும், கண்டது கற்க பண்டிதனாவான் என்றும், பழமொழி படைத்த தமிழ்பாரம்பரியத்தில் உதித்த உங்கள் அனைவருக்கும் எனது வணக்கங்களும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

பல்லின சமூக கட்டமைப்பையும், பல மத ஒன்றுபட்ட வாழ்வியலையும,; இரு மொழிப்பயன்பாட்டினையும் கொண்ட இந்து சமுத்திரத்தின் முத்தான நாடு நம் இலங்கை திரு நாடு. இந்த வளமிக்க நாட்டிலே கடந்த மூன்று தசாப்தங்களாக நிலவிய யுத்தம் ஓய்ந்து இயல்பு வாழ்கைக்கு மக்கள் மாறிக் கொண்டிருக்கும் ஒரு இக்கட்டான துயரம் நிறைந்த காலகட்டம். தந்தையை இழந்த பிள்ளைகள், தமையனைத் தம்பியை பறிகொடுத்த சகோதரர்கள், பிள்ளைகளைக் காவுகொடுத்த பெற்றோர்கள் உடல் அவயவங்கள் ஊனமுற்று நிற்கும் அப்பாவி மக்கள் எங்கள் மத்தியில் வாழ்கின்றனர். கோடானு கோடி சொத்துக்களை இழந்து, ஏக்கமும் வேதனையும் இழையோட வாழும் மக்கள் இன்னமும் அயற் சமூகங்களை அடுத்த இனத்தவர்களை சந்தேகக் கண்களுடன் பார்க்கும் நிலை உள்ளது. இந்த நாட்களில் சமாதான சகவாழ்வும் புரிந்துணர்வும் ஏற்படவேண்டும். ஏற்றுக்கொள்ளும் மனோ நிலை மலர வேண்டும். இன நல்லிணக்கம் ஏற்பட வேண்டும்; இதற்கெல்லாம் என்ன வழி என்று சிந்திப்போமானால் வாசிக்க வேண்டும். பல மொழி, பல இன, பல சமூக மற்றும் வேறுபட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்களின் படைப்புகளை வாசிக்க வேண்டும், பேச வேண்டும், உரையாட வேண்டும். அக் கருத்துக்கள் எமது உள்ளங்களில் உணரப்பட வேண்டும். அவ்வக்காலங்களும் கால நிகழ்வுகளும் ஏக்கங்களும் பிரதிபலிக்கும் ஆக்கங்களை வாசிக்கும் போது அவை மனங்களில் பதித்து விட்டுக்கொடுப்பு, தன்னம்பிக்கை, சகோதர வாஞ்சை ஏற்பட்டு சமாதானம் மலரும். நான் நாங்கள் எனும் பேரினவாத அகங்காரம் மறையும்.

வாசிப்பவர்கள் யோசிப்பார்கள். அவர்கள் செயலில் மாற்றத்தை காட்டுவார்கள். எனவே மானிட சமுதாயத்தை சீர்படுத்தவும் செழுமைப்படுத்தவும் வாசிப்பு ஒரு பாதையாக அமையும் என்றால் வியப்பில்லை. உலக வரலாற்றை ஒரு கணம் திரும்பிப் பார்த்தோமானால் பல்லின கலாசாரக் கட்டமைப்புக் கொண்ட பல நாடுகள் அறிவியலை மேம்படுத்தி நூல்களை ஊக்குவித்து நூலகங்களை நிறுவி வாசிப்பை வளர்த்து புரிந்துணர்வை மக்கள் மனங்களில் மேம்படுத்தி பொருளாதார ரீதியில் பாரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியையும் அமைதியான வாழ்வையும் கொண்டு மிளிர்கின்றன. அழகிய வண்ணத் தீவாம் எம் இலங்கை திரு நாட்டையும் அவ்வாறு மாற்ற வேண்டாமா? இளமையிற் கல்வி சிலையில் எழுத்தல்லவா? தேடித் தேடி வாசிப்போம். நாளைய சமுதாயத்தைக் கட்டி வளர்ப்போம். அன்புடன் விடை பெறுகின்றேன் நன்றி வணக்கம்.

❖ மௌனத்தில் உள்ள வார்த்தைகளையும் கோபத்தில் உள்ள அன்பையும் யாரால் உணர முடிகிறதோ அவர்களே நமக்கு கிடைத்த உன்னதமான உறவு.

❖ நமக்காக வாழ்கின்றவர்கள் நம்மிடம் எதிர்பார்ப்பது நம் சந்தோஷத்தை மட்டுமே.

❖ அருகில் இருப்பதால் அன்பு அதிகரிப்பதும் இல்லை. தொலைவில் இருப்பதால் அன்பு குறைவதுமில்லை.

❖ அன்பு என்பது ஒரு சிறந்த பரிசு. அதைப் பெற்றாலும் கொடுத்தாலும் சந்தோஷமே.

❖ தன்னை மறந்தது தாய் அன்பு. தரணியில் சிறந்தது தாய் அன்பு. தேனிலும் இனியது தாய் அன்பு. வானிலும் உயர்ந்தது தாய் அன்பு. காலத்தால் மாறாதது தாய் அன்பு. கனிவிரக்கம் கொண்டது தாய் அன்பு. பணிவிடை செய்வது தாய் அன்பு.பூவிலும் மென்மை தாய் அன்பு. அதைப் புரிந்து நடப்பதே நற்பண்பு.

❖ கடவுளுக்கு ஈடானவள் அன்னை. முழுதாக தியாகம் செய்வாள் தன்னை.

❖ தாயின் அன்பு- அதுவே அமைதியான அன்பு, அதிசயமான அன்பு, இணையில்லா அன்பு, ஈடில்லா அன்பு.

10 Health Effects Caused by Smoking

1. Going Blind
2. Type 2 Diabetes
3. Erectile Dysfunction
4. Ectopic Pregnancy
5. Hip Fractures
6. Colorectal Cancer
7. Rheumatoid Arthritis
8. Cleft Lip and Cleft Palate
9. Fertility Issues
10. Gum Disease


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லிணக்கம்

வ. அபினேஷ், தரம் – 8A

நமது நாடு பல நூற்றாண்டுகளாகவே பல சமயத்தவர், இனத்தவர், மொழியினர், பண்பாட்டு மரபினர் வாழும் பன்மைச் சமூக நாடாக திகழ்ந்து வருகிறது. பன்மைச் சமூகச் சூழலில் இணக்கம் இருந்தால் மட்டுமே அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். நல்லிணக்கமே நாட்டின் ஒற்றுமைக்கும் இறையாண்மைக்கும் வலுவான அடித்தளமாகும்.

சமூக நல்லிணக்கம் மலர, வெற்று வார்த்தைகளும், போலிப் பேச்சுகளும், கண் துடைப்பு நடவடிக்கைகளும் எவ்வகையிலும் உதவ மாட்டா. மனித நேயம், நீதி, நியாயம், தர்மம், அஹிம்சை ஆகியவற்றின் கொள்கைகளும், செயல்பாடுகளுமே சமூக நல்லிணக்கம் உருவாக வழி வகுக்கும்.

சமூக நல்லிணக்கத்திற்குத் தடையாக இருப்பது கொள்கை வேறுபாடுகள் அல்ல. சமூகங்களுக்கிடையில் காணப்படும் ஆதிக்க மனப்பான்மை, வெறுப்பு, பகைமை, பொறாமை, அவநம்பிக்கை, சந்தேகம் ஆகியவையாகும். இவற்றைப் போக்கும் அருமருந்து மனிதநேயமே. மொழியால், இனத்தால், சமயத்தால் வேறுபட்டிருப்பினும் நாம் அனைவரும் மனிதர்கள். ஒரே வகையான உடலமைப்பு, உடல் செயல்பாட்டு முறை, உளவியல் போக்கு கொண்டவர்கள். நமது தேவைகளும், உணர்வுகளும், ஆசைகளும், நிராசைகளும் ஒரே மாதிரியானவை. எனவே, தனக்கு விரும்புவதையே பிறருக்கும் விரும்புவோம் என்று எண்ணிச் செயல்பட்டாலே நல்லிணக்கம் நம்மைத் தேடிவரும்.

ஒருவரது மொழியை, இனத்தை, சமயத்தை இழிவுபடுத்தும்போது, மோதல்கள் உருவாகி, இறுதியில் கலவரமாக வெடிக்கின்றது. வகுப்புவாதிகள் மக்களைப் பிளக்க வெறுப்பு விதைகள் விதைப்பதையே வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். பிற சமயங்களை, கொள்கைகளை, சித்தாந்தங்களை மறுக்கலாம். ஆனால், உணர்வுகளை மதிக்க வேண்டும். மாற்றுக் கருத்துக்களை கண்ணியமாக, மனத்தைப் புண்படுத்தாமல் விமர்சிக்கலாம். ஆனால், இழிவு படுத்தக்கூடாது.

ஒரு நாட்டில் பல்வேறு மதங்களும், பண்பாடுகளும், மொழிகளும் இருப்பது தவிர்க்க முடியாதது. ஒரு மதத்திற்குள்ளேயே கருத்து வேறுபாடுகள் உருவாவதும் தவிர்க்க முடியாதது. இப்படி இருக்கையில் ஒரே நாடு ஒரே மொழி ஒரே கலாச்சாரம் என்பது ஒற்றுமைக்கல்ல, வேற்றுமைக்கே இட்டுச் செல்லும். பிறரது உரிமைகளைப் பறிக்காத வகையில் ஒவ்வொரு பிரிவினரும் தமது சமயத்தை, பண்பாட்டைப் பின்பற்றி நடப்பதால் எவருக்கும் கேடில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்குத் தேவை ஒருமைப்பாடே தவிர பிற கலாச்சாரங்களை அழித்து ஒரே மாதிரியாக இருப்பது அல்ல. ஒற்றுமை வேறு ஒரே மாதிரியாக இருப்பது வேறு.

எவ்வித பேதமுமின்றி குடிமக்கள் அனைவரின் உயிர், உடைமை, கண்ணியம், நம்பிக்கை ஆகியவற்றிற்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். கல்வி, வேலை வாய்ப்பு, அரசியல் பொருளியல் தளங்களில் அனைவருக்கும் சம வாய்ப்புகள் வழங்க வேண்டும். ஒரு சமூகத்திற்கு ஒரு நீதி என்ற கொள்கையின் அடிப்படையில், உரிமைகளும், வாய்ப்புகளும் மறுக்கப்படும்போது பொறாமையும், வெறுப்பும், துவேஷமும் உருவாகி நல்லிணக்கம் குலைய நேரிடும்.

எல்லா சமயத்தவரிலும், இனத்தவரிலும் நல்லவர்களும் உண்டு கெட்டவர்களும் உண்டு என்று சாதாரண உண்மையை மறந்து நமது சமுதாயத்தவர் மட்டும் நல்லவர், பிற சமுதாயத்தவர் மோசமானவர் என்று எண்ணுவது விபரீதமான சிந்தனையாகும். நமது சமுதாயத்தவர்கள் நேர்மையானவர்கள், வீரர்கள், தேச பக்தர்கள், சகிப்புத்தன்மை உடையவர்கள், அறிவு மிக்கவர்கள், மென்மையானவர்கள் மற்ற சமுதாயத்தவர்கள் இதற்கு நேர் மாறானவர்கள் என்று எண்ணுவது உண்மைக்குப் புறம்பானது மட்டுமல்ல, வெறுப்பையும், பகைமையும் விதைக்கும் தன்மை கொண்டது. வகுப்புவாதிகள் பகைமையை வளர்க்க ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை தீய சக்தியாக உருவகப்படுத்திக் காண்பிப்பார்கள். உருப்படியான கொள்கை எதுவும் இல்லாததால் ஒரு பொது எதிரியை உருவாக்கித்தான் தமது இயக்கத்தை வளர்க்க வேண்டிய கட்டாயத்தில் அவர்கள் உள்ளனர்.

மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்ற உயரிய சிந்தனையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்.

நமது நாட்டின் வளர்ச்சி, முன்னேற்றம், கலை, இலக்கியம், பண்பாடு, விஞ்ஞானம், விளையாட்டு, கல்வி, மருத்துவம், சமூக சேவை ஆகிய எல்லாத் துறைகளிலும் எல்லா சமயத்தவரும், மாகாண மக்களும் பங்களித்துள்ளனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட சமூகத்தவர் மட்டுமே நாட்டின் வளர்ச்சிக்குப் பங்களித்துள்ளனர் என்பது உண்மைக்குப் புறம்பானதாகும். இந்தச் செய்திகளை இளம் தலைமுறையினரும் புரிந்து கொள்ளும் வகையில் பாடப் புத்தகங்களிலும் இடம்பெறச் செய்ய வேண்டும்.

மக்களைப் பிளவுபடுத்த வரலாறு ஒரு கருவியாகப் பயன் படுத்தப்படுகிறது. வகுப்பு வாதம் வகுப்பறைகளில் பாடப் புத்தகங்கள் வாயிலாக உருவாக்கப்படுகிறது என்பது மிகைப் படுத்தப்பட்ட கூற்றல்ல.

வரலாற்றில் பல தவறுகள், அநீதிகள் நடந்துள்ளன என்பது உண்மை. அவற்றை மூடி மறைக்காமலும், மிகைப்படுத்தாமலும், திரிக்காமலும் சொல்ல வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுநிலையோடு ஆதாரப் பூர்வமாக எழுதப்பட்ட வரலாற்றுக் குறிப்புகளை மட்டுமே கவனத்தில் கொள்ள வேண்டும். உள்நோக்கத்தோடும், ஒரு பக்கச் சார்போடும் எழுதப்பட்ட செய்திகளைப் புறக்கணிக்க வேண்டும்.

மன்னர்களுக்கிடையில் நடைபெற்ற சண்டைகள் மதங்களுக்கிடையில் நடைபெற்ற சண்டைகளாகவும், சமூகங்களுக்கிடையில் நடைபெற்ற சண்டைகளாகவும், சித்தரிக்கப்படுகின்றன. நாடு பிடிக்கும் ஆசையிலும், செல்வ வளங்களை சுருட்டிக் கொள்ளும் ஆசையிலும் மன்னர்களுக்கிடையில் போர்கள் நடைபெற்றன. இப்போர்கள் மதப்பிரச்சாரத்திற்காக நடைபெற்றவை அல்ல. வரலாற்றில் நிகழ்ந்துள்ள பிழைகளைச் சரிசெய்யப் புறப்பட்டால் வரலாற்றில் எந்த காலகட்டம் வரை செல்வது? எனவே, வரலாற்றிலிருந்து படிப்பினை பெற்று, அதுபோன்ற தவறுகள் மீண்டும் நடைபெறாமல் பார்த்துக் கொள்வதே அறிவுடைமையாகும். வரலாற்றில் என்றோ நடந்து விட்ட தவறுகளுக்கு இப்போது வாழும் மக்களை குற்றவாளிக்கூண்டில் நிறுத்தித் தண்டிப்பது நியாயமல்ல. வரலாற்று நிகழ்வுகளை இந்த நோக்கில் அணுகாவிடில் உலக முடிவு நாள் வரை நாட்டு மக்களுக்கு அமைதி கிட்டாது.

சமூக சேவை பகைமையையும் துவேஷத்தையும் அகற்றி மக்களை இணைக்கும் ஆற்றல் கொண்டது. எனவே, ஒவ்வொரு சமூகமும் சாதி, மதபேதமின்றி அனைவருக்கும் பலன் கிட்டும் வகையில் சமூக சேவைகளைச் செய்து வர வேண்டும். சமூக சேவை, சமூக சேவைக்காகவே செய்யப்பட வேண்டும். சமூக சேவையோடு, மதப் பிரச்சாரத்தையும், கொள்கைப் பிரச்சாரத்தையும் இணைப்பது நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கும்.

சமூக சேவை செய்வது போலவே, நாட்டின் வளர்ச்சிப் பணிகளிலும் எல்லா சமூகங்களும் பங்கேற்க வேண்டும். இப்பணிகளில் எல்லோரும் இணைந்து செயல்படும் போது சமூகங்களுக்கிடையே நெருக்கம் அதிகமாகும். இப்பணிகளில் எந்தச் சமூகத்தையும் ஒதுக்கவும் கூடாது எந்தச் சமூகமும் ஒதுங்கவும் கூடாது.

மதவெறி, இனவெறி காரணமாக ஒரு சமூகத்தின் உரிமைகள் பறிக்கப்படும்போதும், அச்சமூகத்தினருக்கு அநீதிகள் இழைக்கப்படும் போதும் நாட்டின் எல்லா தரப்பு மக்களும் ஒரே குரலில் கண்டிக்க வேண்டும். அநீதி இழைப்பவர் நமது சமூகத்தவராயினும் விளைவுகளைக் கண்டு அஞ்சாமல் துணிந்து எதிர்க்க வேண்டும். வகுப்பு வெறியர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்தி அவர்களோடு எந்த அரசியல் உறவுகளும் வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்கள் ஆட்சிக் கட்டிலில் ஏறி விடாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். வகுப்புவாதிகள் ஆன்மீகப் போர்வையிலும் அரசியல் போர்வையிலும் மக்களை ஏமாற்றுகிறார்கள், ஆன்மீகம் வேறு, வகுப்புவாதம் வேறு என்பது மக்களுக்குத் தெளிவாக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பு மோதல்கள் நடைபெறும் வேளையில் மட்டும் எதிர்ப்பது, பின்னர் மௌனம் காப்பது என்ற நிலையை விடுத்து வகுப்புவாதத்திற்கு எதிராகத் தொடர்ந்து தொய்வின்றிக் குரல் எழுப்ப வேண்டும்.

வகுப்பு மோதல்களுக்கான அறிகுறிகள் தென்படும் போது, அப் பகுதிகளுக்குச் சென்று மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஒரு தீமையை இன்னொரு தீமையின் வாயிலாகக் களைந்து விட முடியாது. வகுப்பு வாதத்தை இன்னொரு வகுப்பு வாதத்தால் ஒழிக்க முடியாது.

வகுப்பு வாதிகள் துவேஷத்தை விதைத்தால் நாம் அன்பை விதைப்போம்.

வகுப்பு வாதிகள் பொய்ச் செய்தியைப் பரப்பினால் நாம் உண்மையைச் சொல்வோம்.

அம்மா

கருவினில் தாங்கி
உருவாகி உயிர் பெற
உழைத்தவள் அம்மா.
உயிர் எழுத்தின்
உண்மைப் பொருள் அம்மா
பயிராக்கி எம்மை பத்திரமாய்
காத்திட்ட போதிலும் பலன்
எதிர் பாராப் பாத்திரம் அம்மா.
இருப்புக்குள் விருப்பை இனிதுறச்
செய்பவள் அம்மா.
இல்லத்தின் அழகிய கோலம்
அம்மா.
பசி கிடந்து எம்
பசி போக்கும் நல்லவள் அம்மா.
வாட்டத்தின் நோட்டம் அறிந்து
வைத்தியம் செய்யும் வல்லவள் அம்மா.
அன்புக்கு அட்சய பாத்திரம்
அம்மா.
வலிகளை வாங்கி தனக்குள்
பலியாக்கும் பக்குவம்
நிறைந்தவள் அம்மா
நாட்டிற்கு நல்ல பிரதிநிதியை
வழங்குபவள் அம்மா.
ஊணை உருக்கி
உயிரைக் கருக்கி
தன்னைத் தாரை
வார்ப்பவள் அம்மா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடந்த நூற்றாண்டு கண்ட மிகப்பெரும் யுத்தங்கள்

திருமதி மோ. இளஞ்சேரலாதன், ஆசிரியை

யுத்தங்கள் கோரமுகத்தைக் கொண்டவை. யுத்தங்களில் ஈடுபடும் அனைத்து தரப்பினருமே சோகங்களையும், வலிகளையும் சுமக்க வேண்டியுள்ளது. மனித குல வரலாறு முழுவதும் பல கோர யுத்தங்கள் இடம்பெற்றுள்ளன. அளவிட முடியாத சொத்து அழிவுகளையும், விலை மதிக்க முடியாத உயிர் அழிவுகளையும் அவை விட்டுச் சென்றுள்ளன. எனினும் மீண்டும் மீண்டும் யுத்தங்கள் ஏற்பட்ட வண்ணமேயுள்ளன. ஒருவனின் தாழ்வில்தான் மற்றையவனின் உயர்வு தங்கியுள்ளது என்ற சிந்தனை மாறாத வரையில் யுத்தங்களுக்கு முடிவில்லை. இராமாயணம், மகாபாரதம், இலியட், ஒடிசி போன்ற அனைத்து காப்பியங்களிலும் முக்கியத்துவம் பெறும் விடயம் யுத்தமாகவே உள்ளது. அந்தவகையில் கடந்த நூற்றாண்டில் இடம்பெற்ற முக்கிய யுத்தங்களாக முதலாம், இரண்டாம் உலகமகாயுத்தங்களை குறிப்பிடமுடியும். பின் அவற்றைத் தொடர்ந்து இடம்பெற்ற பனியுத்தம் காரணமாக பல போர்கள் இடம்பெற்றன. இவை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

உலகப் போர் 1

1914இற்கும் 1918இற்கும் இடையே இந்த யுத்தம் இடம்பெற்றது. அந்த யுத்தத்தில் 32 நாடுகளைச் சேர்ந்த பத்து மில்லியன் பேர் நேரடி யுத்த மோதல்களால் கொல்லப்பட்டனர். முதலாம் உலக யுத்தத்தில் பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஒரு தரப்பும், ஜேர்மனி, ஒஸ்ரியா, ஹங்கேரி ஆகிய நாடுகளை உள்ளடக்கிய மற்றும் ஒரு தரப்பும் ஆரம்பத்தில் யுத்தத்தில் குதித்தன. இரு தரப்பிலும் வேறு சில நாடுகளும் பின்னர் இணைந்து கொண்டன. ஐக்கிய அமெரிக்கா 1917இல் பிரிட்டனின் பக்கமாக யுத்தத்தில் சாய்ந்தது. அதற்கு முன் 100 ஆண்டுகளாக ஐரோப்பிய கண்டத்திலிருந்த நாடுகள் ஒன்றுடன் ஒன்று யுத்தத்தில் ஈடுபடுவதனை தவிர்த்தே வந்தன. எந்தவொரு தனிநாடும் மிகவும் வலிமை பெற்றதாக வளர்ச்சி பெறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஒரு நாடு வலிமை பெறும் முயற்சியில் ஈடுபட்டால் ஏனைய நாடுகள் அதற்கு எதிராக அணி சேர்ந்து செயற்படக்கூடிய சூழல் காணப்பட்டது.

இந்நிலையில் ஜேர்மனியில் கெய்ஸர் சக்கரவர்த்தியான 2ம் வில்லியம் தனது நாட்டின் தரைப்படை, கடற்படை, போன்றவற்றை பலப்படுத்திக்கொண்டு நாட்டில் தொழில் துறைகளையும் மிகச்சிறந்த முறையில் வளர்த்தெடுத்தார். ஜேர்மனி பசுபிக் பிராந்தியத்திலும் ஆபிரிக்காவிலும் தனது குடியேற்றங்களை ஏற்படுத்தி தனது ஆட்சிப் பரப்பெல்லையை விஸ்தரித்துச் சென்றது.

இந்த நகர்வுகள் பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளை கவலைக்குள்ளாக்கியது. பிரிட்டனும், பிரான்சும் பெருமளவில் குடியேற்ற நாடுகளை கொண்டிருந்ததுடன் பலமான சாம்ராஜ்யக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்பினையும் கொண்டிருந்தன. யுத்தம் ஒன்றினைச் சந்திக்க நேர்ந்தால் ஒன்றுபட்டுச் செயற்படுவது என்ற உடன்பாட்டினை பிரிட்டனும், பிரான்சும் எட்டியிருந்தன. ஒஸ்ரியாவும், ஹங்கேரியும் ஜேர்மனியை ஆதரித்தன. ஜேர்மானிய சாம்ராஜ்யம் கிழக்கு, தெற்கு ஐரோப்பாவின் பல நாடுகளை நிர்வகித்தது. ஒஸ்ரியா-ஹங்கேரியுடன் இணைந்திருந்த நாடுகளுள் பல அவ்விணைப்பிலிருந்து வெளியேற விரும்பின. சுதந்திரத்திற்கான அவாவினைக் கொண்டிருந்த ஒரு முக்கிய தேசமாக சேர்பியாவைக் குறிப்பிடலாம். 1914ம் ஆண்டு ஜூன் 28ம் திகதி ஒஸ்ரியா- ஹங்கேரி முடிக்குரிய வாரிசான பிரான்சிஸ் பேர்டினன்ட் என்பவரை ஒரு சேர்பிய தேசாபிமானி கொலை செய்தார்.

பிரான்சிஸ் பேர்டினன்டின் கொலை ஒரு யுத்தத்தை ஆரம்பித்து வைக்கும் என்று யாரும் நினைக்கவில்லை. ஆனால் அந்த நிகழ்ச்சி சங்கிலித் தொடரான பல நிகழ்ச்சிகளுக்கு வித்திட்டது. ஒஸ்ரியா - ஹங்கேரி கூட்டு சேர்பியாவை நசுக்குவதற்கு முன்நகர்ந்தது. ரஷ்யா தனது ராணுவத்தை சேர்பியாவிற்கு உதவுவதற்கு அனுப்பியது. எனவே ரஷ்யாவை எதிர்ப்பதற்கு ஜேர்மனி தனது படையினரை அனுப்பி வைத்தது. அத்துடன் ஜேர்மனி பிரான்ஸ்சுடனான தனது எல்லையிலும் இராணுவத்தைக் குவித்து வைத்தது. பிரான்ஸ் ஜேர்மனியை எதிர்கொள்வதற்குத் தயாரானது.

ஒகஸ்ட் 4, 1914இல் யுத்தம் வெடித்தது. ஜேர்மனி பெல்ஜியத்தினுள் ஊடுருவியது. இது பிரிட்டனையும் யுத்தத்திற்குள் கொண்டு வந்தது. ஜேர்மனியர் பிரான்சினுள் நுழைந்தனர். அவர்கள் இலகுவாக பிரான்சைக் கைப்பற்றிக் கொள்வர் போன்ற தோற்றப்பாடு இருந்தது. ஆனால் பிரான்சும், பிரிட்டனும் அவர்களைக் கடுமையாக எதிர்த்தன.

1914 முடிவிற்குள் யுத்தம் ஒரு மோசமான கட்டத்திற்குள் சென்றது. இராணுவத்தினர் எல்லையையொட்டி பல நூறு மைல்கள் நீளமான பதுங்கு குழிகளை அமைத்தனர். யுத்த வீரர்கள் அங்கேயே பலகாலமாகத் தங்கி போரிட்டனர். அவர்கள் வெளியே வந்தபோது எதிராளிகளின் இயந்திரத் துப்பாக்கிகள் சரமாரியான சூட்டினை மேற்கொண்டன. சில சமயங்களில் யுத்த வீரர்கள் எதிராளிகளின் விசவாயு தாக்குதலுக்கும் உள்ளானார்கள்.

3 வருடங்களாக மிகப் பெருமளவில் இரத்தம் சிந்திக்கொண்டிருந்த மோசமான சமர்கள் இவ் எல்லைப் பகுதிகளில் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. எந்தத் தரப்பும் யுத்த அனுகூலங்களைப் பெறமுடியாதிருந்தனர்.

ஐரோப்பாவில் ஜேர்மனியே பலமான இராணுவத்தைக் கொண்டிருந்தது. ஆனால் அது மேற்குப்புறம் பிரான்சுடனும் கிழக்கு முனையில் ரஷ்யாவுடனும் சமரிட்டுக்கொண்டிருந்தது. ஒட்டோமன் சாம்ராஜ்யம் என அழைக்கப்பட்ட துருக்கி சாம்ராஜ்யம் யுத்தத்தில் ஜேர்மனியின் அணியினைச் சார்ந்தது. இத்தாலி பின்னர் ஜேர்மனிக்கு எதிரான அணியில் சேர்ந்து கொண்டது. ஜேர்மனியின் அணியில் இருந்த நாடுகளும் ஜேர்மனியும் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்ற நாடுகளைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவதற்காக அந்த இடங்களிலும் சமர்களை விஸ்தரித்துக்கொண்டன.

மத்திய கிழக்கில் ஓட்டோமன் சாம்ராஜ்யத்திற்கு எதிராகப் போரிடுவதற்கு பிரித்தானியர்கள் அரேபிய விசேட படை ஒன்றை உருவாக்கினார்கள். பிரிட்டிஷ் தளபதி கேர்ணல் லோரன்ஸ் அதற்குத் தலைமை தாங்கினார். ஆசியாவில் ஜப்பானின் அதிகாரம் உயர்ந்துகொண்டிருந்தது. பசுபிக் சமுத்திரத்திலுள்ள பல தீவுகளை ஜப்பான் கைப்பற்றிக்கொண்டது. 1917இல் ரஷ்யாவில் இடம்பெற்ற கம்யூனிச புரட்சியானது அதிகாரத்தைப் புதிய அரசாங்கத்தின் கைக்குக் கொண்டுவந்தது. புதிய கம்யூனிச அரசாங்கம் ஜேர்மனியுடன் சமாதான உடன்பாட்டிற்கு வந்தது. இதனால் ஜேர்மனி மேற்குமுனையில் மட்டும் யுத்தத்தை மேற்கொள்ளவேண்டியிருந்தது. ஆனாலும் அவர்களால் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முடியிவில்லை. ஏனெனில் ஐக்கிய அமெரிக்காவும் யுத்தத்தினுள் நுழைந்து கொண்டது.

பெரும்பாலான அமெரிக்கர்கள் ஐரோப்பிய யுத்தத்திற்குள் தாங்கள் சம்பந்தப்பட்டுக்கொள்வதை விரும்பவில்லை. ஆனால் பிரித்தானியா தலைமையிலான நாடுகளுக்கு அமெரிக்க அரசாங்கம் கப்பல் வழி சரக்கு விநியோகங்களை மேற்கொண்ட வண்ணமிருந்தது. அந்த கப்பல்களை ஜேர்மன் நீர்மூழ்கிக்கப்பல்கள் மூழ்கடித்தன. இதனால் ஏப்ரல் 1917இல் அமெரிக்க காங்கிரஸ் ஜேர்மனுக்கு எதிரான யுத்தத்திற்கு ஜனாதிபதிக்கு அங்கீகாரமளித்தது.

1918 வரை அமெரிக்க துருப்புகள் யுத்த எல்லைகளுக்குள் சென்றடையவில்லை. 1918 ஜூலையின் பின்னரே அவர்கள் பிரித்தானியா சார்பான அணியுடன் இணைந்து சமரில் ஈடுபட்டனர். இது யுத்தத்தின் போக்கை விரைவில் மாற்றியது. ஜேர்மனியர் பின்வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

1918 நவம்பர் 11 இல் துப்பாக்கிகள் மௌனித்துக்கொண்டன. பெரும் யுத்தம் முடிவிற்கு வந்தது. ஐரோப்பா முழுவதும் யுத்தம் பெரும் உயிர், சொத்து அழிவுகளை ஏற்படுத்தியிருந்தது. அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சன் எல்லா யுத்தங்களையும் முடிவிற்குக் கொண்டுவருவதற்கான யுத்தம் என அதனை வர்ணித்தார். நீதியான ஒரு சமாதான திட்டத்தினை ஏற்படுத்துவதற்கு அவர் முனைந்தார். ஆனால் பிரித்தானிய அணியினர் அதனை விரும்பவில்லை. அமெரிக்கர்கள் கூட அதனை நிராகரித்தனர்.

ஐரோப்பாவின் வரைபடம் மீள வரையப்பட்டது. ஒஸ்ரியா, ஹங்கேரி சாம்ராஜ்யமும், ஓட்டோமன் சாம்ராஜ்யமும் சிதைந்தன. ஜேர்மனி அதன் ஆள் புலப்பரப்பில் சில பகுதிகளை இழந்தது. ஜேர்மனி யுத்த நஸ்ட ஈடாகப் பெருந்தொகைப் பணத்தினைச் செலுத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது. உலகில் சமாதானத்தையும் ஒற்றுமையையும் உருவாக்கும் நோக்குடன் சர்வதேச சங்கம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. ஜேர்மனியின் குடியேற்ற நாடுகள் பலவற்றின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரத்தினை பிரிட்டனும். பிரான்சும் பெற்றுக்கொண்டன. இது ஒரு சமாதானம் அல்ல என்பதை ஒரு பிரான்சிய படைத்தளபதியே சுட்டிக்காட்டியிருந்தார். இந்நிலைமை மேலும் ஒரு யுத்தத்திற்கு வழிகோலும் எனவும் அவர் எச்சரித்திருந்தார். இது 1939இல் நிருபணமாகியது. உலகப்போர் – 2 மூண்டது.

உலகப்போர- 2

1939இல் உருவான உலகப்போர் 1945இல் முடிவுக்கு வந்தது. வரலாற்றிலேயே மிக மோசமான யுத்தம் என்ற பெயரைத் தனதாக்கிக்கொண்டது. பெரும்பாலான ஐரோப்பிய ஆசிய நாடுகள் இவ் யுத்தத்தால் சிதைவுண்டன. 6 வருடங்களில் மாத்திரம் கிட்டத்தட்ட 55 மில்லியன் பேர் மாண்டனர். அவர்களில் பாதிப்பங்கிற்கும் மேலானோர் இராணுவப்படையில் இல்லாத சிவிலியன்கள் ஆவர். உலக யுத்தம் இரண்டு 1939இல் ஆரம்பமானது. ஜேர்மனி போலந்தில் ஊடுருவிய போது பிரிட்டனும், பிரான்சும் ஜேர்மனி மீது போர்ப் பிரகடனத்தினை மேற்கொண்டன. ஐக்கிய அமெரிக்கா 1941இல் யுத்தத்தினுள் நுழைந்தது. இதற்குக் காரணமாய் அமைந்தது ஹவாயிலிருந்த அமெரிக்க கடற்படைத் தளம் மீதான ஜப்பானிய விமானத்தாக்குதல் ஆகும். அமெரிக்காவானது, பிரிட்டன்- பிரான்ஸ் அணிக்குச் சார்பாகக் களம் இறங்கியது.

முதலாம் உலக யுத்தமே 2ம் உலக யுத்தம் ஏற்படுவதற்குக் காரணமாய் அமைந்தது. 1918இல் ஜேர்மனியின் தோற்கடிப்புடன் முதல் உலகப்போர் முடிவிற்கு வந்தது. வெற்றி பெற்ற அணியினரான பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் பெருமளவு பணத்தைச் செலுத்தும்படி ஜேர்மானியர் வற்புறுத்தப்பட்டிருந்தனர். அத்துடன் ஜேர்மானிய இராணுவத்தினை மீளக்கட்டியெழுப்புவதற்கும் தடைகள் போடப்பட்டிருந்தன. ஜப்பானும் கசப்புணர்வுடனேயே இருந்தது. ஜப்பானியர்கள் தங்களுடைய அதிகாரத்தை ஆசியாவில் விஸ்தரித்துக்கொள்வதற்குத் தாங்கள் உரித்துடையவர்கள் என நம்பினர். ஆனால் பிரிட்டனும், அமெரிக்காவும் இதற்குத் தடை ஏற்படுத்தின.

ஜேர்மனியில் 1933இல் நாசிக் கட்சியினர் அதிகாரத்திற்கு வந்தனர். அவர்களது தலைவராக அடோல்வ் ஹிட்லர் விளங்கினார். நாசிகள் ஜேர்மனியின் துன்ப நிலைக்கு யூதர்களே காரணம் என பழி சுமத்தினர். அவர்கள் யுத்தத்தினையும் வன்முறையினையும் ஊக்குவிக்கும்படி பிரச்சாரங்களை ஆரம்பித்தனர். ஜனநாயகத்தில் பயன் இல்லை என அவர்கள் வாதிட்டனர். ஜப்பானிய அரசாங்கமும் அதன் இராணுவ, கடற்படையினரால் செல்வாக்குக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. 1940ற்குள் ஜப்பான் ஜேர்மனியுடனும், இத்தாலியுடனும் உடன்படிக்கைகள் செய்துகொண்டது.

1930களில் ஜப்பான் சீனாவின் சில பகுதிகளையும் வேறு ஆசிய நாடுகளையும் கைப்பற்றிக்கொண்டது. இதை எந்தநாடும் எதிர்த்துப் போரிடவில்லை என்பதை கண்டுகொண்ட இத்தாலியும், ஜேர்மனியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது ஆள்புல எல்லைகளையும் விரிவாக்கிக் கொள்வதற்குத் தீர்மானித்தன. பிரிட்டனின் எதிர்ப்பிற்கு மத்தியிலும் ஹிட்லர் ஜேர்மனியின் இராணுவத்தை நவீனமயப்படுத்தினார். இதை அதுவரை யாரும் தடை செய்யவில்லை. 1930களின் கடைக்கூறுகளில் ஹிட்லர் ஒஸ்ரியாவையும், செகோஸ்லோவேகியாவையும் கைப்பற்றிக்கொணடார்.

1939 செம்டெம்பர் 1ம் திகதி ஹிட்லர் போலந்தினுள் ஊடுருவினார். அத்துடன் 2ம் உலகப்போர் ஆரம்பமானது. ஜேர்மனியின் யுத்தத்தாங்கிகள், விமானங்கள் போன்றவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட துரிதமான படை நகர்வுகள் விரைவிலேயே போலந்தை வீழ்த்தின. இவ்வாறான தாக்குதல் நடவடிக்கைக்கு அவர் (மின்னல் தாக்குதல்) எனப் பெயரிட்டிருந்தார். ஏனெனில் மிக விரைவாக அத்தாக்குதல் நிகழ்த்தப்பட்டு, இடங்கள் கைப்பற்றப்பட்டன. 1940இல் இலையுதிர் காலத்தில் அவர் மேற்கு ஐரோப்பாவினுள்ளும் ஊடுருவினார். டென்மார்க், நோர்வே. பெல்ஜியம், நெதர்லண்ட், பிரான்ஸ் ஆகிய நாடுகள் மின்னல் தாக்குதல் நடவடிக்கையினால் ஹிட்லரால் கைப்பற்றப்பட்டன. அதன் பின்னர் ஹிட்லர் ஐரோப்பாவின் எஜமானன் ஆனார்.

பிரிட்டன் சுதந்திர நாடாகவே நீடித்திருந்தது. ஹிட்லர் பிரிட்டனுக்குள் ஊடுருவ முன்னர் பிரிட்டனின் விமானப்படையினை துவம்சம் செய்ய வேண்டுமென விரும்பினார். 1940, 1941 காலப்பகுதியில் ஜேர்மானிய விமானங்கள் இங்கிலாந்து மீது குண்டுமாரி பொழிந்தன. அப்போதைய பிரித்தானியப் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில் ஜேர்மனிக்கு எதிராக தனது நாட்டு மக்களை வலுவுடன் போராட வேண்டும் என அணிதிரட்டினார். அப்போது பிரிட்டன் விஞ்ஞானிகளால் இரகசியமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்த ரேடார் தொழில்நுட்பத்தின் உதவியினால் ஜேர்மானிய விமானங்களின் ஊடுருவல் இலகுவாகக் கண்டறியப்பட்டு அவை சுட்டு வீழ்த்தப்பட்டன. இதனால் அதன்பின்னர் ஜேர்மானிய விமானங்களினால் பிரித்தானியாவினுள் நுழைய முடியவில்லை. ஜூன் 22, 1941இல் ஹிட்லரின் படைகள் சோவியத் யூனியனுக்குள் ஊடுருவின. நவம்பர் மாதத்திற்குள் சோவியத் யூனியனின் தலைப்பட்டினமான மொஸ்கோவிலிருந்து 32 கிலோமீட்டர் வரையில் ஜேர்மனிய படைகள் முன்னேறியிருந்தன. ஐக்கிய அமெரிக்காவில் பெரும்பாலான மக்கள் ஹிட்லரை வெறுத்தனர். ஆனாலும் பெரும்பாலான அமெரிக்கர்கள் தங்களது நாடு வெளிநாட்டு போர்களில் சிக்கிக்கொள்வதை விரும்பவில்லை.

இதற்கிடையில் ஜப்பான் ஆசியாவில் தனது சாம்ராஜ்யத்தை விரிவாக்கிக்கொண்டிருந்தது. அமெரிக்கா ஜப்பானுக்கு எண்ணெய், உலோகங்கள் விற்பதனை நிறுத்தியிருந்தது. ஜப்பானியர்கள் தென்கிழக்கு ஆசியாவிலுள்ள எண்ணெய் வளப் பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்குத் திட்டமிட்டனர். இது அமெரிக்காவுடன் ஒரு யுத்தத்தைத் தோற்றுவிக்கும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் முதல் தாக்குதலைத் தொடுத்தனர். 1941 டிசம்பர் 7ம் நாள் ஜப்பானிய விமானங்கள் ஹவாய் தீவிலிருந்த பேர்ள் துறைமுகத்தில் இருந்த அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் மீது குண்டுமாரி பொழிந்தன. இதனால் 21 கப்பல்கள் புதைந்தோ கடுமையாகச் சேதப்பட்டோ இருந்தன. இதனால் அமெரிக்காவும் யுத்தத்தில் குதிக்கவேண்டியதாயிற்று.

ஜப்பான் அமெரிக்காவைத் தாக்கியிருந்தபோதும் ஜேர்மனியே மிகவும் வலிமையான எதிரி நாடு என்றும் ஹிட்லரே முதலில் தோற்கடிக்கப்படவேண்டியவர் என்றும் அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் டி. றூஸ்வெல்ட் தீர்மானித்தார். ஜேர்மனியும் இத்தாலியும் வட ஆபிரிக்காவின் பெரும்பாலான நாடுகளைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டிருந்தன. 1942இல் வட ஆபிரிக்காவில் பிரித்தானியர் தலைமையிலான நேச அணிப் படையினருடன் ஜேர்மனிக்கு எதிரான தாக்குதலில் அமெரிக்கப்படைகள் முதன் முதலாகக் களம் இறங்கின.

1943 மே மாதத்திற்குள் ஜேர்மனிய அணிப்படைகள் அங்கிருந்து பின்வாங்கின. 1943 ஜூலையில் அமெரிக்க பிரித்தானிய கனேடிய படையினர் இத்தாலிக்குள் ஊடுருவினர். இங்கிலாந்தின் விமானத்தளங்களிலிருந்து கிளம்பிய அமெரிக்க விமானங்கள் ஜேர்மனியின் மீது குண்டுமாரி பொழிந்தன. 1942 நவம்பரில் சோவியத் படைகள் ஜேர்மனிய முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தின. அத்துடன் அவர்கள் ஜேர்மனிய படையினரை பின்னோக்கிச் செல்லும் வகையில் கடுமையான தாக்குதல்களை ஆரம்பித்தனர்.

1944இல் ஹிட்லர் தனது படைப்பலத்தின் பெரும்பகுதியை சோவியத் யூனியனுக்கு எதிராகப் பிரயோகித்தார். 1944 ஜூன் 6ம் திகதி பிரான்சின் வடக்கில் பிரித்தானிய, அமெரிக்க மற்றும் நேச அணிப் படைகள் கால்பதித்தன. இதனால் ஜேர்மனி பிரான்சிலும், சோவியத் யூனியனிலுமாக இரண்டு முனைகளில் சமர்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. 1944 இன் முடிவிற்குள் பிரித்தானிய நேச அணிப்படையினர் எல்லா இடங்களிலும் முன்னேறத்தொடங்கியிருந்தனர். சோவியத் படைகள் கிழக்குப் புறமாக ஜேர்மனியரைப் பின்வாங்கச் செய்துகொண்டிருந்தன. பிரித்தானியாவும், அமெரிக்காவும் மேற்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் ஜேர்மனியைத் தாக்கின.

பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்கப்படைகள் ஜப்பானியப் படைகளைச் சிதைத்துக்கொண்டிருந்தன. கடுமையான மோதல்களின் பின்னர் அமெரிக்கப்படைகள் ஒவ்வொரு தீவாகக் கைப்பற்றிக்கொண்டன. அமெரிக்கப்படைகள் ஜப்பானுக்கு அண்மையாக நகர்ந்துகொண்டிருந்தன. 1945 இன் தொடக்கப்பகுதியில் ஜேர்மன் அணியினைச் சேர்ந்த பட்டினங்கள் மீது பிரித்தானிய, அமெரிக்க விமானங்கள் கடுமையான விமானத் தாக்குதல்களை மேற்கொண்டன. 1945 மே மாதம் 7ம் நாள் ஜேர்மனி பிரித்தானிய நேச நாட்டுப் படையினரிடம் சரணடைந்தது. அதற்கு ஒரு வாரம் முன்பாகவே ஹிட்லர் தற்கொலை செய்துகொண்டிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பான் இன்னமும் போரிட்டுக்கொண்டிருந்தது. அதனைச் சூழவுள்ள தீவுகள் ஒவ்வொன்றாக கைப்பற்றப்பட்டு, ஜப்பானுக்குள் ஊடுருவும் நிலையில் அமெரிக்கப்படைகள் இருந்தன. 1945 ஓகஸ்ட் 6ம் நாள் ஒரு பயங்கரமான யுத்த ஆயுதத்தை அமெரிக்கா அறிமுகம் செய்தது. ஜப்பானிய நகரான ஹிரோசிமா மீது அணுகுண்டை அமெரிக்கா வீசியது. 3 நாட்கள் கழித்து மற்றுமொரு ஜப்பானிய நகரான நாகசாக்கி மீது மற்றுமொரு அணுகுண்டு வீசப்பட்டது. வரலாற்றிலேயே மிகப்பெரும் அழிவினை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்த ஆயுதமாக அணுகுண்டு அமைந்தது. 1945 ஓகஸ்ட் 14 இல் ஜப்பான் சரணடைவதற்கு இணங்கியது. 2ம் உலக யுத்தம் மிகப்பெரிய அழிவுகளை விட்டுச் சென்றது. ஜேர்மனியும் ஜப்பானும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தன. பிரிட்டனும், ஏனைய தேசங்களும் கூட மோசமான அழிவுகளைச் சந்தித்திருந்தன. ஜேர்மனிய அணியினைச் சேர்ந்த நாடுகளைச் சேர்ந்த 11 மில்லியன் இராணுவ மற்றும் சிவிலியன் மரணங்கள் பதிவாகின. வெற்றிபெற்ற பிரித்தானிய அணியினைச் சேர்ந்த நாடுகள் அதைவிட 4 மடங்கு அதிகமான உயிரிழப்புகளைச் சந்தித்திருந்தன. சோவியத் யூனியனில் மட்டும் 20 மில்லியனுக்கு அதிகமான மக்கள் மாண்டனர். ஹிட்லரின் மரண முகாம்களைக் கண்டு உலகம் அதிர்ச்சியடைந்தது. இந்த முகாம்களில் நாசிப்படையினர் கிட்டத்தட்ட 6 மில்லியன் மக்களைக் கொன்றிருந்தனர். ஐரோப்பிய யூதர்களுள் மூன்றில் இரண்டு பங்கினர் இவ்வாறு கொல்லப்பட்டிருந்தனர்.

அந்த யுத்தத்தின் பின் ஜேர்மனியும், ஜப்பானும் இராணுவ வலிமையினை இழந்தன. வல்லரசு நாடுகள் என்ற அந்தஸ்து அந்நாடுகளுக்கு இல்லாமல் போனது. அவை மட்டுமல்ல, அதுவரை வல்லரசு நாடுகள் என்ற நிலையிலிருந்த பிரிட்டனும், பிரான்சும் கூட அந்த அந்தஸ்தினை இழந்தன. ஐக்கிய அமெரிக்காவும், சோவியத் யூனியனும் உலகின் மிகப்பெரும் வல்லரசுகளாகத் தோற்றம் பெற்றன.

பனி யுத்தம்

மக்கள் பனியுத்தம் ஒரு போதும் நிறைவு பெறாது என்றும் ஒரு நாள் மீண்டும் அணு ஆயுதங்கள் வெடித்து உலகை துவம்சம் செய்யப்போகின்றது என்றும் நம்பியிருந்தனர். ஆனால் இப்போது பனியுத்தம் ஒரு பழைய ஞாபகச் சம்பவமாக ஆகிவிட்டது.

பனியுத்தம் பிரதானமாக ஐக்கிய அமெரிக்காவிற்கும், சோவியத் யூனியனுக்கும் இடையிலானதாக இருந்தது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் உலகின் தனிப்பெரும் வல்லரசுகளாகத் தோற்றம் பெற்ற அமெரிக்காவிற்கும், சோவியத் யூனியனுக்குமிடையில் ஆரம்பித்த இந்தப் போட்டி இரண்டாம் உலக யுத்த முடிவில் தோன்றி 1980கள் வரை கிட்டத்தட்ட 40 ஆண்டுகள் நீடித்தது.

ஏன் இது பனியுத்தம் என்று அழைக்கப்படுகின்றது?

ஏனெனில் அமெரிக்காவோ, சோவியத் யூனியனோ நேருக்கு நேர் தங்கள் இராணுவப் படைகளை இறக்கி, ஒருவரை ஒருவர் தாக்கி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தினை மேற்கொள்ளவில்லை. ஆனால் மறைமுகமாக ஒரு நாட்டின் இராணுவ பலத்தைச் சிதைப்பதற்காக மற்றைய நாடு தீவிரமாக மறைமுகமான வழிமுறைகளில் நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1945 இல் உலகப் போர் முடிவுற்ற போதே பனியுத்தம் ஆரம்பித்துவிட்டிருந்தது. நாசி ஜேர்மனியைத் தோற்கடிப்பதில் அமெரிக்காவும், சோவியத் யூனியனும் ஒன்றுபட்டே செயற்பட்டிருந்தன. சோவியத் இராணுவம் கிழக்குப் புறமிருந்து ஜேர்மனிக்குள் ஊடுருவி இருந்தது. அந்நிலையில் ஜேர்மனியின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சோவியத் யூனியன் விடுவித்து இருந்தது. அவையாவன பல்கேரியா, செக்கொஸ்லோவாக்கியா, ஹங்கேரி, போலந்து, றொமானியா ஆகியவை ஆகும். இதனால் அந்நாடுகளில் சோவியத் யூனியனின் ஆட்சியின் செல்வாக்கு ஏற்பட்டதுடன் அந்நாடுகளிலும் கம்யூனிச அரசுகள் தோன்ற ஆரம்பித்தன. அப்போதைய பிரித்தானியப் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில் இதனை ஐரோப்பாவின் குறுக்கே ஒரு இரும்புத் திரை விழுந்துவிட்டது என வர்ணித்திருந்தார். சோவியத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிச சித்தாந்தத்தின் விருத்தி ஏற்பட்டதால் அந்நாடுகளுக்கும் ஜனநாயகக் கோட்பாடுகளைப் பின்பற்றிய மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குமிடையில் ஒரு தெளிவான பிளவு தோன்றியது. கிழக்கு ஐரோப்பாவின் எல்லை நெடுகிலும் சோவியத் படைகள் நிலைகொண்டிருந்தன. சோவியத்தின் ஊடுருவலினால் ( இரண்டாம் உலகப் போரின் போது) ஜேர்மனியானது மேற்கு ஜேர்மனி, கிழக்கு ஜேர்மனி என இரண்டாகப் பிளவுண்டது. மேற்கு ஜேர்மனி ஜனநாயக நாடாக இருந்த அதேவேளை கிழக்கு ஜேர்மனி கம்யூனிச நாடாக விளங்கியது.

பனியுத்தத்தின் போது சோவியத் யூனியனும், ஐக்கிய அமெரிக்காவும் வித்தியாசமான அரசியல், பொருளாதார கொள்கைகளைக் கொண்டிருந்தன. அமெரிக்காவும், அதன் நேச நாடுகளும் சோவியத் யூனியன் கம்யூனிச சித்தாந்தங்களை உலகம் முழுவதும் பரப்பி விடுமோ என அச்சம் கொண்டன. அவை கம்யூனிசத்தை விரும்பவில்லை.

சொத்துகள் மீதான தனிநபர்களின் உரிமையினை முடிவிற்குக் கொண்டு வருவதே கம்யூனிசத்தின் இலக்காய் இருந்தது. கம்யூனிச முறைமையின் கீழ் ஒரு நாட்டின் சொத்துகள் தனிப்பட்ட எவருக்கும் உரிமையானதாக இல்லாமல் எல்லா மக்களுக்கும் பொதுவான உரிமையினைக் கொண்டதாக விளங்கும். மக்கள் அனைவரும் இணைந்தே உற்பத்தி தொடர்பாகத் தீர்மானம் எடுப்பர். ஆனால் சோவியத் யூனியனில் உண்மையில் இந்தவிதமான திசையில் கம்யூனிசத்தின் பாதை அமையவில்லை. அதற்குப் பதிலாக கம்யூனிச கட்சியின் ஆட்சியின் கீழ் சர்வாதிகாரத்தை நோக்கி சோவியத் யூனியன் சென்று கொண்டிருந்தது. பல சுதந்திரங்கள் அம்மக்களுக்கு மறுக்கப்பட்டன. கம்யூனிச சித்தாந்தங்களை வெறுத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாயிரக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டு சிறைகளுக்கு அனுப்பப் பட்டனர்.

ஐக்கிய அமெரிக்காவிலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் சர்வாதிகார முறைமைக்குப் பதிலாக ஜனநாயக அரசாங்கங்கள் ஆட்சி செலுத்தின. அவை தனி நபர்களின் சுதந்திரத்திற்கு மதிப்பளித்தன. அவை முதலாளித்துவப் பொருளாதாரக் கோட்பாட்டினைப் பின்பற்றின. குழுச் சொத்துரிமை என்பதற்குப் பதிலாக தனியாள் முயற்சிக்கும், தனியாள் சொத்துரிமைக்கும் முதலாளித்துவம் மதிப்பளித்தது.

பனியுத்தத்தின் போது இரண்டு அணிகளும் தமது ஆயுத வளத்தினைப் பெருக்கிக் கொண்டன. குறிப்பாக அணு ஆயதங்களை அதிகமாக விருத்தி செய்து கொண்டன. அவை ஹிரோசிமா, நாகசாகி நகரங்களில் போடப்பட்ட அணுகுண்டுகளை விட பல மடங்கு சக்தி வாய்ந்தவையாக நாடுகளையும், நகரங்களையும் நொடிப் பொழுதில் அழிக்கும் வல்லமை கொணடவையாக விளங்கின. இரண்டு அணிகளுமே மற்றைய அணி முதலில் அணு ஆயத யுத்தத்தை ஆரம்பித்து விடுமோ என அச்சம் கொண்டிருந்தன.

அணு ஆயுதப் போட்டி ஆரம்பமாகியது. அணு ஆயத யுத்தம் ஒன்று தம்மீது தொடுக்கப்பட்டால் பதில் தாக்குதலை நடாத்துவதற்கு பலமான அணு ஆயுதங்கள் அவசியம் என இரு அணிகளும் வாதிட்டுக் கொண்டன. போதுமான அளவு அணு ஆயுதங்களைக் கொண்டிருப்பது எதிர்த்தரப்பு யுத்தம் ஒன்றிற்குச் செல்வதைத் தடுக்கும் என இரு தரப்பும் நம்பின. அவ்வாறு ஒரு யுத்தம் மூண்டால் இரண்டாம் உலக யுத்த அழிவுகளை விட பெரும் அழிவினை உலகம் சந்திக்கும் என உலகில் எல்லோரும் பயந்தனர்.

சோவியத் யூனியன் ஏனைய நாடுகளிலும் கம்யூனிச அரசாங்கங்கள் பதவிக்கு வருவதை ஊக்குவித்தது. சீனாவிலும் கம்யூனிச தலைவர்கள் பதவிக்கு வந்தனர். சோவியத் யூனியனும், சீனாவும் ஏனைய நாடுகளிலும் கம்யூனிச அரசாங்கங்கள் ஏற்படுவதற்கு உதவியளித்தன. இதனால் வெவ்வேறு நாடுகளில் ஜனநாயக அரசாங்கங்களுக்கும், கம்யூனிச போராளிக் குழுக்களுக்குமிடையே மோதல்கள் மூண்டன. மேற்கு நாடுகளும், சோவியத் யூனியனும் தத்தமக்கு ஆதரவான தரப்புகளுக்கு போதுமான நிதி, ஆயுத விநியோகங்களை மேற்கொண்டன. இதனால் பல நாடுகளில் உள்நாட்டுக் கிளர்ச்சிகள் ஏற்பட்டு, இரத்த ஆறு பெருகெடுத்தது. அமெரிக்கா கம்யூனிசப் பரவலுக்கு எதிராகத் தீவிர நடவடிக்கைகளில் குதித்தது.

1950 - 1953இல் இடம்பெற்ற கொரிய யுத்தம் மிகவும் முக்கியமானது. சீனா வடகொரியாவை ஆதரிக்க, அமெரிக்கா தென்கொரியாவை ஆதரித்தது. 1953இல் யுத்தம் நிறுத்தப்பட்ட போதும், இன்றும் கூட கொரியாவானது வடகொரியா, தென்கொரியா என பிளவுபட்டே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1962இல் பனியுத்தம் அணுவாயுத யுத்தத்தின் விளிம்பிற்கு உலகை இட்டுச் சென்றது. கியூபாவில் சோவியத் யூனியன் அணுஆயுத ஏவகணைகளை நிறுவுகின்றது என்ற விடயம் அமெரிக்காவால் அறிந்துகொள்ளப்பட்டது. அந்த ஏவுகணைகள் அமெரிக்காவைக் குறிவைத்து நிறுவப்பட்டன. யுத்தம் ஒன்று உருவாவது நிச்சயம் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அந்த அணுஆயுதங்களை சோவியத் யூனியன் மீளப்பெற்றுக்கொண்டதனால் அந்தப் பயங்கர யுத்தம் தவிர்க்கப்பட்டது.

கம்யூனிசத்தின் பரவுகைக்கு எதிரான ஒரு போராட்டமாக அமெரிக்கா, வியட்நாம் யுத்தத்தில் ஈடுபட்டதையும் கூற முடியும் (1959 - 1975). ஒரு ஆசிய நாடு கம்யூனிச சித்தாந்தத்திற்கு உட்பட்டு விட்டால் ஏனைய ஆசிய நாடுகளும் இலகுவாகக் கம்யூனிசத்தின் செல்வாக்குக்கு உட்பட்டுவிடும் என அமெரிக்கா பயந்தது. வியட்நாமில் கம்யூனிசத்தின் வெற்றியுடன் யுத்தம் முடிவிற்கு வந்தபோதும், ஏனைய ஆசிய நாடுகள் பூராகவும் கம்யூனிசம் பரவவில்லை.

ஆயுதப் போட்டி காரணமாக சோவியத் யூனியனில் அரசியல் தலைவர்கள் இராணுவ வலிமையைப் பெருக்குவதிலும், விண்வெளியிலும் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற மனப்பான்மையிலும் தமது முழு வளங்களையும் பிரயோகித்தனர். இதனால் பொருளாதார வளர்ச்சி அங்கு தடைப்பட்டது. மக்கள் செழிப்பான பொருளாதார வாழ்வு இல்லாமல் போனதால் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்நிலையில் 1980 களின் நடுப்பகுதியில் மிகையில் கொர்பச்சேவ் என்ற தலைவர் சோவியத் யூனியனில் அதிகாரத்திற்கு வந்தார். அவர் நாட்டில் மக்களின் வாழ்க்கை நிலையை விருத்தி செய்வதற்குத் திடசங்கற்பம் கொண்டிருந்தார். அந்த செயல்முறையில் பனியுத்தத்தினை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு அவர் பாடுபட்டார்.

கொர்பச்சேவ் அந்நாட்டு மக்களுக்கு மேலும் சுதந்திரம் வேண்டும் என்பதை வலியுறுத்தினார். அவரும் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றீகனும் தாம் அமைத்து வைத்திருந்த பெருமளவு ஆயுதங்களை அழிப்பதற்கு ஒத்துக்கொண்டனர். கிழக்கு ஐரோப்பாவிலும் மாற்றங்களுக்கு கொர்பச்சேவ் உதவினார். கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோவியத் படைகள் அதற்கு மேலும் கம்யூனிச அரசாங்கங்களை நிலைநிறுத்துவதற்கு உதவப்போவதில்லை என அவர் அறிவித்தார்.

ஒன்றன் பின் ஒன்றாக கம்யூனிச ஆட்சியில் இருந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகள் விடுபட்டன. 1989 இல் பேர்லின் சுவர் உடைக்கப்பட்டு, ஜேர்மனி மீண்டும் ஒரு நாடாக்கப்பட்டது. அதன்பின் ஐரோப்பா பிளவுண்டதாக இருக்கவில்லை. இறுதியாக சோவியத் யூனியனின் பகுதிகளாக இருந்த நாடுகளும் தமது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்திக்கொண்டன. 1991இல் சோவியத் யூனியனின் சிதைவுடனும், 1989இல் கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசத்தின் வீழ்ச்சியுடனும் பனியுத்தம் முடிவிற்கு வந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடகொரியா, கியூபா போன்ற நாடுகள் இன்னமும் கம்யூனிச சித்தாந்தத்தைப் பேணுகின்ற போதும் அவை ஜனநாயகநாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் நிலையில் இப்போது இல்லை என்பதுடன், அவை மிகுந்த பொருளாதார பிரச்சனைகளையும் தற்போது எதிர்கொண்டுள்ளதால், எதிர்காலத்தில் அங்கும் கம்யூனிசம் வீழ்ச்சியடையலாம் என எதிர்வு கூறப்படுகின்றது. சீனாவிலும் ஆரம்பத்தில் இருந்த கம்யூனிசக் கோட்பாடுகளில் பல தளர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

பனியுத்தத்தின் முடிவுடன் யுத்தமற்ற உலகு உருவாகியுள்ளதாக சந்தோசத்துடன் கடந்த நூற்றாண்டின் இறுதி சில ஆண்டுகளைக் கழித்த மக்கள், இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் மீண்டும் யுத்த அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். இது உலகளாவிய பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற பெயரில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. இது பற்றித் தனியாக ஆராயப்படல் வேண்டும்.

❖ Peace begins with a smile.
Mother Teresa

❖ When you make peace with yourself, you make peace with the world.
Maha Ghosananda

❖ Don't gain the world and lose your soul, wisdom is better than silver or gold.
Bob Marley

❖ You can't shake hands with a clenched fist.
Indira Gandhi

❖ First keep the peace within yourself, then you can also bring peace to others.
Thomas a Kempis

❖ We can never obtain peace in the outer world until we make peace with ourselves.
Dalai Lama

❖ An eye for an eye will only make the whole world blind.
Mahatma Gandhi


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோபம் கொடியது

திருமதி மெடோனா பசில் சகாய சாந்த்

அவ்வப்போது எல்லோருக்குமே கோபம் வரும். சொல்லப் போனால் அன்பு, நம்பிக்கை, கவலை, துக்கம், பயம் போன்ற உணர்ச்சிகளைப் போல கோபமும் ஒரு உணார்ச்சியே. கோபத்தைக் கட்டுக்குள் வைத்து அதைச் சரியான விதத்தில் வெளிக்காட்டுவது நல்லது தான். உதாரணத்திற்கு ஒருவர் தன் தீர்மானத்தில் உறுதியாக இருக்க, தடைகளைத் தாண்ட பிரச்சினைகளைச் சமாளிக்க கோபம் உதவுகின்றது என்றால் நல்லது.

அதே சமயம் கோபத்திற்கு ஒரு இருண்ட பக்கமும் உண்டு. சிலருக்கு சட்டெனக் கோபம் வரும். தொட்டதெற்கெல்லாம் கோபம் வரும். அதுவும் சுள்ளென்று வரும். எரிச்சல் வந்துவிட்டால் கொடூர வார்த்தைகளை அள்ளி வீசுவார்கள். அடிதடியில் இறங்குவார்கள். கோபத்தை அவர்கள் அடக்குவதற்கு பதிலாக கோபம் அவர்களை அடக்கிவிடும். இப்படிப்பட்ட அத்துமீறிய கோபம் ஆபத்தானது. ஒருவருடைய வாழ்க்கையையே பாழாக்கும் அளவிற்கு கொடியது. அது மனதை, உணர்ச்சியை, நடத்தையை, உறவுகளைக் காயப்படுத்தி விடும். கோபத்திற்கான காரணங்களை விபரிப்பது சிக்கலானது. கோபம் ஏன் வருகின்றது என விஞ்ஞானிகளால் கூட கண்டு பிடிக்க முடிய வில்லை.

ஆனால் கோபத்தை மூட்டி விடும் விடயங்கள் இருப்பதாக உளவியலாளர்கள் சொல்கின்றனர். நமக்கு யாராவது அநியாயமோ துரோகமோ இழைத்தால் நாம் வெறுத்துப்போகின்றோம். வெறுப்பும் எரிச்சலும் முற்றும் போது அல்லது அவமரியாதையாக நடாத்தும் போது நமக்கு கோபம் வரலாம். நம்முடைய பெயர், பதவி எல்லாம் பறிபோய் விடுமோ என்ற பயமும் கூட கோபத்தை ஏற்படுத்தி விடும்.

எனினும் கோபப்படுவதற்கான காரணங்கள் ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றன. வயதை, பாலினத்தை, கலாசாரத்தைப் பொறுத்தும் அவை வேறுபடலாம். கோபப்படும் விதமும் ஆளுக்கு ஆள் வேறுபடும். சிலருக்கு சீக்கிரத்தில் கோபம் வராது. சிலர் கோபத்தை சீக்கிரத்தில் மறந்து விடுவார்கள். சிலருக்கு சட்டெனக் கோபம் வரும். சிலர் வன்மத்தை நாட்கணக்கில், மாதக்கணக்கில், வருடக்கணக்கில் கூட கட்டி வளர்த்துக் கொண்டிருப்பார்கள். நான், எனக்கு எனும் மனப்பான்மையும், மன ஆசை, சுயநலம், ஆணவம், தலைக்கனம் போன்றவை கோபத்தை மேலும் மேலும் வளர்க்கின்றன. சுயநலம் பிடித்தவர்களுக்கு தாம் நினைத்ததுபோல எதுவும் நடக்கவில்லையென்றால் உடனே கோபம் பொத்துக் கொண்டு வந்துவிடும். கட்டுக்கடங்காமல் கோபம் வருவதற்கு வேறு சில காரணங்களும் உண்டு.

பிள்ளைகள் பெற்றோர்களைப் பார்த்துப் பார்த்து வளர்வதனால் பெற்றோரின் சுபாவம் பிள்ளைகளிடமும் தொற்றிக் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு பிள்ளைகள் தங்களுடைய சூழலில் உள்ள பெரியவர்கள் கோபப்படுவதைப் பார்த்து தாமும் கோபப்படுவதற்கு கற்றுக் கொள்கின்றனர். சின்ன விடயத்திற்கு எல்லாம் சிடுசிடுவென எரிந்துவிழுகின்ற பெற்றோர் மத்தியில் வளருகின்ற பிள்ளைகள் பிரச்சினைகளைச் சந்திக்கும் போது கோபத்தை வெளிக்காட்டப்பழகிக் கொள்கின்றனர். பிள்ளைகளின் மீது எப்போதும் கோபத்தைக் காட்டினால் அவர்களும் பொரியவர்கள் ஆனதும் கோபக்காரர்களாகவே இருப்பார்கள்.

தற்போது கைத் தொழில் மயமாக்கம் காரணமாக மக்கள் பெருமளவில் நகரங்களில் குடியேறுவதனாலும் மக்களுடைய கோபமும் விரக்தியும் அதிகமாகிச் செல்கின்றன. பெருநகரங்களில் போக்குவரத்து நெருக்கடி கூட மக்கள் கோபக்காரர்களாக மாற வழிவகுக்கின்றது. நெருக்கடியான நகரங்களில் வசிக்கும் மக்கள் கோபப்படுவதற்கு வேறு காரணங்களும் உண்டு. அங்கு சுத்தமான காற்று கிடைக்காது, வீட்டு வசதி இருக்காது, ஒரே கூச்சலும் இரைச்சலுமாக இருக்கும். வெவ்வேறு கலாசாரப் பின்னணிகளைக் கொண்ட மக்கள் அருகருகே வசிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதனாலும் அவர்களிடையே பிணக்குகள் உருவாகலாம், வன்முறைகள் தலைவிரித்து ஆடலாம். இப்படி பிரச்சனைக்கு மேல் பிரச்சனை நெருக்குவதனால் மக்கள் விரக்தியடைந்து கோபப்படுகின்றனர். பொறுமையிழந்து விடுகின்றனர்.

சிலருக்கு வேலையில்லாப் பிரச்சனை கோபத்தை ஏற்படுத்துகின்றது. சிலருக்கு பணக்கஷ்ரம் கோபத்தை உண்டு பண்ணுகின்றது. வேலையில் இருப்பவர்களுக்குக் கூட வேலையின் அழுத்தம் மற்றும் வேலை பறிபோய் விடுமோ எனும் பயம் போன்றவை கோபத்தை உண்டு பண்ணுகின்றது. ஓட்டப்பந்தயத்தில் உங்களை மட்டும் காலில் சங்கிலி கட்டிக்கொண்டு ஓடச் சொன்னால் எப்படி இருக்கும்? இனம், மொழி, சமயம் போன்ற பின்னணி கார்ணமாக பாரபட்சத்துடன் நடத்தப்படும் போது நிறையப் பேர் இப்படித்தான் உணர்கின்றனர் வேலை, கல்வி, வீடு போன்ற அடிப்படை விடயங்களுக்கே பாரபட்சம் காட்டி ஒதுக்கும் போது மக்கள் கொதிப்படைகின்றனர்.

அநியாயம் கூடக் கூட மக்களின் மனம் நொந்து நூலாகிறது. நாம் எல்லோருமே ஏதாவது ஒரு சமயத்தில் அநீதியால் அவதிப்படுகின்றோம், அதை நினைக்கும் போதே மனம் வலிக்கும. நீதிக்குத் தட்டுப்பாடும் ஆறுதலுக்குப் பஞ்சமும் வந்தால் கோபம் வெள்ளமாய்ப் பாய்ந்து வராதா என்ன? தொலைக்காட்சி மூலமாகவும் மற்ற ஊடகங்கள் வாயிலாகவும் காட்டப்படுகின்ற வன்முறை பிள்ளைகளை பாதித்திருக்கிறதா என்பதை அறிய பல ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. படுபயங்கரமான வன்முறைக் காட்சிகளை பிள்ளைகள் அடிக்கடி பார்ப்பதனால் முரட்டுத்தனமாக நடந்து கொள்வதில் தவறில்லை என நினைக்கின்றார்கள். இரக்கம் காட்டத் தயங்குகின்றனர். சில சந்தப்பங்களில் சில திரைப்படங்கள் அநியாயத்தைத் தட்டிக்கேட்க இளைய தலைமுறையினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறையைக் கையில் எடுத்துக் கொள்ளலாம் எனும் விதமாக அமைகின்றன. மக்கள் தங்களுடைய அன்றாட வேலைகளைச் செய்யவே படாதபாடு படும்போது பிரச்சினைகள்,பாரங்கள், வேலைகள் என இவையும் நெருக்குவதனால் மக்கள் வெறுப்படைகின்றனர்.

கிரேக்க தத்துவஞானி அர்hpஸ்ரோட்டில் கோபம் ஏற்படும் போது வடிகால் தேடப்படல் வேண்டும் என்று கூறினார். 20ஆம் நுஹற்றாண்டின் ஆரம்பத்தில் நரம்பியல் நிபுணரான ஸிக்மன்ட் புரொய்ட்டும் இதே போன்ற ஒரு கருத்தை தெரிவித்தார். கோபத்தை மனதில் பூட்டி வைத்தால் பின்பு ஹிஸ்ரிரியா போன்ற மனநலக் கோளாறுகளை ஏற்படுத்திவிடும் என்று அவர் சொன்னார். கோபத்தை அடக்காமல் அதை வெளிக்காட்ட வேண்டும் என்பதே அவருடைய கருத்து. ஆராய்ச்சியாளர்கள் சிலர் 1970 களிலும் 1980 களிலும் வடிகால் தேடுதல் என்ற இந்த கொள்கையைச் சோதித்துப் பார்த்தார்கள். ஆனால் அதை நிரூபிப்பதற்கு எந்த ஆதாரத்தையும் அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை.

வடிகால் தேடுதல் என்ற கொள்கையின்படி உங்கள் கோபத்தை எல்லாம் கொட்டும் போது அந்தக் கோபம் இன்னும் ஒரு படி மேலே ஏறுமே தவிர கீழே இறங்காது என ஆராய்ச்சிகாட்டுகின்றது. இதனால் கோபத்தை விட்டு விடுவதே சிறந்தது. கோபத்தையும் உக்கிரத்தையும் விட்டு விட வேண்டும். எரிச்சல் கொள்ளக்கூடாது. அவை தீங்குவிளைவதற்கே ஏதுவாகும். விபரீதமாக ஏதாவது சொல்லிவிட்டு அல்லது செய்து விட்டு பிற்பாடு வருந்துவதற்குப் பதிலாக நாம் கோபத்தினைக் காட்டாமல் இருப்பது நல்லது.

'எரிச்சல் கொள்ளாதே' என்று சொல்வது மிகவும் சுலபமானது. ஆனால் நடைமுறைப் படுத்துவது மிகவும் கடினமான விடயம்தான். கோபத்தை அடக்க உங்கள் உணர்ச்சியைக் கட்டுப் படுத்தி, கொஞ்சம் றிலாக்ஸ் ஆக வேண்டும். கோபம் வந்தவுடன் வாய்க்கு வந்ததையெல்லாம் ஒப்பித்து விடக்கூடாது. மிகவும் உணர்ச்சி வசப்படும் போது கடைசியில் கோபத்தை கட்டுப்படுத்த முடியாமல் போகலாம். சண்டையின் ஆரம்பம் மடை திறந்து விடுவது போல் இருக்கும். ஆதலால் விவாதம் எழுமுன் அதை விட்டுவிடுதல் நலம். தகனம் நடைபெறும் இடத்தில் இருந்து தகனிக்கக் கூடிய பொருளை எடுத்து விட்டால் தகனம் இல்லாமல் போவதற்கான வாய்ப்பு அதிகரிப்பது போல எங்களுடன் மற்றவர்கள் கோபப்பட்டாலும் நாங்களும் எதிர்க்குரல் எழுப்பிக் கொண்டிருக்காமல் அவ்விடத்தை விட்டு அகல்வதே சிறந்தது. சில விடயங்கள் நமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நடப்பவையாய் இருப்பதால் அவை பற்றி கவலைப்படுவதோ கோபப்படுவதோ முறையல்ல. அவற்றை ஏற்றுக்கொள்ளா விட்டாலும் அவை பற்றிய கவலையோ கோபமோ இல்லாமல் நாம் கவனிக்க வேண்டிய மற்றைய முக்கிய கருமங்களில் புலனைச்செலுத்த வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன அமைதி உடல் நலத்தைத்தரும். இந்த உண்மையை விளங்கிக்கொண்டு அதைப் பின் பற்றுவோமானால் நமது உடலும் உள்ளமும் ஆன்மீகமும் நலம் பெறும். அமைதியாய் இருக்க உதவும் சில எளிய முறைகளை கற்றுக்கொள்ளுங்கள். அடிக்கடி கோபப்படுவதை குறைக்க அவை உதவும். வேலைப்பளு, கவலை அல்லது வேறுபல பொறுப்புக்களால் வரும் கோபத்தை கட்டுப்படுத்த சில வழிமுறைகள். மூச்சை நன்கு உள் இழுத்து வெளிவிடுவது ஒரு சிறந்த முறை, கோபத்தின் கடுமையை சட்டெனக் குறைக்க இது கைகொடுக்கும். மூச்சை இழுத்து விடுவதோடு " போனால் போகட்டும் விட்டுவிடு, அமைதியாய் இரு" போன்ற வார்த்தைகளை மனதுக்குள் திரும்பத் திரும்ப சொல்லிக் கொள்ளுங்கள். உங்களுக்கு பிடித்த ஏதாவதொரு விஷயத்தில் மூழ்கி விடுங்கள். வாசிப்பது, பாட்டுக் கேட்பது, தோட்டத்தை பராமரிப்பது போன்றவற்றில் மனதை செலுத்துங்கள், தவறாமல் உடற்பயிற்சி செய்யுங்கள், சத்துள்ள உணவுகளை சாப்பிடுங்கள், கோபத்தை மூட்டி விடும் ஆட்களை அல்லது விஷயங்களை அறவே தவிர்ப்பது முடியாத விஷயம், ஆனால் உங்களுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ள முடியும் அல்லவா?

இதற்காக நீங்கள் யோசிக்கும் விதத்தை மாற்ற வேண்டியிருக்கலாம். அளவிற்கு அதிகமாக எதிர்பார்க்கின்றவர்கள் தான் அதிகமாக கோபப்படுகின்றனர். யாராவது ஒருவர் அல்லது ஒரு விஷயம் அவர்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு இல்லாவிட்டால் ஏமாற்றமடைந்து சட்டென கோபப்படுவார்கள். ஆனால் ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். உலகில் முழுநிறைவான நீதிமான் இன்னும் ஒருவரும் இல்லை. ஆகவே நாமோ மற்றவர்களோ தவறே செய்யக்கூடாது என எதிர் பார்த்தால் ஏமாற்றந்தான் மிஞ்சும். அளவிற்கு அதிகமாக எதிர்பார்ப்பது தவறானது. நாம் எல்லோருமே பலமுறை தவறு செய்கின்றோம்.

ஒரு பாவமும் செய்யாமல் நூறுவீதமும் நன்மையே செய்யத்தக்க எவனும் இப்பூமியில் இல்லை. ஆகவே நம்மை எந்தவொரு தவறும் செய்யாதவராக காட்டிக்கொள்ள முயன்றாலோ, நம்மைச் சூழ உள்ளவர்கள் அறவே தவறே செய்யக்கூடாது என்று எதிர் பார்த்தாலோ நமது வாழ்க்கையில் வெறுப்பும் கோபமும் தான் ஏற்படும்.

மனிதர்கள் தவறு செய்யும் இயல்பு உடையவர்கள். அதனால் தான் அடிக்கடி கோபப்படுகின்றோம். ஆனால் கோபத்தை எப்படி வெளிக்காட்டுகின்றோம் என்பது நம் கையில் தான் உள்ளது. நாம் கடும் கோபம் கொண்டாலும் பாவம் செய்யக்கூடாது. விரைவில் அவற்றை மறந்து விட வேண்டும். அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் சொல்வதைக் கேளுங்கள், "நான் யாருடனாவது கடுங் கோபம் கொண்டால் அவர்களைத் திட்டிக் கடிதம் எழுதுவேன். என் கோபம் தணிந்து விடும், ஆனால் எழுதிய கடிதத்தை தபாலில் போட மாட்டேன்." கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் எமது உணர்ச்சிகளை எல்லோருக்கும் பயன்தரும் விதத்தில் வெளிக்காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## The Effects of Television on Children

K. Anujan, Grade - 12

*The television has become a necessary evil in today's world. It has become an indispensable household commodity and has taken the place of physical childhood activities. Moreover, children are growing with many physical and mental problems. They have become absolutely unaware of the fun of childhood, like flying kites, making castles out of sand and playing in fields. So, parents should make the facility available to their child very carefully. Some vital points are given below on how TV affects our child both positively and negatively. We must keep them in mind while deciding on the TV time for our kids.*

***Good Effects***

- →*Television gives exposure to children on different cultural experiences.*
- →*Television keeps children aware of current events and news related items.*
- →*Watching educational programs on television help the children use it effectively, as a complement to school education.*
- →*Quality shows on television can impart knowledge and important values and lessons.*
- →*Watching music concerts and art shows can make the children aware of the various genres of music around the world.*
- →*Television helps a child in spending time with family members, when all of them are watching the same show.*
- →*Watching documentaries, especially fragmented for children, opens doors of world in their mind.*

***Bad Effects***

- →*Excessive television viewing is seen to trigger violence or aggression in children.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*→ Watching violent scenes at an early stage might make the children scary of the world and find every other human being as mean. Often known as 'mean and scary world' syndrome, it might push them backwards in taking decisions of life.*

*→ Sitting in front of the television, for long hours, has been linked with obesity, as physical activity gets diminished considerably.*

*→ Children become influenced towards eating junk food, as there is a lot of promotion on the television, regarding the same.*

*→ The bombardment of sexual content on TV exposes teens to half-baked knowledge about sex at an early age, which is harmful for their mental growth. There is seldom mention of proper sex education or issues and risks related to it.*

*→ Devoting more time towards watching television leads to poor academic performance, as child neglects his/ her studies.*

*→ Many advertisements and programs shown on television focus on beauty products and physical beauty, shifting children's interest from studies. They start paying more attention to their overall outlook. In extreme cases, they develop inferiority or superiority complex; leading to depression and underestimating themselves.*

*→ Television watching also promotes lack of creativity and enhances passivity. The child shies away from mental and physical workout.*

*→ The sense of relaxation that kids feel while watching television diminishes completely when it is switched off. This makes them watch TV for longer periods of time and makes them addicted to it*

*→ Television viewing creates the concept of gender-role and racial stereotypes in children, as they start considering it as very natural phenomena. Heroic acts are expected out of males, while women are displayed as objects and less powerful.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எப்படிப்பட்ட அன்பு உண்மையான சந்தோஷத்தைக் கொடுக்கும்?

செல்வி அ. ஆர்த்திகா, ஆசிரியை

மனித சரித்திரத்திலேயே மிக வித்தியாசமான ஒரு காலத்தில் நாம் வாழ்கிறோம். நம் காலத்தில் வாழும் அநேக மக்கள் தவறான வித்தில், அதாவது சுயநலமான வித்தில் வாழ்கின்றனர். மக்கள் சுயநலக்காரர்களாக, பண ஆசைபிடித்தவர்களாக, கடவுளை நேசிக்காமல் சுகபோக வாழ்க்கையை நேசிக்கிறவர்களாக வாழ்கின்றனர். அதாவது தங்களையும் பணத்தையும் சுகபோகத்தையும் நேசிப்பவர்களாக இருக்கின்றனர். இப்படிப்பட்ட சுயநலமான அன்பு, கடவுள் மீதுள்ள அன்புக்கு நேர்மாறானது. சுயநலமான லட்சியங்களை அடைய முயற்சி செய்வது சந்தோஷத்தைத் தரும் என்று ஒருவர் நினைக்கலாம்; ஆனால், அது உண்மை அல்ல. சொல்லப்போனால், அது சுயநலம் நிறைந்த ஒரு உலகத்தை உருவாக்கி, எல்லாருடைய வாழ்க்கையையும் சிக்கலாக்குகிறது.

இந்த உலகத்தில் எங்கு பார்த்தாலும் சுயநலமான அன்புதான் இருப்பது தெளிவாகின்றது. அப்படிப்பட்ட அன்பு எமக்கு ஆபத்தானது. அப்படிப்பட்ட அன்பைக் காட்டுகிறவர்களை நாம் ஒரேயடியாகத் தவிர்க்க முடியாது. அப்படியென்றால், அவர்களுடைய மனப்பான்மை நம்மைப் பாதிக்காமல் இருக்கவும், அன்பான கடவுளைப் பிரியப்படுத்தவும் நாம் என்ன செய்யலாம்? உண்மையான திருப்தியையும் சந்தோஷத்தையும் தரும் அன்பை நாம் எப்படிக் காட்டலாம் என்று பார்ப்போம்.

நம்மை நாமே நேசிப்பது தவறா? இல்லை, நம்மை நாமே ஓரளவு நேசிப்பது இயல்பானதுதான், அது அவசியமும்கூட! நம்மை நாமே நேசிக்காவிட்டால் மற்றவர்களை நம்மால் நேசிக்க முடியாது. ஒருவர் தன்னையே அளவுக்கு அதிகமாக நேசித்தால், தன்னைப் பற்றி அளவுக்கு அதிகமாக நினைப்பார். மற்றவர்கள்மேல் அக்கறை காட்டுவதைவிட தன்மீதே அதிக அக்கறை காட்டுவார். ஏதாவது பிரச்சினை வந்தால், தான்தான் அதற்குக் காரணம் என்று நினைக்காமல் மற்றவர்கள்மேல் பழிபோடுவார்.

சுயநலம், அதாவது நம்மையே அளவுக்கு அதிகமாக நேசிக்கும் குணம், மற்ற கெட்ட குணங்களை வளர்க்கும். ஆனால், கடவுள் எதிர்பார்க்கும் அன்பைக் காட்டுகிறவர்கள் சந்தோஷம், சமாதானம், பொறுமை, கருணை, நல்மனம், விசுவாசம், சாந்தம், சுயகட்டுப்பாடு ஆகிய நல்ல குணங்களைக் காட்டுகிறார்கள். தங்களையே அளவுக்கு அதிகமாக நேசிப்பவர்களைப் போலவோ, மற்றவர்களிடமிருந்து எதையாவது பெற்றுக்கொள்வதிலேயே குறியாக இருப்பவர்களைப் போலவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இல்லை. நம்மைவிட கடவுளை நாம் அதிகமாக நேசிக்கிறோமா என்று எப்படித் தெரிந்துகொள்ளலாம்? எதையும் பகையினாலோ வறட்டு கௌரவத்தினாலோ செய்யாமல், மனத்தாழ்மையினால் செய்யுங்கள். மற்றவர்களை உங்களைவிட உயர்ந்தவர்களாகக் கருதுங்கள். உங்களுடைய நலனில் மட்டுமே அக்கறை காட்டாமல், மற்றவர்களுடைய நலனிலும் அக்கறை காட்டுங்கள் என்று ஞானிகள் கூறுகின்றனர். நம் நேரத்தையும் சக்தியையும் மற்றவர்களுக்காகச் செலவிடுவது சுலபம் இல்லைதான். அதற்காக நாம் கடினமாக உழைக்கவோ, நமக்குப் பிடித்த சில விஷயங்களைத் தியாகம் செய்யவோ வேண்டியிருக்கலாம். ஆனால், இந்தப் பிரபஞ்சத்தின் தலைவனான கடவுளைப் பிரியப்படுத்துகிறோம் என்பதை நினைக்கும்போது கிடைக்கும் சந்தோஷம் வேறு எதிலும் கிடைக்காது!

அதிக மக்கள் பண ஆசைபிடித்தவர்களாக இருக்கின்றனர். பணமே கடவுள் என்று நிறையப் பேர் நினைக்கிறார்கள். அதை அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களோ இல்லையோ! பணத்தையும் பணத்தால் வாங்க முடிந்த பொருள்களையும் அவர்கள் நேசிக்கிறார்கள். ஆனால், "வெள்ளியை நேசிக்கிறவன் எவ்வளவு வெள்ளி கிடைத்தாலும் திருப்தியடைய மாட்டான். சொத்துகளை விரும்புகிறவன் எவ்வளவு வருமானம் வந்தாலும் திருப்தியடைய மாட்டான்" என்று ஞானிகள் கூறுகின்றனர். பணத்தை நேசிக்கிறவர்கள் திருப்தி அடைவதே இல்லை. இன்னும் இன்னும் சம்பாதிக்கவே அவர்கள் விரும்புகிறார்கள்; தங்கள் வாழ்க்கையையே அதற்காகச் செலவழிக்கிறார்கள். இதனால் பலவிதமான வேதனைகளை அனுபவிக்கிறார்கள்.

நம் எல்லாருக்குமே பணம் தேவை என்பது உண்மைதான். அது ஓரளவு நம்மைப் பாதுகாக்கும். ஆனால் அடிப்படைத் தேவைகளுக்கு மட்டும்தான் நம்மிடம் பணம் இருக்கிறதென்றாலும், நம்மால் சந்தோஷமாக இருக்க முடியுமா? கண்டிப்பாக முடியும்! "எனக்கு வறுமையையோ அதிக செல்வத்தையோ கொடுக்காமல், தேவையான அளவு உணவு மட்டும் கொடுங்கள்" என்று ஒரு ஞானி இறைவனை வேண்டுகின்றார். அவர் ஏன் வறுமையை விரும்பவில்லை என்று நம்மால் சுலபமாகப் புரிந்துகொள்ள முடிகிறது. திருடனாக மாறி, கடவுளுக்குக் கெட்ட பெயர் கொண்டுவந்துவிடக் கூடாது என்று அவர் நினைத்தார். ஆனால், ஏன் அதிக செல்வத்தையும் அவர் விரும்பவில்லை? "ஏனென்றால், எல்லா வசதிகளும் கிடைத்த திருப்தியில், 'யார் அந்த கடவுள்?' என்று நான் கேட்டுவிடக் கூடாது" என்று அவர் நினைத்தார். பணத்தை நேசிக்கிறவர்களால் கடவுளைப் பிரியப்படுத்த முடியாது. யாராலும் இரண்டு எஜமான்களுக்கு அடிமையாக இருக்க முடியாது; ஏனென்றால், அவன் ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அன்பு காட்டுவான்; அல்லது ஒருவரிடம் ஒட்டிக்கொண்டு மற்றவரை அலட்சியம் செய்வான். நீங்கள் ஒரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் கடவுளுக்கும் செல்வத்துக்கும் அடிமையாக இருக்க முடியாது. அத்தோடு, "பூமியில் உங்களுக்காகப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதை நிறுத்துங்கள். ஏனென்றால், இங்கே பூச்சியும் துருவும் அவற்றை அழித்துவிடும்; திருடர்களும் திருடிக்கொண்டு போய்விடுவார்கள். அதனால், பர உலக வாழ்வுக்காக உங்களுக்காகப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியோ துருவோ அவற்றை அழிக்காது; திருடர்களும் திருடிக்கொண்டு போக மாட்டார்கள்" என்று எல்லாச் சமயங்களும் கூறுகின்றன.

சமய வாழ்வு வாழ்வோர் நிறையப் பேர் எளிமையான வாழ்க்கை வாழ முயற்சி செய்கிறார்கள். அதனால் கடவுளுக்கு அதிக நேரம் சேவை செய்யவும், அதிக சந்தோஷமாக இருக்கவும் அவர்களால் முடிகிறது.

பணத்துக்கும் நமக்கும் ஓரளவு முக்கியத்துவம் கொடுப்பதில் தவறு இல்லை என்பது நமக்குத் தெரியும்; நம் வாழ்க்கையை ஓரளவு சந்தோஷமாக அனுபவிப்பதில் தவறு இல்லை என்பதும் நமக்குத் தெரியும். சிலர், எந்த விதமான சந்தோஷத்தையும் தாங்கள் அனுபவிக்கக் கூடாது என்று நினைக்கிறார்கள். அதுவும் பொருத்தமானது அல்ல.

இந்த நாட்களில், தங்களையும் பணத்தையும் சுகபோகத்தையும் முக்கியமாக நினைப்பவர்கள்தான் உலகம் முழுவதும் இருக்கிறார்கள். தங்களுக்கு என்ன கிடைக்கும் என்பதைப் பற்றித்தான் அவர்கள் யோசிக்கிறார்கள். தங்களுடைய ஆசைகளுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆனால், அவர்களால் உண்மையில் சந்தோஷமாக இருக்க முடியாது!

கடவுளுக்கு விருப்பமானதைச் செய்து அவரை சந்தோஷப்படுத்தும்போது, நமக்கு உண்மையான சந்தோஷம் கிடைக்கும். கடவுளை நேசிக்கிறவர்கள் என்றென்றும் சந்தோஷமாக இருப்பார்கள்!

❖ பிரார்த்தனைகளை விடவும் மிகவும் உயர்ந்தது பொறுமைதான்!

– புத்தர்

❖ நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய். உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே.

– சுவாமி விவேகானந்தர்

❖ அதிகமாகப் பேசினால், அமைதியை இழப்பாய். ஆணவமாகப் பேசினால், அன்பை இழப்பாய். வேகமாகப் பேசினால், அர்த்தத்தை இழப்பாய். கோபமாகப் பேசினால், குணத்தை இழப்பாய். வெட்டியாகப் பேசினால், வேலையை இழப்பாய். வெகுநேரம் பேசினால், பெயரை இழப்பாய். பெருமையாகப் பேசினால், ஆண்டவனின் அன்பை இழப்பாய்.

– சுவாமி விவேகானந்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ வெற்றி பெற மூன்று வழிகள் உண்டு. ஒன்று.. மற்றவர்களை விட அதிகமாக தெரிந்து கொள்ளுங்கள். இரண்டு.. மற்றவர்களை விட அதிகமாக பணியாற்றுங்கள் மூன்று... மற்றவர்களை விட குறைவாக எதிர்பாருங்கள்.

- வில்லியம்ஸ் ஷேக்ஸ்பியர்

❖ நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதுமே மண்டியிடுவது இல்லை.

- அப்துல் கலாம்

❖ கஷ்டம் வரும் போது கண்ணை மூடாதே, அது உன்னை கொன்றுவிடும். கண்ணை திறந்து பார், நீ அதை வென்று விடலாம்.

- அப்துல் கலாம்

❖ உன்னை அளவின்றி புகழ்கிறவன், ஏற்கனவே உன்னை ஏமாற்றி விட்டான். அல்லது ஏமாற்ற விரும்புகிறான்.

- நெப்போலியன்

❖ உலகம் ஒரு விசித்திரமான கல்லூரி. இங்கே பாடம் சொல்லிக்கொடுத்துத் தேர்வு வைப்பது இல்லை. தேர்வு வைத்த பிறகே பாடம் கற்பிக்கப்படுகிறது.

- நியூட்டன்

❖ சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்தது அல்ல. அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்தது ஆகும்.

- அம்பேத்கர்

❖ எதை இழந்தீர்கள் என்பதல்ல முக்கியம், என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்.

- சிவாஜி கணேசன்

❖ அரிய சாதனைகள் அனைத்தும் வலிமையினால் செய்யப்பட்டவை அல்ல; விடாமுயற்சியினால் தான்.

- அப்துல் கலாம்

❖ முன்னோக்கி செல்லும் போது கனிவாயிரு. ஒருவேளை பின்னோக்கி வரநேரிட்டால் யாராவது உதவுவார்கள்.

- பிளேட்டோ

❖ இரகசியத்தை வெளிப்படுத்தியவனுக்கும், துக்கத்தை வெளிப்படுத்தாதவனுக்கும் மனதில் நிம்மதி இருக்காது.

- கமலஹாசன்

❖ எல்லோரையும் நம்புவது அபாயகரமானது. ஒருவரையும் நம்பாமல் இருப்பது இன்னும் அபாயகரமானது.

- ஆபிரகாம் லிங்கன்

❖ எல்லோரும் தம்மை விட்டு விட்டு வேறு யாரையோ சீர்திருத்த முயலுகிறார்கள்.

- சுவாமி விபுலானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குரு

சு. யதுஷா, தரம் -7

ஒரு முனிவர் காட்டில் சுற்றிக் கொண்டிருந்த போது, ஒரு மன்னனைச் சந்தித்தார். அந்த முனிவர் மிக மகிழ்ச்சியாக இருந்ததைக்கண்ட அந்த மன்னன் அவரது மகிழ்ச்சிக்கான காரணத்தையும், அவரது குரு யார் என்பதையும் கேட்டான்.

"எனக்கு 24 குருமார்கள் இருக்கின்றனர்...' என்றார் முனிவர்.

இந்தப் பதிலைக் கேட்டு ஆச்சரியப்பட்ட மன்னன், "சுவாமி! ஒருவருக்கு ஒரு குரு தானே இருக்க முடியும்? தங்கள் பதில் வித்தியாசமாக உள்ளதே...' என்றான்.

அவனிடம், "பஞ்சபூதங்களான ஆகாயம், நீர், நிலம், நெருப்பு, காற்று, சந்திரன், புறா, மலைப்பாம்பு, கடல், விட்டில்பூச்சி, வண்டு, தேனீ, குளவி, சிலந்தி, யானை, மான், மீன், பருந்து, பாம்பு ஆகியவையும், நாட்டியக்காரி, ஒரு குழந்தை, ஒரு பணிப்பெண், அம்பு தயாரிப்பவன், சூரியன் ஆகியோரும் என் குருக்கள் ஆவர்...' என்றார் முனிவர். மன்னன் ஏதும் புரியாமல் நின்றதைக் கண்ட முனிவர் இதற்கு விளக்கமளித்தார்.

"மன்னா! பொறுமையை பூமியிடம் கற்றேன்; தூய்மையை நீரிடம் தெரிந்து கொண்டேன். பலருடன் பழகினாலும், பட்டும், படாமல் இருக்க வேண்டும் என்பதைக் காற்றிடம் படித்தேன். எதிலும் பிரகாசிக்க வேண்டும் என்பதை தீ உணர்த்தியது; பரந்து விரிந்த எல்லையற்ற மனம் வேண்டும் என்பதை ஆகாயம் தெரிவித்தது.

ஒரே சூரியன் இருந்தாலும் பல குடங்களில் உள்ள தண்ணீரில் பிரதிபலிப்பது போல மனம் ஒன்றாக இருந்தாலும் பலவாறாக சிந்திப்பதை உணர்ந்தேன்.

ஒரு நாள் வேடன் ஒருவன் புறாக்குஞ்சுகளைப் பிடித்ததைக் கண்டேன். அவற்றின் மீது அன்பு கொண்ட தாய்ப்புறா தானும் வலியச் சென்று வலையில் சிக்கியது. இதில் இருந்து பாசமே துன்பத்திற்கு காரணம் என்பதை உணர்ந்தேன்.

எங்கும் அலையாமல் தன்னைத் தேடி வரும் உணவைப் பிடித்துக் கொள்வது போல, கிடைப்பதை உண்டு பிழைக்க வேண்டும் என்பதை மலைப்பாம்பிடம் கற்றேன். பல்லாயிரம் நதிகளை ஏற்றுக்கொள்ளும் கடல் போல, எவ்வளவு துன்பம் வந்தாலும் ஏற்கும் பக்குவத்தை கடலிடம் படித்தேன். பார்வையை சிதற விடாமல் ஒரே இடத்தில் மனதை செலுத்துவதை விட்டில் பூச்சி கற்றுத் தந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் மறந்து மகிழ்ச்சியாயிருப்பதை தாயிடம் பால் குடிக்கும் குழந்தையிடம் கற்றேன். பணிப்பெண் ஒருத்தி அரிசி புடைக்கும்போது வளையல்கள் உரசி ஒலி எழுப்பின; இரண்டு வளையல்களில் ஒன்றை அவள் கழற்றியதும், ஒலி அடங்கியது. இதில் இருந்து இரண்டு பேர் இருந்தாலும் தேவையற்ற விவாதம் ஏற்படும் என்பதைப் புரிந்து கொண்டு, தனிமையே சிறந்ததென்ற முடிவுக்கு வந்தேன்.

ஒரு நாட்டியக்காரியை ஒரு நாள் கண்டேன். அவள் ஏற்கனவே பலருக்கு நாட்டியமாடிக் காண்பித்து வருமானம் உழைத்த பின், இன்னும் யாராவது வரமாட்டார்களா எனக் காத்திருந்தாள். யாரும் வராததால், கிடைத்தது போதும் என்று உறங்கி விட்டாள். இதில் இருந்து ஆசையை விட்டால் எல்லாமே திருப்தியாகும் என்பதை புரிந்து கொண்டேன்.

புற்களால் குழிக்குள் மாட்டிக்கொண்ட பெண் யானையை பார்த்த ஆண் யானை, அதன் மேல் ஆசை கொண்டு அதுவும் வீழ்ந்தது. இதில் இருந்து, பெண்ணாசையும் துன்பத்துக்கு காரணம் என்பதை உணர்ந்தேன்' என்று ஒவ்வொரு பொருளுக்கும் விளக்கமளித்தார்.

இதைக் கேட்ட அரசன், தன் பதவியையே உதறித் தள்ளி விட்டு, ஆன்மிகத்தில் ஈடுபட்டான்.

❖ *சிறிய தவறுகளை திருத்திக் கொள்ளாவிட்டால் பெரிய தவறுகளைத் தவிர்க்க முடியாது.*
*கன்ஃபூசியஸ்*

❖ *கட்டளையிட விரும்புபவன் முதலில் பணிவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும்.*
*அரிஸ்டாட்டில்*

❖ *துன்பங்கள் அனுபவித்த காலத்தை மறந்து விடு. ஆனால் அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்து விடாதே!*
*பெஞ்சமின் பிராங்கிளின்*

❖ *நீ ஒழுக்கம் உள்ளவனாக இருந்தால் கவலையே வராது. நீ அறிவாளியாக இருந்தால் குழப்பம் வராது. நீ துணிவுள்ளவனாக இருந்தால் அச்சம் வராது.*
*கன்ஃபூஷியஸ்*

❖ *நம்பிக்கையோடு உன் முதலடியை எடுத்து வை. முழுப் படிக்கட்டையும் நீ பார்க்க வேண்டிய அவசியமில்லை. முதல் படியில் ஏறு.*
*மார்டின் லூதர் கிங்*

❖ *தடம் பார்த்து நடப்பவன் மனிதன் தடம் பதித்து நடப்பவன் தான் மாமனிதன்.*
*பிடல் காஸ்ட்ரோ*

❖ *வாய்ப்புகள் அமையாது, நாம்தான் அமைத்துக் கொள்ள வேண்டும்.*
*ஜெயவர்த்தன*

❖ *நேரத்தை வீணாக்கும் போது கடிகாரத்தைப் பார், ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை.*
*சுவாமி விவேகானந்தர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்களின் உரிமைகளும் கடமைகளும்

கா. சயந்தினி, தரம் -13

“மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா” என்று பெண்ணின் பிறப்பையே பெரும் பேறாகக் கருதிப் பாடினார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. இவ்வாறு அரிய பிறப்பாகப் பிறந்த பெண்களுக்கு என சில உரிமைகளும் கடமைகளும் வகுக்கப்பட்டுள்ளன. பெண்களின் கடமைகளை நாம் நோக்குவோம்.

சமூகத்திற்கு உதாரணமாக வாழ்கின்ற பெண்களுக்குரிய முக்கிய கடமையாக அமைவது சமுதாயத்தை முன்னேற்றுவதாகும். சமுதாயம் முன்னேற ஆடவரைக் காட்டிலும் பெண்களின் பங்கு முக்கியமானதாகும். அதனாலேயே பெண்களுக்கு சமுதாயத்தில் என்றுமே சிறப்பிடம்தான். முற்காலத்தில் தமிழ் மக்கள் தம் வாழ்வில் மகளிருக்குத் தனியிடம் அளித்துள்ளனர். இதனை சங்க நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இறைவன் படைப்பில் ஆண்கள், பெண்கள் இருபாலாரும் சமமே. ஆண்கள் உயர்ந்தவர்கள் என்றும் பெண்கள் தாழ்ந்தவர்கள் என்றும் பேசுதல் பேதமையாகும். குறிப்பாகப் பெண்கள் அன்பிலும் பண்பிலும் உயர்ந்தவர்கள் உயிரின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், வாழ்விற்கும் பெண்ணே முதன்மையானவள். இதனாலேதான் பெண்ணைத் தியாகத்தின் சின்னமாகவும், கடமையின் காப்பாகவும் பொறுமையின் இருப்பிடமாகவும் போற்றுகின்றனர். ஒரு சமுதாயத்தில் பிரபலமான சாதனைப் படைக்கும் மனிதர்கள் உருவாக வேண்டுமென்றால் அந்த சமுதாயம் பெண்களுக்கு சுதந்திரம் கொடுத்த சமூகமாக இருக்க வேண்டும்.

ஆண்களும் பெண்களும் சமுதாயம் என்ற அழகு கட்டிடத்தினைத் தாங்கிப் பிடிக்கும் பலமான தூண்களாகும். ஆனால் சமீப கால சம்பவங்கள் பெண்களை தரம் தாழ்த்தி அழகு பார்க்கும் ஒரு நிலையாக உள்ளது. ஆசியாவிலும், தென் அமெரிக்காவிலும் இன்னும் ஆணாதிக்க சமுதாயம் தான் நடந்து கொண்டு இருக்கிறது. ஆணாதிக்க சமூகத்தில் கணவர்கள் மனைவிமார்களை கொடுமைப் படுத்தும் சம்பவங்களும், ஆண்கள் பெண்களைப் பாலியல் தொந்தரவு செய்வதும், ஆண்கள் சிறார்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதும், இளம் சிறுமிகளை அவர்கள் விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்து கொடுப்பதும், அத்துடன் தேவதாசி முறையும், விதவைத் திருமண மறுப்பும், பலதார மணமும் நடந்து கொண்டுதான் உள்ளது. இரண்டாம் உலகப்போரில் பாதிக்கப் பட்டோர் பெரும்பாலானோர் பெண்களும், குழந்தைகளும், மூத்த குடிமக்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவர். ஆகவே பெண்களின் நலன் ஐ.நா.சபையின் பட்டயத்தில் 1945 ஆம் வருடம் அதிகமாகக் காணப் பட்டது. 1946 ஆம் ஆண்டு உலகப் பெண்களின் அரசியல், பொருளாதாரம், சிவில், சமூக மற்றும் கல்வி போன்றவற்றின் நிலை பற்றி அறிய ஒரு ஆணைக்குழு அமைக்கப் பட்டது. அதன் பலனாக 1948 ஆம் ஆண்டு மனித உரிமை பற்றிய சர்வதேச அறிவிப்பு வெளியானது. அதில் மனிதராக பிறந்தவர் அனைவரும் சுதந்திரப் பறவை மற்றும் சம உரிமை கொண்டவர்கள் என்றும் கூறப்பட்டது.

பெண்ணை சக்தியின் வடிவமாக போற்றின சமயங்கள். வாழ்க்கைத் துணை வியாகவும் வாழ வைக்கும் தாயாகவும் வழி நடத்திச் செல்பவளே பெண். அவளுக்கு ஈடாக எதையுமே எடுத்துரைக்க முடியாது. இவ்வாறு எல்லாவற்றிலும் முதலிடம் வகிக்கும் பெண்களின் தலையாய கடமையே சமுதாயத்தை முன்னேற்றுவதாகும். இவ்வாறான பெண்களை இழிவுபடுத்தும் சில செயல்களும் சில வேளைகளில் காணப்படுகின்றன.

போற்றிப் பேணப்பட்ட பெண் குலம் தாழ்வுற்றது. பெண்ணடிமை நிலைபெற்றது. வேதனை நிலை உருவாயிற்று. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்றும் பெண் புத்தி பின் புத்தி என்றும் கேலி செய்தனர் அறிவிலிகள். இதற்காகப் பெண் அடிமைத் தளைகளைத் தகர்த்தெறிந்து ஆணுக்கிங்கே பெண் சமம் என ஆர்த்தெழுங்கள் என அறைகூவல் விடுத்தார் பாரதியார்.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்

பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்

எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே

பெண் இளைப்பில்லைகாண்"

என்று அவர் முழங்கிய பின்னரேதான் பெண் உரிமை மலரத் தொடங்கியது.

பெண்கள் விழித்தெழுந்தனர். மகளிர் வாழ்வில் புதிய ஒளி மலர்ந்தது. பெண்கள் சமூகம், அரசியல், பொருளாதாரம் போன்ற துறைகளில் பங்கு கொள்ளும் வாய்ப்புக்கிட்டியது.

தமிழ் மறை தந்த திருவள்ளுவர் வாழ்க்கைத் துணைநலம் பற்றிக் கூறும் போது இல்லற வாழ்வில் ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணும் துணைவர் எனக் கொண்டு ஒற்றுமையோடு செயற்பட்டால் வாழ்க்கை சிறப்பும் பண்பட்ட சமுதாயமும் உருவாகும் என்கின்றார். ஒவ்வோர் ஆணின் முன்னேற்றமும் ஒரு பெண்ணாலே என்பர் ஆன்றோர். எனவே ஆண்களின் முன்னேற்றத்திற்குப் பெண்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னணியில் திகழ்கின்றார்கள் என்ற உண்மையை நாம் மறந்து விடக்கூடாது.

ஆடவர் முன்னேற்றம் மகளிரால் என்பதால் சமுதாய முன்னேற்றமும் பெண்ணால்தான் என்று கூறுவது மிகப்பொருத்தமானதே. தவறைத்தட்டிக்கேட்பதும் ஏழைகள், வறியவர்கள் என அனைவருக்கும் உதவி செய்வதும் சமூகத்தை முன்னேற்றுவதும் பெண்களுக்குரிய கடமையாகும். பெண்களின் அடுத்த கடமைகளில் குடும்பத்தை பேணிப்பாதுப்பது மிக முக்கியமானதாகும். தனது தாய் தந்தையரைப் போற்றி அவர்களுக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்வதும் மிக முக்கிய பொறுப்பாகும்.

எந்த விதமான தொழில் புரிந்தாலும் கணவனே கண்கண்ட தெய்வம் எனக் கணவனுக்குப் பணிவிடைகளைச் செய்வதும், பிள்ளைகளைப் பராமரிப்பதும் அவர்களின் கல்வி நிலையில் கவனம் செலுத்தி சமூகத்திற்கு சிறந்த பிரஜைகளைக் கொண்டு வருவதும் வீட்டு நிர்வாகத்தைக் கவனிப்பதும் பெண்களுக்குரிய கடமைகளாக அமைகின்றன. இவ்வாறான பெண்கள் நாட்டின் கண்களாகும்.

அடுத்து பெண்களுக்குரிய உரிமைகளை நோக்குவோம். ஆணுக்கு நிகர் பெண் என அவர்களுக்குச் சமமாகக் கல்வி கற்று தொழில் பெறுவதும், தவறுகளை தட்டிக்கேட்பதும் தங்களுக்குரிய வயதில் திருமணம் புரிவதும் இனப்பெருக்கங்களைச் செய்வதும் ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவாக்குதலும் என அவர்களுக்குரிய உரிமைகளில் சிலவாகும். தொட்டிலை ஆட்டும் கையே உலகை ஆளும் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். நமது நாட்டை பொறுத்த வரையில் பெண்களே இன்று முன்னணியில் திகழ்கிறார்கள். ஜனாதிபதி முதல் உயர்நீதிமன்றம் வரை பல்கலைக்கழகங்கள் தொட்டுப் பாடசாலை வரை பாராளுமன்றம் தொட்டு உள்ளூராட்சி சபைகள் வரை பெண்கள் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பதை காண முடிகின்றது. இது அவர்களுக்குரிய கல்வி உரிமையைக் காட்டுகின்றது.

"வாழ்க்கை எனும் ஆற்றைக் கடப்பதற்கு பெண் என்ற படகு அவசியம்" என்று கூறினால் அது மிகையாகாது. இத்தகு சிறப்பு மிக்க பெண்களுக்கு அவர்களது உரிமைகளில் வேட்டு வைக்கும் சில நிகழ்வுகளும் காணப்படுகின்றன. வரதட்சணை எனும் சீதனக் கொடுமையால் கன்னியர் பலர் கவலையுடன் காலங்கழித்திடும் அவல நிலை பெரும் கொடுமையாக உள்ளது. இருப்பினும் இத்தகைய தடைகளை உடைத்து எறிந்து சமூகத்தில் நல்ல இடத்தைப் பெற்று பெண்கள் திகழ்கின்றார்கள்.

" அன்பின் பண்பே பெண்மை
அறத்தின் வடிவே பெண்மை
கற்பின் உயர்வே பெண்மை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமையின் சிகரமே பெண்மை"

எனப் பெண்களை உயர்த்திக் கொண்டே போக முடியும். இருப்பினும் "கூண்டுக்குள் முடங்கிக் கிடக்கும் குருவிகள் அல்ல பெண்கள் கண்டம் கடந்து சாதனைகள் படைக்கும் வல்லமை படைத்தவர்கள்" பெண்கள் இல்லையேல் இவ்வுலகம் இல்லை.

## தோழியின் கண்ணீர்

ஏழு ஜென்மம் வாழும்
வரம் வேண்டாம்
ஒரு நிமிடம் என்னுடன் பேசிவிடு
அது போதும்
சிறுமிகளாய் இருக்கும் போது
இருந்த நட்பு இப்பொழுது எங்கே
அதைத் தேடிக் கொண்டிருக்கும்
உன் தோழி
ஜாதி பேதம் மறந்து
நட்பு கொண்டோம் அது
ஒரு நொடியில் உடைய
காரணமானது என் கவிதை
இது எழுதிய போது வலிக்கவில்லை
எழுதிய பின் வலிக்கிறது
கடந்து செல்லும் மேகங்கள்
உந்தன் உருவமாய் தெரிகிறது
ஒரு வார்த்தை பேசி
தூக்கம் தந்துவிடு தோழி அல்லது
என்னைத் தூக்கில் போட்டு விடு தோழி;

ஆக்கம் : வு. ஹம்சிகா
தரம் - 13

❖ ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையால் பயனில்லை.

❖ செயல் புரியாத மனிதனுக்கு தெய்வம் ஒருபோதும் உதவி செய்யாது.

❖ நேற்றைய பொழுதும் நிஜமில்லை; நாளைய பொழுதும் நிச்சயமில்லை; இன்றைக்கு மட்டுமே நம் கையில்.

❖ எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உள்ளன. ஒன்று காலம், இன்னொன்று மௌனம்.

❖ நினைப்பது ஒன்று நடப்பது இன்னொன்று. நாம் நடப்பதை எல்லாம் நல்லதாய் எண்ணிக் கொள்வோம். நாம் நினைப்பதும் ஒரு நாள் நிச்சயம் நடக்கும். தன்னம்பிக்கை மட்டும் தளர விடாதே.

❖ நாம் நம்மால் முடியாது என்று நினைக்கும் செயல்களை,யாரோ ஒருவர் எங்கோ ஓர் இடத்தில அதை செய்து கொண்டு தான் இருக்கிறார் என்பதை மறந்துவிடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீதனமே

பா. விருஷன், தரம் - 12

பெண் என்ற பேதைக்கு
ஆண் என்ற ஆடவனால்
உயில் எழுதி விட்ட சீதனமே
பெண்ணாகப் பிறந்து விட்டால்!
பெற்றவர்கள் கலங்கி நிற்கிறார்கள்
உன் எதிர்பார்ப்பை ஒட்டி
ஆணுக்கு பெண் நிகர் என்று
அகிலமே அடித்துக் கூற
நீ மட்டும் அதன் குறுக்கே புகுந்து
அவர்களை நிலை குலைய வைப்பது ஏன்?
பருவமடைந்த பெண்கள்
திருமணச் சந்தைக்குப் போய் விட்டால்!
ஆடவர் நாவிற்கு அதிமதுரம் போல் நின்று
பெண்ணைப் பெற்றவரை
ஆதங்கத்தில் ஆழ்த்தி விடுகின்றாய்
பாரதிக்குப் பின்னும் உன் வருகை என்றால்
அது அவளது புதுமைப் பெண்ணுக்கு பாகற்காய்
அரைத்தது போல் அல்லவா ஆகிவிடும்
மானம் சிறிது வாழ்க்கை பெரிது
என்று வாழும் இன்றைய நிலையில்
இதைத் தகர்த்தெறிந்து
மானுடத்திற்கு மானிடமே விலை பேசாமல்
மனித நேயம் கொண்டு மானுடனாய் வாழ
சமூகத்தின் கண்களைச்
சரியாக நோக்குங்கள்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மனிதன் மனிதனாக வாழ வேண்டும்

பு. சதுர்ஜனா, தரம் -13

இறைவனின் நியதிதான் எல்லோர்க்கும் நடப்பது
அதை அறியா நாமெலாம் எப்படியோ நடக்கின்றோம்
ஏற்றம் இறக்கம் இதுதான் வாழ்க்கையப்பா
இதை நினைத்து வாழ்ந்தால் எப்போதும் வாழ்ந்திடலாம்.

கவலை இல்லா மனிதர்கள் எவரும் இல்லை இங்கு
ஏதோ ஒரு விதத்தில் எல்லோர்க்கும் கவலை உண்டு
வெந்த புண்ணில் வேல் பட்டால் வேதனை அதிகம்தான்
மனிதன் மனிதனாக வாழ்ந்தால் இவற்றைப் போக்கிடலாம்.

ஒன்றை பத்தாக்கி பத்தை நூறாக்கி
பல பகிடி கதை கதைத்து வதந்தியைக் கிளப்பி
ஒருவனின் மனம் நோக மகிழ்ச்சியுடன் வாழ்கின்றார்கள்
என்ன பலன் உண்டோ இவர்கட்கு நான் அறியேன்.

மண்டியிட்டுக் கிடந்தாலும் மனம் போல வாழ்க்கைதான்
அகத்தில் அழுக்கை வைத்து புறத்தில் பூசாதீர்
நல்லவர்கள் போல் நடித்து நாடகம் ஆடாதீர்
நல்லவற்றை செய்து நல்லவராய் வாழுவீர்.

அன்பு காட்டி அரவணைத்து அனைவரையும் பாருங்கள்
எவ்வளவோ துன்பத்திலும் இன்பமாய் வாழ்வீர்கள்
பணத்தை வைத்துப் பல பேரை சேர்த்தாலும்
குணத்தால் சேர்பவர் போல் ஆகாது எப்போதும்.

அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்
செய்தவினை எப்போதும் மாறாது வாழும் வரை
இறைவனை வேண்டி இதைப்போக்க வழி செய்து
இன்பமாய் வாழுங்கள் எல்லோரும் ஒற்றுமையாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மா

கு. தரிஷிகா, தரம் - 12

என் அன்புத் தாயே
பத்து மாதம் என்னை
உன் கருவுலகில்
வாழ வைத்து
மரண வலியை அனுபவித்து
என்னைப் பெற்றெடுத்து
இந்த மண்ணுலகில்
தவழ விட்டவளே
உன் உதிரத்தை பாலாக்கி
எனக்கு அமுதமாய் தந்தவளே
கண்ணை இமை காப்பது போல்
என்னை காப்பவளே
எனது துன்பங்களை உனது
துன்பங்களாக மாற்றி விடுபவளே
எனது வலிகளை உனது
வலிகளாக மாற்றுபவளே
நான் பார்த்த முதல் தெய்வமே
அடி முடி தேடினாலும் அகராதியைப் புரட்டினாலும்
முழுமையான அர்த்தம் அறிய முடியாத உயிர் சித்திரமே
பிறப்பின் பாலிலே நோய் எதிர்ப்புச் சக்தியை கொடுத்தவளே
நான் பார்த்த முதல் முகம்!
நான் பேசிய முதல் வார்த்தை!
நான் மறக்கவே முடியாத முதல் ஓவியம்
அது நீ தான் அம்மா...!!!
எத்தனை ஜென்மங்கள்
எடுத்தாலும் அத்தனை
ஜென்மங்களிலும் உனது மகளாக
பிறக்க இறைவன் அருள் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயே

பொ. நொஷாணி, தரம் - 13

என்னை ஈன்ற தலைவியே
சந்திரனின் ஒளியும் துணை ஒளிதான்
உன் அன்பு ஒளியோ என்றும் முதன்மை ஒளி தான்
இந்தப் பூமியை கோடி உறவுகள் அலங்கரித்தாலும்
நம் தொப்புள் உறவை யாராலும் மிஞ்ச முடியுமா
பசி வந்தால் பத்தும் பறக்கும் தாயே!
என்னை நீ மறக்கவில்லையே
உன் வயிற்றை ஏமாற்றி என் வயிற்றை
நிறைத்தாயே! குறை சொல்லுமா என் வயிறு
வாழ்நாளெல்லாம் வாழ்க
என வாழ்த்தும்,
வாழும் தெய்வம்என் தாய்தானே!
வந்தாரை இன்முகம் கொண்டு
வருக என் வரவேற்கும்
வள்ளல்தெய்வம் தாய்தானே!
வன்சொல்லால் நிந்தித்தாலும்
வாய் திறந்து பேசா
பெருந் தெய்வம்
என் தாய் நீ தானே!
புரியாத புதுமை நீயடி,
புனிதத்தின் பிறப்பிடம் நீயடி,
பொறுமையின் தலைமைப் பீடம் நீயடி,
பண்பின் பல்கலைக் கழகம் நீயடி,
பிஞ்சு கையின் பிடிமானம் நீயடி ,
பிள்ளைகளின் ஆசான் நீயடி,
குடும்பத்தின் குணவதி நீயடி,
தியாகத்தின் இருப்பிடம் நீயடி,
திருவருள் தரும் தெய்வம் நீயடி,
உனை என்றும் மறவா வரம் வேண்டுகின்றேன் இறைவனிடம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூல்களும் ஆசிரியர்களும்

எஸ்.பினோஜன், தரம் - 13

| | |
|---|---|
| இராமாயணம் (வடமொழி) | வான்மீகி |
| இராமாயணம் (தமிழ் மொழி) | கம்பர் |
| இராமாயணம் (ஹிந்தி) | துளசிதாசர் |
| சீறாப்புராணம் | உமறுப்புலவர் |
| பெரிய புராணம் | சேக்கிழார் |
| மகாபாரதம் (வடமொழி) | வில்லிபுத்தூரர் |
| மகாபாரதம் (தமிழ் மொழி) | வியாசர் |
| திருவாசகம் | மாணிக்கவாசகர் |
| பாஞ்சாலி சபதம் | பாரதியார் |
| காஞ்சிப்புராணம் | சிவஞான முனிவர் |
| நற்சிந்தனை | யோகர் சுவாமிகள் |
| நன்நூல் | பவணந்தி முனிவர் |
| வெற்றி வேட்கை | அதிவீரராம பாண்டியர் |
| நல்வழி, நீதி நூல்கள், ஆத்திசூடி | ஔவையார் |
| மனோன்மணியம் | சுந்தரம்பிள்ளை |
| கீதாஞ்சலி | இரவீந்திரநாத்தாகூர் |
| மணிமேகலை | சீத்தலைச்சாத்தனார் |
| தொல்காப்பியம் | தொல்காப்பியர் |
| சூளாமணி | தோழாமொழிப்புலவர் |
| திருப்புகழ் | அருணகிரிநாதர் |
| இலியட் ஒடிசி | ஹோமர் |
| நளவெண்பா | புகழேந்தி |
| ஆசிய ஜோதி | ஏட்வின் ஆர் நொல்ட் |
| சத்திய சோதனை | மகாத்மாகாந்தி |
| குடியாட்சி | பிளேட்டோ |
| ஒரு உலகம் | வேள்ட்ஸ் வில்கி |
| மூலதனம் | கால்மாக்ஸ் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேர முகாமைத்துவம்

திரு பா. சோதீஸ்வரன், ஆசிரியர்

இந்தப் போட்டி மிகுந்த உலகில் ஒருவர் வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்குச் செய்ய வேண்டிய விடயங்கள் பல உள்ளன. நிறைய வேலைகளை ஒரே நேரத்தில் செய்து முடிக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படும் போது நாம் மிகுந்த பரபரப்புக்கு உள்ளாகின்றோம். இலக்குகளை அடைந்து கொள்வதற்காகச் சில வேளைகளில் நாம் வேலை செய்யும் நேரத்தையும் நீடித்துக் கொள்கின்றோம். இவ்வாறு எல்லாம் கஸ்டங்களை அனுபவித்து வேலை செய்யும் போதும் அது திறன் வாய்ந்த முறையில் அமையாது போகும் சந்தர்ப்பங்கள் பல உள்ளன. ஆனால் சிலர் மிகக் குறைந்த நேரத்தினுள் வழங்கப்பட்ட பணியினைத் திறன் வாய்ந்த முறையில் பூர்த்தி செய்கின்றனர். அவர்களிடம் அது எப்படி சாத்தியமாகின்றது எனக் கேட்டால் மிகவும் எளிமையான இரண்டு சொல் விடை வெளிவருகின்றது. நேர - முகாமைத்துவம். அதுவே அந்த விடை. ஆம், நேர முகாமைத்துவம் ஒருவரின் வாழ்க்கையில் மிகப் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தக்கூடியது.

நேர முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்

நேர முகாமைத்துவமானது

1. வாழ்க்கையின் தரத்தை விருத்தி செய்கின்றது.

திறன் வாய்ந்த நேர முகாமைத்துவமானது முழு வாழ்க்கையையுமே மாற்றி அமைக்கின்றது. நேரத்தை முகாமை செய்வதனால் பொதுவான பிரச்சினைகளான மன அழுத்தம், தனிப்பட்ட நலன்களைப் பூர்த்தி செய்வதற்கான நேரமின்மை, போன்றன பெரும் முயற்சியற்ற முறையில் இலகுவாகத் தீர்க்கப்படலாம். டென்சன் இல்லாமல் வாழ்க்கையை அமைதியான முறையில் கொண்டு செல்ல திறன் வாய்ந்த நேர முகாமைத்துவம் உதவுகின்றது. ஒரு நாளின் முடிவில் ஒரு நபர் களைப்பை உணராதிருப்பதற்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் வேண்டிய நேரத்தை வகுத்து ஒதுக்கிக் கொள்வதையே நேர முகாமைத்துவம் முக்கிய விடயமாகக் குறித்து நிற்கின்றது. ஆகவே திறன் வாய்ந்த நேர முகாமைத்துவமானது வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கச் செய்கின்றது.

2. விரக்தியைக் குறைக்கின்றது

எம்மை உயர்வடையச் செய்யவோ தாழ்வடையச் செய்யவோ கூடிய ஒரு கருவியாக நேரம் விளங்குகின்றது. வீட்டிலும், பணியிடத்திலும் பல பொறுப்புக்களைச் சுமக்கும் ஒருவருக்கு இது விசேடமாகப் பொருந்தக்கூடிய விடயமாகும். மிகுந்த களைப்பை ஊட்டுகின்றதும், பரபரப்பானதுமான வாழ்க்கைச் சூழலில் குடும்ப வாழ்க்கைக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் வாழ்க்கைக்கும் இடையில் ஒரு சமநிலையை ஏற்படுத்த முயலும் சந்தர்ப்பங்களில் நாம் சில வேளை விரக்தி நிலையை எதிர்கொள்கின்றோம். இவ்வாறான நிலமைகளில் எமது மனம் விரும்புகிற எல்லா விடயங்களையும் செய்வதற்கு நேரத்தைத் தேடுகின்ற போது நாம் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகின்றோம். இங்கு நேர முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. நேரத்தை ஒழுங்காக முகாமை செய்து கொள்வதன் மூலம் எல்லா விதமான விரக்தி நிலைகளிலிருந்தும் நாம் விடுபட்டுக்கொள்ள முடியும்.

3. மன அமைதியைத் தருகின்றது

நோயற்ற ஆரோக்கியமான வாழ்க்கையை நடாத்துவதற்கு மன அமைதி அவசியமானது. அழுத்தமும், ஓய்வற்ற நிலையுமே அமைதியின்மைக்கான பிரதான காரணங்கள். அழுத்தம் ஒரு மனிதனை விரும்பத்தகாதவற்றைச் செய்யவும், சிந்திக்கவும் தூண்டுகின்றது. இது அந்த மனிதனுக்கு மாத்திரமல்லாது அவனைச் சூழ உள்ளவர்களுக்கும் தீங்கான, விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் தொடர் சிக்கல்களை ஏற்படுத்துகின்றது. புத்தியான முறையில் நம் நேரத்தை முகாமை செய்துகொள்வதனால் நாம் நமது சுய கவனிப்பிற்கும் எமது அன்புக்கு உரியவர்களைக் கவனித்துக் கொள்வதற்கும் தேவையான நேரத்தை ஒதுக்கிக்கொள்ளக் கூடியதாக இருக்கும். மனிதர்கள் சமூகமாக வாழ வேண்டியவர்கள். ஆதலால் நேர முகாமைத்துவம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது.

4. சக்தி மட்டத்தை அதிகரிக்கின்றது

ஒரு நபர் தனது நாளாந்த வேலைகள் தொடர்பில் களைப்பான நிலையினை அடையாத போது அவர் மேலும் சக்தியைப் பெறுவதற்கு இயலுமானவராய் இருப்பார். திறன் வாய்ந்த நேர முகாமைத்துவமானது சக்தி மட்டத்தைப் பெருமளவிற்கு அதிகரிக்கின்றது. ஏனெனில் அது சிதறுண்டு இருக்கின்ற மனதை ஒழுங்குபட்டதாக்குகின்றது. சரியான நேர முகாமைத்துவத்தின் மூலமாக குறிப்பிட்ட காலக்கெடுவினுள் கையாளப்படாத விடயங்களையும், முடிக்கப்படாத அலுவல்களையும் திறன் வாய்ந்த முறையில் பூர்த்தி செய்து கொள்ள முடியும். நாம் நேரத்தை ஒழுங்காக முகாமை செய்தால் எமது சக்தி மட்டம் கடந்த காலத்தில் இருந்ததை விட உயர்வானதாய் இருப்பதை உணரலாம். இது முடிக்கப்படாமல் இருக்கின்ற வேலைகளைப் பற்றிக் கவலைப்படாமல் கையில் உள்ள வேலையைத் திறம்படச் செய்ய உதவும். ஏனெனில் அவையும் உரிய நேரத்தில் முடிக்கப்படும்.

5. மேலும் தரம் வாய்ந்த நேரத்தைத் தருகின்றது.

திறன் வாய்ந்த நேர முகாமைத்துவமானது வாழ்க்கையை முழுமையாக அனுபவிப்பதற்கும், அபிவிருத்தி அடைவதற்குத் தேவையான காலத்தை வழங்குவதற்கும் உதவி புரிகின்றது. எமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த வாழ்வுக்குத் தேவையான ஆனால் நாம் அலட்சியப்படுத்துகின்ற நிறைய விடயங்கள் உள்ளன. உதாரணமாக சமூக உறவினை மேம்படுத்துவதற்கு எமது அன்புக்குரியவர்களுடன் நேரத்தைச் செலவிடுவது அவசியமானது. பரபரப்பான ஆட்கள் தமது அன்புக்கு உரியவர்களுடன் நேரத்தைச் செலவிடுவதற்கு அடிக்கடி தவறி விடுகின்றனர். திறன் வாய்ந்த நேர முகாமைத்துவத்தின் ஊடாக அன்புக்குரியவர்களுடன் நேரத்தைச் செலவிடுவது இயலுமானதாகின்றது.

❖ If you want something you never had, you have to do something you've never done.
Thomas Jefferson

❖ True peace is not merely the absence of tension: it is the presence of justice.
Martin Luther King Jr

❖ Worrying does not take away tomorrow's troubles, it takes away today's peace.
Abdul Kalam

❖ There is no way to peace, peace is the way.
A.J. Muste

❖ The practice of peace and reconciliation is one of the most vital and artistic of human actions.
Thich Nhat Hanh

❖ Peace cannot be kept by force; it can only be achieved by understanding.
Albert Einstein

❖ Peace is not achieved by controlling nations, but mastering our thoughts.
John Harricharan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனநாயகம்

பு. மிதுஷன், தரம் - 9

நீங்கள் உங்கள் நண்பர்களுடன் விளையாடும் போது என்ன விளையாட்டினை தேர்வு செய்து விளையாடுவது என்பதை யார் தீர்மானிக்கிறார்?நீங்கள் எல்லோரும் இணைந்து தீர்மானிக்கின்றீர்களா? தீர்மானம் எடுப்பதில் உங்களில் எல்லோருமே ஒரு பங்கினைக் கொண்டிருக்கின்றீர்களா? அவ்வாறு எல்லோரும் இணைந்து தீர்மானம் எடுப்பதே ஜனநாயகம் எனும் எண்ணக்கருவைக் குறிக்கும் விடயமாகும். வழமையாக நாம் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசும் போது ஒரு நாட்டில்; அந்நாட்டின் ஆட்சி நடவடிக்கைகள் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் விடயத்தினை கருதுகின்றோம். ஒரு ஜனநாயக நாட்டின் மக்களே தாம் எவ்வாறு ஆளப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கின்றனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தைக் கொண்டு நடாத்தும் தலைவர்களைத் தேர்வு செய்வதன் மூலம் மக்கள் இதனை மேற்கொள்கின்றனர்.

ஒன்றிற்கு மேற்பட்ட ஜனநாயக வகைகள் உள்ளன. முழுமையான ஒரு ஜனநாயக அமைப்பில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள் வாக்காளர்களின் விருப்பங்களை நிறைவேற்றுகின்றனர். ஆனால் இது செய்வதற்கு அவ்வளவு இலகுவானதல்ல. வாக்காளர்கள் தாம் எதை விரும்புகின்றனர் என்பதை நிருபிப்பதற்கு அடிக்கடி கூடவேண்டி இருக்கும். அவர்கள் தீர்மானம் எடுக்கும் செயல் முறைகளில் பங்கேற்க வேண்டியிருக்கும். பெரும்பாலான ஜனநாயக நாடுகள் தூய ஜனநாயகத்தன்மையினதாக இல்லாது குடியரசுகளாக உள்ளன. ஒரு குடியரசில் தேர்வு செய்யப்பட்ட தலைவர்கள் மக்களின் விருப்புக்களை நிறைவேற்றுவர். வாக்காளர்கள் தமது தலைவர்களை விரும்பாத போது அவர்களை நிராகரித்து காலத்திற்குக் காலம் இடம் பெறும் தேர்தல்கள் மூலம் புதியவர்களைத் தேர்வுசெய்துகொள்ளமுடியும்.

முதலில் ஜனநாயக அரசுகள் கிரேக்கத்திலே உருவாகியிருந்தன. கிரேக்க நகரங்கள் தனித் தனி அரசுகள் போல் இருந்தன. ஒவ்வொரு நகர அரசுகளும் பத்தாயிரத்திற்கும் குறைவான மக்கள் தொகையினைக் கொண்டிருந்தன. நகரில் உள்ள சுதந்திரமாகப் பிறந்ததாக கருதப்பட்ட மனிதர்கள் மாத்திரம் அரசாங்கத்தில் பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. அடிமைகளும் பெண்களும் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை. சுதந்திரமான ஆண்கள் ஒரு கூட்டத்திற்குச் சென்று தங்களது உள்ளத்து உணர்வுகளைப் பேசி நேரில் வாக்களிக்கும் முறை காணப்பட்டது.

அடுத்த முக்கிய ஜனநாயக முறைமை இத்தாலியில் இருந்த ரோம சாம்ராஜ்ஜியத்தில் இருந்தது. பரந்தளவான ஆள்புலத்தைக் கொண்ட ஒரு நகராக ரோமாபுரி வளர்ந்தது. ரோமானிய குடிகள் தம்மை ஆளவேண்டிய தலைவர்களையும் தமக்காகத் தீர்மானம் எடுக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகளையும் தேர்வு செய்தனர். ரோமாபுரிக்கு வெளியே பிறந்த மக்களும் ரோமானிய பிரசைகளாக ஆகி வாக்களிக்கக் கூடியதாய் இருந்தது. ஆனால் புராதன கிரேக்கத்தைப் போலவே பெண்களும் அடிமைகளும் வாக்களிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை. இறுதியில் ரோமாபுரி சக்கரவர்த்தி எனப்படும் ஒரு தனி மனிதனின் ஆளுகையின் கீழ்வந்தது. இது ரோமாபுரியில் ஜனநாயகத்தை முடிவிற்கு கொண்டுவந்தது.

கி.பி 1200 ஆண்டளவில் ஐரோப்பாவில் நவீன தேசங்கள் உருவான போது ஜனநாயகம் அதிகளவில் வளார்ச்சி அடைந்தது. அந்தவகையில் ஜனநாயகக் கோட்பாடுகளை வரித்துக்கொண்ட முதல் தேசமாக இங்கிலாந்தைக் குறிப்பிடலாம். இந்தநாடு அரசரால் ஆளப்பட்டது. எனினும் அரசர் விரும்புகின்ற எல்லாவற்றையும் இவரால் செய்ய முடியவில்லை. மேன் மக்களைக் கொண்ட குழுவிடம் இருந்து ஆலோசனைகளைப் பெற வேண்டியிருந்தது. அக்குழுவே பாராளுமன்ற முறைமைக்கு ஆரம்பமாயிருந்தது. 1642 இல் அங்கு பாராளுமன்றக் குழுவுக்கும் அரசருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாட்டின் விளைவாக அரசர் அதிகாரத்தை இழக்க வேண்டி ஏற்பட்டது. தேர்வு செய்யப்பட்ட பாராளுமன்றம் நாட்டின் உண்மையான ஆட்சியாளராகப் படிப்படியாக அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டது.

1700 களின் கடைசிக்கூறில் மற்றொரு முக்கிய ஜனநாயகம் பிறப்பெடுத்தது. அமெரிக்காவில் பெரிய பிரித்தானியாவின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த 13 குடியேற்றங்கள் சுதந்திரத்தைப்பெற்றுக் கொண்டன. அந்த 13 குடியேற்றங்களும் ஒன்றாக இணைந்து ஐக்கிய அமெரிக்க நாடுகளை உருவாக்கிக் கொண்டன. ஆரம்பத்தில் இருந்தே அமெரிக்கர்கள் தமது நாட்டை ஜனநாயக தேசமாக ஆக்கிக் கொண்டனார்.

1800 களின் கடைசிப்பகுதிக்குள் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் ஜனநாயக முறையிலான அரசாங்க முறையினை நோக்கி நகர்ந்தன. அவை அரசர்களினதும் இராணிகளினதும் அதிகாரத்தை மட்டுப்படுத்தி சாதாரண மக்களுக்கு அதிகாரத்தினை வழங்கின.

ஆரம்ப ஜனநாயக அமைப்புகளில் ஒரு சிறு எண்ணிக்கையைக் கொண்ட குழுவே அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டது. படிப்படியாக அதிகளவிலான மக்கள் வாக்களிப்பதற்கான அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டனர். முதன்முதலாக 1920 இல் அமெரிக்காவில் வாக்களிப்பதற்கான உரிமை பெண்களுக்கும் வழங்கப்பட்டது. இன்றைய ஜனநாயக நாடுகளில் மக்கள் அதிகளவிலான உரிமைகளைக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிப்பதற்கும் தமக்கு விரும்பிய மதத்தை பின்பற்றுவதற்கும் விரும்பிய தொழிலினை தெரிவு செய்வதற்கும் உரிமை உடையோராய் உள்ளனர்.

ஜனநாயக நாடுகள் மிகவும் வெற்றிகரமான ஆட்சிமுறை ஜனநாயகம் தான் என்பதை நன்கு நிருபித்துள்ளன. வேறு நாடுகள் அந்த நாடுகளை பின்பற்றுவதற்கும் முயற்சிக்கின்றன. சில நாடுகள் தம்மை ஜனநாயக நாடுகள் என அழைத்துக்கொள்ளும் போதும் அங்கு ஒரு குழுவோ அல்லது தனி நபரோ அதிகாரத்தை வைத்திருக்கின்ற சூழல் காணப்படுகின்றது. உண்மையில் உலகில் மேலும் விருத்தியடைய வேண்டிய ஒரு எண்ணக்கருவாகவே ஜனநாயகம் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன அழுத்தம்

அருட் சகோதரர் அ. தேவராஜா, நூலகப் பொறுப்பாளர்

இன்றைய வாழ்க்கைச் சூழலில் மன அழுத்தத்தை அனுபவிக்காதவர்களே இருக்க முடியாது. ஏனெனில் இன்றைய போட்டி மிகுந்த வாழ்க்கைச் சூழலில் மன அழுத்தம் தவிர்க்க இயலாத ஒரு விடயமாக மாறிவிட்டது. நமக்குப் பாதகமான நடவடிக்கைகள் நமக்கு பெரும்பாலும் மன அழுத்தத்தை கொண்டுவருகின்றன. வேலை இழப்பு, விவாகரத்து, பரீட்சைகளில் தோல்வி, உத்தியோகம் பெறுவதில் உள்ள தடைகள், நேசித்தவர்களின் மரணம் அல்லது பிரிவு போன்ற பல விடயங்கள் எமக்கு மன அழுத்தத்தினைக் கொண்டு வருகின்றன. சில சமயங்களில் நமக்கு சாதகமான விடயங்கள் கூட நமக்கு மன அழுத்தத்தினைக் கொண்டு வருகின்றன. உதாரணமாக ஒரு பதவி உயர்வு கிடைக்கும் போது கூடவே பொறுப்புக்களும் அதிகரித்து மன அழுத்தம் ஏற்படலாம். திருமணம் கூட மன அழுத்தத்தை ஏற்படுத்தலாம்.

எமக்கு கடுமையான மன அழுத்தம் ஏற்படுகின்ற போது எமது உடலில் சில மாறுதல்கள் ஏற்படுகின்றன. இதயத்துடிப்பு அதிகரிக்கின்றது. சுவாச வீதம் அதிகரிக்கின்றது. மூளைக்கும் தசைகளுக்கும் செல்லும் இரத்த ஓட்டம் அதிகரிக்கின்றது. குருதியில் உள்ள குளுக்கோசு மட்டம் உயர்கின்றது. குருதி அமுக்கம் அதிகரிக்கின்றது. மன அழுத்தத்தினை அதிகரிக்கின்ற காரணி விலகியவுடன் எமது உடல் மீண்டும் தளர்வடைகின்றது.

மன அழுத்தம் குறுகிய காலம் நிலைப்பதாகவோ சில சமயங்களில் நீண்டகாலம் நீடிப்பதாகவோ இருக்கலாம். தனிமை, நிதிச் சுமை, நீண்ட வேலைக்காலம், குடும்பத்தில் தொடர்ச்சியான பிரச்சினைகள் போன்றவை நீண்ட கால மன அழுத்தத்தினை ஏற்படுத்தக் கூடியவை. எப்போதாவது ஏற்படும் மன அழுத்தம் இலகுவில் சமாளிக்கக் கூடியதாய் இருக்கும். எனினும் அது மீண்டும் மீண்டும் அடிக்கடி ஏற்படும் போது உளச்சிக்கலை ஏற்படுத்தும். மன அழுத்தத்தின் காரணமாக உடலியல் பிரச்சினைகள் மற்றும் நடத்தை மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவை எல்லாம் ஒன்றாக இணைந்து உடலை நோய்வாய்ப்படுத்தலாம். சில சமயங்களில் ஏற்கனவே உள்ள நோயினை மேலும் தீவிரப்படுத்தலாம்.

மன அழுத்தத்தின் போது உடலில் சுரக்கும் கார்டிசோல் எனும் நாளமில்லா சுரப்பு காரணமாக உடலின் நோய் எதிர்ப்புத் திறன் குறைந்து உடல் நோய்க்கு ஆளாகின்றது. பல ஆய்வுகள் மன அழுத்தத்தால் காச நோய் கிருமிகள் தாக்க வாய்ப்புள்ளதாகக் கூறுகின்றன. மேலும் சுவாசக் குழாய் தொற்றுக்களும் ஏற்பட வாய்ப்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீர் மன அழுத்தத்தின் போது இதயத்துடிப்பு அதிகரிக்கின்றது. எனவே இதயத்துடிப்பு ஒழுங்கீனமாவதுடன், இதய வலியும் ஏற்படலாம். பதட்ட சூழ்நிலைகளின் போது கூடுதலாக எதிர்விளைவு காட்டுபவர்களுக்கு மாரடைப்புக் கூட ஏற்படலாம். இதயத்துடிப்பு மிகவும் அதிகரிப்பதுடன், இரத்த அழுத்தமும் அதிகரிக்கும். இதன் விளைவுகள் இரத்த அழுத்த நாளங்களிலும் இதயத்திலும் பின்னர் வெளிப்படும். மன அழுத்தம் காரணமாக இரத்தம் உறையும் தன்மை அதிகரித்து மாரடைப்பு ஏற்படலாம்.

நோய்களுக்கும் மன அழுத்தத்திற்குமான உறவு பற்றி மிகத் தெளிவான சான்றுகள் இல்லை எனினும், மன அழுத்தத்தினால் பல நோய்களின் நோய்க்குறிகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

ஆஸ்துமா - மன அழுத்தத்தின் போது காற்றுப்பாதை மிகையாக செயற்பட்டு ஆஸ்துமா நோயை அதிகரிக்கும்.

இரைப்பை, குடல் பிரச்சினைகள- மன அழுத்தம் சில குடல் நோய்களின் அறிகுறிகளை துாண்டுவதாகவோ அதிகரித்து விடுவதாகவோ அமைகின்றது. குறிப்பாக அல்சர், அஜீரணக் குறைபாடு போன்றவற்றை தீவிரப்படுத்தும்.

நாட்பட்டவலி- மன அழுத்தம் வலியின் தன்மையினை அதிகரிக்கும். குறிப்பாக மூட்டு அழற்சி, தசைநார் வலி மற்றும் முதுகுவலி போன்றவை அதிகரிக்கும்.

மனநலப் பிரச்சினைகள் - மன அழுத்தத்தால் பலருக்கும் மனச்சோர்வு ஏற்படுகின்றது. படபடப்பு போன்ற மனநலக் குறிகளையும் ஏற்படுத்தும்.

**மன அழுத்தத்தின் அறிகுறிகள்**

தலைவலி, தூக்கமின்மை, வயிற்றுப்பிரச்சினைகள், செரிமானக் கோளாறு போன்றவைகள் மன அழுத்தத்தால் பாதிக்கப்படுவதால் ஏற்படும் ஆரம்ப அறிகுறிகளாகும். சிறு பராயத்துப் பழக்கங்களான நகம் கடித்தல் போன்றவை மீண்டும் ஏற்படலாம். உங்களுடன் நெருங்கியவர்களை அடிக்கடி வெறுப்பேற்றச் செய்வது நிகழும். பல வேளைகளில் இவ்வகை நிகழ்வுகள் மெல்ல மெல்ல ஏற்படுவதால் இதனை நாம் உணர இயலாமல் போவதுடன், எமது உடல் நலம் பாதிக்கப்படும் வரை அல்லது எமது உறவுகள் சீர்கெடும் வரை நாம் இதனை உணர முடிவதில்லை.

**மன அழுத்தத்தின் உடலியல் அறிகுறிகள்**

தலைவலி, பற்களைக் கடித்தல், தொண்டைவரட்சி, தொண்டையில் இறுக்கம், நெஞ்சுவலி, மூச்சுத்திணறல், இதயத்துடிப்பு உயர்தல், இரத்த அழுத்தம் அதிகரித்தல், தலைவலி, செரிமானம் இன்மை, வயிற்றுப் போக்கு, மலச்சிக்கல், வியர்த்தல் அதிகரிப்பு, கைகால்கள் ஈரமாதல், தளர்வு, தூக்கமின்மை, அடிக்கடி நோயுறல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன அழுத்தத்தின் மன நலக்குறிகள்**

படபடப்பு, எரிந்து விழுதல், திடீரெனப் பாதிக்கப்படுவோமோ என்ற பயம், மனச்சோர்வு, சிந்திப்பது மந்தமாதல், ஆலோசனைகள் மீறுதல், உதவிக்கு ஆளில்லாமல் உணர்தல், எதற்கும் லாயக்கற்ற உணர்வு, குறிக்கோள் அற்ற செயற்பாடு, பாதுகாப்பற்று உணர்தல், மனவருத்தம், தற்காத்துக் கொள்ளும் தன்மை, கோபம், மிகை விளைவுகள், பரிதாபத்திற்கு உள்ளாதல்

**மன அழுத்தத்தின் நடவடிக்கை மாற்றங்கள்**

பசியின்மை, மிகையாக உண்ணுதல், பொறுமையின்மை, எதற்கும் வாதிடுதல், மருந்துகள் மற்றும் மதுவினை மிகையாக உட்கொள்ளல், மிகையாக புகைப்பிடித்தல், எதிலும் கலந்து கொள்ளாமை, ஒட்டாதிருத்தல், கடமையில் இருந்து வழுவுதல், மற்றும் தப்பித்தல், வேலையில் திறமை குறைவு, சக்தி இழத்தல், தன்சுகாதாரக் குறைவு, மதப் பழக்கவழகங்கங்களில் மாற்றங்கள், நெருங்கிய உறவுகளில் மாற்றங்கள்.

**மன அழுத்தத்தை குறைக்கும் முறைகள்**

1. மெல்லச் செய்யும் தசைத்தளர்வு நடவடிக்கைகள் வசதியாக உட்கார்ந்து கொள்ளவும். அல்லது படுத்துக் கொள்ளவும். கண்களை மூடுங்கள். தாடையைத் தளர்த்தி வையுங்கள். கண்களை இறுக்கி மூடாமல் தளர்வாக வையுங்கள்.

   உங்கள் உடலை மனம் மூலம் படம் பிடியுங்கள். கால்களில் இருந்து தலை வரை ஆராயுங்கள். ஒவ்வொரு பாகத்தையும் கூர்ந்து கண்காணிக்கவும். மெல்ல உங்கள் உடல் தளர்வுறுவதாக உணருங்கள்.

   உங்கள் உடலின் ஒரு பகுதி தசைகளை இறுக்கமாக்கி 5 எண்ணும் வரை அப்படியே இருங்கள். பின்னர் தளர்த்தி மற்ற பகுதியில் இது போலச் செய்யவும்.

2. பார்வையால் கற்பனை செய்தல்

உங்கள் சிந்தனைக் குதிரையை தட்டி விடுங்கள். ஏதாவது ஒரு விடயத்தைப் பற்றி மட்டுமே சிந்திக்காதீர்கள். நீங்களே உங்களுக்குத் தளர்வாக இருப்பதாகக் கூறிக் கொள்ளுங்கள் கைகள் சூடானால் குளிர்விக்கச் செய்யுங்கள். குளிர்ந்த கைகளை சூடாக்கவும். இதயம் மெல்லத் துடிப்பதை உணருங்கள்

3. மெல்ல நிதானமாக ஆழ்ந்து மூச்சு விடுங்கள்

நீங்கள் மனம் தளர்வடைந்ததாக உணர்ந்தால் உங்களுக்கு பிடித்த இடத்தில் மகிழ்ச்சியுடன் இருப்பதாக கற்பனை செய்யவும்.

4. ஐந்து முதல் பத்து நிமிடங்களுக்கு பிறகு அந்த மௌன நிலையில் இருந்து விடுபட்டு, பழைய நிலைக்குத் திரும்புங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தளர்வாக மூச்சு விடுங்கள்

நன்கு பழகினால் மெல்ல ஆழ்ந்து மூச்சுவிடக் கற்றுக்கொள்ளலாம். வயிறு மார்புப் பக்கங்களில் இறுக்கமில்லாத தளர்வான உடைகளை அணிந்து மல்லாந்து படுத்துக் கொள்ளுங்கள் இந்நிலையில் மனதை தளர்வு செய்யும் வித்தையைக் கற்றுக் கொண்டதும், இதனை உட்கார்ந்த நிலையிலும் நின்ற நிலையிலும் செய்து பாருங்கள்

6. படுக்கையில் அல்லது தரையில் மல்லாந்து படுத்துக்கொள்ளுங்கள்

கால்களை விரித்து வைத்து கொள்ளுங்கள் ஒரு கையை வயிற்றின் மீதும் ஒரு கையை மார்பின் மீதும் வைத்துக் கொள்ளுங்கள்.

மூக்கு வழியாகச் சுவாசிக்கவும். வயிற்றை உப்பச் செய்து பின்னார் மூக்கு வழியாக காற்றை வெளியேற்றி வயிற்றை உள் இழுக்கவும்.

சுவாசத்தின் மீதே கவனம் செலுத்தவும். சுவாசத்தின் போது உங்கள் கைகள் ஏறி இறங்குகின்றனவா எனக் கவனிக்கவும். ஒவ்வொரு சுவாசத்தையும் நிதானமாக அலை போன்ற ஏற்ற இறக்கத்துடன் செய்யவும்.

உங்கள் நுரையீரலில் உள்ள காற்று அனைத்தையும் வெளியே செலுத்தவும்.

மூச்சை உள் இழுக்கும் போது விநாடிக்கு ஒன்ற என்ற வீதத்தில் 4 வரை எண்ணிக் கொள்ளவும்.

சுவாசிக்கும் போது சூடான காற்றை மெல்ல உங்கள் உடலில் பரவுவதை உணரவும் .

உட்சுவாசத்திற்குப் பின்னர் ஒரு விநாடி இடைவெளி கொடுங்கள்.

மெதுவாக 4 எண்ணும் வரை வெளிச்சுவாசம் செய்யவும். அப்போது வயிறு தளர்வடைகின்றதா எனப் பார்க்கவும்.

வெளிச்சுவாசத்தின் போது காற்று வெளியேறும் போது உங்கள் மன அழுத்தம் வெளியேறுவதாக உணரவும் .

வெளிச்சுவாசத்திற்குப் பின் ஒரு விநாடி இடைவெளி கொடுங்கள்.

4 வரை எண்ணிக்கொண்டே வெளிச்சுவாசமும் உட்சுவாசமும் செய்வது சற்று சிரமமானது ஆகும். இவ்வாறு செய்யும் போது தலை லேசானது போல் உணர்ந்தால் உங்கள் சுவாச வேகத்தையும் ஆழத்தையும் குறைத்துக் கொள்ளுங்கள்.

7. பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்களுக்கு நம்பிக்கையான உறவினர்கள் அல்லது நண்பர்களிடம் உங்கள் மனதில் உள்ளதை பகிர்ந்து கொள்ளுங்கள். அவர்களிடமிருந்து உதவி பெற்று நிலைமையைச் சீராக்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் சிக்கலில் இருந்து விடுபடுவதுடன் புதிய பாதையில் நீங்கள் பயணிக்கலாம் .

8. வேலையைத் திட்டமிடுங்கள்.

படிப்படியாக திட்டமிட்டு பணியாற்றுங்கள். சிறிய சவால்களாக தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

9. கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்

கோபத்தை அடக்கி வைத்துக் கொள்ளாமல் முறையாக வெளிப்படுத்தவும். கோபம் வரும் போது 10 வரை எண்ணவும். அல்லது வேறு விதத்தில் பிறர் மனம் புண்படாதவாறு வெளிப்படுத்தவும்.

10. விடுபட்டு வெளியேறுங்கள்

சிக்கல் ஏற்படும் போது வேறு இடத்திற்கு மெல்ல மாறவும் .

உங்கள் குறிக்கோள்களை எட்டும் உயரத்தில் வைக்கவும். எது முதலில் அடையபட்பட வேண்டியது என்பதைத் தீ;மானிக்கவும்;. அடைய இயலாக் குறிக்கோள் தோல்வியைக் கொண்டு வரும்.

11. சுயமாக மருத்துவம் செய்யாதீர்கள்.

சில வேளைகளில் சிலர் பிரச்சினைகள் வரும் போது சுய மருத்துவத்தையோ மதுவையோ நாடக் கூடும். இவை பிரச்சினையை தீர்ப்பதில்லை. சிறிது நேரம் மறக்கவே உதவுகின்றன.

நல்ல உணவு நல்ல உடற்பயிற்சி, நல்ல தூக்கம் அவசியம். நல்ல உடலே நல்ல மனதிற்கு வழி செய்யும். நல்ல உறக்கம் உங்கள் கவலைகளை மறக்கச் செய்து உங்களுக்கு புத்துணர்வை அளிக்கும். மன அழுத்தத்தால் ஏற்படும் உடல் மாற்றத்தை உடற்பயிற்சி நீக்கி புத்துணர்ச்சி ஏற்படுத்தும்.

உங்களுக்கு உதவி தேவைப்படும் போது உங்கள் மருத்துவரையோ மன நல ஆலோசகரையோ நாடுங்கள்.

## தமிழின் சிறப்பு

உலக மொழிகளுள் மூத்ததும் முன்னோடியுமான மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என்றால் அது மிகையாகாது. உலகில் இருக்கும் மொத்த மொழிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 3000-லிருந்து 8000-வரை இருக்கும் என்று மொழியியலாளர்கள் கூறுகிறார்கள். இவற்றுள் சில மொழிகளே எழுதவும் பேசவும் பயன்படுகின்றன. மேலும் வரிவடிவத்தில் எழுதப்படும் மொழிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனிலும் குறைவே! இவற்றிற்கெல்லாம் தாயாகத் திகழ்பவை ஆறு மொழிகள் என்று பகரலாம். அவை கீழ்வருமாறு:

- எபிரேய மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
- கிரேக்க மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
- இலத்தின் மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
- சமஸ்கிருத மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
- தமிழ் மொழி
- சீன மொழி

- உலகில் வாழும் மொழிகளில் தொன்மையான மொழி நம் தமிழ் மொழி!
- இந்தியாவில் கிடைத்த 55% கல்வெட்டுகள் தமிழ் மொழியில் உள்ளது!
- தமிழ் நாகரிகம் 10,000 வருடங்கள் பழமையானது!
- லெமுரிய(குமரிக்கண்டம்) கண்டம் தமிழின் நாகரிகம் தோன்றிய இடமாக ஆராய்ச்சியாளர்கள் வாதிடுகின்றனர்!
- தமிழின் ஒவ்வொரு எண்ணுக்கும் தனி பெயர்கள் உண்டு வேறெந்த மொழியிலும் அவ்வாறு இல்லை!
- தமிழுக்கு தனித்தமிழ்ச் செம்மொழி என்ற சிறப்பு உண்டு!
- குங் பூ என்ற தற்காப்பு கலை தமிழ் மக்களின் தற்காப்பு கலையில் இருந்து தோன்றியது!
- 10,000 வருடங்களுக்கு முன்பே இரும்பு பொருட்களை உபயோகப்படுத்தியவன் தமிழன் என்பதை நிருபித்த ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மின்னல்

திி. வேணுராஜ் , தரம் - 13

இலங்கை எதிர்நோக்கும் இயற்கை அனர்த்தங்களுள் மக்களை பெரும் அச்சுறுத்தலுக்கு உட்படுத்துகின்ற அனர்த்தமாக மின்னலைக் குறிப்பிடலாம். மின்னல் தாக்கம் மனிதன் மற்றும் ஏனைய அங்கிகளுக்குப் பாதகமான நிலைமைகளை ஏற்படுத்தியுள்ளது. இயற்கைச் சூழலிற்கும் மனிதன் உட்பட்ட உடைமைகளுக்கும் மின்னல் மூலம் ஆபத்து ஏற்படுவதால் இது இயற்கை அனர்த்தமாகக் கொள்ளப்படுகின்றது. இயற்கை அனர்த்தங்களில் அயன மண்டல நாடுகளே அதிகம் பாதிப்புக்கு உள்ளாகின்றன. இடி மின்னல் எதிர்பாராத விதமாக ஏற்படுவதன் காரணமாக சகல உயிரினங்களும் பாதிப்பிற்கு உட்படுகின்றன.

திரண்முகில்கள் போன்ற புவிமேற்பரப்பிலிருந்து உயரமாக உள்ள முகில்களிலேயே இடி மின்னல் தோன்றுகின்றன. முகில்கள் மிக நுண்ணிய நீர்த்துளிகளால் ஆனவை. முகில்களின் ஊடாக வேகமாகக் காற்று வீசும் போது நீர்த்துளிகளும் காற்றும் உரசுவதன் காரணமாக நீர்த்துளிகள் மின்னேற்றமடைகின்றன. முகில்களின் மேற்புறமாக நேர் மின்னேற்றமும் கீழ்ப்புறமாக மறை மின்னேற்றமும் உண்டாகின்றன. இம்முகில்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்வதனால் தீப்பொறி ஏற்பட்டு மின்னலாக மாறிவிடுகின்றன. இவ்வாறு இரு மின்னேற்றங்களுக்கான மின்னானது ஒரு முகிலிலோ இரு முகில்களுக்கிடையிலோ முகில்களிலிருந்து புவிக்கு இடம் பெயரலாம். ஒளி மின்னலாகவும் ஒலி இடியாகவும் ஏற்படுகின்றது. முகில்களிலிருந்து நிலத்தை வந்தடைகின்ற போது இடி விழுந்ததெனக் கூறப்படுகின்றது. இங்கு நிகழ்வது ஏற்றங்கள் நடுநிலையாவதேயாகும். மின்னல் அனர்த்தத்தின் போது வெப்பம், மின் ஆகிய சக்தி வடிவங்கள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

மின்னலின் போது ஏற்படும் வெப்பமானது 20,000 டிகிரி செல்சியஸ் என அளவிடப்படுகின்றது. இடி மின்னல் தாக்கம் இலங்கையில் பொதுவாக பருவக்காற்றுக்கு இடைப்பட்ட காலமான மார்ச், ஏப்ரல், ஒக்டோபர், நவம்பர், மாதங்களிலே ஏற்படுகின்றது. இடி மின்னலானது சுமார் 20 நிமிடங்கள் முதல் 25 நிமிடங்கள் வரை நீடிக்கின்றது. இடி மின்னல் தாக்கம் பங்களாதேசிலேயே அதிகமாக ஏற்படுகின்றன.

கட்டிடங்கள், உயர்ந்த மரங்கள் என்பன மின்னல்களால் தாக்கப்படுவதற்கான காரணம் மின்னேற்றங் கொண்ட முகிற் கூட்டங்களிலிருந்து புவிக்கு மின்னல் பாயும் போது மிகக் குறைந்த தூரங்களினூடாகப் பாய்வதனால் ஆகும். இதனாலேயே முகில்களுக்கு அண்மித்த உயரமான கட்டிடங்கள் அடிக்கடி மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகின்றன. மின்னல் ஏற்படும் போது திறந்த வெளியில் நிற்றல், நீர்நிலைகளில் நீராடுதல், இரும்புப் பொருட்களைக் கையாளுதல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னுபகரணங்களைப் பயன்படுத்துதல், போன்ற கவனயீனமான செயற்பாடுகள் காரணமாக அதிகளவான சேதங்கள் ஏற்படுகின்றன.

குறிப்பாக வரட்சியால் பாதிக்கப்படும், இலத்தீன் அமெரிக்கா, அமேசன் போன்ற பிரதேசங்களில் மின்னலானது காட்டுத் தீயை ஏற்படுத்துகின்றது. இடி மின்னல் தாக்கங்களில் விசேடமாக மனித உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. அத்துடன் அயன மண்டல வறிய விவசாய நாடுகளே பாதிக்கப்படுகின்றன. இகற்கு அடிப்படைக் காரணம் மின்னலின் தாக்கம் தொடர்பான அறிவு விளக்கம் தெரியாத விவசாயிகள், அலவாங்கு, மண்வெட்டி, அரிவாள் போன்ற இரும்பாலான பொருட்களை இடி மின்னல்; சந்தர்ப்பங்களில் கையில் வைத்திருப்பதன் காரணமாக மின்னல் தாக்கி இறக்கின்றனர்.

இடி மின்னல் ஏற்படும் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்.

- மின்னுபகரணங்களையும் தொடர்பாடல் சாதனங்களையும் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- திறந்த வெளியில் நிற்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- பாரிய மரங்களுக்குக் கீழும் உயர்ந்த இடங்களிலும் நீருள்ள இடத்திற்கு அருகிலுள்ள வயல் வெளிகளிலும் இருத்தலைத் தவிர்த்தல் வேண்டும்.
- திறந்த வாகனங்களில் பயணஞ் செய்யக் கூடாது.
- தொலைபேசியை பயன்படுத்தக் கூடாது.
- உலோகப் பொருட்களைப் பயன்படுத்தக் கூடாது.
- உயர்கட்டிடங்களுக்கு மின்னல் கடத்திகளைப் பொருத்தி நன்கு பராமரித்தல்.
- சைக்கிள் வண்டி, மோட்டார் வண்டி, உளவு இயந்திரம் போன்றவற்றில் பயணிப்பதைத் தவிர்த்தல்.
- நீந்துதல், நீருக்குள் இறங்குதல் என்பவற்றைத் தவிர்த்தல்.
- இலத்திரனியல் பொருட்கள் பாவிப்பதைத் தவிர்த்தல்.

போன்றவற்றை மேற்கொள்வதன் மூலம் மின்னல் தாக்கங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். மேலும் மூடிய வாகனத்தில் பயணிக்கம் போது மின்னல் பாதிப்பு ஏற்படுவதில்லை. இதற்கு பரடேயின் மூடுதொகுதி என்னும் பௌதீகவியல் தத்துவமே காரணமாகும்.

ஒருவருக்கு மின்னல் தாக்கம் ஏற்பட்டால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்.

- மின்னல் தாக்கியவுடன் முதலுதவி செய்ய வேண்டும்.அவரது மார்புப் பகுதியினை அழுத்தி செயற்கைச் சுவாசம் கொடுக்க வேண்டும்.
- மின்னல் தாக்கிய ஒருவரை தொடுதல் அல்லது தூக்குதலால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது போன்றவற்றைக் குறிப்பிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை அனர்த்தங்களிலிருந்து முழுமையாக விடுபட முடியாவிட்டாலும் அவற்றினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்வது பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும். இதை அறிவிப்பதற்காகவே வானிலை, காலநிலை மாற்றங்களைக் கவனத்திற் கொள்வதற்கான நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வனர்த்தம் கூடுதலாக இலங்கையில் ஏற்படுவதனாலேயே இயற்கை அனர்த்தம் பற்றி மாணவர்களுக்கு விழிப்பூட்டுவதற்காக பாடநூலில்அச்சிடப்பட்டுள்ளது. வானிலை அவதான நிலையம் வழங்கும் தகவல்களை நாம் உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும். இதன்மூலமாகவும் அனர்த்தப் பாதிப்பைக் குறைத்துக் கொள்ளமுடியும்.

எனவே நாம் அனைவரும் அனர்த்தம் ஏற்பட முன் முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். இதன் மூலமாக இடிமின்னலால் ஏற்படும் பாதிப்பைக் குறைத்துக் கொள்ள முடியும். இயற்கை அனர்த்தங்களிலிருந்து நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

வருமுன் பாதுகாப்பதே சிறந்த முறையாகும்.

உலகில் மிகப்பெரியது

- உலகில் மிகப்பெரிய விலங்கு எது? திமிங்கிலம்
- உலகில் உயரமான விலங்கு எது? ஒட்டகச்சிவிங்கி
- உலகில் மிக உயரமான மலை எது? இமயமலை
- உலகிலேயே மிக நீளமான நதி எது? அமேசன்(6.750 கிலோ மீட்டர்)
- உலகிலேயே மிக நீளமான நதியாகக் கருதப்பட்ட நதி எது? நைல் நதி(6.690 கிலோ மீட்டர்)
- உலகிலேயே மிக ஆழமான ஆழி எது? மரியானாஆழி(11.522 மீட்டர்)
- உலகிலேயே மிகப்பெரிய நகரம் எது? லண்டன்
- உலகிலேயே பெரிய பாலைவனம் யாது? சஹாராப்பாலைவனம்
- உலகிலேயே மிகச் சிறிய அரசு எது? வத்திக்கான்
- உலகிலேயே பெரிய சமுத்திரம் எது? பசுபிக் சமுத்திரம்
- உலகிலேயே பெரிய தீவு எது? கிறீன்லாந்து
- உலகிலேயே பெரிய கண்டம் எது? ஆசியாக்கண்டம்
- உலகிலேயே சிறிய கண்டம் எது? அவுஸ்ரேலியா
- உலகிலேயே பெரிய நாடு எது? கனடா(ரஷ்யா சிதறிய பிறகு)
- உலகிலேயே அதிகளவில் எரிமலைகள் உள்ள நாடு எது? இந்தோனேஷியா
- உலகிலேயே அதிக மழை பெறும் இடம் யாது? சிரப்புஞ்சி
- உலகிலேயே பெரிய நன்னீர் ஏரி யாது? சுப்பீரியர் ஏரி
- சூரியனை பூமி ஒருமுறை சுற்றிவர எடுக்கும் காலம் யாது? 365 நாடகள்.6 மணி 9 நிமிடம். 9.54 செக்கன்
- உலகிலேயே மிகவுயர்ந்த சிகரம் யாது? எவரெஸ்ட்
- உலகிலேயே பெரிய எரிமலை யாது? லஸ்கார் (சிலி) 5.990 மீட்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உலகிலேயே மிக நீளமான மலை எது? அந்தீஸ்மலை
- உலகிலேயே மிகவும் பரந்த கடல் எது? தென்சீனக்கடல்
- உலகிலேயே பெரிய ஏரி எது? கஸ்பியன் (ரஷ்யா-ஈரான்)
- உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி எது? ஏஞ்சல்ஸ்(வெனிசுவெலா) 979 மீட்டர்
- உலகிலேயே அதிக மக்கள் தொகையுள்ள நாடு எது? சீனா
- உலகிலேயே குறைந்த மக்கள் தொகையுள்ள நாடு எது? வத்திக்கான்
- உலகிலேயே மிக நீளமான ரயில்வே பிளாட்பாரம் எங்குள்ளது? காரக்பூர்
- உலகிலேயே மிக ஆழமான ஏரி எது? பைக்கால் ஏரி
- உலகிலேயே மிக நீளமான குகை எது? மாமத் குகை
- உலகில் உள்ள ஒரே ஒரு இந்து மத நாடு எது? நேபாளம்
- உலகிலேயே மிகப்பெரிய பூ எது? ரவல்சியாஆர்னல்டி
- உலகிலேயே மிக நீளமான வீதி அமைந்துள்ள இடம் எது? அலாஸ்கா
- உலகிலேயே மிகப் பழமையான தேசப்படத்தை வரைந்தவர் யார்? தொலமி
- உலகிலேயே மிகப் பிரபலமான விஞ்ஞான சஞ்சிகை எது? நேச்சர்
- ஆசியாவில் உள்ள கிறிஸ்தவ நாடு எது? பிலிப்பைன்ஸ்
- உலகில் எரிமலை இல்லாத கண்டம் எது? அவுஸ்ரேலியா
- உலகில் மிக உயரத்திலுள்ள ஏரி எது? டிடிக்காகா
- உலகில் மிக உயரமான அணை எது? போல்டர் அணை
- உலகிலேயே மிகப் பழமையான கம்யூனிஸ நாடு எது? சீனா
- உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு எது? இந்தியா
- உலகில் அதிக மக்களால் பேசப்படும் மொழி எது? மாண்டரின் (சீனா)
- உலகில் அதிகளவில் அச்சிடப்படும் நூல் எது? பைபிள்
- கடல்மட்டத்திற்கு கீழே உள்ள நாடு எது? நெதர்லாந்து
- உலகில் ஆறுகளே இல்லாத நாடு எது? சவுதி அரேபியா
- உலகில் மிகப் பெரிய இஸ்லாமிய நாடு எது? இந்தோனேசியா
- உலகில் மிக உயரமான அணை யாது? போல்டர் அணை (manas hussain)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மக்கள் மத்தியில் ஆங்கில மொழிப்பாவனை

திரு. ச. இந்திரன், ஆசிரியர்

மனித குல வரலாற்றில் மொழிப்பாவனையின் கண்டு பிடிப்பானது மகத்துவம் வாய்ந்தது. ஒருவர் தனது எண்ணங்களை மற்றவருடன் பகிர்ந்து கொள்வதற்கு ஒரு சிறந்த கருவியாக மொழி அமைகின்றது. வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு மொழிகள் தோற்றம் பெற்றன. சில பேச்சு வழக்குடன் நின்றன. சில பேச்சு வழக்குடன் ஒலிகளுக்கான வரிவடிவங்களை உருவாக்கி எழுத்து வழக்கினையும் கொண்டு வளர்ச்சி பெற்றன. கருத்துக்களைப் பரிமாறுவதற்கான ஊடகமாகத் தோற்றம் பெற்ற மொழிகள் பின்னைய நாட்களில் சில இனங்களைப் பொறுத்தவரை தனித்துவ அடையாளத்தினை வழங்கும் சின்னங்களாகவும் மாற்றம் பெற்றன.

இதனால் மொழியைக் காப்பதற்கான யுத்தம் என்ற பெயரில் உலகின் பல இட.ங்களில் வெவ்வேறு இனக்குழுக்களுக்கு இடையே முறுகல் தோன்றி இரத்தம் வெள்ளமாய் ஓடியமையும் நாம் கேள்விப்பட்ட, கேள்விப்படுகின்ற வரலாற்று உண்மைகளாகும். வெவ்வேறு பிரதேசங்களில் தோன்றிய வெவ்வேறு மொழிகளில் சில நன்கு வளர்ச்சி பெற்றுச் செல்வதனையும் வேறு சில தற்போது பாவனையில் இல்லாது அழிந்து போயுள்ளமையையும் இன்னும் சில மொழிகள் இல்லாமல் போவதற்கான அச்சுறுத்தலை எதிர் கொண்டுள்ளமையையும் நாம் அறியக் கூடியதாயுள்ளது. இந்நிலையில் தமிழ் மொழியானது ஆங்கில மொழிப்பாவனையினால் இப்போது அச்சுறுத்தலை எதிர் கொள்வதாகவும் எனவே ஆங்கில மொழியைப் பாவிப்பதை தமிழர்கள் குறைத்துக் கொள்ள வேண்டும் எனவும் சில கருத்துக்கள் முன் வைக்கப்படுகின்றன.

தமிழர்கள் இப்போது தமிழ் மொழியை விருப்புடன் கற்பது இல்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை பெற்றோர் தம் குழந்தைகளுக்கு ஆங்கில மொழி மூலக் கல்வி பெற்றுக் கொடுக்கப்படுவதனையே விரும்புகின்றனர். இவ்வாறான ஒரு நிலை இலங்கையிலும் நகரப்புறங்களில் மாத்திரமின்றி ஓரளவு வசதி படைத்த மக்கள் வாழ்கின்ற கிராமங்களிலும் ஏற்பட்டு வருவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. நமது தமிழ் குழந்தைகள் பலருக்கு “நிலா நிலா ஓடிவா....” என்ற அழகிய பாடலின் வரிகள் நன்கு தெரியா விட்டாலும் ‘Twinkle, twinkle little star...” என்ற பாடலை அவர்கள் அழகாகச் சொல்லி விடுகின்றனர். தாய்மொழியாகிய தமிழ் மொழியில் உள்ள ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி போன்றவை பற்றி அடியோடு தெரியாத தமிழ்க் குழந்தைகள் ஆங்கில Elocution வகுப்புக்களுக்குச் சென்று ஆங்கிலக் கவிதைகளை அழகாகச் சொல்கின்றார்கள். அவர்களின் பெற்றோரும் அதனைக் கேட்டு உச்சி குளிர்ந்து விடுகின்றனர். இன்றைய தமிழ்த் தாய்மார்கள் நாலுபேர் மத்தியில் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் தம்மை மம்மி என்று அழைப்பதைப் பெரும் பேறாகக் கருதுகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரை க.பொ.த சாதாரணதரம் வரை தமிழ் மாணவர்களுக்கு தமிழ் மொழி கட்டாய பாடமாக இருப்பதால் அதனைக் கட்டாயத்திற்காகக் கற்கின்றனர். அதன் பின் அவர்கள் தமிழ் மொழியை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. இன்றைய தமிழ் இளைஞர்களில் எத்தனை பேருக்கு ஐம்பெரும் காப்பியங்களைப் பற்றித் தெரியும்? பக்தி இலக்கியங்களைப் பற்றித் தெரியும்? புறநானூறு பற்றிக் கேட்டால். What is that four hundred? என்று எள்ளி நகைக்கும் தமிழ் இளைஞர்கள் பலர் உள்ளனர். பல சராசரி தமிழ் இளைஞர்கள் Why is this கொலவெறி போன்ற சினிமாப் பாடல்களை இன்று பெரும் சங்கீதமாகக் கருதுகின்றனர். உண்மையான இசைத்தமிழ் பற்றி அவர்களுக்குத் தெரியாது. இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தினால் இடம் பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள தமிழர்களின் பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் இன்று தமிழைப் பேசமுடியாத நிலையில் உள்ளனர். சமய நிகழ்வுகளின் போது தேவாரங்களைக் கூட ஆங்கிலத்தில் எழுதி வைத்துப் படிக்கும் குழந்தைகளும் உண்டு. ஆங்கிலத்தைப் பிரதானமான மொழியாய்க் கொண்ட நாடுகளில் உள்ள தமிழ் பிள்ளைகளுக்கு தமிழ் முழுமையாகத் தெரியாவிட்டாலும் மீண்டும் எமது நாட்டிற்கு வந்து இங்குள்ள உறவுகளுடன் இணைந்து வாழ்வதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஏனெனில் இங்கும் ஆங்கிலம் பேசப்படுகின்றது. ஆனால் ஆங்கில மொழியைப் பிரதானமாய்க் கொண்டிராத நாடுகளில் உள்ள தமிழ்ப்பிள்ளைகளின் நிலை மேலும் சிக்கலானது அவர்களுக்கு ஆங்கிலமும் தெரியாது. தமிழும் தெரியாது. இவ்வாறான பல சிக்கல்களை இன்று எமது தமிழ்ச் சமூகம் சந்தித்துக் கொண்டிருக்கின்றது.

இன்று நமது தமிழர்கள் சிலர் தமிழை எப்படியெல்லாம் சித்திரவதை செய்ய முடியுமோ அப்படியெல்லாம் செய்கின்றனர். செல்லிடப் பேசிகளில் குறுஞ்செய்தி அனுப்புபவர்களைக் கவனியுங்கள். தமிழ் வார்த்தைகளை ஆங்கிலத்தில் எழுதி அனுப்பி விடுகின்றனர். தழிழ்ச் சொற்கள் இன்று ஆங்கில வரிவடிவங்களில் எழுதப்படுவதனால் தமிழின் நிலை இன்று மிகவும் சோகத்திற்கு உள்ளாக்கபடுகின்றது.

இப்போதெல்லாம் நடுத்தர, உயர்வர்க்கத்தினரை எடுத்துக் கொண்டால் நம் தமிழர்கள் பொது இடங்களில் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளும் போது யார் வணக்கம் என்ற சொல்லை உச்சரிக்கின்றார்கள். இளவட்டங்கள் தமது நண்பர்களைக் கண்டால் Hi என்றே உரையாடலை ஆரம்பிக்கின்றனர். தைப்பொங்கல், புதுவருடப்பிறப்பு, போன்ற பண்டிகைகளின் போது ஆலயங்களுக்கு வரும் அடியவர்கள் கூட Happy Thai Pongal என்றோ Happy New Year என்றோ தான் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். ஓரளவுக்குப் படித்தவர்கள் ஆங்கிலத்திலே தமக்குள் உரையாடிக் கொள்கின்றனர். நமது கலாச்சார உடையாகிய வேட்டி அணிந்து தமிழ் பேசுபவர்களைப் பார்த்து நாட்டுப்புறத்தான் என்று எள்ளி நகையாடுகின்றனர். இன்றுள்ள எத்தனை தமிழ் பிள்ளைகளுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பெயர்கள் உள்ளன. தமிழ்ப் பெயர்கள் வைப்பதையே பலர் அவமானமாய் கருதுகின்றனர். வடமொழிப் பெயர்களோ அல்லது வேற்றுமொழிப் பெயர்களோ தான் குழந்தைகளுக்குச் சூட்டப்படுகின்றன. வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் தமிழை நன்கு உச்சரிப்பதில்லை. தமிழ் நடிகைகள் பேட்டி காணப்படும் போது அவர்கள் தமிழ் தங்கள் வாய்களுக்குள் வர மறுக்கிறது என்கிறார்கள்.

கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் தொழில் வாய்ப்பினைத் தரக்கூடிய பாட நெறிகள் அனைத்தும் ஆங்கில மொழி மூலமாகவே இடம் பெறுகின்றன. இந்நிலையில் தமிழ் மொழியை ஆர்வமுடன் கற்போர் தொகை மெல்ல மெல்லக் குறைந்து செல்கின்றது. மெல்லத் தமிழ் இனிச்சாகப்போகின்றது. தமிழ் எங்கள் உயிரை விட மேலானது. அதைக் காக்க களம் இறங்குங்கள். ஆங்கில மொழி ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டுங்கள் என்று தமிழ் அபிமானிகள் சிலர் இப்போது கூக்குரல் இட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இவ்விடத்தில் ஆங்கில மொழியினால் தமிழுக்கு, தமிழர்களுக்கு அச்சுறுத்தலா என்பது ஆராயப்பட வேண்டிய விடயம்.

ஆங்கில மொழியினால் தமிழின் வளர்ச்சிக்கு அச்சுறுத்தல் இருக்கலாம் என்பதில் ஓரளவுக்கு உண்மையும் இருக்கலாம். ஆனால் தமிழ் சமூகத்திற்கு அவர்களும் மனிதர்கள் என்ற வகையில் இன்றைய உலகமயமாக்கல் சூழ்நிலையில் ஓர் சிறந்த வாழ்க்கைத் தரத்தை எட்டிப்பிடித்துக் கொள்வதற்கு ஆங்கில மொழி அவசியமானதே ஆகும். ஆங்கிலத்தை விரும்பிக் கற்பவர்களையும் அதனைப் பயன்படுத்துபவர்களையும் ஆங்கில மோகம் பிடித்தவர்கள் என்று வர்ணிப்பது பிழை. மோகம் என்பது பயனற்ற அர்த்தமற்ற விளைவிற்கு இட்டுச் செல்கின்ற மனோபாவம் ஆகும். ஆங்கிலத்தைக் கதைப்பதோ கற்பதோ அர்த்தமற்ற விளைவிற்கு இட்டுச் செல்லப்போவதில்லை. மாறாக சிறந்த ஆங்கிலத் தேர்ச்சி பெறுவதன் மூலமாக உயர் கல்வியை வளப்படுத்திக் கொள்ள முடியும். சிறந்த தொழில்களைப் பெற்றுக் கொள்ள முடியும். உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச நாடுகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இதனால் பொருளாதாரம் நன்கு வளர்ச்சி பெறும். தமிழன் என்றொரு இனம் உண்டு. அதற்கு தனியே ஒரு குணம் உண்டு என்று பாடிக் கொண்டிருப்பதாலோ, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் தோன்றிய மூத்தகுடி நம் தமிழ் குடி என்று சுயதம்பட்டம் அடிப்பதனாலோ நமது தமிழ் சமூகம் பொருளாதார வளர்ச்சியைக் காணப்போவதில்லை. பொருளாதார வளர்ச்சியினையும் நவீன அறிவுத் தொகுதியையும் தன்னகப்படுத்திக் கொள்ளாத எந்த சமூகமும் பின்தங்கிய நிலையையே அடையும். சூழல் மாற்றத்திற்கு ஏற்ப தம்மை இசைவாக்கிக் கொள்ள முடியாத அங்கிகள் தப்பிப்பிழைப்பது எவ்வளவு கடினமானதோ அதுபோன்றதே இதுவும்.

இன்று இலங்கையிலும் சரி, இந்தியாவிலும் சரி தமிழர்களின் சமூக பொருளாதார நிலை ஓரளவிற்கு உயர்ந்து இருக்கின்றது என்றால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு முக்கிய காரணமாய் இருப்பது தமிழை விட ஆங்கிலம் தான். சிறந்த ஆங்கிலத் தேர்ச்சி மூலமாக நமது தமிழ் மாணவர்கள் விஞ்ஞானம், கணிதம், பொறியியல், மருத்துவம் போன்ற அறிவியல் துறைகளிலும் மற்றும் கணக்கியல், நிர்வாகம், வணிகம், போன்ற தொழிற் துறைகளிலும் தேர்ச்சி பெற்று சிறந்த தொழில்களை அடைந்து தாம் வளம் பெற்றதுடன் தம்மைச் சார்ந்தவர்களையும், ஏன் முழுச்சமூகத்தையும் வளம் பெற வைத்துள்ளனர். இலங்கையை எடுத்துக் கொண்டாலும் சரி, தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டாலும் சரி தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் பெரியளவில் வளங்கள் கிடையாது. தமிழர்களின் மிகப்பெரிய வளம் மனித வளம்மட்டுமே. தமிழகம் முன்பொரு காலத்தில் இம்மனித வளத்தை கூலியாட்களாக மட்டுமே இலங்கை, மலேசியா, பிஜிங், போன்ற தேசங்களுக்கு அனுப்பி வைத்தது. அவ்வாறு அனுப்பப்பட்டவர்களின் வாழ்க்கையில் இன்று வரை பெரிய விடிவு ஏற்படவில்லை. ஆனால் இன்று தமிழ் நாட்டில் இருந்து தகவல் தொழிநுட்ப வல்லுனர்கள், பொறியியல் மேதைகள், வைத்தியர்கள், விஞ்ஞானிகள், போன்றோர் அமெரிக்காவிற்கும் ஏனைய மேலைத்தேய நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றனர். இதனால் உலகளவில் தமிழ் நாட்டின் மதிப்பு உயர்ந்துள்ளது. இதற்குக் காரணம் ஆங்கில மொழி தானே. தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் இன்று உலகின் மிகப்பெரிய பல் தேசிய மற்றும் கணினி நிறுவனங்களில் தலைமை இயக்குனர்களாக பணியாற்றுகின்றனர். தமிழ் மொழி அறிவை மட்டும் கொண்டு இத்தகைய உயர் நிலையை எட்ட முடியுமா?

இதனால் இன்றைய தமிழ் பெற்றோர் தமது குழந்தைகள் ஆங்கிலத் தேர்ச்சி பெறவேண்டும், சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்புவதில் நியாயம் உள்ளது அல்லவா? வெறுமனே புறநானூறு பாடல்களில் வரும் தமிழர்களின் வீர வரலாறுகளை மீண்டும் மீண்டும் பாடிக் கொண்டிருப்பதால் நமது இனம் விடிவு பெற்று விடுமா? இப்போது வீரம் எனப்படுவது புறநானூறுப் பாடல்களில் வருவது போல செருக்களத்தில் கடைசிவரை போராடி வீரச் சாவடைவது அல்ல. மாறாக பொருளாதார, அறிவு மேம்பாட்டினூடாக புத்தி பூர்வமான முடிவுகளை எடுத்துச் செயற்பட்டு வெற்றி இலக்குகளை அடைவதாகும்.

இந்தியாவின் எதிர் காலத்தைத் தூரநோக்குடன் பார்த்த நேரு, அம்பேத்கார் போன்றோர் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தைத் தான் எதிர்த்தார்களே ஒழிய ஆங்கில மொழியை வெறுக்கவில்லை. தலித் மக்களின் வாழ்வில் உண்மையான விடுதலை கிடைக்க வேண்டும் என்றால் ஆங்கிலக் கல்வி அவசியம் என்று அம்பேத்கார் வலியுறுத்தினார். இதனால் இன்று இந்தியா அடைந்துள்ள நன்மைகள் ஏராளம். சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளுக்குள் ஒரு முக்கிய வல்லரசாகவும் உலகின் மிகப்பெரிய பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளுள் ஒன்றாகவும் அது விளங்குவதற்கு ஆங்கில மொழிப்பாவனை ஊக்குவிக்கப்பட்டது ஒரு முக்கிய காரணமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கப்பூரை எடுத்துக் கொண்டால் அங்கும் ஆங்கிலத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டமையும் ஏனைய மொழிகளை அந்தந்த இன மக்கள் பாவிப்பதற்கு முழு உரிமையும் வழங்கப்பட்டமையும் ஆகும். இதனால் அங்கு இன மோதல்கள் ஏற்படவில்லை. மாறாக நாடு வளர்ச்சி கண்டது. இன்று அந்தச் சிறிய தேசம் முக்கிய உலக நாடுகளுள் ஒன்றாய் விளங்குகின்றது. ஆனால் சுயபாஷை மேம்பாடு என்ற திட்டங்களை அறிமுகப்படுத்திய இலங்கை போன்ற நாடுகளில் இனமுறுகல்கள் ஏற்பட்டதுடன் மொழியின் பெயரால் பல்லாயிரக்கணக்கானோர் இறந்து போனதுடன் பெரும் சொத்து அழிவுகளும் ஏற்பட்டு இன்னமும் நாடு அபிவிருத்தி நிலையை எட்டிப்பிடிக்க முடியாமல் உள்ளது. இன்று சீனாவை எடுத்துக் கொண்டாலும் அங்கும் ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதும் அந்த நாட்டின் துரித வளர்ச்சிக்கான காரணங்களுள் ஒன்று என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. விஞ்ஞான தொழிநுட்ப அறிவில் விருத்தி அடைந்த பிரான்ஸ், ரஷ்யா, ஜப்பான், ஸ்பெயின், ஜேர்மனி போன்ற நாடுகள் கூட இன்று ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தினை நிராகரிக்க முடியாத நிலைக்கு வந்துள்ளதுடன் அம்மொழியின் பாவனையை தங்கள் நாடுகளிலும் ஊக்குவிப்பதற்கு பல பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ளன. அண்மையில் ஜப்பானின் புகழ் பெற்ற மோட்டார் உற்பத்தி நிறுவனமான ஹொண்டா தனது ஊழியர்கள் அனைவரும் ஆங்கில மொழித் தேர்ச்சி பெறவேண்டும் என்று அறிவித்ததும், இத்தாலியின் மிகவும் பிரபலமான பல்கலைக்கழகம் ஒன்று அங்கு பயிலும் அனைத்து மாணவர்களும் ஆங்கிலத்ததைக் கட்டாயபாடமாக பயில வேண்டும் என்று சட்டம் இயற்றியதையும் குறிப்பிடலாம்.

இவ்வாறு நவீன அறிவுத் தொகுதிகளை தம்மகத்தே கொண்டுள்ள பிரெஞ்சு, ரஷ்ய, ஜப்பானிய, ஜேர்மனிய, ஸ்பானிய மக்களே தமது மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்தை தேர்வு செய்துள்ளமை சர்வதேச சந்தைகளில் தாமும் நன்கு ஊடுருவி தமது பொருளாதாரங்களை மேம்படுத்திக் கொள்ள விரும்புவது ஆகும். இந்நிலையில் தமிழர்களாகிய நாம் மட்டும் ஆங்கிலத்தை உதறித் தள்ளிவிட்டு எதைச் சாதிக்கப் போகின்றோம்?

இலங்கையைச் சேர்ந்த சுவாமி விபுலானந்தரின் ஆங்கில அறிவு மிகவும் உயர்வாய் இருந்தது. அவரின் ஆங்கிலப் புலமையே பழந்தமிழரின் இசையை மேற்குலகமும் அறிந்து கொள்ளத்தக்க வகையில் யாழ்நூலை ஆக்க உதவியது. நோபல் பரிசு பெற்ற தமிழ் விஞ்ஞானிகளான சேர் .சி.வி.ராமன், எஸ். சந்திரசேகர், வெங்கட்ராமன் ஆகியோர் தமது ஆய்வுகளை ஆங்கிலத்திலேயே எழுதி வெளியிட்டனர்.

இன்று தமிழை அழிய விடாது பாதுகாக்க வேண்டும் என்று கூக்குரலிடுவோர் ஆங்கில மொழிப்பாவனையை எதிர்ப்பதை விடுத்து அம்மொழியினை தமிழர்கள் மேலும் மேலும் கற்கவும் பயன்படுத்துவதற்கும் ஊக்குவிப்பு வழங்க முன்வரவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தைப் பேசிப் பழக வேண்டுமானால் ஆங்கிலேயர்களுடன் மட்டுமே பேசிப்பழக வேண்டும் என்று கூறுவதும் தமிழர்கள் தங்களுக்குள் தமிழிலேயே பேசிக் கொள்ள வேண்டும் என்பதும் பொருத்தமான விடயங்கள் அல்ல. ஏனெனில் எல்லாத் தமிழர்களுக்கும் ஆங்கிலேயர்களுடனோ அல்லது வேற்று இனத்தவருடனோ சிறுவயதில் இருந்தே இடையூடாட்டம் கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைப்பதில்லை. இதனால் தமிழ்ப்பிள்ளைகள் சிறுவயதில் இருந்தே தமக்குள் ஆங்கிலத்தில் உரையாடி அந்த ஆற்றலை வளர்த்துக் கொள்வதன் மூலமாக எதிர் காலத்தில் ஏனைய மொழி பேசுவோருடனும் ஆங்கிலேயர்களுடனும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவதற்குரிய சூழ்நிலை ஏற்படும். அறையில் ஆடித்தான் அம்பலத்தில் ஆடவேண்டும் என்று ஒரு தமிழ் பழமொழியே உள்ளது. எனவே குறுகிய கண்ணோட்டங்களைத் தவிர்த்து எமது சமூகத்தின் எதிர்கால எழுச்சிக்காக ஆங்கில மொழிப்பாவனையை அனைவரும் ஊக்குவிக்க வேண்டும். அதே வேளை தமிழ் மொழியின் அருமை பெருமைகளையும் தமிழ்ப்பிள்ளைகளுக்குச் சொல்லித் தரவேண்டும். மொழி, இனம் என்ற குறுகிய வட்டங்களுக்குள் எப்போதும் நின்று கொண்டிருக்காது அவ்வப்போது ஏற்படுகின்ற சூழ்நிலை மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் நம்மை இசைவாக்கிக் கொள்வதனூடாக சுபீட்சமான உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினை அடைந்து கொள்ளலாம்.

- *Our greatest glory is not in never falling, but in rising every time we fall.*
  *- Confucius*
- *All our dreams can come true, if we have the courage to pursue them.*
  *- Walt Disney*
- *It does not matter how slowly you go as long as you do not stop.*
  *- Confucius*
- *Success is not final, failure is not fatal: it is the courage to continue that counts.*
  *- Winston Churchill*
- *Hardships often prepare ordinary people for an extraordinary destiny.*
  *- C.S. Lewis*
- *Believe in yourself. You are braver than you think, more talented than you know, and capable of more than you imagine.*
  *- Roy T. Bennett*
- *I learned that courage was not the absence of fear, but the triumph over it. The brave man is not he who does not feel afraid, but he who conquers that fear.*
  *Nelson Mandela*
- *We did not come to fear the future. We came here to shape it.*
  *Barack Obama*
- *Don't judge each day by the harvest you reap but by the seeds that you plant.*
  *Robert Louis Stevenson*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Our Sincere Thanks*

*We, the students of Km/Km/Ganesha Maha Vidyalaya, would like to express our sincere thanks to the following kind personalities for the great favours they did for the development of our school. We are always grateful to them.*

1. *Siva Shri Murugu Nallathambi Kurukkal*
   *Justice of Peace*
   *Chief Priest, Thiruneelakanda Devastanam, Chenaikudiyiruppu.*
2. *Rev Bro A. Thevarajah*
   *Librarian, Km/Km/ Ganesha Maha Vidyalaya, Chenaikudiyiruppu*
   *Director, St. Mary's Boys Home, Kalmunai*
3. *The Zonal Director of Education*
   *Zonal Education Office, Kalmunai*
4. *The Deputy Directors of Education*
   *Zonal Education Office, Kalmunai*
5. *The Divisional Director of Education*
   *Kalmunai Tamil Division*
6. *Assistant Directors of Education*
   *Zonal Education Office, Kalmunai*
7. *In- Service Advisors*
   *Zonal Education Office, Kalmunai*
8. *All officers and staff*
   *Zonal Education Office, Kalmunai*
9. *Mr. K. Selvarajah*
   *Member of Kalmunai Municipal Council*
   *Main Street, Chenaikudiyiruppu, Kalmunai.*
10. *Mr. M. Rajeswaran*
    *Former Member of Eastern Provincial Council*
    *Manalchenai, Kalmunai.*
11. *Mr T. Kalayarasan*
    *Former Member of Eastern Provincial Council*
    *Chairman, Navithavely Piradeshya Sabhah*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Navithanvelly.

12. Mr. K. Jeyacyril
Country Coordinator, German Light of Hope
Chairman, Karaitivu Piradeshya Sabhah
Karaitivu.

13. Mr. N. Vinayagamoorthy,
Poet and playwright
Chenaikudiyiruppu, Kalmunai.

14. Mr N. Nagamani
Retired Principal
Chenaikudiyiruppu, Kalmunai.

15. Mr K. Chandralingam
Retired Principal
Chenaikudiyiruppu, Kalmunai.

16. Mr. N. Sivakaran
London.

17. Mr N. Rajeswaran
Proprietor, GK Cinema, Pandiruppu, Kalmunai
Chenaikudiyiruppu, Kalmunai.

18. Mr. T. Parameswaran
Public Health Inspector, Chenaikudiyiruppu
Karaitivu.

19. Mr. Y. Kajendra
Ampara District coordinator, Hindu Revolution Organization
Chenaikudiyiruppu, Kalmunai.

20. Dr N. Ramesh
Base Hospital, Kalmunai
Vanniyar Lane, Kalmunai.

21. Dr. J. Mathan
Medical Officer of Health, Navithanvelly
Yard Road, Kalmunai.

22. Dr. V. Gnanaretnam
Ashrof Memorial Hospital, Kalmunai
R.K.M Road, Kalmunai.

23. Dr K. Ganeswaran
Medical Officer of Health, Kalmunai North.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pandiruppu – 01, Kalmunai.

24. *Engineer Mr. T. Sarvanandam*
Kalmunai

25. *Engineer Mr. P. Henry Amalraj*
Kovil Road, Kalmunai.

26. *Engineer Mr. S. Satheeskaran*
Water Supply Board, Kalmunai.
Chenaikudiyiruppu, Kalmunai.

27. *Mr. S. Sevelkumaran*
Senior Teacher, AK/Ramakrishna Maha Vidyalaya
Proprietor, Shri Murugan Stores, Kalmunai.
Vanniyar Road, Kalmunai.

28. *Mr. S. Jeyananthan*
Senior Teacher, BT/Vincent Girls' College, Batticaloa
Natpiddimunai, Kalmunai.

29. *Mrs J. Sujarman*
Teacher, TK/R.K.M Maha Vidyalaya, Thampiluvil
Kalmunai

30. *Mr. M. Lakkunam*
ISA (Hiduism), Zonal Education Office, Kalmunai.
Pandiruppu – 01, Klamunai.

31. *S. Elanganathan*
ADE (Maths), Zonal Education Office, Kalmunai.
Natpiddimunai, Kalmunai.

32. *Mr. S. Sathiyanathan*
Chief Executive Officer, SEVO
Chenaikudiyiruppu

33. *Mrs T. Sutharshini*
SDC Secretary, KM/KM/Ganesah Maha Vidyalaya
Chenaikudiyiruppu

34. *Mrs L. Thevaranjini*
SDC Member, KM/KM/Ganesah Maha Vidyalaya
Chenaikudiyiruppu

35. *Mr. R. Chandradevan*
SDC Member, KM/KM/Ganesah Maha Vidyalaya
Chenaikudiyiruppu



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. *Mrs K. Mehala*
*SDC Member, KM/KM/Ganesah Maha Vidyalaya*
*Chenaikudiyiruppu*
37. *Mrs A. Nadeswari*
*SDC Member, KM/KM/Ganesah Maha Vidyalaya*
*Chenaikudiyiruppu*
38. *Mr. N. Kajananthan*
*SDC Member, KM/KM/Ganesah Maha Vidyalaya*
*Chenaikudiyiruppu*
39. *Mr. S. Sivatharshan*
*SDC Member, KM/KM/Ganesah Maha Vidyalaya*
*Chenaikudiyiruppu*
40. *Mr K. Mahenthiran*
*Temple Trustee, Sithivinayagar & Muthu Mariyamman Temples*
*Chenaikudiyiruppu, Kalmunai.*
41. *Mrs Pavitharan Sivashritha*
*Chenaikudiyiruppu*
42. *Mr. T. Pooventhiran*
*Principal, Km/Km/Ganesha Maha Vidyalaya, Chenaikudiyiruppu.*
*Navithanvelly*
43. *All the teachers of our school*
44. *All the non- academic staff of our school*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Some Photographs on Important Occasions in the Year 2018*




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

இந்த சஞ்சிகைக்கான ஆக்கங்களைத் தந்துதவிய ஆசிரியர்கள், மாணவர்கள் வாழ்த்துச் செய்திகள் வழங்கிய வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், சஞ்சிகை வெற்றிகரமாக வெளிவருவதற்கு வேண்டிய ஆலோசனைகள் வழங்கி ஊக்குவித்த எமது அதிபர், ஆக்கங்களை சொல் செயலாக்கம் (word processing) செய்து உதவிய திருமதி J. சுஜர்மன், நூலாக்கப் பணியில் ஈடுபட்ட மருதமுனை செல்பிக்ஸ் நிறுவன உரிமையாளர், கல்முனை கோல்டன் அச்சக உரிமையாளர் மற்றும் சஞ்சிகை வெளிவருவதற்கான நிதியுதவிகள் செய்த சேனைக்குடியிருப்பு S. R மல்டி சென்டர் உரிமையாளர் திரு K. செல்வராஜா, எமது பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஆகிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நூலாக்கக் குழு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










# SR மல்ரி சென்ரர்

பாடசாலை உபகரணங்கள்,
குளிர்பானப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்,
நானாந்தப் பாவனைப் பொருட்கள்,
பரிசுப்பொருட்கள்,
விளையாட்டுப்பொருட்கள் மற்றும்
போட்டோப் பிரதி சேவை

போன்றவற்றை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம் SR மல்ரி சென்ரர்

சேனைக்குடியிருப்பு
கல்முனை.







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org